விலை
ரூபா 30
பக்கங்கள்
56

# உதயன்

சுடர் 31 | கதிர் 143 | வள்ளுவர் ஆண்டு 2047 | சித்திரை 04, ஞாயிற்றுக்கிழமை 17.04.2016

மகாராஜா பொதிகள் சேவை
சிக்கனப் பொதிகள் சேவை
Per Kg
449/= 549/= 449/=
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

# இறைமையின் அடிப்படையில் அதிகாரம் பகிரப்படவேண்டும்

## பண்டத்தரிப்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 17
புதிய அரசமைப்பில், இந்த நாட்டில் இறைமையின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அவ்விதமாக அதிகாரங்கள் பகிரப்படுவதன் ஊடாகவே நாடு வளமடையும்.
இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.
சரவணபவன் அறக்கட்டளையும், வலி.தென்மேற்கு இளைஞர்கள் சம்மேளனமும் இணைந்து நடத்திய சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் - 2016, நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ் பக். 53



## முன்னாள் போராளியான இளம்தாய் மீது தாக்குதல்

முல்லைத்தீவு, ஏப். 17
முகத்தை முழுமையாக மறைக்கும் தலைக்கவசம் அணிந்து சென்ற இனந்தெரியாத நபர், வீட்டில் இருந்த இரண்டு பிள்ளைகளின் தாயை மோசமாகத் தாக்கியுள்ளார். இதனால் படுகாயமடைந்த அந்தத் தாயார் சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
முள்ளி வாய்க்கால் கிழக்கு கிரா பக். 53

முச்சந்தி முரளி



முல்லைத்தீவில அட்டகாசம் அதிகரித்துட்டுது பாருங்கோ...

## தமிழரசுக் கட்சியின் மேதின கூட்டம் மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.17
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இந்த ஆண்டின் மேதினக் கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் கனகசபாபதி தெரிவித்தார்.
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள மேதினக் கூட்டம் தொடர்பான ஏற்பாட்டுக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் மாட்டீன் வீதியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் மேதினத்திற்கான நிகழ்வுகளுக்காக, பக். 52

## புதுவருடத்தில் குறைகள் களைந்து சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்

### ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.17
புதுவருடம் மலர்ந்ததன் பின்னர் அனைவர் மத்தியிலும் இது வரை நிலவிய குறைகளை நிவர்த்திசெய்து, சிறந்ததொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இலட்சியத்துடன் பணியாற்ற வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.
ஹங்குரான்கொத்த மாதன்வல ரஜமஹா விஹாரையில் நேற்று பக். 53

## முருகனின் விடுதலையை வலியுறுத்தி தாயார் மனு

யாழ்ப்பாணம், ஏப். 17
இந்திய முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட முருகனின் தாயார் வெற்றிவேல் பக். 53

## பொலிஸாரின் துப்பாக்கிகள் விகாரைக் காணியில் மீட்பு

### கடந்த 13 ஆம் திகதி களவாடப்பட்டவை

கொழும்பு, ஏப். 17
மாத்தளை, லக்கல பொலிஸ் நிலையத்திலிருந்து கடந்த 13 ஆம் திகதி களவாடப்பட்ட துப்பாக்கிகள், பொலிஸ் நிலையத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள விகாரைக் காணியிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளன.
லக்கல பொலிஸ் நிலையத்தினுள் நுழைந்த மர்ம நபர் ஒருவர், அங்கிருந்த பக். 53

## அரசியல் கைதிகள் குறித்து இரு வாரங்களுக்குள் முடிவு

### விடுவிக்கப்பட்ட கைதிகளிடம் உறுதியளித்தார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், ஏப். 17
சிறைகளில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் இரு வாரங்களில் அறிவிப்பு ஒன்றை விடுவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல வருடங்கள் சிறையில் இருந்து அண்மையில் விடுதலையான கோமகன், ஜெனிபன் ஆகியோரிடம் சம்பந்தன் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.
அரசியல் கைதிகளாகத் தொடர்ந்தும் பக். 53

## ஒரே இலக்கத் தகட்டுடன் இரு வாகனங்கள் சிக்கின

### அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்தபோது

கொழும்பு, ஏப். 17
தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் ஒரே இலக்கத் தகட்டுடன் 2 வாகனங்கள் பயணித்துக் கொண்டிருந்த நிலையில், ஒரு வாகனத்தின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
அத்துடன் குறித்த வாகனத்தை வழங்கிய வாடகை நிறுவனமும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:-
சதி வேலைக்குப் புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்திருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின் பக். 53

## பரவிப்பாஞ்சானுக்கு மக்களை அழைத்துச் சென்றார் சம்பந்தன்

### சொந்தக் காணிகளைப் பார்வையிட்டவர்கள் தம்மை விரைவில் மீள்குடியமர்த்துமாறு கோரினர்

யாழ்ப்பாணம், ஏப்.17
கிளிநொச்சியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பரவிப்பாஞ்சான் பகுதிக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுத் திடீரெனச் சென்றார்.
இதன்போது, அந்தப் பகுதி காணி பக். 53




நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
12.00%
உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 9.86%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வி.) | 9.50% | 10.00% | 10.25% |
| வ.தே.வ. | 9.84% | 10.25% | 10.25% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.
ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்
www.sdb.lk
011 5 411 411
SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

# போராளிகள் கைது தொடர்ந்தால் மீண்டும் சர்வதேசத்திடம் செல்லும் நிலை ஏற்படும்

## அரசை எச்சரிக்கின்றார் மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஏப்.17

முன்னாள் போராளிகள் உட்பட பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அத்துடன் மக்களுக்கு விடுவிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட காணிகள் சுவீகரிப்பதற்காக அளவீடு செய்யப்படும் நடவடிக்கையும் இடம்பெற்று வருகின்றது. இந்த நடவடிக்கை தொடருமானால், சர்வதேசத்திடம் நாம் மீண்டும் செல்ல வேண்டிய நிலைமை தான் ஏற்படும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடந்த ஒரு மாத காலமாக முன்னாள் போராளிகள் பலர் கைது செய்யப்படுகின்றனர். அத்துடன் முன்னாள் போராளிகள் அல்லாதவர்களும் கைது செய்யப்படுகின்றனர். இதனை விட காணிகளைப் பாதுகாப்புத் தரப்பின் தேவைக்காகச் சுவீகரிப்புச் செய்வதற்கு அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றை எமது கவனத்துக்கு மக்கள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடருமாக இருந்தால் நாம் மீண்டும் சர்வதேசத்திடம் முறைப்பாடு செய்ய வேண்டிய நிலைமையே ஏற்படும். எமது மக்களின் நிலங்கள் விடுவிக்கப்படும், சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர், நாட்டில் நல்லாட்சி இடம்பெறும் என்று வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமையவே, எமது மக்கள் இந்த ஜனாதிபதிக்கு வாக்களித்தனர். அவரைத் தெரிவு செய்தனர்.

ஆனால் அதற்கு மாறாக - வழங்கப்பட்ட வாக்குறுதிகளை மீறி - செயற்பட முனைந்தால் அதனை நாம் அனுமதிக்க முடியாது. இந்த நிலைமை தொடருமாக இருந்தால், நாம் மீண்டும் வீதியிலிறங்கிப் போராட வேண்டிய நிலைதான் ஏற்படும். அத்துடன் சர்வதேச சமூகத்திடம் இந்த விடயங்களை மீளவும் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

ஜனாதிபதி - பிரதமரை நாம் விரைவில் சந்திக்க இருக்கின்றோம். இதன் போது இந்த விடயங்களை அவர்களின் கவனத்துக்கு கொண்டு சென்று, அழுத்தம் - திருத்தமாக எமது எதிர்ப்பைத் தெரிவிப்போம் - என்றார். (த-ஜ-5-101)

# ராணுவத்தால் பாதுகாக்கப்படும் புலிகளின் சமாதானச் செயலகம்







தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டிருந்த சமாதானச் செயலகம், அரசியல்துறை நடுவப் பணியகம், தமிழீழ வைப்பக நடுவப் பணியகம் என்பன இராணுவத்தினரால் அடையாளப்படுத்தப்பட்டுத் தற்போதும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனுடன் பரவிப்பாஞ்சான் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்ற மக்கள் இதனை நேற்று நேரில் கண்டுள்ளனர். (த-ஜ-5-426)

# மட்டுவிலில் டெங்கு தாக்கம் மிக அதிகம்

## பூச்சியியல் ஆய்வில் உறுதி

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாவட்டத்தில் ஏனைய இடங்களுடன் ஒப்பிடும்போது, தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவிலில் டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவது பூச்சியியல் ஆய்வின் மூலமாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் திருமதி ஜுட் தெரிவித்தார். இதனைத் தடுப்பதற்கான செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவகம் ஆகிய பிராந்தியங்களில் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மட்டும் பூச்சியியல் ஆய்வு நடத்தப்பட்டது. கொழும்பிலிருந்து வந்திருந்த சுகாதாரத் திணைக்களத்தின் பூச்சியியல் ஆராய்ச்சி நிலையத்தினர் வடக்கு சுகாதாரத் துறையினருடன் இணைந்து இந்த ஆய்வை நடத்தியிருந்தனர். மட்டுவில் வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் 5 நாள்கள் அவர்கள் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

அங்கு உள்ள குளங்கள், பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், மோட்டர்கள் பாவிக்கும் கிணறுகள், நீர்நிலைகள் காணப்படும்; குடியிருப்புகள் போன்றவற்றில் காணப்பட்ட நுளம்பின் குடம்பிகள் மற்றும் நுளம்புகளை எடுத்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர். அதன்படி அங்கு உள்ள குடம்பிகள் நுளம்பினுடையது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

அத்துடன் அந்தப் பகுதியில் காணப்படும் டெங்கு நுளம்பின் தாக்கத்தின் போது என்னென்ன மருந்துகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கலாமெனவும் ஆய்வுகளை மேற்கொண்டு சென்றுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

அதனால் அங்கு டெங்கு நுளம்புகளை அழிக்கும் பொருட்டு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் பணிப்பாளர் தெரிவித்தார். இயன்றவரை தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக் கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று வரையான ஏப்ரல் மாதத்தின் முதல் 15 தினங்களில் மட்டுவில் பிரதேசத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட 6 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-ஜ-4-9)

# வடக்கு-கிழக்கு ஒன்றிணைப்பு முஸ்லிம்களுக்கு அவசியமற்றது

## பிரதியமைச்சர் ஹரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.17

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைக்கவேண்டும் என்ற தேவை முஸ்லிம் மக்களுக்கு இல்லை.

இவ்வாறு விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் எச்.எம்.எம்.ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - கல்முனை சாஹிரா கல்லூரியில் நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

வடமாகாண சபையினால் முன் வைக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுத்திட்ட யோசனை முஸ்லிம் மக்களை ஒரு போதும் திருப்திப்படுத்தாது.

எனினும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் செயற்படாது என்றும் பிரதியமைச்சர் ஹரிஸ் தெரிவித்தார். (த-ஜ-5)

## பயிற்சிப் பட்டறை

சாவகச்சேரி,ஏப்.17
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அலுவலர்களுக்கு "அவசர நோயாளர் பாரமரிப்பு" தொடர்பான பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
லண்டனில் உள்ள மருத்துவ சங்கத்தால் இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் சாவகச்சேரி வைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டு அங்கு கடமையாற்றும் மருத்துவர்கள், தாதிய அலுவலர்கள், சிரேஷ்ட பரிசாரகர்கள் ஆகியோருக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்படவுள்ளது.
இதற்கென வெளிநாடுகளில் பணிபுரியும் யாழ். பல்கலைக்கழகமுன்னாள் மருத்துவபீட விரிவுரையாளர்கள், மருத்துவ பட்டதாரிகள் போன்றோர் கலந்து கொண்டு விரிவுரை களை நடத்தவுள்ளனர்.
வைத்தியசாலையில் அவசர மற்றும் விபத்துச் சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருவதால் வழங்கப்படும் பயிற்சிகள் பயனுள்ளதாக அமையுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-ஐ-9)

# மாவீரர்கள் மீண்டும் பிறப்பெடுப்பார்கள்


### வடமாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு




யாழ்ப்பாணம்,ஏப்.17
மாவீரர்கள் இறப்பதில்லை. அவர்கள் மீண்டும் பிறப்பெடுப்பார்கள். இந்த மண்ணில் எதற்காக இறந்தார்களோ அதனை நனவாக்க அவர்கள் மீண்டும் பிறப்பெடுப்பார்கள். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.
விஜி – கோபி – கயந்தன் ஆகிய மூன்று மாவீரர்கள் நினைவாக நடத்தப்பட்ட மூவேந்தர் நினைவுக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
சைவசமயத்தின் படி ஆன்மாக்கள் அழிவதில்லை மீண்டும் பிறப்பெடுகின்றன. மாவீரர்கள் இறக்கவில்லை. மீண்டும் பிறப்பெடுப்பார்கள். இந்த மண்ணில் எதற்காக இறந்தார்களோ அதனை நனவாக்க அவர்கள் மீண்டும் துயிலெழுவார்கள். இந்த மண்ணில் உயிர் நீத்த 50 ஆயிரம் மாவீரர்களும் மீண்டும் பிறப்பெடுப்பார்கள் – என்றார்.
நிகழ்வு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து இடம்பெற்ற மென்பந்தாட்ட இறுதிப் போட்டி சிறிபதி மற்றும் அதிசயம் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. (த-ஐ-5-ரி3)

## இன்று முதல் 3 தினங்களுக்கு 6000 பஸ்கள் சேவையில்

### இலங்கை போக்குவரத்து சபை அறிவிப்பு



கொழும்பு, ஏப். 17
தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் சென்ற மக்கள், கொழும்பு மற்றும் ஏனைய நகரங்களுக்கு மீண்டும் செல்வதற்காக மேலதிக பஸ் சேவைகள் இன்று முதல் நடைமுறைப்படுத்துவதாக இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.
இன்று முதல் சுமார் 6,000 பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதாக, போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் ராஜா குணதிலக தெரிவித்துள்ளார்.
நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை வரை இந்த மேலதிக போக்குவரத்து சேவையை நடைமுறைப் படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, சொந்த இடங்களுக்குச் சென்ற பொது மக்கள் மீண்டும் கொழும்புக்கு வருவதற்கு விசேட ரயில் சேவை இன்று முதல் நடைமுறைப்படுத்துவதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது. (வ)

## பல்கலைக்கு 27 பாடங்கள் அறிமுகம்

கொழும்பு, ஏப்.17
இம்முறை பல்கலைக்கழக புதிய அனுமதியை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு புதிதாக 27 பாட நெறிகளை அறிமுகம் செய்யவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
கடந்த வருடம் இடம்பற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதியின் போது, புதிதாக 27 பாடநெறிகளுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என அது சுட்டிக்காட்டியுள்ளது.
பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலேயே இவ்வாறு புதிய பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (வ)

# பனங் கைப்பணி பயிற்சி விரைவில்

யாழ்ப்பாணம், ஏப். 17
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சால் பனை மூலப் பொருள்களை மூலாதாரமாகக் கொண்டு பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் எம்.பி. லோகநாதன் தெரிவித்துள்ளார்.
பனங்கைப்பணிப் பயிற்சி, பனந் தும்புப் பயிற்சி, பனஞ்சாற்றுப் பயிற்சிகள், பனைசார் உணவுப் பயிற்சிகள், பதநீர்சார் பயிற்சிகள் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.
போரால் பாதிக்கப்பட்டோர், விசேட தேவைக்குரியோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மீள்குடியமர்ந்தோர், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் மற்றும் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளன.
பயிற்சியின் முடிவில் உற்பத்திக்கான உபகரணங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதுடன் உற்பத்திக்கான சந்தைவாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
இந்தப் பயிற்சி நெறிகளில் இணைய விரும்புபவர்கள் தங்கள் விவரங்களை கிராம அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய மற்றும் சமூக பொது அமைப்புக்கள், பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது அமைப்புக்கள் ஊடாகவும், நேரிலும், பதிவுகளை மேற் கொள்ளமுடியும்.
மேலும் இது தொடர்பாக யாழ். கண்டிவீதி, முதலாம்மாடி, தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம், பனை அபிவிருத்தி சபையிலும் 0212222034, 0773620584 என்ற தொலைபேசி இலக்கங்களுடனும் தொடர்பு கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ரி)

**பணிப்பெண் தேவை**
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
077 373 5645

**Personal Classes**
IELTS
A/L, O/L ICT
Contact : 077 114 8894

**வேலைவாய்ப்பு**
கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கட்டட நிர்மாணத்துறையில் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்துக்குத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை.
No.207, Navalar Road, Jaffna.
T.P.No: 077 712 0945

**வேலையாள் தேவை**
நெல்லியடி Soft logic காட்சியறைக்கு கணினி அறிவுடைய பெண் அலுவலக உதவியாளர் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு :
077 546 4335
021 567 4128

**வாகனம் தேவை**
தற்போது பாவனையில் உள்ள Ten wheelar வாகனம் விலைக்குத் தேவை.
077 375 8950 , 077 440 8520

**பணிப்பெண் தேவை**
யாழ் சிறுப்பிட்டியில் வசிக்கும் முதிய தம்பதியரையும் (ஓய்வூதியர்கள்) வீட்டையும் தங்கியிருந்து பராமரிப்பதற்கு வெஜிட்டேரியன் சமையல் தெரிந்த நம்பிக்கையான 25-50 வயதிற்கு இடைப்பட்ட ஒரு தமிழ் பெண் உதவியாளர் தேவை. குடும்பத்தில் ஒருவராக கவனிக்கப்படும். மாதாந்த சம்பளம் 18000/- வாரம் ஒரு நாள்விடுமுறை. விடுமுறை நாள்களில் செய்யும் வேலைக்கு ஒப்பந்த கால இறுதியில் கணக்கிட்டு மேலதிக சம்பளம் கொடுக்கப்படும். பாதுகாப்பான வதிவிடமும் உணவும் வழங்கப்படும்.
தொடர்பு: 021 205 4841
071 842 0464

ௐ
**'நியந்த்ரீ' அறிவித்தல்**
2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதாரணதரம் மற்றும் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரே தடவையில் தோற்றி சித்தி பெற்ற அந்தண மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு தொடர்பாக உரிய பெறுபேறு விவரங்களை உறுதிப் படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதியுடன் செயலாளர் நியந்த்ரீ, சிவன்கோயில் நல்லூர் எனும் முகவரிக்கு 30.04.2016 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கவும்.
செயலாளர்.

**வேலை வாய்ப்பு**
முந்தும் 24 பேருக்கு முன்னுரிமை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எமது கோல்டன் குறுப் கம்பனியில்
★ விற்பனையாளர், மேற்பார்வையாளர், உதவி முகாமையாளர், அலுவலக பெண்.
★ அடிப்படைச் சம்பளம் - 18500/= ★ கொமிசன்+ ★ போக்குவரத்து வசதி+
★ தங்குமிடம், உணவு இலவசம்( தூர இடங்களில் இருந்து வருவோருக்கு)
குறிப்பு: 120-150 நாள்கள் பயிற்சி அளித்து உள் வாங்கப்படுவர் பயிற்சியின் நிறைவில் நிரந்தர வேலை வாய்ப்பு
48000- 75000/= சம்பளம் பெறமுடியும் E.T.F, E.P.F வழங்கப்படும்
உடன் தொடர்பு கொள்ளவும்: 021 300 4664, 077 621 9536 ,
077 909 1067
இல 38, பற்றிஸ் வீதி, (சென் சாள்ஸ். பாடசாலைக்கு அருகில் ) யாழ்ப்பாணம்

**தகுந்த விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்**
பழமைவாய்ந்த தமிழ் நூல்கள், ஓலைச்சுவடிகள், யுத்தகாலத்தில் யுத்தப்பிரதேசங்களிலிருந்து வெளிவந்த நூல்கள் தகுந்த விலைக்கு பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு:
குமார் 071 5213154

# வடக்கு முதல்வருக்கு அரசியல் தெரியாதாம்

## சொல்கிறார் விஜேதாச ராஜபக்ச

கொழும்பு, ஏப்.17

வடக்கு மாகாண சபை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு மாறாக, கூட்டமைப்புடன் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றது. கூட்டமைப்புடன் சண்டை பிடிப்பதற்கே வடக்கு முதல்வருக்கு நேரம் போதாமல் இருக்கின்றது. அரசியல் தெரியாதவர்களைப் பதவியில் அமர்த்தினால் என்ன நடக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணம் தற்போது கிடைத்துள்ளது.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நிலைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒரு வீட்டுக்குத் தற்போது மதிப்பிடப்பட்டுள்ள செலவுத் தொகை அதிகமானது என்பதை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் குறுகிய காலத்தில் இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு எவரும் முன்வரவில்லை. எனவே தான் இந்த நிறுவனங்களுடன் நாங்கள் பணிகளை முன்னெடுக்கத் தயாராகினோம். அது மட்டுமன்றி எவ்வகையிலாவது மக்களுக்கு வீடுகள் கிடைக்கின்றன என்பதே இங்கு முக்கியமாகும். அப்பாவி மக்களுக்கு எந்த வழியிலாவது வீடுகள் கிடைக்கும்போது அதனைப் புறக்கணிக்கக் கூடாது. அதனை எதிர்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

வடக்கு மாகாண முதலமைச்சர் இந்தத் திட்டத்தை எதிர்த்துள்ளார். வட மாகாண சபை மக்களுக்கு பயனளிக்கக்கூடிய இந்தத் திட்டத்தை எதிர்த்தமை தொடர்பில் நாங்கள் கவலையடைகின்றோம். இதுவரை வடக்கு மாகாண சபையானது வடக்கு மக்களுக்கு உரிய முறையில் சேவையாற்றவில்லை. அந்த மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யவில்லை.

வடக்கு மாகாண சபை கடந்த காலங்களில் எவ்விதமான முன்னேற்றத்தையும் வெளிக்காட்டவில்லை. அவர்கள் முன்னேற்றத்தையே ஏற்படுத்தவில்லை என்றே கூறவேண்டும். இந்த நிலையில் மத்திய அரசு, துயரப்படும் மக்களுக்கு விரைவில் வீடுகளை அமைத்துக் கொடுக்க வீட்டுத்திட்டத்தை முன்னெடுக்கும் போது அதனையும் தற்போது எதிர்க்கின்றனர். இவர்கள் என்ன நினைத்துக் கொடிருக்கின்றனர் என்று தெரியவில்லை.

வடக்கு மாகாண சபை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அப்பாவி மக்களின் தேவைகள் குறித்து பொறுப்புடன் செயற்படுங்கள். வடக்கு மாகாண சபை மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு மாறாக கூட்டமைப்புடன் சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றது. கூட்டமைப்புடன் சண்டை பிடிப்பதற்கே வடக்கு முதல்வருக்கு நேரம் போதாமல் இருக்கின்றது. அரசியல் தெரியாதவர்களைப் பதவியில் அமர்த்தினால் என்ன நடக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணம் தற்போது கிடைத்துள்ளது.

மக்களின் உடனடி மற்றும் அடிப்படைத் தேவைகள் குறித்துக் கூட்டமைப்பு சிந்திக்கவேண்டும். இந்த 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் குறைபாடுகள் இருந்தால் அது தொடர்பில் பேச்சு நடத்தலாம். மாறாக இதனை எதிர்ப்பதில் பயனில்லை. 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்குப் பதிலாக மாற்றுத் திட்டம் இருந்தால் வடக்கு முதல்வர் அதனை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கலாம். பேச்சு நடத்தலாம். எதிர்த்துக் கொண்டிருப்பதை விடுத்து மாற்றுத் திட்டங்களை முன்வையுங்கள் - என்றார். (த-ஜ-5)

## வெவ்வேறு விபத்துக்களில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஏப்.17

தென்னை மரத்திலிருந்து வீழ்ந்த ஓலை வீதியில் சைக்கிளில் கடமைக்கு வந்து கொண்டிருந்த பெண் பணியாளரின் தலை, முகம் ஆகிய பகுதிகளை உரசிக் கொண்டு வீழ்ந்ததில் அவர் காயமடைந்துள்ளார்.


இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை மிருசுவிலில் இடம்பெற்றது.

முகம் மற்றும் தலை போன்ற இடங்களில் உராய்வுக் காயங்களுக்கு இலக்கான 26 வயது இளம் பெண் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை புதுவருடக் கொண்டாட்டத்தை நண்பர்களுடன் கொண்டாடிவிட்டுச் சைக்கிளில் சென்ற முதியவர் உடல்நிலை மாற்றத்தால் வீதியோர மின்கம்பத்துடன் மோதி வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கனகன்புளியடி வீதியில் இடம்பெற்றது.

காயங்களுக்கு இலக்கான சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த 78 வயது முதியவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (த-ஜ-9)



## வவுனியாவில் மின்னல் தாக்கி இருவர் காயம்

வவுனியா,ஏப்.17

வவுனியாவில் நேற்றுமுன்தினம் மாலை பெய்த கடும் மழையின் போது மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி இருவர் காயமடைந்துள்ளனர். அத்துடன் பொருள்களுக்கும் பல்வேறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை திடீரெனக் கடும் மழை பெய்தது. இதன் போது பட்டாணிச்சூர் 3 ஆம் ஒழுங்கையில் உள்ள வீட்டில் மின்னல் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இருவர் காயமடைந்துள்ளனர். இவர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மின்னல் தாக்கத்தின் போது, அதே பகுதியில் வசிக்கும் ஒருவரின் வீட்டில் 10 அடி நீளமான மதில் வீழ்ந்துள்ளது. அத்துடன் அருகிலிருந்த வீட்டின் கேற் மற்றும் யன்னல் என்பனவும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட இடர்முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் பி.எஸ்.சூரியராஜ் தெரிவிக்கையில், வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் ஏற்பட்ட மின்னல் தாக்குதல் குறித்து இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த பகுதிக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வவுனியா காத்தார் சின்னக்குளம் பகுதியில் மின்னல் தாக்குதல் காரணமாக உயிரிழந்த மாணவனின் உறவினர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் மின்னல் ஏற்படும் போது பாதுகாப்பாக இருப்பது தொடர்பாக கிராம மட்டக் குழுக்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கேற்ற வாறு பாதுகாப்பாக இருக்குமாறும் அவர் தெரிவித்தார்.

மின்னல் தாக்கம் ஏற்படும்போது பொதுமக்கள் மரங்களுக்குக் கீழ் இருத்தல், நீர்நிலைகளுக்குள் இருத்தல், அலைபேசி உரையாடல், தொலைக்காட்சி பார்த்தல் போன்றவற்றைத் தவிர்த்து விடுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (த-ஜ-5)

## மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கை மைத்திரிபாலவுக்கு

கொழும்பு,ஏப்.17

புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழு நாடளாவிய ரீதியில் பெறப்பட்ட மக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளை உள்ளடக்கிய அறிக்கையை எதிர்வரும் 30 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் கையளிக்கத் தீர்மானித்துள்ளனர் என்று புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

மக்கள் கருத்தறியும் குழுவின் சமகாலச் செயற்பாடுகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாங்கள் கடந்த மூன்று மாத காலமாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட புதிய அரசமைப்புக்கான மக்கள் கருத்துகளைத் தற்போது நாம் முன்மொழியவுள்ள யோசனையில் உள்ளடக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்.

மக்களின் முழுமையான கருத்துக்களை உள்ளடக்கியதாக அறிக்கையைத் தயாரிக்க வேண்டியுள்ளது. பொதுமக்களைத் தவிர்த்து நாட்டின் ஏனைய தரப்பினரிடமும் நாம் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டோம்.

தற்போது அறிக்கை தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இந்த அறிக்கை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படும்.

அறிக்கையைப் பூரணப்படுத்தி இந்த மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளோம் எனவும் தெரிவித்தார். (த-ஜ)

## நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஏப்.17

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ துர்க்காபுர தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஸ்ரீ துர்க்காபுர தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழங்கிலங்கை சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் சிவஞானம் ஜெயசங்கரும், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை கதிரியக்கத்துறை வைத்திய நிபுணர் கேதீஸ்வரி சிவசிதம்பரமும், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை உடற்கூற்றியல் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவநந்தினி உதயகுமாரும் கலந்து கொள்வர்.

(த-ஜ-ரி)

## ஆலய வளாகத்துக்குள் உயிர் விட்ட மூதாட்டி

சாவகச்சேரி ஏப்.17

ஆலயத்தின் காலைப் பூசைக்குச் சென்ற மூதாட்டி ஒருவர் ஆலய வளாகத்துள் அமர்ந்திருந்தபடியே உணர்வற்றுக் காணப்பட்டார். அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல முற்பட்டபோது அவர் அதற்கு முன்னரே சாவடைந்து விட்டமை தெரியவந்ததால் அவரது வீட்டுக்குச் சடலம் கொண்டு செல்லப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை எழுதுமட்டுவாழில் உள்ள ஆலயம் ஒன்றில் இடம்பெற்றுள்ளது. அதில் அதே இடத்தைச்சேர்ந்த வடிவேலு தவமணி (வயது 72) என்னும் மூதாட்டியே சாவடைந்தவராவார். குறித்த மூதாட்டி தினமும் பூசைக்குச் சென்று வருபவர் எனவும் நேற்றுக் காலை ஆலயத்துக்கு நடந்து சென்று வழிபாடு செய்து விட்டு அமர்ந்திருந்தார் என்றும் பின்னர் அவர் அப்படியே சாவடைந்து விட்டார் என்றும் அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். (த-4-9)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.17

அந்தியில் சண்ணுக்கோர் எனும் அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலய அரங்கில் நடைபெறவுள்ளது.

கனடாவில் காலமான நெடுந்தீவு முற்போக்கு வாலிபர் இயக்க ஸ்தாபகரும், நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தின் மூத்த உறுப்பினருமான சின்னத்தம்பி சண்முகநாதனின் அஞ்சலி நிகழ்வு நடைபெறவுள்ளதாக சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

(த-ஜ-ரி)

# பனை வளத்தை மேம்படுத்த 160 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.17

பனை வளத்துறையை வலுவூட்டுவதற்காக மீள்குடியேற்ற அமைச்சால், 160 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

இந்த நிதியானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்தக் கூடிய அதிகூடிய விளைவுகளைக் கொண்ட திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கான உபகரணத் தொகுதி, கருப்பட்டி உற்பத்தி செய்யும் உபகரணத் தொகுதி, பனைசார் உணவு உற்பத்திகளை விரிவாக்கித் தரமுயர்த்தும் கருத்திட்டங்கள், பனங்களி - பனங்கிழங்கு - பனஞ்சாறு சார்ந்த உற்பத்திகளை விரிவாக்கும் தொழிநுட்பங்கள் மற்றும் பயிற்சிகள், பனஞ்சீனி - கல்லாக்காரம் என்பவற்றின் உற்பத்திகளை ஊக்குவிக்கும் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

> ❝ பனை தொடர்பான ஆராய்ச்சிகளில் பனைசார் உற்பத்திப் பொருள்களின் போசாக்குத் தன்மை, மருத்துவ குணஇயல்புகள் மற்றும் ஆரோக்கிய தன்மைகளை வெளிக்கொண்டு வரும் விழிப்புணர்வு தொடர்பான தேசிய கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன. ❞

அத்துடன் பனங்கிழங்கு உற்பத்தியை விரிவாக்குவதற்கான உதவித்திட்டங்கள், பாரம் பரிய கைப்பணிக் கிராமங்களை அபிவிருத்தி செய்து 6 மாதங்கள் கைப்பணிப்பயிற்சிகளை வழங்கி உபகரணங்கள் மற்றும் தொழிற்படும் மூலதனம் என்பனவற்றை வழங்கும் கருத்திட்டங்கள், பனம் தும்புசார் உற்பத்திகளை விரிவாக்குவதற்கான தொழிநுட்ப பயிற்சிகள் மற்றும் உபகரணத் தொகுதிகளை வழங்குகின்ற கருத்திட்டங்கள் என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பனைசார் உற்பத்திகளை மேம்படுத்தி சந்தை வாய்ப்பை விரிவாக்குவதற்கான வேலைத் திட்டங்கள், சீவல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கான உபகரணத் தொகுதிகள், பயிற்சி மற்றும் சைக்கிள்களை வழங்கி அவர்களை ஊக்குவிக்கும் கருத்திட்டம், தவறணைகளைப் பரீட்சார்த்தமாக நவீனமயமாக்கும் கருத்திட்டங்கள், பயனற்ற பனை மரங்களிலிருந்து பரிசுப் பொருள்கள் மற்றும் நினைவுப் பொருள்களை உருவாக்கும் கருத்திட்டங்கள், பதனீரின் முடிவுறும் காலவரையறையை விரிவாக்கி நுகர்வோருக்கு வழங்குகின்ற கருத்திட்டம், பனைசார் கைத்தொழில்களுக்குப்பயன்படக்கூடிய பிரயோக ஆராய்ச்சிகளை விரிவாக்கும் கருத்திட்டங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாகவும் இதன் மூலம் உற்பத்தி மட்டம், வருமான மட்டம் மற்றும் வேலை வாய்ப்பு மட்டம் என்பன விரிவாக்கப்படுவதுடன் பனைத் துறையில் பெரும் மாற்றங்களை இந்தக் கருத்திட்டங்கள் ஏற்படுத்தும் எனவும் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

மேலும் பனை தொடர்பான ஆராய்ச்சிகளில் பனைசார் உற்பத்திப்பொருள்களின் போசாக்குத்தன்மை, மருத்துவ குண இயல்புகள் மற்றும் ஆரோக்கிய தன்மைகளை வெளிக்கொண்டு வரும் விழிப்புணர்வு தொடர்பான தேசிய கருத் தரங்குகளும் இடம்பெறவுள்ளன. பனைசார் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களான சொக்கலேட், பாம்போசா, ஜாம், மென்பாணங்கள் உள்ளடக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-5)

## கௌரவிப்பு நிகழ்வு

கைதடி,ஏப்.17

கைதடி எருதிடல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்பித்த ஆரம்பகால ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ந.ஜெய ரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையில் ஆரம்ப காலங்களில் ஐந்து வருடத் துக்கு மேலாக கல்வி கற்பித்த சின்னத்தம்பி மங்கையர்க்கரசி தம்பதிகளே இந்த விழாவில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

(த-ஐ-288)

## யெகோவாவின் சாட்சிகள் ஒரு நாள் வட்டார மாநாடு

யாழ்ப்பாணம்,ஏப்.17

யெகோவாவின் சாட்சிகள் வணக்கஸ்தலத்தால் ஒரு நாள் வட்டார மாநாடு 'யெகோவாவைப்போல்நடந்துகொள்ளுங்கள்' எனும் தொனிப்பொருளில் இன்று காலை 9 மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இசையுடன் ஆரம்பிக்கப்படும் இந்த நிகழ்வில், மதங் களைப் பற்றி கடவுள் என்ன நினைக்கிறார் என்ற ஆன்மிக உரையும், இன்னும் பல்வேறு உரைகளும் இடம்பெறவுள்ளன.

(த-ஐ-ரி4)

# ஒட்டுவெளி வெள்ளவாய்க்காலை உடன் புனரமைத்து உதவுங்கள்

## மாகாண விவசாய அமைச்சரிடம் கோரிக்கை

வரணி,ஏப்.17

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளி வெள்ளவாய்க்கால் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் அந்தப் பிரதேச மக்களால் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாழ் தெற்கு பிரதேச மக்களுக்கும், வடமாகாண விவசாய அமைச்சர்பொ.ஐங்கரநேசனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம் பெற்றது. அந்தச் சந்திப்பிலேயே அவர்கள் இதனைத்தெரிவித்துள்ளனர்.

அந்தப் பிரதேசத்தின் பிரச்சினைகள் சார்பில் மேலும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒட்டுவெளி வெள்ளவாய்க்கால் ஏழு வயல் வெளிப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் வாய்க்காலாகும். இந்தவாய்க்கால்ஊடாகப் பாயும் வெள்ளநீர் இறுதியில் நாகர்கோயில் உப்பாற்றுடன் கலந்து தொண்டமானாற்றை அடையும் நிலையிலுள்ளது. இந்த வாய்க்கால் புனரமைப்பு இன்றி உள்ளதால் கடும் மழையால் வெள்ளம் தேங்கி இருந்ததுடன், பெரும் பயிர் அழிவையும் நெற்செய்கையாளர் எதிர்கொண்டனர்.

வெள்ளத்தால் வருடா வருடம் அழிவுறும் நெல்வயல்களைப் பாதுகாக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சகல வயல் வெளிகளுக்கும் மேம்பாலங்கள் அமைத்து வயல் நிலங்களுக்கும் வாகனங்கள் செல்ல வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

மறுதானிய உற்பத்தியை மேற்கொள்ள வசதியாக ஊக்குவிப்புக்கள் வழங்கப்படல் வேண்டும். நீரைச் சேமித்து வைக்கக் கூடிய தன்மையில் உள்ள கண்டல்காடு பாதுகாக்கப்பட வேண்டும். ஆடு,மாடு வளர்ப்பதற்கு உரிய இடமாக இந்த இடம் அமைவதால் அவற்றை வளர்ப்பதற்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட வேண்டும்.

போர் நடவடிக்கைகளின் போது பலரின்வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் அமைப்பதற்கு உதவி புரிதல் வேண்டும். கடந்த வருட முற்பகுதியில் வறட்சி நிவாரணம் இதுவரை கிடைக்காதவர்களுக்கு விரைவில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

2012 ஆம் ஆண்டு இடர் முகாமைத்துவத் திணைக்களத்தால் அமைக்கப்பட்ட பாலம் மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும். கால்நடைகளின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் சிறு சிறு குளங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாகப் புனரமைக்கப்படுவதுடன் அணைக்கட்டுகளும் அமைக்கப்பட வேண்டும். பழுதடைந்த துருசுகள் புனரமைக்கப்படவேண்டும்.

ஒட்டுவெளியில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியப் பயிர்களை குரங்குகள், வேறு இடங்களில் இருந்து வரும் கால்நடைகளில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எழுதுமட்டுவாழில் பிரசித்திமிக்க செய்கையாக உள்ள பழமரச்செய்கை குரங்குகளால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், முருங்கை மரச் செய்கை முழுமையாக இல்லாமல் போய் உள்ளது. இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும.

வீட்டுத்திட்டங்களில் ஊழல்கள் இடம்பெறுவதால் வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்கள் சீரான முறையில் தெரிவு செய்யபப்பட்டு வீடுகள் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்தச்சந்திப்பில், வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தன், சாவ கச்சேரி தொகுதி தமிழரசுக்கட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் வீ.சத்தியேந்திரா, பிரதி விவசாயப் பணிப்பாளர் கே. சிவபாதசுந்தரம், விவசாயப்போதனாசிரியர் என்.ஜெகசுதா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-ஐ-122-ரி)

# உடைமைகளை இழந்த தம்பதி

சாவகச்சேரி,ஏப்.17

உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் நடமாடும் விற்பனை நிலையத்தில் உணவு வாங்கி அருந்திவிட்டு கை கழுவச் சென்ற தம்பதியினர் தமது உடைமைகளை இழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை மட்டுவில் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆலயத்துக்கு வருகை தந்திருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பத்தினர், அங்கு விற்பனை செய்யப்பட்ட உணவு வகைகள் வகை வகையாகக் காணப்பட்டதால் அதனை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு கை கழுவவெளியில்சென்றனர். வந்து பார்த்தபோது அமர்ந்திருந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த கைப்பை இனந்தெரியாதோரால் அபகரிக்கப்பட்டுள்ளது.

அதனுள் பெறுமதிமிக்க இரண்டு அலைபேசிகள், பணம், தேசிய அடையாள அட்டைகள் உட்பட பல்வேறு பொருள்கள் இருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது.

(த-ஐ-9)

# கிணற்றில் தவறி விழுந்த இளைஞன் பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம்,ஏப்.17

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் உள்ள வீடொன்றில் மோட்டர் திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் கிணற்றுக்குள் த்வறி வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்றதாகவும், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் நேற்றுக் காலை உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் நேற்று முன்தினம் பகல் மோட்டர் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போது தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்ததாக விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கொழும்பில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்துவரும் தனபாலசிங்கம் வசிகரன் (வயது-25) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-ஐ-109)

# அரச அதிகாரிகளையே அச்சுறுத்தும் இராணுவம்

## அப்படியாயின் பொதுமக்களின் நிலை என்னாகும் என்று கேட்கிறார் கடற்றொழில் சமாசத் தலைவர்

முல்லைத்தீவு,ஏப்.17
அரச அதிகாரிகளையே இராணுவத்தினர் அச்சுறுத்துகின்றனர். இவ்வாறான நிலையில் சாதாரண பொதுமக்களின் நிலைமை என்ன என்பதை யோசித்துப் பாருங்கள் என்று, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொது முகாமையாளர் சிவலிங்கம் தெரிவித்தார்.
எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடான சந்திப்பு மாங்குளத்தில் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
எமது கடற் பகுதிகளில் அனுமதி இல்லாது வாடியமைத்துச் சட்டவிரோத முறையில் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபடும் தென்னிலங்கை மீனவர்களால் எமது மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் வெகுவாக பாதிப்படைந்து வருகின்றன. குறிப்பாக நாயாறு – கொக்குத்தொடுவாய் – கொக்கிளாய் போன்ற இடங்களிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் அதிகமாக இடம் பெறுகின்றன. இதற்கு இராணுவத்தினர் துணை நிற்கின்றனர்.
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினாலும், கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினாலும் தொழில் செய்வதற்கு 78 சிங்களக் குடும்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் 300 குடும்பங்களுக்கு மேல் தங்கியிருந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

> சிவில் நடவடிக்கையில் இராணுவத்தினர் தலையிட்டிருந்தனர். அரச உத்தியோகத்தர்களுக்கே இந்த நிலைமை என்றால், சாதாரண பொதுமக் களின் நிலைமை எண்ணிப் பாருங்கள்.

கொக்குத்தொடுவாயில் அனுமதியின்றி வாடியமைத்துத் தொழில் செய்த மீனவர்கள் தொடர்பில் ஆராயச் சென்ற கிராம சேவையாளர்கள் இராணுவத்தினரால் அநாகரிகமான முறையில் நடத்தப் பட்டிருந்தனர். சிவில் நடவடிக்கையில் இராணுவத்தினர் தலையிட்டிருந்தனர். அரச உத்தியோகத்தர்களுக்கே இந்த நிலைமை என்றால், சாதாரண பொதுமக் களின் நிலைமை எண்ணிப் பாருங்கள்.
கொக்கிளாய் – கொக்குத்தொடுவாய் – கருநாட்டுக் கேணி ஆகிய கிராமங்களிலிருந்து 30 வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்து மீண்டும் 2012 ஆம் ஆண்டு மீள் குடியமர்த்தப்பட்டோம். நாம் அங்கு சென்று பார்த்த போது ஆமையன் குளம், உந்தராயன் குளம் ஆகிய இடங் களில் 1962 ஆம் ஆண்டிற்கு முன்னர் 3 ஏக்கர் 4 ஏக்கர் திட்டங்களாக எமக்கு வழங்கப் பட்ட பல காணிகள் மகாவலித் திட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்டுச் சிங்களக் குடும்பங் களுக்கு வழங்கப்பட்டிருந்தன.
இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்தோம். மேலும் சவராத்து வெளியில் உள்ள எமக்குரிய மானாவாரி வயல் நிலமாகிய 2 ஆயிரம் ஏக்கர் காணிகளை மகாவலித் திட்டத்தின் கீழ் சுவீகரித்துக் கொண்டு சகல இன மக்களுக்கும் 2 ஏக்கர் என்ற அடிப்படையில் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.
இந்தக் காணிகள் ஏற்கனவே எமக்கு 4 ஏக்கர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணிகளாகும். எனவே எமது காணிகள் எமக்கே கிடைப்பதற்குவழிசெய்யவேண்டும். மேலும்நாயாற்று வீதியில் 12 ஆம் கட்டை முதல் 15 ஆம் கட்டை வரையுள்ள எமது கஜு தோட்டம் தற்போது வனவளத் திணைக்களத்தினரால்எல்லையிடப்பட்டு நாம் அவற்றை ஆட்சி செய்யு முடியாத வகையில் தடுக்கப்பட்டுள்ளது. இதனையும் விடுவித்து தரவேண்டும் – என்றார். (த-ஐ-5-102)

### பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

முல்லைத்தீவு,ஏப்.17
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்கல் 10 மணிக்கு கல்லூரியின் கலையரங்கில் இடம்பெறவுள்ளன.
இதன்போது கல்லூரியின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றி கலந்துரையாட இருப்பதனால் கல்லூரியின் அனைத்து பழைய மாணவ, மாணவிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலையின் அதிபர் இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஜ-102)

### புதுவருட பொங்கல்

சாவகச்சேரி,ஏப்.17
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தில் சித்திரைப் புத்தாண்டையொட்டிய பொங்கல் நாளை திங்கட்கிழமை இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆலயத்தில் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நடைபெற்று முடிந்ததும் சித்திரை வருடப்பிறப்பின் பின்னர் வரும் முதல் திங்கட்கிழமை அடியார்கள் பலர் ஆலயத்துக்கு வருகை தந்து பொங்கலிட்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர். இந்த நிலையில் நாளை திங்கட்கிழமையும் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் போன்று பெருமளவு அடியார்கள் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(த-ஐ-9)

## குண்டும் குழியுமாக உள்ள குருநகர் ஐஸ் பிளான்ட் வீதி

யாழ்ப்பாணம்,ஏப்.17
குருநகர் ஐஸ் பிளான்ட் வீதி குண்டும் குழியுமாக கற்கள் கிளறப்பட்டு மணல் தரையாகவும் காணப்படுவதால் வீதியூடாகப் பயணிப்போர் மிகுந்த போக்குவரத்துச் சிரமங்களை அனுபவித்து வருவதாக விசனம் வெளியிட்டுள்ளனர்.
எனினும் வீதியைப் புனரமைக்கும்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவடையும் நிலையை எட்டியுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.
குருநகர் கடற்கரை வீதியில் ஆரம்பித்து தெற்குப் பக்கமாக குருநகர் புதிய கடற்கரை வீதி வரை அமைந்துள்ள்ள இந்த வீதியின் மறுபகுதி மேற்குப் பக்கமாக அலுப்பாந்தி கடற்கரை நோக்கிச் செல்கிறது.
இந்த வீதியும் மணலாகவே உள்ளது. கற்கள் போடப்பட்டு தார் ஊற்றிசெப்பனிடப்படாதவிடத்து குறித்த வீதியில் பயணம் செய்வது மிகுந்த சிரமத்தையும், எரிச்சலையும் ஏற்படுத்தும் செயற்பாடாக உள்ளது.
ஐஸ் பிளான்ட் வீதியில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வடிகாலின், சேதமடைந்த நிலையில் காணப்பட்ட மேல் மூடி அகற்றப்பட்டு, யாழ்.மாநகர சபையால் தற்போது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.
இந்த வேலையுடன் குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியையும் முழுமையாகச் செப்பனிட்டுப் பொதுமக்களது போக்குவரத்தை இலகுவாக்க வேண்டுமென யாழ்.மாநகர சபைக்குமக்கள் கோரிக்கைவிடுத்திருந்தனர்.
இந்த நிலையில் தற்போது வீதியைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-51-ரி5)

## சிகிச்சை பெற வந்த பெண்ணின் பையினுள் மதுபானப் போத்தல்

சாவகச்சேரி,ஏப்.17
மருத்துவ சிகிச்சை பெற வந்திருந்த பெண் ஒருவரின் பயணப் பையினுள் சாராயப் போத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
எவ்வாறு தனது பையினுள் சாராயப் போத்தல் வந்ததென்று தெரியாது என்று அந்தப் பெண் தெரிவித்ததைத் தொடர்ந்து இது தொடர்பில் வைத்தியசாலைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பிற்பகலில் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்திருந்த மதகுரு ஒருவரின் மனைவியைப் பரிசோதித்த மருத்துவர்கள், விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.
இதனையடுத்து வீட் டுக்குச் சென்று விடுதியில் நிற் பதற்குரிய ஆயத்தங்களுடன் வருவதாகக் கூறிச் சென்றுள்ளார்.
வீட்டிலிருந்து விடுதியில் தங்குவதற்கான பொருள்களுடன் வருகை தந்து உள்ளே செல்வதற்காகச் சென்றபோது அங்கு கடமையில் நின்ற பாதுகாப்பு அலுவலர் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த பையை வழமை போல் சோதனையிட்டார்.
குறித்த பையினுள் அரைப் போத்தல் சாராயம் காணப்பட்டதையடுத்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அங்கு விரைந்த வைத்தியசாலைப் பொலிஸ் அலுவலர் சாராயப் போத்தலை மீட்டபோது அது எங்கிருந்து வந்தது எனத் தெரியாது எனப் பெண் கூறியுள்ளார்.
அவர் வீட்டிலிருந்து கொண்டு வந்த பையை வெளியில் வைத்துவிட்டு மருத்துவரின் அறைக்குள் சென்று பதிவுகளை மேற்கொண்டு திரும்புவதற்குள் அவ்விடத்தில் நின்றவர்கள் விடுதியில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்குவதற்காக மதகுருவின் மனைவியின் பையினுள் சாராயப் போத்தலை வைத்திருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சிகிச்சை பெற வந்த மதகுருவின் மனைவியின் பையினுள் மதுப் போத்தல் காணப்பட்டமை அங்கு நின்றோரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (த-ஐ-5-9)

## திலீபன் வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம்,ஏப்.17
உரும்பிராய் வடக்கு, திலீபன் வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும், கழிவை அகற்றுவதில் பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதுதொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபைச்செயலாளரைத்தொடர்புகொண்ட போது, குறித்த வீதியில் கழிவகற்றும் நடவடிக்கைகள் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.
உரும்பிராய் வடக்கு, திலீபன் வீதி சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர். வெளிக்கிராமத்தில் இருந்து கொண்டு வரப்படும் கழிவுகள் இந்த வீதியில் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன், வீதியூடாக பயணிப்பதில் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்தனர்.
பிரதேச சபை கழிவு அகற்றும் வாகனங்கள் உரிய முறையில் கழிவுகளை அகற்ற வீதிக்கு வருவதில்லை. இதனால் மூடை மூடையாகக் கொண்டு வந்து குவிக்கப்படும் கழிவுகள் கட்டாக்காலி நாய்களினால் இழுத்துச் செல்லப்பட்டு வீதியெங்கும் பரவிக் காணப்படுகின்றன.
தற்போது வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதுடன் கழிவுகளில் இருந்து துர்நாற்றம் வெளிவந்துள்ளது. எனவே இப் பகுதிக்குப் பொறுப்பான வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வாரத்தில் இரண்டு நாள்கள் என்றாலும் வாகனங்களை அனுப்பிவைத்து உரிய முறையில் கழிவுகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்து தரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தனர்.
இது தொடர்பாக வலி கிழக்குப் பிரதேச சபைச் செயலரிடம் கேட்ட போது, எம்முடைய வலி.கிழக்குப் பிரதேச சபை மிகப்பெரும் நிலப் பகுதியை கொண்டது. சபையில் போதுமான வசதிகள் அற்ற நிலையிலும் கழிவகற்றும் நடவடிக்கையைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம்.
குறித்த விதியின் சீர்கேடு தொடர்பான முறைப்பாட்டைத் தொடர்ந்து எமது பணியாளர்களை துப்புரவு செய்வதற்காக அனுப்பி வைத்தோம். வீதி ஓரத்தில் இரண்டு கழிவு மூட்டைகள் மட்டுமே வைக்கப்பட்டிருந்தன அவையும் தற்போது அகற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (த-ஐ-ரி5-107)

# மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே மாகாண சபை

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் முன்னிலையில் வற்றாப்பளை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் தெரிவிப்பு

முல்லைத்தீவு,ஏப்.17

எமது பிரச்சினைகளை மாகாண சபையில் முன் வைத்து தீர்வு காண்பதற்காகத்தான் மாகாணசபை உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளோம். அவர்களின் சுய நலத் தேவைகளைக் கேட்டு நிறைவேற்றுவதற்காக நாம் அங்கு அவர்களை அனுப்பி வைக்கவில்லை. கட்சிக்குள் பேசித் தீர்க்கும் விடயங்களைக் கட்சிக்குள்ளேயே பேசித் தீர்க்கவேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தின் வற்றாப்பளை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் கு.அரசரட்ணம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் மாங்குளத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குறைகேள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தையும் திருமலை மாவட்டத்தையும் மையப்படுத்தி உங்களது அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாகச் செய்வதை நாம் காண்கின்றோம். அன்று எமது போராட்டத்தைத் தேசியத் தலைவர் பிரபாகரன் எவ்வாறு முன்னெடுத்தாரோ அவ்வாறே நீங்களும் இன்று சாத்வீக வழியில் எமது உரிமைக்கான போராட்டத்தை வழி நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். நாமும் உங்கள் காலத்திலேயே எங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளோம்.

யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் மக்களின் எத்தனையோ காணிகள் விடுவிக்கப்பட்டு அங்கு மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு வருகின்றார்கள். நாம் அதைப் பார்த்து மகிழ்ச்சியடை

> அன்று எமது போராட்டத்தைத் தேசியத் தலைவர் பிரபாகரன் எவ்வாறு முன்னெடுத்தாரோ அவ்வாறே நீங்களும் இன்று சாத்வீக வழியில் எமது உரிமைக்கான போராட்டத்தை வழி நடத்திக் கொண்டிருக்கின்றீர்கள். நாமும் உங்கள் காலத்திலேயே எங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஆவல் கொண்டுள்ளோம்.

கின்றோம். ஆனால் நாம் மீள்குடியமர்ந்து 7 வருடங்கள் கடந்துள்ளபோதும் இன்னமும் பல பகுதிகள் இராணுவத்தினால் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளன. இவை உங்களால் கவனிக்கப்படாத நிலை உள்ளதை எண்ணி நாம் கவலையடைகின்றோம்.

குறிப்பாகக் கேப்பாப்பிலவு கிராமம் இன்னமும் விடுவிக்கப்படாது உள்ளது. பிரதான வீதியை நாம் பாவிக்க முடியாத வகையில் காட்டுப் பாதையூடாக மாற்றுப் பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதேபோல் வட்டுவாகலில் சில பகுதிகள் இன்னமும் விடுவிக்கப்படாது தொடர்ந்தும் இராணுவத்தினரின் வசம் உள்ளது. இதற்கு மேலாக வடக்கையும், கிழக்கையும் பிரிக்கும் எல்லைக் கிராமமான கொக்கிளாயில் தனியார் காணிகளில் பெரியளவிலான புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அவர்களது காணி ஆவணங்கள் இருக்கும் போது அங்கு புத்தர் சிலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் என்ன? அந்தப் பகுதியில் பௌத்தர்களின் குடியிருப்புக்கள் இல்லை. இருக்கும் ஒரு சில சிங்களவரும் கிறிஸ்தவர்களாகவே உள்ளனர். புத்தர் சிலை அமைக்கப்பட்டு வருவதன் உள்நோக்கம் தான் என்ன ? தனியார் காணிகளை உள்ளடக்கிப் புத்தர் சிலை அமைப்பதனை நாம் முற்றாக எதிர்க்கின்றோம். எமது முக்கிய பிரச்சினைகளாகிய கேப்பாப்பிலவு காணி விடுவிப்பும், மீள்குடியேற்றமும் விரைவாக ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். அத்துடன் கொக்கிளாய் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படவேண்டும்.

இதனைவிட முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சியின் அனைத்துக் கிளைகளும் உடனடியாகப் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். அத்துடன் அனைத்துப் பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக் கிளை புனரமைப்புச் செய்யப்படவேண்டும். இதேபோன்று தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.

முல்லைத்தீவில் திறக்கப்பட்ட மதுபானச் சாலையை மூடவேண்டும் என்று எமது நாடாளுமன்ற உறுப்பினர் குரல் கொடுக்கின்றார். ஆனால் மாகாண சபை உறுப்பினரும், பிரதி அவைத் தலைவருமாகிய அன்ரனி ஜெகநாதனோ எமது பிரதேசத்துக்கு மதுபானசாலை ஒன்று அவசியம் என்னும் கருத்தை முன்வைக்கின்றார்.

ஒரே கட்சிக்குள் இரு கருத்துக்கள் எழும் போது மக்கள் குழப்பமடைகின்றனர். இங்கு மக்களுக்காகவே கட்சியன்றி, கட்சியின் பெயரால் மக்களின் எண்ணங்களுக்கு மாறாக செயற்படும் மாவட்டத் தலைமை உடனே மாற்றியமைக்கப்படவேண்டும்.

வட மாகாண சபையில் பெரும்பான்மை பலத்துடன் கூட்டமைப்பே ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்றது. இவ்வாறு இருக்கையில் அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒரு அமைச்சுப் பதவி வேண்டும் என்ற கருத்தை மையப்படுத்தி அமைச்சரவையை மாற்றக்கோரி கையெழுத்து வேட்டையில் அன்ரனி ஜெகநாதன் ஈடுபட்டுள்ளதாக அறிகின்றோம்.

இரண்டரை வருடங்கள் கழிந்துள்ள நிலையில் அமைச்சரவை சிறந்த முறையிலேயே இயங்கி வருகின்றது. இவ்வாறு இருக்கையில் அமைச்சரவையை மாற்றக் கோருவது சுய நல போக்கேயன்றி வேறேதுமில்லை.

நாங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தது எமது பிரச்சினைகளை மாகாண சபையில் முன் வைத்து தீர்வு காண்பதற்கேயன்றி அவர்களின் சுயநலதேவைகளைக் கேட்டு நிறைவேற்றுவதற்காக அவர்களை நாம் அங்கு அனுப்பி வைக்கவில்லை. கட்சிக்குள் பேசித் தீர்க்கும் விடயங்களை கட்சிக்குள்ளேயே பேசித் தீர்க்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-5-102)

## கள்ளிக்காடு வீதிக்கு விடிவு

கைதடி,ஏப்.17

கைதடி கிழக்கு கள்ளிக்காடு வீதி"கிராமத்துக்கு ஒரு மில்லியன்''திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்தக் கிராமத்திலுள்ள வீதிகள் பலவும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளன. இந்த வீதிகளின் அவல நிலை பற்றி வடக்கு மாகாண அரசுக்கு தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை இந்த வீதியை திருத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறான நிலையில் மேற்படி திட்டத்தின் மக்கள் கலந்துரையாடலின்போதே இந்த வீதியை திருத்த கைதடி கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் மக்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ள நிலையில் இதனைப் புனரமைக்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

வடமாகாண லயன்ஸ் புற்றுநோய் நிதியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.சிவன் பண்ணை வீதியில் உள்ள ஐ.ஐ.எஸ் சிற்றிக்கம்பஸில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் அனைத்து லயன்ஸ் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வட மாகாண புற்றுநோய் நிதியத்தின் செயலாளர் லயன் த.சற்குணராசா அறிவித்துள்ளார். (த-ஐ-ரி5)

## யாழ். குடாநாட்டில் பதநீருக்கு கிராக்கி

சாவகச்சேரி,ஏப்.17

புலம்பெயர் நாடுகளிலிருந்து வருகை தந்துள்ள யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது நிலவும் வெப்பத்துக்காகப் பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பதநீரை விரும்பி அருந்துகின்றனர். இதனால் பல இடங்களில் பதநீருக்குக் கிராக்கி எற்பட்டுள்ளது.

பனை மரங்களில் பாளைகள் வெளிவரத் தொடங்கி கள் உற்பத்தி அதிகரித்த இந்தக் காலத்தில் பதநீர் உற்பத்தியும் இடம்பெற்றுவருகிறது. பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றில் பதநீர் பெறப்பட்டு பனை வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. பனை வெல்லம் கிலோ 600 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதால் புலம்பெயர் நாடுகளுக்குக் கொண்டு செல்வதற்காக பெருமளவில் கொள்வனவு செய்கின்றனர்.

பனை வெல்லம் கொள்வனவு செய்ய வரும் புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்தவர்கள் வெல்லம் உற்பத்தி செய்யும் நிலையங்களைப் பார்வையிடும் வேளையில் அங்கு காணப்படும் பதநீர் தருமாறு கேட்டு வாங்கிப் பருகுகின்றனர்.

அத்துடன் பதநீர் உற்பத்தி செய்யும் பிரதேசங்களில் உற்பத்தியாளர்களிடம் சொல்லி அருந்தக்கூடிய வகையில் உற்பத்தி செய்யுமாறு கூறி அதனை போத்தல் 60 ரூபா விலையில் கொள்வனவு செய்து பருகி வருகின்றனர். (த-ஐ-9)

## புதிய மாணவர் மன்றம் தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.17

சுன்னாகம் லங்காசித்த ஆயுள் வேதமருத்துவக் கல்லூரியின் நடப்பாண்டுக்கான புதிய மாணவர் மன்றம் கடந்த தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் மாணவர் மன்றத்தின் தலைவராக ரா.வினோன், யெலாளராக அ.விருஜிகா, பொருளாளராக ம.ஜெஸ்மின்குருஸ், உபதலைவராக வ.ரிஜா, உபசெயலாளராக டோ.றிபிலிசாந், பத்திராதிபராக இ.பிரகதிஸ்வரன், கணக்காய்வாளராக ச.மேரிமெரிசியாவும், நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.மு. அஸ்லம், அ.செந்துாரன், ம.விமலதீபா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-ஐ-ரி5)

## சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

அச்செழு பூலசிட்டிப் பகுதியில் வீதியோரம் கைவிடப்பட்ட சைக்கிளை கடந்த வியாழக்கிழமை இரவு மீட்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண்கள் பாவிக்கும் சைக்கிளே இவ்வாறு மீட்கப்பட்டது. இது திருடர்களினால் திருடப்பட்டு அங்கு கைவிடப்பட்டிருக்கலாம் என கோப்பாய் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (த-ஐ-107)

## உரும்பிராயில் வாள்வெட்டு; ஐவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.17

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் பகுதியில் வருடப்பிறப்பன்று இரு குடும்பங்களுக்கு இடையில்ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் கைகலப்பாக மாறியதில் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கானதுடன் ஐவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட சிறு பிரச்சினை ஒன்றே இவ்வாறு மோதலாக இடம்பெற்று வாள்வெட்டில் முடிவடைந்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

வழக்குப் பதிவு செய்து விசாரணைகளைமேற்கொண்டபொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வரைக் கைது செய்துள்ளனர். கைதான நால்வரும் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-ஐ-107)

# காக்கைதீவு மீள்சுழற்சி மைய கட்டுமானப் பணிகள் தாமதம்

## அடிக்கல் நட்டு ஒன்பது மாதங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.17
நான்கு மாதங்களில் நிறைவு செய்யும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட காக்கைதீவு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்துக்கான கட்டுமானப்பணிகள் ஒன்பது மாதங்களைக் கடந்தும் நிறைவு செய்யப்படவில்லை.

கடந்த ஆண்டு ஜுலை மாதம், வடக்கு மாகாண சுற்றாடல்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசனால் அடிக்கல் நடப்பட்டு வடக்கு மாகாணத்தின் முதலாவது பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்திற்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. பின்னர் கட்டுமானப்பணிகள் மழை மற்றும் பிறகாரணங்களால் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் தற்போது கட்டுமானத்தை மேற்கொள்பவர் மேலதிகமாக நாள்களைக் கோரியுள்ளார். கதவு மற்றும் யன்னல் பகுதிகளை அமைப்பதற்கும் சில சிறு வேலைப்பாடுகளுக்காகவும் இந்த மேலதிக காலத்தைக் கோரியுள்ளார்.

> ஒரிரு வாரங்களுக்குள் பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையம் அமைக்கும் பணிகள் முடிவுறுத்தப்படும் என யாழ் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

எனவே ஒரிரு வாரங்களுக்குள் பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையம் அமைக்கும் பணிகள் முடிவுறுத்தப்படும் என யாழ் மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

பிளாஸ்ரிக் பொருள்களால் ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை குறைக்கும் வகையில் மீள்சுழற்சி முறையைச் செயற்படுத்தும் முகமாக, பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட காக்கைதீவில், கடந்த ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வடமாகாண சுற்றாடல்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத் துக்கான அடிக்கல்லை நட்டுவைத்தார்.

இந்த சுழற்சி நிலையத்தை உருவாக்க எட்டு மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டிருந்தது. இந்த நிதியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை 5.5 மில்லியன் ரூபாவைக் காசாக வழங்குவதோடு 1.6 மில்லியன் ரூபா பெறுமதியில் பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்கான இயந்திரத் தொகுதிகளையும் கொள்வனவு செய்து வழங்கியுள்ளது. யாழ். மாநகர சபை 0.79 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

முன் னாள் யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவ நாதன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த கட்டட நிர்மாணப் பணிகள் யாவும் நான்கு மாதங்களில் முடிவடைந்து மீள்சுழற்சிப் பணிகள் ஆரம்பமாகும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் கடந்த ஜனவரி மாதம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் காக்கைதீவு பிளாஸ்ரிக் மீள்சுழற்சி மையத்துக்கான கட்டுமானப் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. எனவே விரைந்து இவை முடிக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் திருமதி விஜிதா சத்தியகுமார் தெரிவித் திருந்தார். இந்தக்கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு சில பிரதேசசபைகளில் பிளாஸ்ரிக் மீள்சுழற்சிக்கான இயந்திரங்கள் தருவிக்கப்பட்டு மீள்சுழற்சிச் செயற்பாடுகள் பிரதேச சபை ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (த-ஐ-ரி5)

## ஆ.தியாகராசாவின் நூற்றாண்டு விழா

காரைநகர் ஏப்ரல் 17
காரைநகர் இந்துக் கல்லூரியில் 25 வருடங்கள் அதிபராகக் கடமையாற்றிய அமரர் கலாநிதி ஆ.தியாகராசாவின் நூற்றாண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் பதில் அதிபர் திருமதி கலாநிதி சிவநேசன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவரும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஓய்வு நிலைப் பிரதிச் செயலருமான ப.விக்னேஸ்வரனும், கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக் கழக .வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணமும் கலந்து கொள்ள உள்ளனர்.

கல்வி அபிவிருத்தியில் தியாகராசா புலமைப் பரிசில் நிதியம் என்ற தலைப்பில் தியாகராசா புலமைப் பரிசில் நிதிய ஸ்தாபகரும் அதன் செயலருமான வே.சபாலிங்கமும் காலத்தால் அழியாத தியாகம் என்ற பொருளில் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலனும் சிறப்புரையாற்ற உள்ளதுடன் நினைவுப் பேருரையை கல்லூரியின் முன்னாள் அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை நிகழ்த்த உள்ளார்.

சிந் தனை அரங்கம், இசை சமர்ப்பணம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (த-250)

## வரணியில் ஊமலுக்கு பெரும் மவுசு

வரணி,ஏப்.17
வரணிப் பிரதேசத்தில் ஊமல் மற்றும் தேங்காய் மட்டைகளுக்கு பெரும் மவுசு ஏற்பட்டுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் புகையிலை அறுவடை செய்யப்படுவதால் புகையிலையைப் புகையிட்டு பதப்படுத்துவதற்குத் தேங்காய் மட்டை, ஊமல் என்பன பாவிக்கப்படுகின்றன.

இதன் காரணமாக வடமராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் இருந்து தினமும் அதிகமான லான்ட்மாஸ்ரர்கள், வடிவாகனங்கள் மூலம் அதிகளவு கொள்வனவு செய்யப்படுகின்றன. (த-ஐ-122)

## கைதவறிய சுத்தியலால் குடும்பஸ்தருக்கு காயம்

சாவகச்சேரி,ஏப்.17
வீட்டுக்கூரைக்குச் சலாகை அடிக்கப் பயன்படுத்திய சுத்தியல் கைதவறி வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தவரின் நெற்றியைப் பதம் பார்த்தது.

நெற்றியில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குடும்பஸ்தர் மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி டச்சு வீதியில் இடம் பெற்றது. (த-ஐ-9)

## இன்று மின்சாரத் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியலிருந்து மாலை 5.30 மணிவரை மின்தடைப்படும். இதற்கமைவாக யாழ். பிரதேசத்தில் மட்டுவில், சரசாலை, கல்வயல், தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், இலுப்பையடிச் சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக விகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியா வீதி, மின்சார நிலையு வீதியில் ஒரு பகுதி, ரயில் நிலையப் பிரதேசம், மார்ட்டின் வீதி, யாழ். 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குத் தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் ரயில்க் கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி, அன்னச்சந்திர வீதி, ஆஸ்பத்திரி வீதியில் வேம்படி சந்தியிலிருந்து மார்ட்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதியில் ஆரிய குளத்திலிருந்து முட்டாசுக்கடை சந்திவரை, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதியில் ஒரு பகுதி, நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக ஆண்கள் விடுதி, டம்றோ பலாலி வீதி, ஹற்றன் நசனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள்ஸ் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, அவ்னோர் பிறைவேற் லிமெற்றெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். கிளிநொச்சி பிரதேசத்தில் இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, மத்தியவங்கி, இரணைமடு விசேட அதிரடிப்படை இராணுவ முகாம், மாஸ் அக்ரிவ், யுனிச்செலா, பொறியியற்பீடம், விவசாயபீடம், காகிள்ஸ் அகிரிபூட்ஸ், 651 ஆவது படைப்பிரிவு முகாம், 652 ஆவது படைப்பிரிவு முகாம், இராணுவபாசறை, 7 ஆவது படையணி இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-ரி)

## சாவகச்சேரி வைத்தியசாலை அபிவிருத்திக்கு நிதி வேண்டும்

### பொறுப்பதிகாரி கோரிக்கை

சாவகச்சேரி,ஏப்.17
சாவகச்சேரி வைத்தியசாலையில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி வேலைகளைக் கருத்திற் கொண்டு அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்ட முன்மொழிவுகளிலிருந்து, தலா ஒரு லட்சம் ரூபா வீதம் அறவிட்டு வழங்குமாறு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தென்மராட்சிப் பிரதேச செயலரைக் கேட்டுள்ளார்.

வைத்தியசாலையில் தினமும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறவரும் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கக்கூடிய மருத்துவர்கள் இருந்தும் அவைகளுக்கென நிரந்தர கட்டட வசதிகள் இல்லாததால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. குறிப்பாக குருதி வங்கி, சிறுவர் சிகிச்சை பராமரிப்பு நிலையம், பொலிஸ் காவலரண், நீரிழிவுப் பரிசோதனை நிலையம் உட்பட ஆறு வேலைத்திட்டங்களின் அவசியத்தைக் குறிப்பிட்டு தென்மராட்சிப் பிரதேச மக்களுக்கு வைத்திய சேவைகளை வழங்கும் வைத்தியசாலையின் அபிவிருத்திக் கென கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்டத்தில் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் அறவிட்டு வழங்குமாறும் கேட்டுள் ளார். பிரதேச செயலகத்தினால் கடந்த வருடம் விசேட வேலைத்திட்டத்தில் குருதி வங்கி அமைக்க நிதி ஒதுக்கியபோதிலும் நிதி கிடைக்காததையும், அதனால் மக்களின் தேவைக்குப் பயன்படுத்தும் குருதி வங்கி அமைக்க முடியாமல் போனதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தற்போது விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவுக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் இடம்பெற்று ஒவ்வொரு கிராம மக்களுக்கும் வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பான விழிப்புணர்வைத் தெளிவுபடுத்தி கிராம அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் ஒரு மில்லியன் ரூபா வேலைத்திட்ட நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் பெற நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளார். (த-ஐ-9)

## புத்தாண்டன்று குழு மோதல்; வல்வையில் 9 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 17
புத்தாண்டு தினமான வியாழக்கிழமை இரவு, வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற குழு மோதலில் 9 பேர் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ள தாக, வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எம்.மீடீன் தெரிவித்துள்ளார்.

வல்வெட்டித்துறை சமரபாகு பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு கோயிலில் வழிபாடு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதன்போது வேறு பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் அங்கு வந்துள்ளனர். அவர்கள் ஆலயத்தினுள் குழப்பம் விளைவித்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், குழப்பம் விளைவித்த இளைஞர்களுக்கும் இடையில் மோதல் நடைபெற்றுள்ளது. இந்த மோதலில் பொல்லுகள், தடிகளினால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டுள்ளனர். இந்த மோதலினால் இரு தரப்பைச் சேர்ந்த இளைஞர்களும் காயமடைந் துள்ளனர்.

இவ்வாறு காயமடைந்த 9 இளைஞர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர். (த-5-107-109)

# தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பு எதுவுமில்லை

## கூறுகிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு,ஏப்.17

தென்னிலங்கையில் பொலிஸ் நிலையத்தில் ஆயுதங்கள் திருடப்பட்டமை மற்றும் வடக்கில் ஆயுதங்கள் மீட்கப்படுகின்றமை என்பன தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையாது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் தற்கொலை அங்கி மீட்கப்பட்டு சில வாரங்களில், மாத்தளைலக்கலபொலிஸ் நிலையத்தில் ஆயுதங்கள் களவாடப்பட்டுள்ளன. எனினும் இரண்டு நாள்களின் பின்னர் இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

> இராணுவம் என்பது தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றல்ல என்று குறிப்பிட்ட அவர், இராணுவம் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒன்றாகும் எனவும் கூறியுள்ளார்

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள இராணுவ ஊடகப் பேச்சாளர், தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்கால செயற்பாட்டுக்காக ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான தேடுதல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 30 வருடங்கள் இடம்பெற்ற போரின் போது மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் குறுகிய காலத்துக்குள் மீட்கப்படுகின்றமையானது சாத்தியமற்ற ஒன்று. அதே போன்று லக்கல சம்பவம் தேசிய பாதுகாப்புக்கு எவ்விதத்திலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தாது.

இதேவேளை, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் குறித்து, எவரேனும் அறிந்திருக்கும் பட்சத்தில் அதனை பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவிக்குமாறும் இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர கேட்டுக் கொண்டுள்ளார்.

இராணுவம் என்பது தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றல்ல என்று குறிப்பிட்ட அவர், இராணுவம் என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒன்றாகும் எனவும் கூறியுள்ளார்.

(த-ஐ-5)

## ருமேனியாவுக்குள் நுழைந்த இலங்கையர் நாடு கடத்தல்

கொழும்பு, ஏப். 17

சட்டவிரோதமாக ருமேனியாவுக்குள் நுழைந்த இலங்கையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள், சேர்பியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

ருமேனியாவில் சட்ட விரோதமாகத் தங்கியிருந்த இலங்கை, ஈராக், சிரியா நாடுகளைச் சேர்ந்த எட்டுப் பேரை, சேர்பியாவுக்குத் திருப்பி அனுப்பியுள்ளதாக குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள குடிவரவு தொடர்பான உடன்பாட்டுக்கு அமையவே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

திமிஸ் ஆற்றங்கரையில், ருமேனிய எல்லைப் பாதுகாப்புப் படையினரால், இவர்கள் கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்ட ஐந்து இலங் கையர்களும், 20 தொடக்கம் 24 வயதுக்கு இடைப் பட்டவர்கள் என்றும் ருமேனிய அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். . (த-ஐ-5)

## ஆதிவாசிகள் கிரிக்கெட் அணிக்கு அனுசரணை வழங்கக்கோரிக்கை

கொழும்பு, ஏப். 17

ஆதிவாசிகளின் கிரிக்கெட் அணிக்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அனுசரணை வழங்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆதிவாசிகள் கிரிக்கெட் சங்கத்தின் தலைவர், இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

இலங்கையின் ஆதிவாசிகள் கிரிக்கெட் அணி ஏனைய நாடுகளின் ஆதிவாசிகளுடன் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ள விருப்புடனும், தயாராகவும் உள்ளது. இதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அனுசரணை தேவையாக உள்ளது.

ஆதிவாசிகள் கிரிக்கெட் அணியின் தேவைகள் மற்றும் புதிய பிரேரணைகள் தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவுக்கும் தெரியப்படுத்தி இருக்கின்றோம். அத்துடன் அமைச்சர்களைக் கொண்ட கிரிக்கெட் அணியுடன் போட்டியொன்றில் ஈடுபடும் எமது ஆர்வத்தையும் வெளிப்படுத்தி இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த-5)

## இந்தியக் கடற்படைத் தளபதி 6 நாள் பயணமாக இலங்கைக்கு



கொழும்பு,ஏப்.17

இந்தியக் கடற்படையின் தென்பிராந்தியக் கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் கிரிஷ் லூத்ரா ஆறு நாள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ளார்.

கொழும்புத் துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த இந்தியக் கடற்படையின் சுஜாதா, திர் மற்றும் இந்தியக் கடலோரக் காவல்படையின் வருண ஆகிய கப்பல்களின் அணியுடனேயே இவர் இலங்கை வந்துள்ளார்.

வைஸ் அட்மிரல் கிரிஷ் லூத்ரா பத்தரமுல்லையில் உள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவுச் சின்னத்தில் நேற்று முன்தினம் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது கடற்படை அதிகாரிகள், கொழும்புக்கு வந்துள்ள இந்தியக் கடற்படைக் கப்பல்களின் கட்டளை அதிகாரிகள் மற்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஸ் கோபாலன் ஆகியோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர்.

(த-ஐ-5)

## பல்கலைக்கழக அனுமதிகளுக்கு ஒன்லைன் மூலம் விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

பல்கலைக்கழக மாண்வர்கள் இனிமேல் தமது அனுமதிக்குரிய விண்ணப்பச் செயன்முறைகளுக்கு ஒன்லைன் வசதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறுந்தகவல் ஊடாக அந்தப் பதிவை உறுதிப்படுத்த முடியும் என்றும் ஆணைக்குழு கூறியுள்ளது.

அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகிய பின்னர் மாணவர்கள் தமது பதிவை விரைவில் பதிவு செய்ய இந்த ஒன்லைன் முறையைப் பின்பற்றுவதற்கான வசதிகளைச் செய்யவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வசதிகள் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுடனும் இணைந்து வழங்கப்படவுள்ளன. தவிர பல்கலை மாணவர்களுக்கான எளிமையான இரண்டு பிரிவுகளைக் கொண்ட மாணவர் கையேடுகளும் தயாராக உள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

(த-ஐ-4)

## அமெரிக்காவின் குற்றச்சாட்டு: கருத்துக் கூற இலங்கை தயக்கம்

கொழும்பு, ஏப்.17

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ள இலங்கையின் மனித உரிமைகள் நிலை குறித்த அறிக்கையில், இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கருத்து வெளியிட இலங்கை அரசு த்யக்கம் காட்டி வருகிறது.

நாடுகளின் மனித உரிமை நடைமுறைகள் - 2015 என்ற அறிக்கையை அமெரிக்க இராஜாங்கச் செயலர் கெரி கடந்த 13 ஆம் திகதி வெளியிட்டிருந்தார்.

அதில் இலங்கை தொடர்பான பகுதியில், பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்வதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இது குறித்து இலங்கை அரசு இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இந்த நிலையில், இந்த அறிக்கையை முழுமையாக ஆய்வு செய்த பின்னரே, அது பற்றிய இலங்கை அரசின் கருத்து வெளியிடப்படும் என்று, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷா டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் இராணுவம் தொடர்பான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன. இது குறித்து இராணுவப் பேச்சாளரிடம் கருத்துக் கேட்டபோது, அவரும், முழுமையாக அறிக்கையை ஆய்வு செய்த பின்னர் நாளை திங்கட்கிழமை பதிலளிப்பதாக கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

## துப்பாக்கியை காக்கத் தெரியாத பொலிஸார் பிரபுக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவரா?

### கேள்வி எழுப்புகிறார் ரஞ்சித் டி சொய்சா

கொழும்பு, ஏப்.17

பொலிஸ் நிலையத்திலுள்ள துப்பாக்கியைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியாத பொலிஸார் எப்படி பிரபுக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவார்கள் என்று மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா கேள்வி எழுப்பியுள்ளார்.

லக்கல பொலிஸ் நிலையத்தில் துப்பாக்கிகள் திருடப்பட்டமை பிரபுக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன கடந்த சில நாள்களுக்கு முன்னர், இராணுவப் பாதுகாப்பை நீக்கிவிட்டு, பொலிஸ் பாதுகாப்பை மாத்திரமே பிரபுக்களின் பாதுகாப்புக்கு வழங்கவுள்ளதாக அறிவித்திருந்தார்.

லக்கல பொலிஸ் நிலையத் துப்பாக்கித் திருட்டை சாதாரணமாக கருதாமல் கூடிய அவதானம் செலுத்துமாறும் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-ஐ-5)

# சர்வதேச நாடாளுமன்றின் விசேட குழு இலங்கைக்கு

## பொது எதிரணியினர் மேற்கொண்ட முறைப்பாடு குறித்த விசாரணைக்கு

கொழும்பு, ஏப். 17

நாடாளுமன்றத்தில் தமக்கான சிறப்புரிமை மறுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, ஜெனிவாவிலுள்ள சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் பொது எதிரணியினர் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக, சர்வதேச நாடாளுமன்றத்தின் விசேட பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வரவுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைமைப் பதவி உட்பட நாடாளுமன்ற உறுப்புரிமையை சவாலுக்கு உட்படுத்திய நிலை, தற்போதைய ஆட்சியின் கீழ் இலங்கை நாடாளுமன்றத்தில் காணப்படுவதாகக் குற்றம் சுமத்தி, கூட்டு எதிர்க்கட்சி ஜெனிவாவுக்குப்பயணம்மேற்கொண்டு சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தில் முறைப்பாடு செய்திருந்தது.

கூட்டு எதிர்க் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, பந்துல குணவர்த்தன மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் உள்ளடக்கப்பட்ட மூவரடங்கிய குழு கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி ஜெனிவா சென்றது. இந்தப் பயணம் தொடர்பில் தெளிவுப்படுத்துகையிலேயே பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் மார்டின் ஷங்கொங்கை கடந்த மாதம் 31 ஆம் திகதி எமது குழு சந்தித்தது. இதன்போது கூட்டு எதிர்க் கட்சியின் 53 பேரின் கையொப்பங்களுடனான முறைப்பாட்டைக் கையளித்தோம். எமது முறைப்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தினோம்.

இலங்கையில் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உரிமைகள் தொடர்பில் சர்ச்சை நிலை காணப்படுவதை அறிந்துள்ளதாக சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் செயலாளர் நாயகம் எமக்குக் கூறினார்.

இது குறித்து சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் அலைபேசியூடாக செயலாளர் நாயகம் கலந்துரையாடியுள்ளார். மேலும் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் விசேட குழுவை இலங்கைக்கு விரைவில் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-5)

# கிராம அலுவலர் சாவு இரண்டு பேர் கைது



கொழும்பு,ஏப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழூர் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் கிராம அலுவலர் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மகிழூர், கேணி வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று மின் கம்பத்தில் மோதிச் சேதமடைந்த நிலையில் காணப்பட்டது. அதில் பயணம் செய்த கிராம அலுவலர் ஒருவர் அருகில் காயங்களுடன் சடலமாகக் கிடந்தார். அத்துடன் அவருடன் பயணித்த இளைஞர் ஒருவர் படுகாயங்களுடன் மயங்கிய நிலையில் நிலத்தில் விழுந்து கிடந்தார்.

உயிரிழந்தவர் ஒந்தாச்சிமடம் பகுதியில் கிராம அலுவலராகக் கடமையாற்றிவரும் மகிழூர் பகுதியைச் சேர்ந்தவர் எனக் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இவர்களைக் குறித்த பிரதேசத்தில் சிலர் வழிமறித்துத் தாக்கினர் எனவும், அதன் காரணமாகவே இவர்கள் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றபோது மின் கம்பத்தில் மோதினர் எனவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்துக்குச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தடயவியல் குற்றப்பிரிவுப் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்த கிராம அலுவலரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு நேற்றுக் காலை அனுப்பி வைக்கப்பட்டது.

குறித்த கிராம அலுவலருடன் சென்று படுகாயமடைந்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த களுவாஞ்சிக்குடிப் பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(த-ஐ)

# அமீர் அலியை அதிதியாக அழைப்பது துரோகமாகும்

## யோகேஸ்வரன் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.17

கூட்டமைப்பின் பிரதிநிதிகள் உங்களுக்காக உழைக்கும் போது, அமீர் அலி போன்றவர்களை உங்கள் பகுதிகளுக்கு அழைத்து விருந்து வைக்க வேண்டாம். இவ்வாறான விழாக்களுக்கு அமீர் அலியை அதிதியாக அழைப்பது, நீங்கள் தமிழினத்துக்குச் செய்யும் துரோகமாகும் என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பெரிய போரதீவு கிராமத்தில் இடம்பெற்ற கலாசார விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் வீட்டுச் சின்னத்துக்கு எதிராக யானைச் சின்னத்துக்கு வாக்களித்தவர்களும் இருந்தீர்கள். அந்த யானைச் சின்னத்தில் போட்டியிட்ட தமிழர்களுக்கு அளித்த வாக்குகள் அமீர் அலியை நாடாளுமன்ற ஆசனத்தில் அமர்த்தி விட்டது. இன்று என்ன செய்கின்றார் அமீர் அலி. முஸ்லிம் இனத்தாலேயே ஒதுக்கப்பட்ட அந்த முஸ்லிம் பிரதிநிதி தான் பிரதி அமைச்சர் அமீர் அலி. தமிழ் மக்களுடைய வாக்கைப் பெற்று நாடாளுமன்றக் கதிரை ஏறியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிக்க ஆரம்பித்து விட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் நிராகரிக்காது, மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கியிருக்கின்றார்கள். ஆனால் பிரதி அமைச்சர் அமீர் அலி ஓட்டமாவடி முஸ்லிம் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்.



வட்டிக்கு எதிராக வாழும் முஸ்லிம் மக்களை, சமுர்த்தி பிரதி அமைச்சராக இருந்த அமீர் அலி கடந்த காலத்தில் அந்த மக்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயைக் கொடுத்து நான் வெற்றி பெற்றால் நீங்கள் தரத்தேவையில்லை என்று கூறி தற்போது அந்த மக்களை வட்டியோடு அந்தப் பணத்தைக் கட்ட வைத்திருக்கின்றார். இவர் எங்களுடைய தமிழ்ப் பகுதிகளிலே ஊடுருவி கூட்டமைப்புக்கு எதிராக விமர்சித்து தமிழ் மக்களின் வாக்குகளைக் கபடத்தனமாகச் சுரண்ட முற்பட்டிருக்கின்றார்.

அவர் முதலில் தங்களுடைய இன மக்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும். முஸ்லிம் மக்கள் தற்போது பல தேவைகளைப் பெற வேண்டிய நிலையில் உள்ளனர். இதன்போது, முஸ்லிம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது, தன்னுடைய சொந்த உறவுகளுக்கு புணானை வீதியில் அரச காணிகளைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் அமீர் அலி.

அமீர் அலி பற்றித் நான் இவ்வளவு கூறுவதற்கு காரணம், அவரை விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிதியாக அழைப்பதாக நான் கேள்வியுற்றேன். யார் இந்த அமீர் அலி ? மகிந்த அரசிலே மாகாண சபையில் இருந்துகொண்டு சுகபோகங்களை அனுபவித்தவர்.

மாகாணசபையில் இருக்கும் போது ஜனாதிபதித் தேர்தலுக்குப் பூரணமாக ஒத்துழைக்கின்றேன் எங்கள் முஸ்லிம் மக்களை வாக்களிக்கச் செய்கின்றேன் எனக்கு ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தரவேண்டும் என்று கேட்டதன் பிரகாரம், அஸ்வரின் ஆசனத்தையும், சகல சலுகைகளையும் பறித்து நம்பிக்கையின் பேரில் அமீர் அலிக்கு கொடுக்கப்பட்டது. அவற்றையெல்லாம் அனுபவித்துவிட்டு பின்னர் மைத்திரியின் பக்கம் தாவியவர்தான் அமீர் அலி.

நம்பிக்கைத் துரோகம் செய்து, காலத்துக்குக் காலம் ஆட்சி பீடமேறும் போது கட்சி தாவும் இவர் என்னுடைய படத்தையும், அரச அதிபரின் படத்தையும் வைத்து பரப்புரை செய்து வருகின்றார் என்று யோகேஸ்வரன் தெரிவித்தார்.

(த-ஐ-5)

# 3 அமைச்சர்களுக்கு எதிராக சுதந்திரக் கட்சி முறைப்பாடு

கொழும்பு, ஏப். 17

ஆளும் கட்சியின் அமைச்சரவை அந்தஸ்துடைய மூன்று அமைச்சர்களுக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறைப்பாடு செய்யவுள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்ல மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

பல தடவைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களையும், உறுப்பினர்களையும் இந்த அமைச்சர்கள் விமர்சனம் செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இணக்கப்பாடுடைய கூட்டு அரசின் கொள்கைகளுக்கு புறம்பான வகையில் இவர்கள் செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்யவுள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

(த-ஐ-5)

# பிரதமரின் சீனப் பயணத்தால் கடன்களுக்கு வட்டி குறைப்பு

கொழும்பு, ஏப்.17
பிரதமரின் சீனப் பயணத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டி குறைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் 1950 ஆம் ஆண்டுகளில் சீனாவுக்கு தடைகளை விதித்திருந்தன. சீனாவுடனான ஏனைய நாடுகளின் தொடர்புகளை துண்டிக்குமாறும் அழுத்தங்களை கொடுத்தன.

இவ்வாறானதொரு நிலையில் 1952 இல் இலங்கையில் ஐ.தே.கட்சி ஆட்சியதிகாரத்தில் இருந்தது.

அமெரிக்காவினதும் பிரிட்டனினதும் தடையை மீறி அன்றைய ஐ.தே.க.வின் அரசு சீனாவுடன் வர்த்தக உடன்படிக்கையைச் செய்து கொண்டது. எனவே சீனாவுடனான உறவு என்பது ஐ.தே.க.வுக்கு புதிய தொன்றல்ல. அதன் பின்னர் தான் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் ஆட்சியில் சீனாவுடனான ராஜதந்திர உறவுகளை இலங்கை ஆரம்பித்தது.

எனவே ஐ.தே.கட்சி சீனாவிடம் மண்டியிட்டதாகவும், பிச்சை கேட்பதாகவும் எதிர்க்கட்சியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளில்எந்தவிதமான அடிப்படையும் கிடையாது.

சீனாவின் நிதி நிறுவனங்களிடமிருந்து கடந்த ஆட்சியாளர்கள் அதிக வட்டிக்குக் கடன்களைப் பெற்றனர்.

அது மட்டுமல்லாது கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தை சீனாவுக்கு சொந்தமாக வழங்கியுள்ளனர்.

இந்தத் திட்டத்தில் இலங்கைக்குத் தேவையற்ற விடயங்களும் புகுத்தப்பட்டன. இன்று இவையெல்லாம் நீக்கப்பட்டு இலங்கைக்கு சாதகமான விதத்தில் 99 வருட குத்தகை அடிப்படையில் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு அண்மையில் பயணம் செய்தபோது கடந்த ஆட்சியின் அதிக வட்டிக்கு பெற்ற கடன்களுக்கான வட்டியை குறைத்துக் கொள்வதற்கும் முடிந்துள்ளது. அத்தோடு அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தளவிமானநிலையம் என்பன தன்னிச்சையாக எவ்விமான வருமானத்தையும் நாட்டுக்கு பெற்றுக் கொள்ளாத விதத்தில் நிர்மாணிக்கப்பட்டன.

அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் அண்டிய பகுதிகளில் முதலீடுகளுடன் தொழிற்சாலைகளை நிர்மாணித்து உற்பத்திகளை மேற்கொள்வதற்கும் அவற்றை ஏற்றுமதி செய்வதற்கும் அந்தப் பிரதேசங்களில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் பிரதமரின் சீனப் பயணத்தின் போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்றார். (த-ஐ-5)




## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி லலிதா சற்குணராசா அவர்களின் தாயார்

**திருமதி பாக்கியம் மருதப்பு**

அவர்கள் கடந்த 15.04.2016 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/செட்டித்தெரு
மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை.

## 12 ஆம் ஆண்டு நெஞ்சம் நெகிழும் நினைவலைகள்

செல்வன்
**தெய்வேந்திரம் வசீந்திரன்(வசீ)**
[மு/மல்லாவி யோகபுரம் மகாவித்தியாலய பழைய மாணவன்]
திதி: வளர்பிறை ஏகாதசி 17.04.2016



இன்பத்தின் நிறைவாய்
10.09.1983

துயரத்தின் இமயமாய்
01.04.2004

பாசம் மிக்க மகனாக அன்பு மிக்க சகோதரனாக
வசீ என்று நாம் அழைத்த செல்வமே!!
பேரிடியாய் வந்த அனல் மின்னல்
நம் மகிழ்வை நசுக்கி இன்றுடன்
பன்னிரண்டாண்டுகள் ஆனதுவோ
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உமது நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
077 044 9578

நி.முகவரி: கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை.
த.முகவரி: நீர்வேலி தெற்கு, நீர்வேலி

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் சிவபாலன்

(முன்னாள் யாழ்.வர்த்தகர்)

பிறப்பு
12 . 10 . 1950



இறப்பு
13 . 04 . 2016

யாழ்.புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸைத் தற்காலிக வதிவிடமாகவும், வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவபாலன் 13.04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேரின்பநாதன் - மங்கையர்க்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், புஷ்பவனிதாவின் பாசமிகு கணவரும், அனுஷா (கனடா), சசிரேகா, மயூரன் (பிரான்ஸ்), சந்திரிகா (இலங்கை), செந்தூரன் (கனடா), சங்கீதா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானஸ்கந்தன் (கனடா), வசந்தகுமார் (அமெரிக்கா), துசி, ராஜ்குமார் (இலங்கை), கணேஷ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலாதேவி (கனடா), செல்லம்மா (கனடா), கருணாநிதி (கனடா), சூரியகலா ( கனடா), சிவகுமார் (ஜேர்மனி), மங்களேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற மோகனதாஸ், புஷ்பராணி (ஜேர்மனி), திருச்செல்வம் (ஜேர்மனி), புஷ்பலதா, தியாகராஜா (கனடா), ஜெகநாதன் (கனடா), கலாநிதி (கனடா), விஜயகுமாரன் (கனடா), காலஞ்சென்ற சரஸ்வதி (கோகிலம்), தமிழ்வாணி (ஜேர்மனி), கேதீஸ்வரநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேவி . நாகஸ்ரீதரன் (ஜேர்மனி), சகுந்தலா (ஜேர்மனி), உதயகுமார், ஆகியோரின் அன்புச் சகலனும், ராகுல் (கனடா), அஷ்வினி (கனடா), யதுஷ்ன், கனிஷ்கா, விதுஷா, வர்ஷா, ஆருஷன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீட்டு முகவரி:**
**இல.49/3, கோயில்வீதி,**
**முதலாவது லேன், குருமன்காடு,**
**வவுனியா**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**மனைவி, மகன், மகன்.**

(சி/22387)(11.18)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் தம்பிராஜா

தோற்றம்
17 . 06 . 1944



மறைவு
13 . 04 . 2016

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தம்பிராஜா 13.04.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பொன்னு தம்பதிகளின் ஏகபுத்திரனும் இராஜம் , இரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் கலைவாணி(ஜேர்மனி), கதிர்வண்ணன் (கனடா), மதிவண்ணன்(படப்பிடிப்பாளர்), சத்தியவாணி (முன்பள்ளி ஆசிரியர்), சுகிர்தவாணி(பிரான்ஸ்), நிதிவண்ணன் (செலிங்கோ அச்சுவேலி கிளை), நித்தியவாணி(பிரதேசசபை - தெல்லிப் பழை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வரதராஜா (ஜேர் மனி), ஜெயச்சித்திரா(கனடா), சதீஸ்குமார் (மரக்காலை), பிறேம்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஜெனிவா, மிதுஸ்,நிருஸ், ஜெனோசன், டனிசன், வர்சா, ஆகாஸ், அபிசா, அக்ஷா ஆகியோரின் பாசமிகுபேரனும் இராசதுரை , செல்வரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று(2016.04.17) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்துமயானத்திற்கு பி.ப ஒரு மணி அளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அச்சுவேலி வடக்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 608 0614**

### திருமதி சரஸ்வதி தன்மாவரதர்



கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.சரஸ்வதி தன்மாவரதர் 14.04.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தன்மாவரதர் (Ex.Chief Train Controller - Anuradhapura ) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலச்சந்திரன்(Lanka Ceylon ), பாலகுமாரன் (Aangernayer Union Assurance ), பாலதயாளன் (Rupavahini Corp, The Hifi Center), பாலராசன்( Spectrum, Taxas USA), சீதாலஷ்மி, பாலேந்திரன்( UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் சகுந்தலாதேவி, காலஞ்சென்ற சுலோச்சனா, கெங்கா(Teacher St.Thomas College - Mount Lavinia), சிவகாமசுந்தரி(USA ), சிவநிதி( UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சன்( Icone Developers), ஜெனனி (Wayamba University ), பிரியதர்சன்(பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரி), பாலினி(சைவமங்கையர் வித்தியாலயம் - வெள்ளவத்தை), யாதேவ்(மருத்துவ பீடம் - யாழ் பல்கலைக் கழகம்), அபிராம்(UNSW - Australia ), சாரங்கன் (புனித பரிதோமாஸ் கல்லூரி - கல்கிசை), றொஷான்(USA), கிரிசான் (UK), நிருத்தனா(UK) ஆகியோரின் அப்பம்மாவும் காலஞ்சென்றவர்களான லட்சுமிதேவி, விஸ்வநாதன் மற்றும் சிறீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வாமதேவா மற்றும் செல்வராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பஞ்சாட்சரம், பஞ்சலட்சுமி, ஜெயலட்சுமி, செல்வலட்சுமி ஆகியோரின் பெரியம்மாவும் மற்றும் கேதாரகௌரி, சுமதி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (16.04.2016) சனிக்கிழமை மு.ப 10 மணிமுதல் மாலை 6மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**22 2/1,Moor Road,**
**Wellawatte.**

**தகவல்:**
**த.பாலகுமாரன் 077 301 3756**
**த.பாலச்சந்திரன் 077 368 8152**
**த.பாலதயாளன் 071 627 7244**

(c 20804)
(14.17.18)

# புதிய அரசமைப்புக்கு முழு ஆதரவு இல்லை

## கூறுகிறார் தினேஸ் குணவர்த்தன

புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளில் நாங்கள் பங்கெடுக்கின்றோமே தவிர அவற்றுக்கு முழுமையான ஆதரவை வழங்கவில்லை என்று, பொது எதிரணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரி விக்கையில்,

தற்போது நாட்டில் அரசு இல்லாத நிலையே காணப் படுகின்றது. பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்து விட்டது. அரச நிர் வாகம் சிறந்த முறையில் இல்லை. இந்த விடயங்களை நான் கூறவில்லை. மக்கள் எங்களிடம் கூறுவதையே கூறுகின்றேன். சர்வதேச நாணய நிதியம் குறுகிய காலத்தில் ஆறு தடவைகள் இலங்கைக்கு வந்துவிட்டது.

பல சுற்று பேச்சு நடத்தப்பட்டுவிட்டது. ஆனால் எந்த விளைவும் இல்லை. கடன் கிடைக்குமா என்றும் தெரியவில்லை. ஆனால் பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நெருக்கடிக்கு மேல் நெருக்கடிகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் இந்தியாவுக்கு தடிமன் வந்தால் இலங்கைக்கு காய்ச்சல் வரும் என்பார்கள். ஆனால் தற்போது சீனாவுக்கு தடிமன் வந்தால் ஏனைய நாடுகளுக்கு காய்ச்சல் வரும் நிலைமை வந்துவிட்டது.

அதனால் தான் வேறு வழியின்றி அரசு சீனாவின் காலடியில் விழுந்துள்ளது. எவ்வாறெனினும் அரசு நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதைவிடுத்து பொது எதிரணியை விமர்சிப்பதையே தனது வழமையாகக் கொண்டுள்ளது.

எம்மை விமர்சனம் செய்தாலும் பரவாயில்லை. ஆனால் நாட்டின் பொருளாதார வீழ்ச்சி குறித்தும் கவனம் செலுத்துங்கள். எனினும் அரசு எந்த திட்டங்களும் இன்றி அமைச்சுப் பதவிகளை அதிகரித்து வருகின்றது. பொருளதார தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக செலவுகளை மேலும் அதிகரித்து வருகின்றது.

இந்த இடத்தில் அரசு நாட்டுக்கு ஒரு முன்னுதாரணத்தை வழங்கலாம். அதாவது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் நோக்கில் அமைச்சர்களுக்கான வாகனங்களை குறைக்க வேண்டும். பொருளாதார நெருக்கடி சீராகும் வரை ஒரு அமைச்சர் ஒரு வாகனத்தைப் பயன்படுத்தினால் போதுமானது. நாட்டுக்கு அமைச்சர்கள் இவ்வாறு முன்னுதாரணமாக செயற்படவேண்டும். தற்காலிகமாக இந்த நடைமுறையை அரசு கடைப் பிடிக்க வேண்டும் - என்றார். (த-ஐ-5)

# மகள் துஷ்பிரயோகம்: தந்தை விளக்கமறியலில்

அம்பாறை,ஏப்.17

தனது சொந்த மகளான 9 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபரான தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் சந்தேக நபரான சிறுமியின் தந்தை முன்னிலைப் படுத்தப்பட்ட போது, நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எம்.கே.பேரின்பராசா குறித்த விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.

நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையான குறித்த, சந்தேக நபரின் மனைவி சுகவீனமுற்ற ஆண்பிள்ளை ஒன்றுடன் அன்றிரவு வைத்தியசாலையில் தங்கியிருந்துள் ளார்.

இந்தத் தருணம் பார்த்துத் தன்னுடன் தங்கியிருந்த தனது மூத்த புதல்வியான ஒன்பது வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள சிறுமி சிகிச்சைக்காக கல்முனை அஷ்ரப் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரைக் கைது செய்த கல்முனைப் பொலிஸார், கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எம்.கே.பேரின் பராசாவிடம் முன்னிலைப் படுத்தினர்.

இதனையடுத்து சந்தேக நபரான தந்தையை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் பேரின் பராசா உத்தரவிட்டார்.

தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப் ப்ட்ட சிறுமி அணிந்திருந்த ஆடை, உள்ளாடை மற்றும் தடயப் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-ஐ-30)

**யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு**

யாழ்.சுண்டுக்குளிப் பாடசாலைக்கு அண்மையில் ஈச்சமோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

**அறை வாடகைக்கு**

யாழ். ஸ்ரான்லி வீதியில் பெண்களுக்கு அறை வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 758 5412

**வேலைவாய்ப்புக்கள்**

இலங்கையின் முன்னணி சீலிங் மற்றும் கட்டடத்துறை சார்ந்த பொருள்களை விற்பனை செய்யும் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளைக்குச் சந்தைப்படுத்தல் பிரிவுக்கு திறமையும் சுறுசுறுப்பும் ஆர்வமும் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக்கோவையுடன் நேரடியாக சமுகம் தரவும்.

01. சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (ஆண்கள்)
02. காட்சியறை உதவியாளர் (பெண்கள் )

வயதெல்லை 30வரை மட்டுமே

சிவிலிம
இல.644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)
(இலங்கை காப்புறுதி நிறுவனத்துக்கு முன்பாக)
077 949 4200, 072 040 0335
www.sivilima.com

**பணியாளர்கள் தேவை**

நெல்லியடியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு கீழ்க்காணும் வேலைகளுக்கு ஆள்கள் தேவை. சிற்றுண்டி தயாரிப்பாளர், ரொட்டி தயாரிப்பாளர், சமையல் வேலையாள்கள், உணவு பரிமாறுபவர்கள், தேநீர் தயாரிப்பாளர் தேவை.

தங்குமிட வசதி, உணவு இலவசம்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 716 2904, 077 757 4752

**நீரிழிவு நோய் தொடர்பான விழிப்பூட்டல்**

மாரடைப்பு, பக்கவாதம், பார்வை இழப்பு, உயர்குருதி அழுத்தம், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய்களை ஏற்படுத்த காரணமான நீரிழிவு நோய் உங்களை பீடித்துள்ளதா? இல்லையா என்பதை உடன் அருகே உள்ள அரச வைத்தியசாலையில் இலவசமாய் பரிசீலித்து உறுதி செய்துகொள்ளுங்கள்.

சீனி கொல்லும்
Sugar Kills

யாழ்/ நீரிழிவு அஷோசியேஷன்
J/ Diabetes Association
T.P: 077 666 9055

(சி.22470) (13.19)

**ஜீவகவாத ஒத்தட பத்து**

முதுகுத்தண்டு,கழுத்து, கணுக்கால், முழங்கால், இடுப்பு, மணிக்கட்டு, முழங்கை, தோள்பட்டை ஆகிய இடங்களிலும் கார்ட்டிலேஜ் எனப்படும் எலும்பு திசுக்கள் குறைதல்,திசுக்கள் கடினமடைதல் அல்லது தேய்மானம் ஆகியன காரணமாக ஏற்படும் வலிகளுக்கு ஜீவகவாத ஒத்தட பத்து மருந்தை பயன்படுத்துவதன் மூலம் நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனைப் பயன்படுத்துவதன் மூலம் எலும்பு மூட்டுக்களில் திசுக்களின் வளர்ச்சி அதிகரிக்கும்.

Manufactured by :
jeewaka Herbal Products (pvt) Ltd
yakkala

அனைத்து பாமசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
தொ.பே. 021 222 2567

**SPOKEN ENGLISH**

உங்களால் ஆங்கிலம் பேசமுடியவில்லையா?
ஆங்கிலம் பேச இயலாமையினால் பல நல்ல வாய்ப்புக்களை நீங்கள் தவறவிடலாம்.

இன்றே இணையுங்கள்!

**Winstar Spoken English**

- ஆங்கிலத்தில் பேசும் திறனைப் பெறுவதற்காக Winstar இனால் வடிவமைக்கப்பட்ட பாடநெறி.
- இலக்கணம் சாராத பேசுவதற்கான பயிற்சிகள் மட்டும்
- ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட பயிற்சிகள்
- கதைக்க ஆரம்பிக்கும் சிறு பிள்ளைக்குக் கதைக்கப் பழக்குவது போன்ற இலகுவான பயிற்சிகள்
- பாடநெறியின் நிறைவில் சிறந்ததொரு வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான சந்தர்ப்பம்.
- நீங்கள் ஆங்கிலத்தில் பேச 100% உத்தரவாதம்.

புதிய பிரிவுக்கு இன்றே பதிவு செய்யுங்கள்

WINSTAR JOB BANK
#106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலிவீதி, திருநெல்வேலி.

**வேலை ஆள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக ஸ்தாபனத்திற்கு பெண் வேலையாள்கள் தேவை.

076 871 6917

**விற்பனைக்கு**

C.T.100 மோட்டார் சைக்கிள் டாக்டரின் தனிப் பாவனை விற்பனைக்கு

தொடர்பு: 077 993 5844

**காணிவிற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நல்லூர் செட்டித்தெரு லேனில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

**வீடு வாடகைக்குத் தேவை**

K.K.S. வீதி கொக்குவில் , தாவடி அண்மித்த பகுதிகளில் தேவை.

077 929 5674

**காணி விற்பனைக்கு**

நாரந்தனை வடக்கு, பெரியபுலம் வீதி, ஊர்காவற்றுறையில் 15 பரப்பு (தோட்டத்துடன் கூடிய நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

078 733 5822, 077 400 2499

**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோயிலுக்கு அண்மையில் கோயில் வீதியில் அமைதியான சூழலில் 3 அறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

071 096 2660

**வேலையாள்கள் தேவை**

கொழும்பு நகரில் நிரந்தரமாக வேலை செய்வதற்கு பெயின்ட் வேலையாள்கள், உதவியாளர்கள் தேவை.

077 230 9164

**வீடு வாடகைக்கு உண்டு**

நாவலர் வீதி, நல்லூரிலும் அரியாலை கிழக்கு நாவலடியிலும் வீடுகள் (சகல வசதிகளும் கொண்ட) வாடகைக்கு உள்ளன.

077 804 2848

**காணி விற்பனைக்கு**

பளை நகர்ப் பகுதியில் A9 வீதிக்கும் புகையிரத வீதிக்கும் அண்மையில் பத்து (10) பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 174 9285

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1985.07.24, கிரகபாவம் 43, நட்சத்திரம்-சித்திரை 2ஆம் பாதம், 10இல் சூரியன், செவ்வாய், சொந்த தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

021 221 3763, 077 906 2476

**காணி விற்பனைக்கு**

சுன்னாகம் தெற்கு, சிவபூதவராஜர் வீதியில் 6 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

077 244 8213

**மணமகள் தேவை**

ஓவியக் கலைஞராகவும் தனியார் கம்பனியொன்றில் நிறைவேற்று அதிகாரியாகவும் பணிபுரியும் சிங்கள, பௌத்த சமயத்தைச் சேர்ந்த 48 வயதுடைய 5'2" உயரமுள்ள தீய பழக்கங்களற்ற மணமகனுக்கு 34 - 43 வயதுக்கிடைப்பட்ட படித்த கௌரவமான மணமகள் தேவை. (விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம்) (சாதி, சமயம் பார்க்கப்படமாட்டாது)

071 618 6516
Email:desilvapkir@gmail.com

**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1978 இல் பிறந்த அனுஷ நட்சத்திரம் கிரக பாவம் 36, தனியார் நிறுவனத்தில் மேற்பார்வையாளராகப் பணிபுரியும் மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை. (தொழில் புரியும் மணமகள் விரும்பத்தக்கது)

077 693 5610,077 321 5542

**வீடு வாடகைக்கு**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட மூன்று அறைகளைக் கொண்ட அதி சொகுசு வீடு (1350 Sqf ) வெள்ளவத்தை ஹம்டன் வீதியில் நாளாந்த, கிழமை வாடகைக்கு உண்டு

077 515 0410, 077 650 6438

**வேலைவாய்ப்பு**

இலங்கை மெதடிஸ்த திருச்சபையினால் வன்னி, யாழ்ப்பாணம் பகுதிகளில் மாற்றாற்றல் உள்ளவர்கள் மத்தியில் மேற்கொள்ளப் பட்டுவரும் பணியினைக் கண்காணிப்பதற்கு Project Coordinator ஒருவர் தேவைப்படுகின்றார். விருப்பமுடையோர் 22.04.2016 இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

அருள்பணி செ.தேவதாசன்,
முகாமைக்குரு,
மெதடிஸ்த திருச்சபை, ஏ9 வீதி,
பரந்தன்

# புதிய பிரிவுகள் ஆரம்பம்

**வங்கியில் வேலைவாய்ப்புக்களை பெறுவதற்கு**

வங்கியியல் கற்கைநெறிகள்
*IABF & DABF*
*Medium :- Tamil & English*
Minimum qualification :-
G.C.E. O/L 6 Passes
including 5 Credits

பட்டயக்கணக்காளர் ஆவதற்கு
*Chartered Accountancy*
Executive Level , Business level
*Medium :-Tamil & English*
Minimum qualification:-
G.C.E. A/L 3 Passes

ஆங்கிலத்தில் நிபுணத்துவம் பெறுவதற்கு
*CERTIFICATE COURSE IN ENGLISH*
Minimum qualification :-
G.C.E. O/L 3 Passes
Total Hours :- 130 Hours

**A/L** வர்த்தகப்பிரிவுகளும் இடம்பெறுகின்றன **2016 & 2017 & 2018**

**Further Details : -**

**Jaffna College**
**Undergraduate Dept.**

464, Hospital Road,
Jaffna.
Contact NO :-
021 222 3382, 021 2229149

(C/29944)(10.17.18)

# MIHINLANKA

மிஹின் லங்கா
இலவசமை உங்கள் வசம்

இந்த மாதத்தில் இருந்து சென்னை மதுரை ஆகிய நகரங்களுக்கு தினசரி மிஹின் லங்கா விமான சேவையில் பயணிக்கலாம்

முதல் இரண்டு மாதங்களிலும் எமது மிஹின் லங்கா நிறுவனத்தின் விமாணங்கள் பறப்பு செய்யும் நாடுகளுக்கு அமைந்த பாதையில் உள்ள எந்த நாட்டுக்குமான பற்றுச்சீட்டை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் குலுக்கல் முறையில் அதிர்ஷ்ட சாலிகளை தெரிவுசெய்யப்படும் வாய்ப்பு.

தெரிவுசெய்யப்படும் இரண்டு அதிர்ஷ்ட சாலிகளுக்கு! சென்னை சென்றுவர விமான டிக்கட்டும் 2 நாள்கள் TURYA CHENNAI ஹோட்டலில் தங்கும் வசதியும் இலவசமாக வழங்கப்படும். (நிபந்தனைகளுக்குட்பட்டது)

☎ 071 873 60 64

மேலதிக விவரங்களுக்கு:
இல.80/21, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# புத்தாண்டு கால குதூகலத்தில் சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

**250 மில்லியனுக்கு மேல் பெறுமதியான தள்ளுபடிகள் மற்றும் பரிசுகள்**

Panasonic 32" LED



3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS



மீதி வட்டியில்லாத 15 மாத தவணைக் கொடுப்பனவு முறையில்

3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

இலவச DVD

.DEL Laptop 3543 i3

DELL



FREE Printer

ரூ. 85,999/-
மாதம் ரூ. 5,200/-
15 மாதங்கள்
இலவசம்

6 வது Generation இல் புதிய மடிக்கணினியை
14,999/- செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

Panasonic 32" LED 32sv7



ஆரம்ப கட்டணம்
9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே

தொடர்புகளுக்கு:

softlogic MAX
maximum experience

பிரதான கிளை

இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ( KFC கட்டடம் )

0777 397734 / 021 567 8989 / 077 982 4213

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் சிறிய குடும்பமொன்றுக்கு தங்கியிருந்து வேலை செய்ய பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : 077 565 1122

## அறைகள் வாடகைக்கு

யாழ் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உள்ளன.

தொடர்பு : 076 803 5262

## Majestic Cineplex Jaffna

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் பிளாட்டினம் / சில்வர் / ப்ரோன்ஸ்

**10.00 / 1.00 / 7.00 / 4.00**
**Fri/Sat/Sun 9.30 p.m**

விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

## விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## பணியாளர்கள் தேவை

எமது "வைற்ஸ்ரோன் (பிறைவேற்) லிமிட்டெட்" நிறுவனத்திற்கு பின்வரும் இடங்களில் பணியாளர்கள் தேவை.

**கிளிநொச்சி - விற்பனைப் பணியாளர்கள்**

**வவுனியா - கணக்காளர் (Quick Book - 2வருட அனுபவம் உள்ளவர்)**

வயதெல்லை 18 - 35 ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

(K 14) (14,17,18)

" வைற்ஸ்ரோன் "(பிறைவேற்) லிமிட்டெட், வவுனியா.
தொடர்பு: 077 313 6262
Email: cheftheepan@gmail.com




## கேள்விப்பத்திரம் கோரல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட தேராவில் பகுதியில் அலுவலக கட்டடம் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை **துரை வீதி, முள்ளியவளை, முல்லைத்தீவில் அமைந்துள்ள யுகசக்தி, C/o உலக கரிசன(தொலைபேசி - 021 206 1009)** அலுவலகத்திலோ அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் அமைந்துள்ள கொழும்பு தேசிய அலுவலகத்திலோ வார நாள்களில் 18 - 22.04.2016 முதல் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கீழ் குறிப்பிடப்பட்ட எமது கொழும்பு முகவரிக்கு 29.04.2016 அன்று பி.ப 4.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் தொடர்பான முடிவுகள் பின்னர் எழுத்து மூலமாக அறிவிக்கப்படும். மேற்படி கட்டட வேலைகள் 14.05.2016 இற்கு முன்பதாக ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

குறிப்பு : கேள்விப்பத்திரங்களை மீளளிக்கப்படாத தொகையாக 2000/= ரூபாயை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

Secretary
Yugashakthi,
C/o World Concern,
No: 35/3c, Samudrasanna Road,
Mt.Laviniya
Tel: 011 272 3650

YOUTH FEST
JAFFNA - 2016

# வாலிபர் விழா - 2016

## அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்!

## பதிவு செய்து விட்டீர்களா?

பெற்றோர்களே!, தலைவர்களே! வாலிபர்களே!
இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்ள நீங்கள் முற்பதிவு செய்து விட்டீர்களா?

இல்லாவிடில்... அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க
ஏப்ரல் 20 - 23ம் திகதி வரை சென்ஜோன்ஸ் கல்லூரி பிரதான நுழைவாயிலில்
பதிவு செய்து கூட்டங்களில் கலந்து கொள்ள முடியும்.



பாஸ்டர் வின்சன்ட் சகாயநாதன்



பாஸ்டர் ஜோசேப் பீஸ்லி

## பிரவேசம் இலவசம்!!!

முற்பதிவு செய்பவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

**2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம்**

| பெற்றோர் - தலைவர்களுக்கான கருத்தரங்கு | வாலிபர் ஒன்றுகூடல் | வாலிபர் ஒன்றுகூடல் | வாலிபர் ஒன்றுகூடல் |
|---|---|---|---|
| 20 | 21 | 22 | 23 |
| புதன் காலை 9:00 மணி | வியாழன் காலை 9:00 மணி | வெள்ளி காலை 9:00 மணி | சனி காலை 9:00 மணி |

நடைபெறும் இடம்:

## சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம், யாழ்ப்பாணம்

இக்கூட்டங்களில் கலந்து கொண்டு பெற்றோர் வாலிபர் ஆசீர்வாதத்திற்காக ஜெபம்பண்ணும்படி அபிஷேகம் பெற்ற பலவருடம் அனுபவமுள்ள கனடா மற்றும் இந்தியா தேசங்களிலிருந்து தேவ ஊழியர்கள் கடந்து வருகிறார்கள்.



Rev. Colton Wickramaratne



Gregory Dunlop



Jonathan English



Justin Beesley



Dave O'leary



Dale Riley



Nelms Douglas



Jim Dewar

## யாவும் இலவசம்!

அனைத்து விபரங்களுக்கும் தொடர்புகொள்ளுங்கள்.

**0777 164 226**
**0773 211 923**

**ஆசீர்வாத நற்செய்தி கூட்டங்கள்**

2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம்

| 21 | 22 | 23 |
|---|---|---|
| வியாழன் | வெள்ளி | சனி |
| பி.ப. 3:00 | பி.ப. 3:00 | காலை 9:00 |

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானம்
யாழ்ப்பாணம்

கடந்த காலங்களில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அநேகர். இது உங்களுக்கான நேரம்!

கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்படுங்கள்

# தீவிரவாத இயக்கங்கள் மீது கடும் நடவடிக்கை வேண்டும்

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

வொஷிங்ரன், ஏப்.17
லஷ்கர் இ தொய்பா, அல் கொய்தா உட்பட எல்லா தீவிரவாத இயக்கங்கள் மீதும் பாகிஸ்தான் அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.
அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆவணக் காப்பகம் சமீபத்தில் சில ஆவணங்களை வெளியிட்டது. அதில், ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க சி.ஐ.ஏ முகாம் மீது தற்கொலை படைத் தாக்குதல் நடத்த, ஹக்கானி தீவிரவாதிகளுக்கு 2 லட்சம் டொலரை ஐ.எஸ். கொடுத்துள்ளது. அந்தத் தாக்குதலில் 7 அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி நேற்றுச் செய்தியாளர்களிடம் கூறுகையில், ஹக்கானி தீவிரவாதிகளுக்கும் ஐ.எஸ்ஸுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது தெரியவந்துள்ளது. இந்நிலையில் தீவிரவாத இயக்கங்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் பாரபட்சம் காட்டக் கூடாது. லஷ்கர் இ தொய்பா, அல் கொய்தா, ஹக்கானி உட்பட எல்லா தீவிரவாத அமைப்புகள் மீதும் பாகிஸ்தான் அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த)

## பாகிஸ்தான்- இந்தியா இடையே அமைதிப் பேச்சுக்கள் விரைவில்

இஸ்லாமாபாத், ஏப்.17
இந்தியாவுடனான அமைதிப் பேச்சுக்கு பாகிஸ்தானின் கதவு திறந்தே இருக்கிறது என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.
தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களிடையிலான பேச்சு, வெளியுறவுச் செயலாளர்களிடையிலான பேச்சுவார்த்தை என்பன தொடர்ந்து திகதி குறிக்கப்பட்ட பின்னரும் நடைபெறாது தடைப்பட்டுள்ளன.
இது தொடர்பில், பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் நபீஸ் ஸகரியா பேசுகையில், பேச்சை முன்னெடுப்பதே எங்களது விருப்பம்.
அதை நிறுத்துவது தொடர்பாக எதையும் சிந்திக்கவில்லை. பேச்சுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
முதலில், வெளியுறவு செயலாளர்கள் அளவிலான பேச்சு நடைபெறும் எனக் கூறியுள்ளார். (த)

## டுவிட்டர், இன்ஸ்டாகிராமில் அந்தரங்க தகவல் கசியும் ஆபத்து

நியூயோர்க், ஏப்.17
டுவிட்டர், இன்ஸ்டாகிராம் சமூக வலைத்தளங்களில் பயனாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் கசிவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக அமெரிக்க வல்லுநர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
ஒன்லைனில் தனிநபரின் அந்தரங்கம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற விவாதம் காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் பயனாளரின் பெயர், சுயவிவரங்கள் இல்லாமலேயே அவர் யார் என்பதை எளிதில் கண்டறிந்து விட முடியும் என்று அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக கணினித்துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.
டுவிட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் ஒருவரின் இருப்பிடத்தைக் குறிப்பிட்டுத் தகவல்களை பதிவு செய்யும் வசதி உள்ளது. இவ்வாறு இருப்பிடத்துடன் பதிவுகளை வெளியிடும் போது அந்த நபர் யார், அவரின் வயது, பாலினம், இனம், குடும்ப வருமானம் என அனைத்து தகவல்களையும் எளிதாக அறிந்து கொள்ள முடியும். இவை மட்டுமன்றி அவர் எங்கெல்லாம் கிரெடிட் கார்ட்டை பயன்படுத்தி பொருள்களை வாங்குகிறார் என்பதைக்கூட கண்டுபிடித்து விட முடியும் என்று கொலம்பியா பல்கலை. வல்லுநர்கள் உறுதிபடக் கூறுகின்றனர்.
இதற்காக பல்கலை. நிபுணர்கள் ஒரு மென்பொருளை உருவாக்கியுள்ளனர். அதன் அடிப்படையில் ஒரு நபர், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் ஆகிய இரண்டு சமூக வலைத் தளங்களில் தகவல்கள், புகைப்படங்களை பதிவு செய்யும் நேரம், இருப்பிடம் உள்ளிட்டவற்றை ஒப்பிட்டுப் பார்த்து அவரின் அந்தரங்க தகவல்களை அச்சுபிசகாமல் கூறுகின்றனர். அந்த நபரின் கிரெடிட் கார்ட் பயன்பாட்டை அவரது செல்போன் சிக்னல் மூலம் கண்டறிகின்றனர்.
கூகுள் நிறுவன உதவியுடன் ஆய்வு நடத்திய கொலம்பிய பல்கலை. வல்லுநர்கள் இந்த அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளனர். (த)




## லியனார்டோ டாவின்சியின் வம்சாவளியினர் கண்டுபிடிப்பு

ரோம், ஏப்.17
புகழ்பெற்ற ஓவியரும் அறிவியலாளருமான லியனார்டோ டாவின்சியின் வம்சாவளியைச் சேர்ந்த 35 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். வம்சாவளிப் பதிவுகளை வைத்து இந்த கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டது.
திரைப்பட இயக்குனர் ஃப்ராங்கோ ஜெஃபிரெல்லியும் அவர்களில் ஒருவராவார்.
லியனார்டோ டாவின்சி டஸ்கானில் உள்ள வின்சியில் 1452 இல் பிறந்தார்.
அவர் திருமணமே செய்து கொள்ளவில்லையென்பதால், அவருக்கு நேரடியான வாரிசுகள் கிடையாது. அதனால்,



அவருடன் பிறந்தவர்களின் வம்சாவளியினரை வரலாற்றாசிரியர்கள் அலெஸாண்ட்ரோ வெஸ்ஸோஸி, அக்னீஸ் ஸபட்டோ ஆகியோர் தேடும் முயற்சியில் இறங்கினர்.
1973இல் இந்தப் பணி ஆரம்பித்தது.
16ஆம் நூற்றாண்டில் நிலவிய குழப்பமான சூழலில் லெனார்டோவின் உடல் எச்சங்கள் காணாமல்போயின. அதனால், மரபணு ஆய்வு இதில் பயன்படுத்தப்படவில்லை.
தற்போது அடையாளம் காணப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் டஸ்கானி நகரில்தான் வசிக்கின்றனர்.
ஆனால், திரைப்பட இயக்குனர் ஃப்ராங்கோ ஜெஃபிரெல்லிக்கு இந்த கண்டுபிடிப்பு ஆச்சரியமாக இருக்காது என இத்தாலியிலிருந்து வெளியாகும் லாஸ்டாம்பா கூறுகிறது.
அவருக்கு 2007ஆம் ஆண்டில் லெனார்டோ விருதினை இத்தாலிய அதிபர் வழங்கிய போது லியனார்டோவுடனான தொடர்பு குறித்து ஃப்ராங்கோ குறிப்பிட்டுப் பேசினார். (த)



## இத்தாலிப் பிரதமர் ஈரானில்

தெஹ்ரான், ஏப்.17
250 வர்த்தகர்கள் மற்றும் அரசியல்வாதிகள் அடங்கிய தூதுக் குழுவுடன் இத்தாலிய பிரதமர் மாட்டியோ ரென்சி உத்தியோகப்பூர்வப் பயணம் ஒன்றை மேற்கொண்டு கடந்த செவ்வாய்க் கிழமை ஈரான் சென்றுள்ளார்.
குறித்த பயணத்தின்போது, இத்தாலியப் பிரதமர் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரூஹாணியைச் சந்தித்து பேச்சு நடத்தியதுடன், இரு நாடுகளுக்குமிடையில் பல்வேறு பொருளாதார ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.
ஈரான் மீதான பொருளாதார தடை நீக்கப்பட்ட பிறகு, மேற்கத்திய தலைவர் ஒருவர் அங்கு செல்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பிரபல வணிக இணையத்தளத்தில் விற்பனைக்கு பாக். பிரதமர் நவாஸ்

## ஆரம்ப விலை ரூபா 198 லட்சம்

லண்டன், ஏப்.17
பிரபல வணிக இணையத்தளத்தில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப்விற்பனைக்காகப் பட்டியலிடப்பட்டுள்ளார். அவரது ஆரம்ப விலை ரூபா 198 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் தற்போது மருத்துவ பரிசோதனைக்காக பிரிட்டிஷ் தலைநகர் லண்டனில் தங்கியுள்ளார். இந்நிலையில் பிரபல இபே இணையத்தளத்தில் அவர் விற்பனைக்காக பட்டியலிடப்பட்டுள்ளார்.
பொருள் குறித்த விளக்கத்தில் நவாஸ் குறித்து கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டுள்ளது.
அதில் கூறியிருப்பதாவது:-
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்விற்பனைக்காகஉள்ளார். ஆரம்ப விலை ரூபா 198 லட்சம். இந்தப் பொருள் தற்போது பயன்பாட்டில் இல்லை. பொருள் தயாரிப்பின்போது ஏற்பட்ட சில குறைபாடுகளால் இது எப்போதுமே வேலை செய்தது இல்லை.
இந்த (நவாஸ் ஷெரீப்) பொருளை வாங்குபவர்களுக்கு ஷாபாஸ் ஷெரீப் (நவாஸின் சகோதரர், பஞ்சாப் மாகாண முதல்வர்) இலவசமாக வழங்கப்படுவார். இந்த ஷாபாஸ் பொருள் நாடகம், சொற்பொழிவு ஆற்றுவதில் சிறந்தது. ஆனால் அந்தப் பொருளால் வேறு எந்த உபயோகமும் இல்லை.
இரண்டு பொருள்களின் பிறப்பிடம் பாகிஸ்தான். ஆனால் அவற்றை பிரிட்டன், அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகளில்தான் அதிகமாகக் காண முடியும். தற்போது நவாஸ் பொருள் லண்டனில் உள்ளது. பொருளை வாங்குபவர்கள் தங்களது சொந்தச் செலவில் லண்டனில் இருந்து பொருளை எடுத்துச் செல்ல வேண்டும்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நவாஸை வாங்குவதற்கு இது வரை 12 பேர் முன்வந்துள்ளனர்.
நவாஸ் மீதான ஏலம் வரும் 20 ஆம் திகதி நிறைவடையும் என்றும் அதிக தொகை அளிக்க முன்வரு பவர்களுக்கு பொருள் விற்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சவூதியில் தொடர்ந்து மழை வெள்ளத்தால் 42 பேர் சாவு



ரியாத்,ஏப்.17
சவூதி அரேபியாவில் வழக்கத்துக்கு மாறாகக் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் தலைநகர் ரியாத், கெயில், மெக்கா, மதீனா, அல்-பாகா, ஆசிர், நஜ்ரான், ஜகான் ஆகிய நகரங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளன. எனவே, அங்கு மீட்புப் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இங்கு இதுவரை 915 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அல்-பாகா பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அதில் சிக்கிய 27 பேர் காயத்துடன் மீட்கப்பட்டனர்.

சவூதி அரேபியாவில் பெய்து வரும் மழையால் இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கிடையே பலத்த மழை காரணமாக ரியாத்தில் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

யேமனின் வடக்கு பகுதியிலும் பலத்த மழை பெய்து வருகிறது. தலைநகர் சனாவுக்கு வடக்கேயுள்ள அம்ரான் மாகாணத்தில் வெள்ளத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹஜ்ஜா மாகாணத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர். இந்த 2 மாகாணங்களிலும் மொத்தம் 24 பேர் உயிரிழந்துள்ளனர். இப்பகுதிகளில் ஏராளமான வீடுகள் இடிந்து சேதம் அடைந்தன.

அல்-மாகவித் மாகாணத்தில் அணை உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. பலவீடுகள், பாலங்கள் மற்றும் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டன. சுவூதி அரேபியா மற்றும் யேமனில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில் சிக்கி 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் ஏராளமான கார்கள் அடித்துச் செல்லப்பட்டன. மழையால் 2 பேர் உயிரிழந்துள்ளனர். அங்கு தென் பகுதிக்கான அனைத்து ரயில்களும் 2 நாள்களுக்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளன. (த-ஜ)

# அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் தென்சீனக் கடலில் ரோந்து

நியூயோர்க், ஏப்.17
தென்சீனக் கடல் பகுதியில் அமெரிக்காவும் பிலிப்பைன்ஸும் கூட்டாக இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபடும் என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆஸ்டன் கார்ட்டர் அறிவித் துள்ளார்.

தென்சீனக் கடல் பகுதியைச் சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்த விவகாரத்தில் சீனாவுக்கு எதிராக வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான் உள்ளிட்ட நாடுகள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன. அந்த நாடுகளுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.



இந்நிலையில் அமெரிக்க பாதுகாப்புத் துறை ஆஷ் கார்ட்டர் தற்போது பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் முகாமிட்டுள்ளார். அவர் நேற்று நிருபர்களிடம் பேசிய போது, தென் சீனக் கடலில் அமெரிக்க, பிலிப்பைன்ஸ் கடற்படைகள் இணைந்து ரோந்துப் பணியில் ஈடுபடும். மேலும் பிலிப்பைன்ஸ் நாட்டில் 300 அமெரிக்கச் சிப்பாய்கள் தொடர்ந்து தங்கியிருப்பார்கள் என்று அவர் அறிவித்தார்.

இதனிடையே அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் நாடுகள் இணைந்து கடந்த 4 ஆம் திகதி முதல் தென்சீனக் கடல் பகுதியில் கூட்டு போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இதில் மொத்தம் 5 ஆயிரம் வீரர்கள் பங்கேற்றுள்ளனர், சீனா சொந்தம் கொண்டாடி வரும் ஸ்பார்ட்டி தீவுப் பகுதியில் போர்ப் பயிற்சி நடைபெறுகிறது. இந்தப் போர்ப் பயிற்சியில் ஜப்பான் பங்கேற்கவில்லை. ஆனால் போர் பயிற்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் 2 ஜப்பானிய போர்க் கப்பல்கள், ஒரு நீர்மூழ்கி கப்பல் ஆகியவை பிலிப்பைன்ஸ் கடல் பகுதியில் முகாமிட்டுள்ளன. அண்மையில் டில்லி வந்த அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் ஆஸ்டன் கார்ட்டர், இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் மனோகர் பாரிக்கரைச் சந்தித்துப் பேசினார். அப்போது ராணுவ, கடற் படை, விமானப் படைத்தளங்களை பரஸ்பரம் பயன்படுத்திக் கொள்ள கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சீனாவின் சர்வாதிகார போக்கை கட்டுப்படுத்த இந்த முக்கிய முடிவு எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (தி)



## ரோமானியாவில் பிரபல்யம் அடைந்த ‘செல்பி புள்ள’ பாடல்

புசாரெஸ்ட், ஏப்.17
கத்தி திரைப்படச் செல்பி புள்ள பாடல் ரோமானியா நாட்டில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளது. காரணம் அதன் வரிகள் ஆகும். ரோமானியா நாட்டில் 'புள்ள' என்பது ஆண் உறுப்பு என்பதால், அந்த நாட்டு மக்களுக்குப் பெரும் நகைப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பாடல் 7.97 மில்லியன் தடவை மக்களால் பார்க்கப்பட்டது. ரோமானியா நாட்டவர்கள் இந்தப் பாடலுக்கு இணையத்தில் பல விமர்சனங்களை வெளியிட்டுள்ளனர். புள்ள என்பது தமிழில் பெண்ணைக் குறிக்கும் சொல்லாகும். (ரி4)

# புத்தாண்டு தினத்தில் 14 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.17

நாடளாவிய ரீதியில் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி 6 பேரும், நீரில் மூழ்கி 8 பேருமாக 14 பேர் உயிரிழந்துள்ளதுடன், 578 பேர் காயமடைந்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலப் பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த குடிபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யும் நடவடிக்கையில், புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி மட்டும் 238 பேரைக் கைது செய்ததாகவும், கடந்த 10 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படும் இந்த விசேட நடவடிக்கையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலை 6 மணி வரை ஆயிரத்து 56 பேரைக் கைது செய்துள்ளதாகவும், பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பதிவுகளின் படி, புத்தாண்டு தினமான 14 ஆம் திகதி மட்டும் திடீர் விபத்துக்களால் காயமடைந்த 578 பேர் அங்கு சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 124 பேர் வாகன விபத்துக்களில் சிக்கியோர் எனவும், 123 பேர் வேறு விபத்துக்களில் காயமடைந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 112 பேர் வீட்டு வன்முறையில் பாதிக்கப்பட்டோர் எனவும் நால்வர் தீக்காயங்களுக்கு உள்ளானோர் எனவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்துடன் ஒப்பீடு செய்யும்போது 8 முதல் 10 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு பதிவான 4 தீக்காயங்களில் இரண்டு பாரதூரமான காயங்களாகப் பதிவாகியுள்ளன.

தனது முகத்துக்கு நேராக வைத்து பட்டாசை வெடிக்க முயற்சித்த ஒருவரின் முகம் எரிந்துள்ளது.

மற்றொருவர் தனது கையில் வைத்து பட்டாசு கொளுத்த முற்பட்டபோது ஏற்பட்ட தீயில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை 6 மணி வரையான 36 மணித்தியாலங்களில் நாடளாவிய ரீதியில் நீரில் மூழ்கி 8 பேர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபத்தில் கடலில் குளிக்கச் சென்ற இருவர் நேற்று முன்தினம் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நாரமல பகுதியைச் சேர்ந்த 14 மற்றும் 26 வயதான இருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 26 வயதானவர் ஒரு பிள்ளையின் தாயாவார். இதே வேளை, நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் கடலில் குளிக்கச் சென்ற 5 இளைஞர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 16 மற்றும் 19 வயதான இரண்டு இளைஞர்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். மாத்தறை வெலிகம பிரதேச ஆற்றில் குளிக்கச் சென்ற இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். வெலிகம பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதனை விட அவிசாவளைப் பகுதியில் ஆற்றில் நீராடச் சென்ற 57 வயதான நபர் ஒரு வர் நீரில் மூழ்கி உயிரிழந்துள் ளார்.

> கடந்த 10 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்படும் இந்த விசேட நடவடிக்கையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலை 6 மணி வரை ஆயிரத்து 56 பேரைக் கைது செய்துள்ளதாகவும், பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

களுத்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கட்டுகுருந்த பகுதியில் ஹோட்டல் ஒன்றின் பின்னால் கடலில் நீராடிக்கொன்டிருந்த முச் சக்கர வண்டி சரதி ஒருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இதே நேரம் நாடளாவிய ரீதியில் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற வாகன விபத்துக்க ளில் சிக்கி அறுவர் உயிரிழந்துள்ளனர். அக்குரஸ்ஸ, பொரதோட்டை பகுதியில் புத்தாண்டு விருந்தொன்றின் பின்னர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 17 வயதான இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளின் வேகத்தை கட் டுப்படுத்த முடியாது பாதை யோரத்தில் இருந்த மின் கம்பம் மீது மோதியதில் உயிரிழந் துள்ளார். 17 வயதான கசுன் மதுசங்க என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதனிடையே கொகரல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தம்புள்ளை குருணாகல் பிரதான வீதியில் பயணித்த லொறியொன்று கட்டுப்பாடின்றி குடைசாய்ந்ததில் 10 வயதான சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் காயமடைந்து பொகொல்ல வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

நீர் கொழும்பு கிம்புலாபிட்டிய பகுதியில் ஓட்டோ மீது வேகமாக வந்த கார் ஒன்று மோதியதில் ஓட்டோவில் பயணித்த 59 வயதான பெண் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தில் காயமடைந்த ஓட்டோ சாரதியும், மற்றொரு பெண்ணும் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏ - 9 பிரதான வீதியில் கிளி நொச்சியில் கிருஷ்ணபுரம் அருகே வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதியதில் 17 வயதான இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த 10 ஆம் திகதி முதல் பொலிஸார் செயற்படுத்தியுள்ள மது போதையில் வாகனம் செலுத்துவோரைக் கைது செய்யும் நடவடிக்கையின் புத்தாண்டு தினத்தில் மாத்திரம் 238 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மது போதையில் வாகனம் செலுத்திய இவர்களில் அதிகமானோர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் குடி போதையில் வாகனம் செலுத்திய 124 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 73 ஓட்டோ சாரதிகள், 20 கார் சாரதிகள், 5 பாரவூர்தி சாரதிகள், 3 தனியார் பஸ் சாரதிகள், 9 வான் சாரதிகள் 4 வேறு வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். (த-ஐ-5)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவோருக்கு ஒரு தெரிவு...!

**வா**கனம் செலுத்துவதா, அல்லது மது அருந்துவதா? இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யும் பொறுப்பை, வசதியை, வாகனச் சாரதிகளுக்கு வழங்கி உள்ளது, போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்புப் பொலிஸ் பிரிவு.

அதன் பிரகாரம், மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவோரின் சாரதிப் பத்திரங்கள் பறிமுதல் செய்யப்படும். அத்தகையோரின் சாரதிப்பத்திரங்கள், எந்தச் சூழ்நிலையிலும் மீள வழங்கப் படமாட்டா. நிரந் தரமாகவே பறி முதலாகிவிடும்!

போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அமர சிறி சேனரத் தினா, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அதனை வெளிப் படுத்தி உள் ளார்.

இந்த மாதம் 10 ஆம் திகதி தொடக் கம் மேற்போந்த பொறிமுறை, ஏற் கனவே நடைமுறைக்கு வந்திருப்ப தாகவும், அது எந்த வகையிலும் மாற் றப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார் அது ஊன் றிப் பதியப்பட வேண்டிய ஒன்றாகும்.

வாகன விபத்துக்களால், வீதி விபத்துக்களால், பலர் உயிரிழப்பதும், அங்க வீனர்களாகி உறவுகளுக்குப் பாரமாகி விடுவதும், பொருளாதார இழப்பும், சொல்லொணா வேறு தீங்குகளை எதிர் நோக்கும் ஆபத்துகளும் நீண்டு, நெடிது உற்பவிக்கின்றன.

இத்தகைய சூழமைவில், வாகனச் சாரதிகளுக்கு, மது அருந்துவதா அல்லது வாகனம் செலுத்துவதா என்ற பொறுப்பை, அவர்களிடமே ஒப்படைக்கும் பொலிஸாரின் புதிய போக்கு, பாராட்டப்பட வேண்டியதும் ஊக்குவிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

வாகனச் சாரதிகளிடம், தமது தொழிலைச் செய்வதா? --

அல்லது மது அருந்துவதை போஷிப்பதா?--

ஆகிய இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கு உரிமை வழங்கப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கன!

சாரதித் தொழிலும் தேவை; மதுவும் தேவை என்ற இரட்டைப் படகில் கால் வைக்காமல் தடுப்பது, பல மனித உயிர்களைக் காப்பாற்றும் என்பதில் ஐயம் இல்லை. அதனூடாகப் பலரின் வயிற்றில் பால் வார்த்தது போலாகும்.

மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளின் குடும்பங்களும் புதிய நிலைப்பாட்டைப் பெரிய அளவில் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

மொத்தத்தில், பயணிகளுக்கும், குடும்பத்தினருக்கும் நலன் செய்யும் மேற்போந்த வழிமுறையை, பிசிறின்றி செயற்படுத்த வேண்டிய பெரும் பொறுப்பு இரண்டு தரப்புக்களுக்கும் உண்டு. அதனை மறந்து விடலாகாது.

# தமிழருக்கு பொலிஸ் அதிகாரம்: ஏற்றுக்கொண்டார் இலங்கக்கோன்

எம்.ஐ.முபாறக்

தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடும் முயற்சிகள் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே தொடங்கிவிட்டன. அந்த முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் ஒன்றாக ஆயுதப் போராட்டம் வந்து இணைந்துகொண்டது.

ஆயுதப் போராட்டம் 30 வருடங்களில் முடிவுக்கு வந்தபோதிலும் தீர்வைத் தேடும் முயற்சிகள் முடிவுக்கு வரவில்லை. ஜனநாயகப் போராட்டமாக – அரசியல் போராட்டமாக அந்த முயற்சி தொடரவே செய்கிறது. தமிழர்கள் தேர்ந்தெடுத்துள்ள அரசியல் போராட்டம் வித்தியாசமானதாகும். இலங்கையில் உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே பல்வேறு கட்சிகள் காணப்படுகின்றன. இதனால், ஒன்றிணைந்த –ஆரோக்கியமான அரசியல் பயணத்தை அங்கு எம்மால் காண முடியாதுள்ளது.

ஆனால், தமிழர்களின் அரசியல்பயணம் அவ்வாறனது அல்ல. அவர்கள் ஒட்டுமொத்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு குடையின் கீழ் திரண்டுள்ளனர். இதனால்தான் அந்த அரசியல் பயணம் பலமுள்ளதாகக் காணப்படுகின்றது; சர்வதேசமயப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது. யுத்தம் முடிந்ததும் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என்றே எல்லோரும் நினைத்தனர். ஆனால், அவை தொடரவே செய்தன. அதுமாத்திரமன்றி, மேலதிக பிரச்சினைகளும் வந்து சேர்ந்துகொண்டன. காணாமற்போதல், இடம்பெயர்வு மற்றும் காணிகள் பறிப்பு போன்ற பல பிரச்சினைகளை இவற்றுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அப்போதைய மகிந்த அரசு தமிழர்களின் இந்தப் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்ததே தவிர அவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இந்தப் பிரச்சினைகளை அப்போதைய அரசின் ஊடாகத் தீர்ப்பதற்காக பல ஜனநாயகப் போராட்டங்களை அவர்கள் நடத்தினர்; சர்வதேசத்திடமும் முறையிட்டனர்.

> தமிழ் மக்கள் மீதான பொலிஸாரின் தொடர்ச்சியான அடக்கு முறைகள் தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அடிக்கடி வெளி உலகுக்குத் தெரிவித்து வருகின்ற போதிலும்,சிங்கள மக்கள் மத்தியில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் அவ்வளவாக எடுபடுவதில்லை. ஆனால், பொலிஸார் புலி மனோ நிலையுடன் செயற்படுகின்றனர் என்று பொலிஸாருக் குத் தலைமை தாங்கி அவர்களை வழி நடத்தி வந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்ககோனே கூறுவதானது குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொள் வதுபோல் உள்ளது. அத்தோடு, தமிழருக்கான தனியான பொலிஸ் அதிகாரத்தை அங்கீகரிப்பதாகவும் உள்ளது.

உலக நாடுகள் இதில் தலையிட்டபோதிலும், எதுவும் நடக்கவில்லை. அந்த நாடுகளின் வேண்டுகோள்களை மகிந்த நிராகரித்தார். பிரச்சினைகள் மேலும் தொடர்வதற்கு வழி வகுத்தார். மக்களின் ஜனநாயகப் போராட்டங்களையும் மதிக்கவில்லை.

### அரசியல் தீர்வொன்றின் அவசியம்

இதனால்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வொன்றின்அவசியம்மேலும் மேலும் உணர்த்தப்பட்டு வந் தது. தமிழர்கள் தொடர்ந் தும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்பதையும் அவற்றைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு கட்டாயம் அவசியம் என்பதையும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் தெளிவாக உணர்ந்து வைத்துள்ளபோதிலும், அவற்றை அவர்கள் வெளிப்படையாக – ஆழமாகக் கூறுவதற்கு முன்வருவதில்லை. பிரச்சினைகள் உண்டு என்று மொட்டையாகவே சொல்லிவிட்டுப் போவர்.

தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஏற்ப அவர்கள் தீர்வைக் கோருகின்ற போதிலும், அந்தக் கோரிக்கையில் உள்ள விடயங்கள் பாரதூரமானவை எனக் கருதி அவற்றை ஆட்சியாளர்கள் – அதிகாரிகள் நிராகரிக்கின்றனர். இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மறைமுகமாக அல்லது தம்மையும் அறியாது தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வாறான தோர் அங்கீகரிப்பு, ஓய்வுபெற்றுச் செல்லும் இலங்கையின் பொலிஸ்மா அதிபர் என்.கே இலங்ககோனிடமிருந்து இப்போது வெளிவந்துள்ளது.

அண்மையில், ஜனாதிபதியைச் சந்தித்துத் தனது ஓய்வை அறிவித்த அவர் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களையும் சந்தித்து உரையாற்றினார். அதில் அவர் பல விடயங்களைக் கூறிய போதிலும், ஒரு விடயம் மிகவும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. பொலிஸார் இன்னும் புலி மனப்பான்மையுடன் நடந்துகொள்கின்றனர் என்று அவர் அங்கு கூறிய விடயம்தான் அந்த அவதானத்துக்குரிய விடயமாகும். தமிழர்களைப் பொலிஸார் புலிகளாக நோக்குவதையும் அதனால் அவர்கள் பொலிஸாரின் தொல்லைகளுக்கு ஆளாகுவதையும் அவர் மறைமுகமாகச் சொல்லியுள்ளார்.

இதன்மூலம் தமிழர்கள் அடிக்கடி முன்வைத்துவரும் குற்றச்சாட்டுக்களான பொலிஸாரின் நெருக்கடி. படையினரின் அட்டூழியம் போன்றவை உறுதிப்படுத்தப்படுகின்றன. இந்தப் பிரச்சினைகளில் இருந்து தமிழர்கள் விடுபடுவதற்குப் பிரத்தியேகமான தீர்வொன்று அவசியம் என்பதையும் இலங்கக்கோன் மறைமுகமாகக் கூறியுள்ளார்.

### தமிழர்கள் கோரும் பொலிஸ் அதிகாரம்

அந்தப் பிரத்தியேகமான தீர்வாக தமிழர்கள் கோருவது இலங்கையின் 13 ஆவது அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரத்தையாகும். தமிழர்கள்





> தமிழர்கள் அடிக்கடி முன்வைத்து வரும் குற்றச்சாட்டுக்களான பொலிஸாரின் நெருக்கடி, படையினரின் அட்டூழியம் போன்றவை உறுதிப்படுத்தப்படு கின்றன. இந்தப் பிரச்சினைகளில் இருந்து தமிழர்கள் விடுபடுவதற்குப் பிரத்தியேகமான தீர்வொன்று அவசியம்

தொடர்ச்சியாக-விடாப்பிடியாக தனியான பொலிஸ் அதிகாரத்தைக் கோருவதற்குச் சரியான காரணங்கள் இருக்கின்றன என்பதை இப்போது இலங்கக்கோன் சொல்லாமல் சொல்லிவிட்டார் என்றே தோன்றுகிறது.

பொலிஸின் ஊடாகத் தமக் குக் கிடைக்க வேண்டிய சேவையை மிக இலகுவில் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே தமிழர்கள் தனியான பொலிஸ் அதிகாரத்தைக் கோருகின்றனர். இலங்கைப்பொலிஸார் புலி மனோநிலையுடன் செயற்படுகிறார்கள் என்றால் அவர்கள் தமிழருக்கு முழுமையான - திருப்திகரமான சேவையைச் செய்யத் தவறுகின்றனர் என்றே அர்த்தம்.

அவ்வாறு தொடர்ச்சியாக சேவைகளை வழங்க மறுக்கும் பட்சத்தில்தான் தமக்கான சேவையை பெற்றுக்கொள்வதற்காக தனியான பொலிஸ் அதிகாரத்தைக் தமிழர்கள் கோருகின்றனர் என்பதை இப்போது அனைவராலும் மிக இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

தமிழ் மக்கள் மீதான பொலிஸாரின் தொடர்ச்சியான அடக்குமுறைகள் தொடர்பில் தமிழ் அரசியல் பிரதிநிதிகள் அடிக்கடி வெளி உலகுக்குத் தெரிவித்து வருகின்றபோதிலும், சிங்கள மக்கள் மத்தியில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் அவ்வளவாக எடுபடுவதில்லை. ஆனால், பொலிஸாருக்குத் தலைமை தாங்கி அவர்களை வழிநடத்தி வந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோனின் கூற்றானது, குற்றவாளியே குற்றத்தை ஒப்புக்கொள்வது போல் உள்ளது. அத்தோடு,தமிழருக்கான தனியான பொலிஸ் அதிகாரத்தை அங்கீகரிப்பதாகவும் உள்ளது.

பொலிஸாரின் மனோநிலையை முழுமையாக மாற்றி தமிழர்களையும் இந்த நாட்டுப் பிரஜைகளாக மதித்துச் சேவை செய்யும் நிலைமையை உருவாக்குவதா அல்லது தனியான பொலிஸ் அதிகாரத்தைத் தமிழர்களின் கைகளுக்கு வழங்குவதா என்று அரசு முடிவெடுக்க வேண்டியுள்ளது.

பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது என்பது சிங்கள அரசைப் பொறுத்தவரை ஒரு சிக்கலான விடயமாகும். தனி நாடு ஒன்று அமைவதற்கான அடிப்படை ஏற்பாடாக இதைச் சிங்கள மக்கள் கருதுவதே அதற்குக் காரணம். இருப்பினும், தமிழருக்குத் தனியான பொலிஸ் அதிகாரம் தேவை என்ற உண்மை இப்போது முன்னாள் பொலிஸ்மா அதிபரின் ஊடாக மறைமுகமாக உணர்த்தப்பட்டிருப்பதால் அது தொடர்பிலான தமிழரின் கோரிக்கை-போராட்டம் மேலும் வலுப்பெறும் என்றே சொல்ல வேண்டும்.

## சோழியன் குடுமி சும்மாவா ஆடியது?

08.04.2016 உதயன் வாசகர் திருமுகத்தில் பனிப்புலம் செட்டி குறிச்சி வீதிக்கு யார் பொறுப்பு? என்னும் தலைப்பில் வெளியான செய்திக்கு நான் சில்லாலை விவசாயி என்னும் அடிப்படையில் என் தாழ்மையான கருத்தைக்கூற விரும்புகிறேன். பனிப்புலம் அபிவிருத்திக்கென வந்த நிதியைச் சில்லாலைக் குளத்துக்குச் செலவு செய்ததாகக் கூறப்பட்டது. இதைச் சில்லாலைக்குச் செலவு செய்ய அனுமதியளித்ததும் பனிப்புலம் வாசிகளே. கள்வன் கள்வன் எனக் கத்தும்போது கதவைப் பூட்டி வீட்டுக்குள் இருந்துவிட்டு கள்வன் போன பின் விசுவா பொல்லை எடு என்பது போல் உள்ளது இந்தச் செய்தி.

சில்லாலை வடக்கு, சில்லாலை தெற்கு ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவை உள்ளடக்கியது தும்பளப்பாய் வயல்வெளி, இது முழுக்க முழுக்கச் சில்லாலைப் பிரிவாகும். இதன் தெற்குப் பகுதி மேட்டுப் பகுதியாகவும் வடக்கு பள்ள நிலமாகவும் உள்ளது. இந்த மேட்டுப் பகுதியில் வலி மேற்குப் பிரிவின் பனிப்புலம் கிராம மக்கள் பயிர் செய்கின்றார்கள். இவர்களின் காணிகளுக்கு நீர் தேங்க வேண்டும் என்பதற்காக வலி தென்மேற்குச் சில்லாலை சம்பில் துறை மதகின் நீர் மட்டத்தை உயர்த்திக் கட்டி அதைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் பனிப்புலம் விவசாய சம்மேளனத்தினர். இந்தமுறை பெய்த கடும் மழையின் போது ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் சில்லாலை வடக்குப் பகுதி முற்றாக மூடியுள்ள நிலையில் எமது சில்லாலை விவசாய சம்மேளனத் தலைவர் பலமுறை பகீரத முயற்சி எடுத்தும் உரிய நேரத்தில் கதவு திறக்கப்படாததால் எமது பயிர்கள் நீரில் மூழ்கி முற்றாக அழிந்து நாசமடைந்து யாவரும் அறிந்ததே.

பனிப்புலம் நிதியை அவர்கள் தமது நன்மை கருதியே இங்கு செலவு செய்து எமது பயிரை நாசம் செய்தனர். எமது நன்மைக்காக இங்கு செலவிடப்படவில்லை. தமது நிதியை எமது பகுதியில் செலவு செய்து எமது பகுதியில் ஒரு நில ஆக்கிரமிப்புச் செய்ததென்பதே உண்மைநிலை. இந்த வேலையைச் செய்யும்போது சில்லாலை விவசாய சம்மேளனம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் இவர்கள் சில அரச உத்தியோகத்தர்களைத் துணை கொண்டு செய்து முடித்தனர். சில்லாலை விவசாய சம்மேளனத் தலைவர் இதைத் தடுக்கக் கடும் முயற்சி எடுத்தும் பயனற்று ஒதுங்கியதும் யாவரும் அறிந்ததே. ஒரு கிராமப் பிரிவில் இன்னொரு கிராமம். அதுவும் அடுத்த பிரதேச செயலர் பிரிவுக் கிராமம் நுழைந்து இரு நிர்வாகம் இயங்குவது சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் தெரிவித்தும் இதில் அக்கறை செலுத்தாது உள்ளது ஏன் என்பதற்கு அவர்களே பொறுப்புக் கூற வேண்டும்.

பாதிக்கப்பட்ட
சில்லாலை விவசாயி

## நல்ல வீடுகட்டிக்கொடுங்கள்

ஆடம்பரங்களுக்கும், அலங்காரங்களுக்கும் அடிமையாகியிருக்கும் எம் மக்களுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, மின்விசிறிகள், தளபாடங்கள், காஸ் அடுப்பு போன்ற அலங்காரங்களைக் காட்டி அலங்கோலமான பொம்மை வீட்டுத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தி எமது மக்களின் ஒப்புதலுடன் ஒட்டு வீட்டுத்திட்டத்தை அரங்கேற்ற திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றது.

எமது மக்களும் சும்மா இருந்த அம்மையாருக்கு அரைப் பணத்துக்கு தாலி பத்தாதோ? என்று அப்பாவித்தனமாக ஒரு சிலரும் வேப்பம் கப்பு போட்டு ஒரு முழ மண்சுவர் வைச்சு பனை ஓலையாலை மேஞ்சு அப்பு போட்ட வீடு இன்னமும் அசையாமைக் கிடக்கு, இந்த வீடு ஊருக்கை நிண்டு பிடிக்குமே!? என்று வேறு பலரும் கூறுகின்றனர். அரசியல்வாதிகளில் சிலரோ எதுவந்தாலும் விடுவதில்லை என்று இந்த வீட்டுத்திட்டத்தை நிறைவேற்றுவதில் பிடிவாதமாக இருக்கின்றனர். எமது மக்கள் போரின் போதும் அதன் பின்னரும் முகாம் முகாமாக அலைந்து திரிந்து அலுத்துக் களைத்திருக்கின்றனர். துன்பப்பட்ட எம்மக்களுக்கு தேவையான வீடு எமது சூழலுக்கு ஏற்றவாறு இருக்க வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். இதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆகவே இதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து எமது மக்களுக்கு எமது சூழலுக்கு அமைவான வீடுகளை அமைத்துத் தரவேண்டும் என்பதே அனைத்து மக்களின் எதிர்பார்ப்பாகும் செய்வார்களா?

ந.மரியநாயகம்
கொழும்புத்துறை

# உயர் இரத்த அழுத்தத்துக்கு உரிய சிகிச்சை பெறுவோம்

மருத்துவர்
திருநாவுக்கரசு குமணன்

இலங்கையில் தொற்றா நோய்களின் ஆதிக்கம் அண்மைக்காலமாக மேலோங்கி நிற்கின்றது. மாரடைப்பு, பக்கவாதம், இருதய மற்றும் சிறுநீரக செயலிழப்பு என்பவை தொற்றா நோய்களினால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணங்களாகும். இந்த நோய்களின் தாக்கத்தால் பல பில்லியன் ரூபா செலவும் பெரிய தடுக்கப்படக்கூடிய உயிரிழப்புக்களும் எமது நாட்டில் ஏற்படுகின்றன. இந்த நோய்கள் தடுக்கப்படவோ அன்றி பிற்போடப்படவோ கூடியவை. இந்த நோய்களை உண்டு பண்ணும் பிரதான காரணிகளில் ஒன்று உயர் இரத்த அழுத்தம் ஆகும். இலங்கையில் ஏறக்குறைய 20வீதம் – 30 வீதம் வரையான வளர்ந்தவர்களிடையே உயர் இரத்த அழுத்தம் காணப்படுகிறது என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. இது மேலைத்தேச நாடுகளின் புள்ளிவிவரங்களுக்கு இணையானது. உயர் அழுத்தத்துக்குரிய பக்க விளைவுகளற்ற எளிதில் பெறக்கூடிய மாத்திரைகளை கிரமமாக உள்ளெடுக்காததன் விளைவு மிகவும் விபரீதமானது. சுமார் 50 வீதமான உயர் இரத்த அழுத்த நோயாளர்கள், இந்த மாத்திரைகள் பரிந்துரைக்கப்பட்டு 6 தொடக்கம் 12 மாதங்களுக்குள் சுயமாகவே அந்த மாத்திரைகள் உள்ளெடுப்பதை கைவிடுகின்றனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த மாத்திரைகளை ஒழுங்காக உள்ளெடுப்பவர்களில் கூட 20 வீதமானவர்களில் உயர் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. உயர் இரத்த அழுத்தத்துக்கு வாழ்நாள் முழுவதும் மருந்து உள்ளெடுப்பதனாலும் சில வாழ்க்கை முறை மாற்றங்களைக் கைக்கொள்வதனாலும் அதனால் வரும் பாரதூரமான விளைவுகளைத் தடுக்கலாம் அல்லது பிற்போடலாம் என்பது தெட்டத் தெளிவான உண்மை. இது பல ஆராய்ச்சிகளால் நிரூபிக்கப்பட்டு காலங்காலமாக எடுத்துரைக்கப்பட்டு வருகின்றது. அப்படியிருந்தும் ஏன் நோயாளர்கள் இந்த மாத்திரைகளைக் கிரமமாக உள்ளெடுப்பதில்லை என்பதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

இந்த தவறுக்கு பொறுப்பு நோயாளர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருந்துவர்களும் நடைமுறையிலிருக்கும் நாட்டில் சுகாதார செயற்றிட்டமும் காரணமாகலாம்.

**நோயாளர்கள் தொடர்பான பின்வரும் காரணங்கள் மிக முக்கியமானவை**

1. உயர் இரத்த அழுத்த மாத்திரைகள் சம்பந்தமான ஒருவித பய உணர்வும் எதிர்மறையான எண்ணங்களும்.
2. உயர் இரத்த அழுத்தம் தொடர்பான அடிப்படை அறிவும் விளக்கமும் போதாமை.
3. வைத்தியர்களுக்கும் நோயாளிகளுக்கும் இடையேயான சரியான உறவு இல்லாமையும் சரியான விளக்கங்களை மருத்துவர்கள் உரிய நேரத் தில் உரிய முறையில் வழங்காமை. இதே நேரம் சுகாதார சேவையில் உள்ள குறைபாடுகளை உற்று நோக்குவோ மானால் பின்வரும் பிரதான காரணி களைக் குறிப்பிட முடியும்.

1. அதிக எண்ணிக்கையான மாத்திரைகளை நோயாளர்கள் விளங்கிக் கொள்ள முடியாத நேர அட்டவணையில் பரிந்துரைத்தல்.
2. காலத்துக்கு காலம் அரச மருந்தகங்களில்/ வைத்தியசாலைகளில் ஏற்படும் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை.
3. சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள் காலத்துக்குக் காலம் வேறுபடுவதனால் நோயாளி – மருத்துவர் உறவுகள் மேம்படாமை.

"மருந்துகள் யாவும் பாதுகாப்பான நஞ்சே" என்ற கோட்பாட்டுக்கு அமைய அவ்வப்போது அவற்றால் ஏற்படும் பாரதூரமற்ற சில பக்கவிளைவுகளும் நோயாளி அந்த மாத்திரைகளைத் தொடர்ந்து உட்கொள்வதில் ஓர் எதிர்மறையான செல்வாக்கைச் செலுத்துகின்றது.

– இவ்வாறு கிரமமாக மருந்து உட்கொள்ளாமை புதிதாக இரத்த அழுத்த மாத்திரைகளை உள்ளெடுக்கத் தொடங்கியவர்களிலும், இளவயதினரிலும், மதுக்குடிப்பழக்கம் உள்ளவர்களிலும் மனநோயாளிகளிலும் அதிகம் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உயர் இரத்த அழுத்தம் காரணமாக பொதுவாக எந்த நோய் அறிகுறியும் தென்படுவதில்லை. அதுவும் நோயாளர்கள் கிரமமாக மருந்து உட் கொள்ளாமைக்கு ஒருபிர தான காரணமாகும்.

கிரமமாக உயர் இரத்த அழுத்த மாத்திரைகளை உள்ளெடுக்காமை ஓர் உலகளாவிய பிரச்சினையாகும். இலங்கையில் வயது வந்த வர்களின் எண்ணிக்கை யும் வீதமும் உயர்ந்து கொண்டே செல்கின்றமையால் உயர் இரத்த அழுத்த நோயாளர்களின் எண்ணிக்கையும் அதனால் ஏற்படும் பாதிப்பும் இலங்கையில் சுகாதார சேவையில் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் சுகாதாரசேவை இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய நெருக்கடியான கட்டத்தில் உள்ளது. நோயாளர்களை எவ்வாறாவது உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடவைப் பது அல்லது அக்கறை கொள்ளச் செய்வது என்ற ஒன்றே இதற்கு பரிகாரமாகும்.

நோயாளிகள் தமது மாத்திரைகளைக் கிரமமாக உள்ளெடுக்கிறார்களா? இல்லையா? என்பதை தெரிந்து கொள்வது என்பது ஒரு பெரிய சவாலாகும். பல நோயாளர்கள் இந்த உண்மையை வெளிப்படுத்துவதில்லை. மருத்துவர்களும் அதைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பதுமில்லை. மீதமான மாத்திரைகளைக் கணக் கிடுவதன் மூலமும் ஒரு வினாக் கொத்தைக் கொடுத்து அதில் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலைத் தெரிந்து கொள்வதன் மூலமும் இன்றும் நவீன பரிசோதனைகள் மூலம் கிளினிக்குக்கு வரும் நோயாளிகளின் சிறுநீரில் மருந்தின் அளவைக்கணக்கிடுவதன் மூலமும் நோயாளிகள் மாத்திரைகளைச் கிரமமாக உள்ளெடுக்கிறார்களா? என்று அறிய முயற்சிக்கலாம். ஆனால் இவற்றினால் உண்மையை அறிந்து கொள்ள முடியுமா? என்பது சந்தேகமே.

நோயாளிகள் மருந்தின் மீது வைக்கும் நம்பிக்கையிலும் சிகிச்சையில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துவைப்பதிலும் உயர் இரத்த அழுத்தம் என்ற மிக முக்கிய பிரச் சினையை எவ்வாறு அணுகுகின்றார் என்பதிலும்தான் அவர் அந்த மாத்திரைகளை தன் வாழ்நாள் முழுவதும் உள்ளெடுத்து சுகவாழ்வு வாழ்வார் என்பது தங்கியுள்ளது. பெரும்பாலான ஆராய்ச்சிகள் மருத்துவருடனான முதல் சந்திப்பு எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதில்லை என்ற கசப்பான உண்மையை உணர்த்துகின்றன. உரிய நேரத்தை வைத்தியர் ஒதுக்காமை, போதியளவு விளக்கங்களைக் கொடுக்காமை நோயாளிகளுடன் கலந்துரையாடாமை என்பன பொதுவாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆகும். மருத்துவர்களின் கலந்துரையாடல் திறனை வளர்ப்பதும் அதற்குரிய நேரத்தை ஒதுக்குவதுமே இதற்குரிய பரிகாரமாகும்.

மருந்துகளை பரிந்துரைக்கும் போது நீண்ட நேரம் செயலாற்றும் நாளுக்கு ஒரு தடவை உட்கொள்ளக் கூடிய மருந்து வகைகளைத் தேர்ந்தெடுப்பதும் அவ்வாறான இரு விதமான மாத்திரைகளைச் சேர்த்து ஒரே மாத்திரையாக உற்பத்தி செய்வதும் மேலைத்தேச நாடுகளிலும் இந்தியாவிலும் வழக்கமாக உள்ளது. இதை எமது நாடும் பின்பற்றுவது சாலச் சிறந்தது. இதனால் நோயாளி நாளாந்தம் உள்ளெடுக்கும் மாத்திரைகளின் அளவைக் கணிசமாக குறைக்க முடியும்.

இந்தக் கட்டுரையின் சாராம்சம் என்னவெனில் உயர் இரத்த அழுத்தம் முற்றாகக் குணப்படுத்தக் கூடிய நோயல்ல. மாறாக, மிகவும் பாதுகாப்பானதும் பல வருடங்களாக பாவனையிலுள்ளதுமான மாத்திரைகளை வாழ்நாள் முழுவதும் மருத்துவரின் கண்காணிப்பில் உட்கொள்வதனால் உயர் இரத்த அழுத்தம் காரணமாக எற்படும் பெரிய பின்விளைவுகளிலிருந்து எம்மைப் பாதுகாத்து நோயாளிக்கும் அவரது குடும்பத்துக்கும் ஏற்படும் அசௌகரியத்திலிருந்தும், சுகாதார சேவைக்கும் நாட்டுக்கும் ஏற்படும் பெரிய பொருளாதார நட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

கட்டுரையாளர்:-
*பொதுவைத்திய நிபுணர்*
*யாழ்.போதனா*
*வைத்தியசாலை.*



உரிய நேரத்தை வைத்தியர் ஒதுக்காமை, போதியளவு விளக்கங்களைக் கொடுக்காமை நோயாளிகளுடன் கலந்துரையாடாமை என்பன பொதுவாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆகும். மருத்துவர்களின் கலந்துரையாடல் திறனை வளர்ப்பதும் அதற்குரிய நேரத்தை ஒதுக்குவதுமே இதற்குரிய பரிகாரமாகும்.

# பொட்டமானின் தொப்பி

## வதந்தியும் பின்னணியும்



சூரியகாந்தி

அன்ரன்

விரைவுப் பொதி விநியோக சேவை அமையம் அது. நரகேன்பிட்டியில் உள்ளது அதன் தலைமையகம். அன்றையதினம் அந்தப் பொதிகள் சேவை நிறுவனத்துக்கு வவுனியாவில் இருந்து சில பொதிகள் வந்திருந்தன. அதில் ஒன்று கனமானதாக நன்கு பொதி செய்யப்பட்டிருந்தது. அந்தப் பெட்டிக்குள் அடங்கியிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்த பொருளுக்கும் (ஆடைகள்) அதன் கனத்திற்கும் பொருத்தம் அற்றிருந்த காரணத்தால் ஊழியர்கள் சந்தேகம் அடைந்தனர். அவர்கள் அந்தப் பொதியை உடைத்துப் பார்த்தனர். அதற்குள், 6 ரின் மீன்கள், 4 பால் ரின்கள், 4 பெட்சீட்டுக்கள் மற்றும் ஒரு நீளக் காற்சட்டைக்கான துணி (ஜீன்ஸ் லென்த்) என்பன இருந்தன. பொதியின் அசாத்தியமான கனதிக்கான காரணம் இப்போது ஊழியர்களுக்குப் புரிந்தது. எனவே அவர்கள் அவற்றை மீண்டும் பெட்டிக்குள் பத்திரப்படுத்திப் பொதி செய்ய முயன்றார்கள்.

ஆனாலும் கறுப்பு நிறத்தில் அடியில் கிடந்த காற்சட்டைத் துணியின் கீழே எதுவோ இருப்பதைக் கண்ட ஊழியர் ஒருவர் ஆர்வ மிகுதியில் அந்தத் துணியைத் தூக்க, அதிர்ச்சி. அரண்டு போனார். அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரித் தொப்பி. மடித்து வைக்கப்பட்டு அதன் மேல் கறுப்புக் காற்சட்டைத் துணியை வைத்து மறைத்துவிட்டு, சந்தேகம் எழாமல் இருப்பதற்காக ஏனைய பொருள்களும் அதனுடன் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன என்பது ஊழியர்களுக்கு உடனேயே புரிந்தது. பெட்சீட்களுடன் இருக்கும்போது அது அவ்வளவாகத் தெரியாதிருந்தது. ஆனால் அவற்றைத் தூக்கியதும் தனித்து காற்சட்டைத் துணியின் கீழே அது இருப்பது நன்கு வெளித் தெரிந்தது. மாட்டிக்கொண்டது.

சுதாகரித்துக் கொண்ட ஊழியர்கள் உடனடியாக முகாமைக்குத் தகவல் தந்தனர். அவர்கள் மூலம் நாரகேன்பிட்டிப் பொலிஸுக்குத் தகவல் பறந்தது. விரைந்து வந்த பொலிஸார் தொப்பி மற்றும் பொதியைக் கைப்பற்றிப் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர்.



> புலிகளின் உயர் தளபதிகளும் சாதாரண படையினரும் ஒரே மாதிரியான தொப்பிகளையே அணிந்து வந்தனர் என்றும் தளபதிகளுக்கெனச் சிறப்பான தொப்பிகள் எவையும் தயாரிக்கப்படவில்லை என்றும் புலிகளை ஆழமாகத் தெரிந்தவர்கள் கூறுகின்றார்கள்.

ஆரம்ப விசாரணையில் அந்தப் பொதி வவுனியாவில் இருந்து வந்திருந்தது தெரியவந்ததும், வவுனியாவில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விழிப்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டனர். அவர்கள் உடனடியாக விசாரணையைத் தொடங்கினர்.

பொதி அனுப்பப்பட்ட அலுவலகத்திற்குச் சென்ற பொலிஸார் அங்கிருந்த ஊழியர்களிடம் விசாரணை நடத்தினர். அலுவலகத்தின் சிசிரிவி கமெரா பதிவுகளையும் பார்வையிட்டனர். ஓட்டோ ஒன்றில் வந்திறங்கிய இருவரே அந்தப் பொதியை அலுவலகத்தில் ஒப்படைத்திருந்தனர் என்பது தெரிய வந்தது. துப்புக் கிடைத்ததும் ஓட்டோ இலக்கத்தைக் கொண்டு அதனைப் பின்தொடர்ந்த பொலிஸார், ஓட்டோ சாரதியுடன் கூட வந்தவர் மன்னார் – கொழும்பு பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ் ஒன்றின் சாரதி என்பதையும் அடையாளம் கண்டனர்.

**பொட்டம்மான் பரபரப்பு**

யாழ். குடாநாட்டின் மறவன்புலவு என்ற இடத்தில் தற்கொலைக் குண்டு அங்கி மற்றும் கிளைமோர் குண்டுகள் வீடு ஒன்றுக்குள் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் இயக்கம் பயன்படுத்தும் தொப்பி ஒன்று லண்டனுக்கு அனுப்பப்பட இருந்த நிலையில் இவ்வாறு சிக்கியமை மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

தொப்பியைப் பார்த்ததும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயர் மட்ட உறுப்பினர்கள் பயன்படுத்துவதைப் போன்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். இதை அடுத்து இந்தத் தொப்பி புலிகளின் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு அல்லது பொட்டமான் எனப் படும் சண்முகலிங்கம் சிவரங் கருக்கு உரியதா என்று கடந்த ஞாயிறு சிங்கள ஊடகங்கள் கேள்வி எழுப்பின. அதுவே பின்னர் பொட்டம்மானின் தொப்பி லண்டனுக்கு அனுப்பப்பட இருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது என்பதாகச் செய்திகள் பரவ ஆரம்பித்தன.

உண்மையில் அந்தத் தொப்பி பொட்டம்மானால் பயன் படுத்தப்பட்டதா என்பது தொடர்பில் அதிகாரிகள் எதுவும் உறுதியாகத் தெரிவித்திருக்கவில்லை. அது புலிகளின் உயர் தளபதிகள் பயன்படுத்தும் தொப்பியை ஒத்திருந்தது என்று மட்டுமே தெரிவித்திருந்தனர். ஆனால், ஊடகங்கள் பரபரப்புக்காக அதைப் பொட்டமானின் தொப்பி என்றே வர்ணணை செய்தன. வடக்கில் தற்கொலை அங்கி மீட்பு, பின்னர் பொட்டமானின் தொப்பி என்ற பரபரப்புகள் சிங்கள் மக்கள் மத்தியில் நல்ல விற்பனைச் சரக்காகி இருந்ததால் ஊடகங்கள் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டன.

இதேவேளை புலிகளின் உயர் தளபதிகளும் சாதாரண படையினரும் ஒரே மாதிரியான தொப்பிகளையே அணிந்து வந்தனர் என்றும் தளபதிகளுக்கெனச் சிறப்பான தொப்பிகள் எவையும் தயாரிக்கப்படவில்லை என்றும் புலிகளை ஆழமாகத் தெரிந்தவர்கள் கூறுகின்றார்கள். எனவே ஒரு தொப்பி பொட்டமானால் பயன்படுத்தப்பட்டது என்பதற்கான அழுத்தமான ஆதாரங்கள் எதனையும் முன்வைக்க முடியாது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

**கைதும் தடுமாற்றமும்**

இதற்கிடையில் தொப்பி லண்டனுக்கு அனுப்பப்பட இருந்தது தொடர்பான விசாரணைகளைத் தீவிரப்படுத்திய பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் வவுனியாவில் தாம் அடையாளம் கண்ட இருவரையும் கைது செய்தனர். அவர்களே தொப்பி அடங்கிய பொதியை லண்டனுக்கு அனுப்புவதற்காக அந்தப் பொதிகள் சேவை நிலையத்தில் ஒப்படைத்தவர்கள்.

பொதிகள் சேவைகள் அலுவலகத்தின் சிசிரிவி கமெரா பதிவுகளின் அடிப்படையில் அவர்களில் முதலாவதாக, கொழும்பு - மன்னார் பயணிகள் சேவையில் ஈடுபடும் பேருந்தின் சாரதியான சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்தனர். அதன் பின்னர் அவரது நண்பரும் ஓட்டோச் சாரதியுமான இரண்டாவது சந்தேகநபரும் கைது செய்யப்பட்டனர். ஆரம்ப விசாரணையில் அவர்கள் இருவரும் முன்னாள் போராளிகள் என்பதும் புனர்வாழ்வு பெற்றவர்கள் என்பதும் தெரிய வந்தது. இது விசாரணை அதிகாரிகளுக்கு விறுவிறுப்பைக் கொடுத்தது.

ஆனால், அடுத்து அவர்கள் தெரிவித்த விடயங்கள் அவர்களுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. அந்தப் பொதியை தாங்களே அந்த அலுவலகத்தில் கொடுத்தார்கள் என்பதை அவர்கள் சாதாரணமாக ஒத்துக் கொண்டார்கள். அதில் எதையும் மறைக்க அவர் கள் விரும்பவில்லை. ஏனெனில் அந்தப் பொதி தங்களுக்குரியதில்லை என்றும் அது வவுனியா பாரிக்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த நகுலராசா (வயது 35) என்பவரால் தரப்பட்டது என்றும் கூறினார்கள்.

அதற்குப் பின்னர் அவர்கள் கூறியதுதான் மிக முக்கியமானது. நகுலராசா என்பவர் இராணுவத்தின் புலனாய்வு அணியில் பணியாற்றும் ஒரு நபர் என்றே தங்களுக்கு அறிமுகமானவர் என்று அவர்கள் தெரிவித்தார்கள். கடந்த 6 வருடமாக அவர் தன்னை இராணுவப் புலனாய்வாளர் என்று தெரிவித்தே தங்களுடன் தொடர்புபட்டு வந்தார் என்றும் இராணுவத்தில் அவருக்கான குறியீட்டுப் பெயர் நாலக்க என்றும் தெரிவித்தார்கள். தனக்கு அவசர வேலை இருப்பதால் லண்டனுக்கு அனுப்பப்பட்ட வேண்டிய பொதியைத் தங்களிடம் தந்து அதனைக் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார் என்றும் அவர் ஒரு இராணுவ உளவாளி என்று தெரிந்திருந்ததால், தேவையற்ற பிரச்சினைகள் வேண்டாம் என்ற ரீதியில் அவர் கேட்டுக்கொண்டபடி தாங்கள் நடந்துகொண்டனர் என்றும் அவர்கள் எந்தப் பயமுமின்றி பதற்றமுமின்றி வாக்குமூலம் அளித்தனர்.

அவர்களின் வாக்குமூலத்தை அடுத்து இந்த விடயம் வேறு பக்கமாகத் திசை மாறுவதை அதிகாரிகள் உணர்ந்தனர். அவர்களின் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டு இருவரையும் நாரகேன்பிட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து வந்திருந்த சிறப்பு அணியிடம் கையளித்தனர் வவுனியா பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர்.

வவுனியாவில் வழங்கிய வாக்குமூலத்தையே அவர்கள் நாரகேன் பிட்டிப் பொலிஸாரிடமும் வழங்கினர். இதையடுத்து புதுக் கடை 3ஆம் இலக்க நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்ட அவர்களை விளக்கமிறயலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் தேடுதல் நடத்திய பொலிஸார் நகுலராசாவையும் கைது செய்துள்ளனர். அவரும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் என்றும் புனர்வாழ்வு பெற்றவர் என்றும் தெரிய வந்திருக்கிறது. அவரிடம் நடத்திய விசாரணையில் அந்தத் தொப்பி தனக்குரியதே என்றும் அது பொட்டம்மானின் தொப்பி அல்ல என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். லண்டனில் இருக்கும் நண்பர் ஒருவருக்கு அந்தத் தொப்பியைத் தானே அனுப்பி வைத்தார் என்பதையும் ஒப்புக் கொண்டிருக்கிறார். எனினும் இது விடயம் தொடர்பாக அதிகாரிகள் இன்னமும் விசாரணைகளைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

புலிகளின் தொப்பி மற்றும் தற்கொலை அங்கி என்பவற்றைக் கொண்டு புலிகள் மீண்டும் உருவாகி வருகிறார்கள் என்ற அச்சத்தை ஏற்படுத்துவதற்காக இவ்வாறான சம்பவங்கள் திட்டமிட்டே உருவாக்கப்படுகின்றனவா என்ற கோணத்திலும் அதிகாரிகள் ஆராய்கிறார்கள்.

வெளிநாட்டில் இருக்கும் விடுதலைப் புலிகளின் வலையமைப்புகளைக் கண்டறிந்து முடக்குவதற்கு முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட உளவு நடவடிக்கை தற்செயலாக மாட்டிக்கொண்டு விட்டதா என்ற கோணத்திலும் இந்த விடயம் பார்க்கப்படவேண்டியுள்ளது.

இப்போது இந்த விடயத்தைப் பெரிதுபடுத்தாத அதிகாரிகள் அது பொர்ட்டம்மானின் தொப்பியல்ல என்று கூறுவதுடன் சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகிறார்கள்.

# 'தி ஜங்கிள் புக்'

## தவறவிடக்கூடாத அற்புத அனுபவம்



அரை நூற்றாண்டுக்குப் பிறகு, மீண்டும் ருட்யார்ட் கிப்ளிங்கின் 'தி ஜங் கிள் புக்' கதைத் தொகுப்பைத் திரைக்குக் கொண்டுவந்திருக்கிறது டிஸ்னி வேள்ட் நிறுவனம். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சிறுவர் இதயங்களைக் கட்டிப்போட்ட, காட்டில் தனித்துவிடப்பட்டு மிருகங்களால் வளர்க்கப்பட்ட சிறுவனின் கதை அது. பல தடவைகள் இது படமாக்கப்பட்டிருக்கிறது. 30 வருடங்களுக்கு முன்னர் டிஸ்னி வேள்ட் நிறுவனமே இதனை அனிமேசன் படமாகத் தயாரித்திருந்தது. இந்தமுறை, இன்னும் பிரம்மாண்டமான சாகசங்களோடும், காட்சியியல் அதிசயங்களோடும், எல்லைகளற்ற அன்பின் கவித்துவமான பிரதிபலிப்புகளோடும் இப்படம் வெளிவந்திருக்கிறது.

மத்திய இந்தியாவைப் பின்னணியாகக் கொண்ட கதை என்பதால் தமிழ் ரசிகர்களுக்கும் நெருக்கமானது இந்தப் படம். இந்தப் படத்தின் பெரும்பாலான காட்சிகள் லொஸ் ஏஞ்சலிஸில் படமாக்கப்பட்டுள்ளன என்றாலும் படம் தமிழிலும் டப் செய்யப்பட்டும் தமிழகத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

1980களின் இறுதியில் பிறந்த, வளர்ந்த குழந்தைகள் அனைவரையும் டிஸ்னியின் இந்தப் புதிய 'தி ஜங்கிள் புக்' ஆர்வத்துடன் ஆரத் தழுவும் என்பதில் ஐயமில்லை. காரணம், தொலைக்காட்சியில் ஜங்கிள் புக் தொடராக வெளியாகி இருந்தது. இளைஞர்கள், குழந்தைகள், பெரியவர்கள் என எல்லாத் தரப்பினருடைய எதிர்பார்ப்புகளையும் தாண்டிய, ஆச்சரியமான, மறக்க முடியாத திரை அனுபவமாக 3டி தொழில்நுட்பத்துடன் வந்திருக்கிறது ஜங்கிள் புக் திரைப்படம்.

இயக்குநர் ஜோன் ஃபவ்ரே, திரைக்கதை எழுத்தாளர் ஜஸ்டின் மார்க்ஸ் இருவருமே உலகம் முழுவதும் இருக்கும் ஜங்கிள் புக் ரசிகர்களின் கற்பனைக்குத் திரையில் உயிர்கொடுத்திருக்கிறார்கள். மோக்லி கதாபாத்திரத்தை கிப்ளிங் உருவாக்கி 121 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இன்றளவும் இந்தக் கதாபாத்திரத்துக்குத் தனி ரசிகர்கள் பட்டாளம் இருக்கிறது.

மோக்லி (நீல் சேதி) காட்டில் ஓநாய்க் கூட்டத்தால் வளர்க்கப்படும் சிறுவன். அவனுடைய குடும்பத்தில் தந்தை அகீராவும் (ஜியான்கார்லோ எஸ்போசிட்டோ), ரக்ஷாவும் (லுப்பிட்டா) காட்டின் விதிகள் தெரிந்த ஓநாயாக அவனைப் பாசத்துடன் வளர்க்கிறார்கள். ஆனாலும் அவனால் மனிசக் குட்டியாக காட்டில் வளர்ந்து வருவதைத் தவிர்க்க முடியவில்லை. காட்டில் அவனுடைய வழிகாட்டியாகவும் தோழனாகவும் கருஞ்சிறுத்தை பகீரா (பென் கிங்ஸ்லி) அவனுடனேயே இயங்குகிறது. இவர்களுடைய அழகான காட்டு வாழ்க்கையை விளக்கும் காட்சிகளுடன் படம் தொடங்குகிறது. ஆனால், குடும்பத்தின் மகிழ்ச்சியைக் குலைக்கும் விதத்தில் புலி சேர் கான் (இட்ரிஸ் எல்பா) அவர்களுடைய வாழ்க்கையில் நுழைகிறது. மனிதர்களுக்குக் காட்டில் இருக்க அனுமதி இல்லை என்ற காட்டின் விதியை "மனிதர்கள் தடைசெய்யப்பட்டவர்கள்" என்கிற உறுமலுடன் நினைவூட்டி மோக்லியை அழிக்க நினைக்கிறது.

படத்தில் சேர் கானின் அறிமுகக் காட்சி மிகவும் முக்கியமானது. அது மட்டுமல்லாமல் சேர் கான் வரும் காட்சிகள் அனைத்துமே திகிலுடன் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சேர் கான், ஒரு கதாபாத்திரத்தை வேட்டையாடும் காட்சியைச் சொல்லலாம். இந்தக் காட்சி பயமேற்படுத்தும்படி வலிமையுடன் படமாக்கப்பட்டிருக்கிறது. இட்ரிஸ் எல்பாவின் குரலும், சேர் கானின் கணினிவரைகலையும் இந்தத் திரை மிரட்சிக்குக் காரணம்.

லைஃப் ஆஃப் பை படத்தில் வந்த புலியைவிட சேர் கான் தரத்தில் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. மிகத் தத்ரூபமாக இருக்கிறது. இரண்டு புலிகளுமே உண்மையானவை இல்லை, கணினி வரைகலை மூலமாக மட்டுமே உருவாக்கப்பட்டு இயக்கப்பட்டவை. ஆனாலும் நம்பமுடியாதளவுக்கு சேர் கான் உண்மைப் புலியாகவே திரையில் மிரட்டுகிறது.

சேர் கானைப் போலவே, திரையில் திகிலை உருவாக்கும் இன்னொரு கதாபாத்திரம் மலைப்பாம்பு கா (ஸ்கேர்லெட் ஜோஹான்சன்). மோக்லிக்குக் கதை சொல்லி இறுக்கும் அதன் காட்சியும் துல்லியமான நுட்பங்களுடன் படமாக்கப்பட்டிருக்கிறது. மோக்லியைக் காவிடம் இருந்து காப்பாற்றுகிறது கரடி பல்லு (பில் முர்ரே). இருவரும் நல்ல நண்பர்களாகிவிடுகிறார்கள். பல்லுவும், மோக்லியும் ஆற்றில் பாடும் பேர் நெசஸிட்டிஸ் (Bare Necessasitics) பாடல் படமாக் கம் கவித்துவம். சேர் கானிடமிருந்து மோக்லியைக் காப்பாற்றும் திட்டத்தில் பகீராவுடன் பல்லுவும் இணைகிறது.

மோக்லியை வேட்டையாடுவதற்கு சேர் கான் பிடிவாதமாக இருப்பதன் பின்கதை என்ன இந்த மோதலில் இறுதி வெற்றி யாருக்கு என்பன போன்ற கேள்விகளுக்கான பதிலுடன் படத்தின் இறுதிக் கட்டங்கள் விறுவிறுப்பாகப் படமாக்கப்பட்டுள்ளன. அன்பு, இரக்கம், அச்சம் என்ற உணர்ச்சிக் கொந்தளிப்புகளின் ஊடே விறுவிறுப்பாக நகர்கிறது திரைக்கதை. படத்தில் ஜைகாண்ட்டோப் பித்திக்கஸ் (கதையில் வரும் ஒராங்குட்டானைவிட பத்து மடங்கு பெரியது) அரசன் லூயி (கிறிஸ்டோபர் வாக்கன்) கதாபாத்திரமும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் படத்தின் பெரிய பலமாகக் குரல் தேர்வைச் சொல்லலாம். படத்தில் நீல் சேதியைத் தவிர மனிதர்களே இல்லை. ஆனால், படத்தில் வரும் எல்லா விலங்குகளும் நம்மிடையே இரண்டு மணிநேரம் வாழ்வதைப் போன்ற உணர்வு ஏற்படுகிறது. அதற்குக் காரணம் விலங்குகளுக்குக் குரல் கொடுத்திருக்கும் நடிகர்கள். பென் கிங்ஸ்லி, பில் முர்ரே இருவரும் தங்கள் கதாபாத்திரங்களுக்குப் பெரிய நம்பகத் தன்மையைத் தங்கள் குரல் மூலம் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மொழியாக்கத்தில் பல்லுவைத் தவிர குரல் தேர்வுகள் மிரட்டுபவையாக இல்லை. குறிப்பாக சேர் கான் பாத்திரத்தின் ஆங்கிலக் குரல் தரும் அனுபவத்தை தமிழ்க் குரலால் தர முடியவில்லை. அந்த மிரட்டலும் அதட்டலும் தமிழில் ஆகா ஓகோ என்று பாராட்டும்படியாக இல்லை. ஆனால் பல்லுவின் தமிழ்க் குரல் ஆங்கிலம் அதே அற்புதமான அனுபவத்தைக் கொடுக்கிறது.

பத்து வயது நீல் சேதியின் அப்பாவித்தனமான முகமும், தேர்ந்த நடிப்பும் படத்துக்கு இன்னொரு பெரிய பலம். படத்தில் திரையில்வரும் ஒரே மனித கதாபாத்திரம் என்பதின் வலிமையை உணர்ந்து பிரமாதமாக நடித்திருக்கிறார் சேதி. ஹொலிவுட்டின் கணினி வரைகலை தொழில்நுட்பம் அடுத்த கட்டத்துக்குச் சென்றுவிட்டதை இந்தப் படம் உறுதிசெய்கிறது. 3டியில் இந்தப் படத்தைப் பார்க்கும்போது நா்ம் அனைவரும் இந்தியாவின் காட்டின் கோடைக் காலம், மழைக் காலம் என எல்லாவற்றையும் உண்மையாகவே உணர முடிகிறது.

ஜங்கிள் புக்கை குழந்தைகளுக்காகத்தான் கிப்ளிங் எழுதினார். ஆனால், டிஸ்னி இந்தப் படத்தைக் குழந்தைகளுக்காக மட்டும் எடுக்கவில்லை. எல்லோருக்குமான படமாகவே எடுத்திருக்கிறது. படம் முடிந்து ஓடும் நீண்ட கிரடிட்ஸ் பாடல் முடியும்வரை பார்வையாளர்களை இருக்கையில் கட்டிப்போட்டிருக்கிறது இந்த ஜங்கிள் புக்.

ஒரு நல்ல படம் இரண்டு மணிநேரப் பொழுதுபோக்கைக் கொடுக்கும். ஒரு சிறந்த படம் உங்களை வேறொரு உலகத்துக்கே அழைத்துச்சென்றுவிடும். இயக்குநர் ஜோன் ஃபவ்ரே ஒரு சிறந்த படத்தைக் கொடுத்திருக்கிறார். ரசிகர்களுக்கு இருக்கும் ஒரே ஒரு குறை, தொலைக்காட்சியில் தொடராக நீண்ட காலம் பார்த்து தமது மனங்களில் மறக்க முடியாத அனுபவத்தைக் கொண்டிருந்த இந்தக் கதையை இரண்டு மணி நேரங்களுக்குள் சுருக்கிவிட்டது டிஸ்னி என்பது மட்டும்தான். படத்தை நீட்டி முழக்கி எடுத்திருந்தால், அதில் லயித்து சுகித்துக் கிடக்க அவர்கள் தயார்தான்.

வடக்கில் உள்ள திரையரங்குகளில் இந்தப் படம் இன்னும் வெளியாகவில்லை. அப்படி வெளியாகும்போது பெற்றோர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளைத் திரையரங்குக்கு அழைத்துச் சென்று கட்டாயம் காட்டவேண்டிய படம் இது.



# இலங்கைப் பிரதமரின் சீனப் பயணம்



சந்திரசேகர ஆசாத்

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கான நான்கு நாள் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார். இந்தப் பயணத்தின்போது பொருளாதாரம், வர்த்தகம், உட்கட்டுமானம் என்பன தொடர்பாக இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே ஏழு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. மேலோட்டமாகப் பார்த்தால் இது எதிர்பார்க்கப்படாதது போலவே தோன்றியபோதும் அடிப்படையில் இது தவிர்க்கப்பட முடியாத ஒரு விடயமாகவே கருத வேண்டியுள்ளது. இதற்குத் தற்சமயம் இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளும் சீனாவின் விட்டுக்கொடுப்புடன் கூடிய நீண்டகால இலக்குகளைக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையுமே காரணமாக இருக்க முடியும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தின்போதும், நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போதும் மைத்திரி – ரணில் அணியினர் சீனாவின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு எதிராகவே பெரும் பரப்புரைகளை முன்னெடுத்தனர். அது மட்டுமன்றி சீனாவால் மேற்கொள்ளப்பட்டு வந்த கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தையும் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு இடை நிறுத்தினர். அதன் காரணமாக சீனா–இலங்கை உறவில் சிக்கல் தோன்றக் கூடுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்சமயம் நிலைமை தலைகீழாக மாறி சீன உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்களை மேலும் விரிவுபடுத்த அத்திபாரமிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே மகிந்த ராஜபக்ச ஆட்சியிலிருந்தபோது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான 'சீபா' உடன்படிக்கை வரைவு மேற்கொள்ளப்பட்டது. இது இலங்கைக்குப் பெரிய பாதகமான அம்சங்களைக் கொண்டிருந்தது எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. மகிந்த ராஜபக்ச அதற்கு மறுப்புத் தெரிவிக்காதபோதும்கூட அவர் இழுத்துப் பறித்து அதில் கையெழுத்திடுவதைத் தவிர்த்து வந்தார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட கையுடனேயே இந்தியப் பிரதமர் இலங்கைக்குப் பயணம் செய்து அந்த ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான ஒரு சூழலை உருவாக்கினார். எனினும் தற்போதைய அரசு 'சீபா' உடன் படிக்கையைக் கைவிட்டு அதற்குப் பதிலாக 'எட்கா' உடன் படிக்கையை மேற்கொள்ளச் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

இன்னும் சில நாள்களில் 'எட்கா' ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ள நிலைமையில் பிரதமரின் சீனப் பயணம் இடம்பெற்றதும், ஏழு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியதுமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.



இதை இந்தியாவோ அல்லது அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட மேற்கு நாடுகளோ விரும்பப் போவதில்லை என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. அதேவேளையில் மேற்குலகின் நம்பிக்கைக்குரிய விசுவாசியான ரணில் விக்கிரமசிங்க இதில் முன்னின்று செயற்பட்டதும் ஆச்சரியமான விடயம்.

எப்படியிருப்பினும் சர்வதேச ராஜதந்திர ஒழுங்கின்படி இந்தியாவோ மேற்கு நாடுகளோ இதைப் பகிரங்கமாக எதிர்க்கப்போவதில்லை. ஆனால் இதற்கு மேலாக இன்னுமொரு வலையைப் போட்டு இதை வலுவிழக்கச் செய்ய அவை முயற்சிக்கலாம்.

### சீனா வித்தியாசமானது

வளர்ந்து வரும் நாடுகளைக் கையாளும் முறையில் சீனாவுக்கும் ஏனைய வல்லரசு நாடுகளுக்கும் இடையே பெரிய வேறுபாடுகள் உண்டு. இதன் காரணமாகவே பல வளர்ந்து வரும் நாடுகளில் சீனாவின் செல்வாக்குப் பரவி வருவதை அவதானிக்க முடியும். சர்வதேச நாணய நிதியமோ, உலக வங்கியோ, ஆசிய அபிவிருத்தி வங்கியோ அல்லது மேற்கு நாடுகளோ நிதியுதவி வழங்கும்போது பல விதமான நிபந்தனைகள் விதிக்கப்படும். அவற்றில் முக்கியமானவை தனியார் துறையை ஊக்குவித்தல், அரச செலவினங்களைக் குறைத்தல் என்பனவாகும். அரச செலவினங்களைக் குறைத்தல் எனப்படும்போது கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளுக்கான செலவினங்களை மட்டுப்படுத்துவதும் மக்களுக்கு வழங்கும் மானியங்கள் உட்பட்ட சலுகைகளைக் கைவிடுதலுமாகும். அதேவேளையில் இந்திய உதவிகளோ இந்தியப் பெருமுதலாளித்துவத்தின் நலன்களின் அடிப்படையில் மட்டுமே அமையும். ஆனால் சீனாவைப் பொறுத்த வரையில் கடன் அடிப்படையில் நிதி உதவிகளை வழங்கிய போதும் உள் அபிவிருத்திக்குச் சாதகமாகவே அதன் உதவிகள் அமையும்.

ஒட்டுமொத்தத்தில் சர்வதேச பொருளாதார வல்லரசாக வளர்ந்து வரும் சீனா, அதற்கேற்ற வகையில் தனது கடல் போக்குவரத்துகளை இலகுவாகவும், சீரான முறையிலும் நடத்தும் வகையில் வளர்ந்து வரும் நாடுகளுடனான உறவைப் பேணிவருகிறது. இதன் காரணமாகவே அமெரிக்கா சார்பான பாகிஸ்தான், இந்தோனேசியா போன்ற நாடுகள்கூடச் சீனாவுடனான வர்த்தகப் பொருளாதார உதவிகளை மேம்படுத்தி வருகின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான், இலங்கைப் பிரதமரின் சீனப் பயணம் இடம்பெற்று வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சீனத் தலைவர் ஜிங் பிங்கும் மேற்கொண்ட சந்திப்பின்போது சீனத் தலைவர் குறிப்பிட்ட ஒரு கருத்து முக்கியமாகக் கவனத்தில் எடுக்கப்படவேண்டியதாகும். அதாவது, சீனா தனிநபர்களையோ கட்சிகளையோ பற்றி அக்கறை கொள்வதில்லை எனவும் நாட்டையும் நாட்டு மக்களையும் பற்றியே கவனம் செலுத்துமெனவும் அவர் தெரிவித்திருந்தார். இதன் மூலம் அவர் தெளிவான முறையில் சீனா தனது உதவிகள் மூலம் பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாது என்பதை மீண்டுமொரு முறை உத்தரவாதம் செய்துள்ளார்.

இதுவே பல வளர்முக நாடுகள் சீனாவின் பக்கம் ஈர்க்கப்படுவதற்கான முக்கிய காரணமாகும்.

### இந்தியாவின் கவலை

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தின்போது இலங்கை சீனா பக்கம் சாயும் நிலை ஏற்பட்டிருந்தது. இந்தியா அதைத் தடுத்து நிறுத்தப் பல்வேறு உபாயங்களைக் கையாண்டபோதும் அதனால் வெற்றி பெற முடியவில்லை.

> இந்திய உதவிகளோ இந்தியப் பெருமுதலாளித்துவத்தின் நலன்களின் அடிப்படையில் மட்டுமே அமையும். ஆனால் சீனாவைப் பொறுத்தவரையில் கடன் அடிப்படையில் நிதி உதவிகளை வழங்கியபோதும் உள் அபிவிருத்திக்குச் சாதகமாகவே அதன் உதவிகள் அமையும்.

(43 ஆம் பக்கம் பார்க்க)

> மகள் கவிதாயினி பயிலும் பாடசாலையில் இருந்து எந்த ஒரு மாணவ, மாணவியும் சித்தி பெற்றிருக்கவில்லை என்பதைப் பத்திரிகைச் செய்தி பட்டவர்த்தனமாக்கி இருக்கையில் மகள் சித்தி அடையவில்லை என்பதைப் பிறிதாக அவனுக்குப் புட்டுக் காட்டவா வேண்டும்?



# ஒரு வண்டில் இரு மாடுகள்

தேவி பரமலிங்கம்

பரமேஸ்வரன் பார்வதி குடும்பம் அளவானது. அழகான குடும்பமா என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். அழகான குடும்பமுமாகத் திகழ வேண்டுமல்லவா? அதற்கான முயற்சியில் பெரும் பங்கு பரமேஸ்வரனுக்கே இருந்தது. கவிதாயினி மகள்; வயது பதினொன்று. நடுத்தரப் பாடசாலை ஒன்றில் ஏழாம் ஆண்டில் கற்றுக்கொண்டிருக்கிறாள். ரியூசன் வகுப்புக்கும் பிரத்தியேகமாகப் போகிறாள்.

சுதாகரன் மகன்; வயது எட்டு. அதே பாடசாலையில் நான்காம் ஆண்டில் கல்வி; ரியூசன் இத்தியாதிகள் அவளே போல். ஆசைக்கு ஒரு மகள்; ஆஸ்த்திக்கு ஒரு மகன். பரமேஸ்வரனது குடும்பம் நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட அளவான குடும்பம்.

பெற்றோரின் வசதிக்குறைவால் ஆரம்பக் கல்வியுடன் உழைக்க வெளிக் கிளம்பும் நிர்ப்பந்தம் நேர்ந்தது பரமேஸ்வரனுக்கு.

தொழிலில் ஈடுபட்டிருந்த காலங்களில் பாடசாலைகளுக்குப் போகும் மாணவ, மாணவிகளைப் பார்த்துப் பரமேஸ்வரன், அவர்களைப் போன்று தானும் கல்வி கற்க முடியவில்லையே என்று ஏங்கியதுண்டு. தனக்குக் கிடைக்காத பாக்கியத்தை தன்னுடன் பிறந்த பெண் சகோதரத்துக்குக் கிடைக்க பரமேஸ்வரன் அரும்பாடுபட்டான். கொழும்பில் இருந்து விடுமுறைகளில் ஊருக்கு வரும் சந்தர்ப்பங்களில் மாநகரில் மாணவ, மாணவிகள் அணியும் சீருடைகள் பாதணிகள், எழுதுகோல்கள் என வாங்கி வந்து தங்கை தங்கலட்சுமிக்கு வழங்குவான். அவனுடைய கனவுகளை நனவாக்காமல் தங்கை தங்கலட்சுமி பின்போனது பழங்கதைகளாயின.

பரமேஸ்வரனுக்குத் துணைவந்தவளான பார்வதி அவளது பெற்றோர் குடும்பத்தில் மூத்தவள். பரமேஸ்வரனை விடவும் நான்கு வகுப்புகள் கூடுதலாகப் படித்தவள்.

பெண் பார்க்கப் போன வேளையில் தனது சகோதர, சகோதரிகளுக்கு அவளே கல்விப் பயிற்சி ஊட்டுவதாக அறிந்து மகிழ்ந்து போயிருந்தான். இலட்சியத்துக்கு ஏற்றாற் போல் இணை சேர்ந்து விட்டதாகப் பரமேஸ்வரன் ஆரம்பத்தில் நினைத்தது பொய்த்து விடுமென்று எவருக்குத் தான் தெரியும்? கடந்த வருடப் பிற்பகுதி ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன.

மகள் கவிதாயினி பயிலும் பாடசாலையில் இருந்து எந்த ஒரு மாணவ, மாணவியும் சித்தி பெற்றிருக்கவில்லை என்பதைப் பத்திரிகைச் செய்தி பட்ட வர்த்தனமாக்கி இருக்கையில் மகள் சித்தி அடையவில்லை என்பதைப் பிறிதாக அவனுக்குப் புட்டுக் காட்டவா வேண்டும்?

"கவிதா.. பாடசாலையிலும், ரியூசனிலேம்.... வீட்டிலையும் என்ன செய்யிறாள்...?"

பரமேஸ்வரன் புலமைப்பரீட்சை முடிவுகள் வெளிவந்த பின்பொரு பொழுதில் மனைவியையும், மகளையும் பார்த்து இந்த விதம் கேட்டான். மகள் எதுவோ கூறிச் சமாளித்தாள் பார்வதி முழங்காலுக்கும், மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போட முனைந்தாள். புலமைப் பரிசில் பரீட்சையில் மகள் பங்கெடுக்கப் போவதைத் தெரிந்து கணிதப் பயிற்சி, தமிழ்ப் பயிற்சி, அப்பியாசப் புத்தகங்கள் என்று கேட்கப்பட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தான் பரமேஸ்வரன். குறைந்த தன்னுடைய வருமானத்திலும் அந்த மேலதிகச் சுமையையும் தாங்கிக் கொண்டான். ரியூசனுக்கு வேறை மாதா மாதம் ஒரு தொகை செலுத்தப்பட்டுக்கொண்டும் வந்தது. பரமேஸ்வரனது லட்சியம் சகோதரியால் எப்பவோ தவறியது. பிள்ளைகளாலும் சரிந்து விழுந்திடுமா?

காலந்தான் பதில் சொல்லவேண்டும்! பரமேஸ்வரன் காலைக் கடன் முடித்து வந்து பார்த்த போது மகள் இன்னமும் படுக்கையில் எழுந்திராமல் புரண்டு கொண்டிருந்தாள். மகன் முகம் கழுவாமல் குசினியுள் இருந்து தேநீரை மட்டுமன்றிக் காலை உணவைக்கூட முடிப்பதற்காகத் தாயுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தான்.

"கவிதா எழுந்திரம்மா..."

முகம், கால் அலம்பப் பரமேஸ்வரன் கிணற்றடியில் நின்ற போது பத்தாவது தடவையாக பார்வதி மகளைத் துயில் எழுப்பும் சத்தம் காதுகளில் விழுந்திருந்தது. பரமேஸ்வரன் சுவாமி அறையால் வெளி வருகையில் சக்தி பண்பலையில் கோமாளிகள் நிகழ்ச்சி ஆரம்பமானது.

படுக்கையால் எழுந்து முகம், கால் கழுவாத நிலையில் நிலைக் கண்ணாடியில் தன்னுடைய பிம்பத்தைப் பார்த்துக் கொண்ட கவிதாயினி திரையிசைக்கு நன்றாகவே அபிநயம் பிடித்தாள். பரமேஸ்வரன் மனதிலும் அவளுக்குப் பரதம் படிக்க வேண்டுமென்ற ஆவல் இருக்கிறது.

அதற்காக இப்படியுமா? தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஒளிப்பரப்புகள் ஆரம்பித்த பின்பாக இந்தச் சமூகம் எந்தளவுக்குக் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதைப் பரமேஸ்வரன் பல தடவை சிந்தித்துப் பார்த்திருக்கிறான். வீடியோ படப்பிரதிகள், டெக் என்பன மலிவான வாடகைக்குக் கிடைக்கையில் ஒரே இரவில் அடுத்தடுத்து பல படங்களை விடியும் வரையில் போட்டுப் பார்த்த காலங்கள் மருவிவிட, ஒவ்வொரு வீடுகளிலும் அவை இருக்கும் காலமல்லவா? கவிதாயினி என்ன இன்னும் எத்தனை எத்தனை மாணவச் செல்வங்கள் பாடசாலை செல்ல வேண்டிய நேரத்தில் படுக்கையில்தானே புரள்வார்கள்!

"கவிதா பாட்டுச் சத்தம் வருகுது ஓடிப் போய்ப் பாணை வாங்கிக் கொண்டா!" "கவிதா அடுப்புக்கெரித்து விடு!" "கவிதா கோப்பையளைக் கொண்டேக் கழுவிக் கொண்டா!"

பார்வதி தான் பார்க்கவேண்டிய வேலைகளில் பாதியைக் கவிதாவின் தலையில் சுமத்தி விட்டால், அவளின் மூளையுள் என்னதான் ஏறும்? தொலைக்காட்சியில் சினிமா பார்க்க மனைவி மக்களை அனுமதிப்பது இல்லை என்பது மட்டுமில்லை பரமேஸ்வரனுக்கும் அது துப்புரவாகப் பிடிப்பதும் இல்லை.

பரமேஸ்வரன் எந்தளவுக்குத் திரை போட்டுத் தடுத்தாலும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு அயலட்டைகளில் தொலைக்காட்சி பார்க்க வெளிக்கிட்டு விடுவாள் பார்வதி. அதன் பின்பு கவிதாவோ சுதாகரனோ தந்தை பக்கம் நிற்கக் கூடியவர்களா? இந்தக் காரணங்களால் தன் மீது பிள்ளைகளின் பாசம் குறைந்து வருவதையும் பரமேஸ்வரன் அறிந்து இராமல் இல்லை.

ஒரு குடும்ப வண்டில் சீராக நகர்ந்து செல்ல வேண்டுமானால் நுகத்தடியில் பூட்டப்படுகின்ற இரு மாடுகளும் ஒன்றுடன் ஒன்று ஒத்து இழுத்தாலே முடியும் என்பதில் பரமேஸ்வரனுக்கு அசைக்க முடியாத அளவுக்கு நம்பிக்கை உண்டு.

"என்ரை கடமை உங்களை நன்றாகப் படிக்க வைப்பது. இதுக்கு மேல் அதில திறமையா வாறதும் வராமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது. ஆனால் கல்வியைக் கற்கவேண்டிய வயதிலை விட்டு விட்டால் பின்னாடி நீங்க கவலைப்படுவீங்கள்." மனைவி பார்வதி முன்பாக மகளுக்கும் மகனுக்கும் சொல்லிக் கொண்டு பரமேஸ்வரன் தொழிலுக்குப் புறப்பட்டான்.

# பன்னீர் ரோஸ்ட்



தேவையான பொருள்கள்

பன்னீர் அரை கப் (துருவியது)
சீரகத் தூள் கால் கரண்டி
மிளகாய்த் தூள் அரைக்கரண்டி
பச்சை மிளகாய் ஒன்று
(பொடியாக நறுக்கியது)
உப்பு தேவைகேற்ப
பாண் துண்டு நான்கு
எண்ணெய் ஒரு கரண்டி
நெய் தேவையான அளவு

## செய்முறை

சட்டியில் ஒரு கரண்டி எண்ணெய் ஊற்றிக்காய்ந்ததும்பன்னீர் துருவல்சேர்த்து இரண்டு நிமிடம் வதக்கிய பின், சீரகத் தூள், மிளகாய்த் தூள், பச்சை மிளகாய், உப்புச் சேர்த்து கிளறி நான்கு நிமிடம் கழித்து இறக்கவும்.

பாண் துண்டுகளை ரொட்டிக் கட்டையால் திரட்டிக் கொள்ளவும். பிறகு, ஒரு பாண் துண்டின் மேல் பன்னீர் கலவையை சிறிதளவு வைத்து பரப்பி அதன் மேல் இன்னொரு பாண் துண்டு வைத்துச் சுற்றி நெய் ஊற்றி ரோஸ்ட் செய்து திருப்பிப் போட்டு ரோஸ்ட் செய்து எடுத்தால் பன்னீர் ரோஸ்ட் தயார்.



# தலை முதல் பாதம் வரை அழகு

### கூந்தல்

எண்ணெய் மசாஜ் கூந்தலின் பளபளப்பை அதிகரிக்க உதவும். வாரம் ஒரு முறை எண்ணெயை லேசாக சூடாக்கி கூந்தலின் வேர்களில் ஆரம்பித்து நுனிவரை தடவவும். விரல் நுனியால் வேர்களை நன்றாக தேய்த்து விடவும். பிறகு வெந்நீரில் ஒரு துணியை நனைத்து, அதை நன்றாக பிழிந்து விடவும். சூடான துணியை தலையில் கட்டவும். 15 நிமிடம் கழித்து கூந்தலை சீயக்காய் அல்லது ஷாம்புவால் கழுவவும். வேர்களுக்குள் எண் ணெய் ஊடுருவ இது உதவும்.

### முகம்

வாழைப்பழத்தை நன்றாக மசித்து முகத்தில் தடவவும். 10 நிமிடம் கழித்து கழுவி விடவும். இது முகத்துக்குப் பட்டுப்போன்ற மென்மையும், பள பளப்பும் தரும். அழுக்கும், எண்ணெய் பசையும் ஒன்று சேர்ந்தால் விளைவு, பருக்கள் தான்! இதைத் தடுக்க ஒரே வழி முகத்தை அடிக்கடி கழுவவும்.

### கண்கள்

கண்களைச் சுற்றி கருவளையங்கள் இருந்தால், சோர்ந்த தோற்றத்தை உங்களுக்குத் தரும். இதைத் தவிர்க்க சரியான தூக்கம் தேவை. கரு வளையங்களைப் போக்க உருளைக்கிழங்கு அல் லது வெள்ளரித் துண்டை கண்கள் மீது 15 முதல் 20 நிமிடம் வைத்திருப்பது நல்லது.

### உதடுகள்

மென்மையான உதடுகளின் ரகசியம் ஈரப்பதம். நெய், வஸ்லீன் ஆகியவற்றைத் தடவுவதால் உதடுகளில் வெடிப்பு வருவதை தவிர்க்கலாம். உதடுகள் இளஞ்சிவப்பு நிறத் தைப் பெற தூங்குவதற்கு முன் பீட்ரூட் சாறு தடவவும்.

### சருமம்

உடலின் சருமத்தை ஆரோக்கியமாக வைப்பதற்கு உயிரிழந்த சருமத்தை அகற்றுவது மிகவும் அவசியம். 2 தேக்கரண்டி சீனியை, 2 தேக்கரண்டி ஒலிவ் எண் ணெயுடன் அல்லது மோருடன் சேர்க்கவும். இந்தக் கலவை யால் உடலைத் தேய்த்துக் கழுவவும். இது சருமத்துக்குப் புதுப்பொலிவு தரும்.

### கைகள்

கைகளை மிருதுவாக வைக்க கை கழுவியவுடன் கிறீம் தடவவும். வீட்டு வேலை அல்லது தோட்ட வேலை செய் யும் போது மறக்காமல் கையுறை அணியவும்.

### கால்கள்

கால்களில் வெடிப்பு வருவதைத் தவிர்க்க, கால்களைத் தேய்த்துக் கழுவ வேண்டும். இது சொரசொரப்பான தோலை நீக்கும். அதன் பிறகு காலில் கிறீம் தடவினால் மென்மையான கால்களைப் பெறலாம்.



# ஒரு நாளைக்கு எத்தனை முறை முகம் கழுவுவது?

அழகுப் பராமரிப்பு என்று வரும் போது நிபுணர்கள் முதலில் பரிந்துரைப்பது பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை அதிகம் உண்பதோடு, ஜூஸ், தண்ணீர் போன்றவற்றையும் அதிகம் பருக வேண்டும் என்பதுதான்.

### வறட்சியான சருமம்

வறட்சியான சருமத்தைக் கொண்டவர்கள் ஒரு நாளைக்கு நான்கு முறை முகத்தைக் கழுவுவது தவறான ஒன்று. இத்தகைய சருமத்தினர் பகலில் ஒரு நாளைக்கு ஒரு முறைதான் முகத்தைக் கழுவ வேண்டும்.

### எண்ணெய்ப் பசை சருமம்

எண்ணெய்ப் பசைச் சருமம் உள்ளவர்கள் ஒரு நாளைக்கு அதிக பட்சமாக 3 முறை முகத்தைக் கழுவுவதன் மூலம், சரும ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.

### பருக்கள்

ஒருவேளை உங்களுக்கு பருக்கள் அதி கம் இருப்பின், ஒரு நாளைக்கு குறைந் தது 4 முறை முகத்தைக் கழுவ வேண் டும். அதுவும் சவர்க்காரம் எதனையும் பயன்படுத்தாமல் வெறும் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

### காலை


காலையில் எழுந்ததும் முகத்தைக் கழுவிவிட்டுத் தான், எந்த வேலையையும் செய்யவேண்டும். வேண்டுமானால் இந்த நேரத்தில் முகத்தைக் கழுவும் போது சவர்க்காரத்தைப் பயன்படுத்திக் கழுவ லாம். இத னால் முகத்தில் உள்ள அழுக்கு கள் வெளியேற்றப்பட்டு, முகம் புத்துணர்ச்சி யுடன் காணப்படும்.


### மதியம்

எண்ணெய்ப்பசைச்சருமம் உள்ளவர்கள், மதிய வேளையில் கட்டாயம் முகத்தைக் கழுவ வேண்டும். அதிலும் எண்ணெய்ப் பசையைக் கட்டுப்படுத்தும் பேஸ் வோஷ் என்னவென்று நிபுணர்களிடம் கேட்டுப் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில், குளிர்ந்த நீரில் மட்டும் முகத்தைக் கழுவலாம். இதனால் சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் வெளியேற்றப்படும்.

### மாலை

அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்ததும் குளிப்பது மிகவும் நல்லது. இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் முழுமை யாக வெளியேற்றப்படும். ஆனால் மாலை வேளையில் முகத்தைக் கழுவுவதுடன், பழங்கள் அல்லது காய்கறி களால் ஆன பேஸ் பேக் போடுவது, உங்களை எப்போதும்





# நாமெல்லாம் விண் மீன்களின் துகள்கள்!

ஆசை

சுப்பர்நோவா! பிரபஞ்சத்தின் பிரம்மாண்டமான வாண வேடிக்கை! ஆனாலும், வெறுங்கண்களுக்கும் தொலைநோக்கிகளுக்கும் அந்தப் பிரம்மாண்டம் எளிதில் அகப்படாது. சுப்பர்நோவாவைப் பற்றிய இருவேறு தகவல்கள் அறிவியலாளர்கள் மத்தியில் தற்போது உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

**சூப்பர்நோவா என்றால் என்ன?**

நமது சூரியனை விடப் பல மடங்கு பெரியதாக இருக்கும் விண்மீன் ஒன்று தனது ஆயுளின் முடிவில் வெடித்துச் சிதறுவதற்குத்தான் சுப்பர்நோவா (Supernova) என்று பெயர். தமிழில் பெருவிண்மீன் வெடிப்பு என்று சொல்லலாம். பெருவிண்மீன் வெடிப்பின்போது ஒரு விண்மீன் தனக்குள்ளே குலைவுற்றுப் பின் பிரம்மாண்டமாக வெடித்துச் சிதறுகிறது. அப்போது வெளிப்படும் ஆற்றல் பத்தாயிரம் கோடி சூரியன்களின் ஆற்றலுக்கு இணையானது. ஆற்றல் மட்டுமல்ல அப்போது வெளிப்படும் ஒளியும் அந்த விண்மீன் இருக்கும் ஒட்டுமொத்த விண்மீன் மண்டலத்தின் (galaxy) ஒளியைவிடப் பிரகாசமாக இருக்கும்.

இவ்வளவு ஆற்றலை வெளிப்படுத்தும் பெருவிண்மீன் வெடிப்பால் நமது பூமிக்கும் சூரிய மண்டலத்துக்கும் ஏதாவது ஆபத்து நிகழுமா என்ற கேள்வி நமக்கு எழுவது இயல்பானதே. சூரியக் குடும்பத்துக்குக் கிட்டத்தட்ட 30 ஒளியாண்டுகள் தொலைவுக்குள் பெருவிண்மீன் வெடிப்பு நிகழ்ந்தால் நாம் சூரியக் குடும்பத்தோடு கைலாசம்தான். நல்லவேளையாக நமக்கு அவ்வளவு அருகில் பெருவிண்மீன் வெடிப்பு நிகழ்வதற்கு வாய்ப்புள்ள விண்மீன்கள் ஏதுமில்லை.

**வெடிப்பின் எச்சங்கள்**

பெருவிண்மீன் வெடிப்பின் எச்சங்களை சமீபத்தில் கடல் அடியில் உள்ள படிவங்களிலிருந்து கண்டறிந்திருக்கிறார்கள். அந்தப் படிவங்களிலிருந்து அரிய வகை ஐசோடோப் ஒன்றைக் கண்டறிந்திருக்கிறார்கள். இரும்பு-60 என்ற அந்த ஐசோடோப் பெருவிண்மீன் வெடிப்பிலிருந்து மட்டுமே உருவாகக்கூடியது. பூமியிலிருந்து 300 ஒளியாண்டுகள் தொலைவில், இருவேறு காலங்களில் நிகழ்ந்த இரண்டு பெருவிண்மீன் வெடிப்புகளின் எச்சங்கள்தான் அந்த ஐசோடோப்புகள்.

பிரபஞ்சம் உருவானபோது, அதாவது சுமார் 1,300 கோடி ஆண்டுகளுக்கு முன்பு ஹைட்ரஜன், ஹீலியம் போன்ற லேசான தனிமங்கள்தான் உருவாயின. ஆனால், சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவான பூமியில் உயிர் வாழ்க்கை உருவாவதற்கு அடிப்படையானவை கடினமான தனிமங்கள். அந்தத் தனிமங்கள் எங்கிருந்து வந்திருக்கும் என்ற கேள்வி நெடுங்காலமாக இருந்துவருகிறது. பெருவிண்மீன் வெடிப்புகள், பூமியின் மீதான வால் நட்சத்திரங்களின் மோதல், மாபெரும் எரிமலை வெடிப்புகள் போன்ற ஐந்து நிகழ்வுகள் பூமியின் மீது ஏற்படுத்திய தாக்கத்தால் பூமியில் உயிர்கள் தோன்றியிருக்கலாம் என்று இதற்கு விடை சொல்லப்படுகிறது.

அதே நேரத்தில், மேற்கண்ட இரண்டு பெருவிண்மீன் வெடிப்புகளுக்கும் பூமியில் உயிர் தோன்றியதற்கும் தொடர்பில்லை. உயிர்கள் தோன்றியதற்குப் பிறகுதான் இந்த வெடிப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. 23 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெருவிண்மீன் வெடிப்பும், 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வெடிப்பும் நிகழ்ந்திருக்கின்றன. மேலும், பூமிக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுத்தும் தொலைவில் இவை நிகழவில்லை. எனினும், இவற்றின் எச்சங்கள் கிடைத்திருப்பதைப் பார்க்கும்போது இதேபோல் பூமியின் ஆரம்ப காலத்தில் ஏதாவது பெருவிண்மீன் வெடிப்பு பூமியின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடும் என்ற கருத்து உறுதிப்படுகிறது.

**அதிர்வலைகள் கண்டுபிடிப்பு**

இன்னொரு முக்கியமான கண்டுபிடிப்பு, முதன்முறையாகப் பெருவிண்மீன் வெடிப்புக்கு முந்தைய அதிர்வலைகளை (shock waves) கெப்ளர் தொலைநோக்கி பதிவுசெய்திருப்பது!

தற்போது பாதியளவு பழுதடைந்திருக்கும் கெப்ளர் தொலைநோக்கி 2011இல் சேகரித்திருந்த தகவல்களை சர்வதேச வானியலாளர்கள் அலசிப் பார்த்தபோது இரண்டு பெரு விண்மீன் வெடிப்புகளை, அவை நிகழ்வதற்கு முன்பிருந்து கெப்ளர் உற்றுநோக்கியிருந்ததைக் கண்டறிந்தனர். பெருவிண்மீன் வெடிப்புக்கு முன்பு விண்மீனுக்குள் அதிர்வலைகள் ஏற்பட்டு வெடிப்பு நிகழும் என்று முன்பே அறிவியலாளர்கள் கணித்திருக்கிறார்கள். ஆனால், அந்த அதிர்வலைகளைத் தொலைநோக்கிக்கூடாகப் பார்த்திருப்பது இப்போதுதான் முதல்முறை. ஆனாலும் ஒரு சிக்கல்! ஒரு பெரு விண்மீன் வெடிப்புக்கு முன்புதான் அதிர்வலைகள் காணக் கிடைத்தன, இன்னொன்றில் அதிர்வலைகள் புலப்படவில்லை.

இருப்பினும் இந்த முரண்பாட்டால் அறிவியலாளர்கள் நம்பிக்கை இழந்துவிடவில்லை. ஒன்றில் அதிர்வலைகளைக் காண முடிந்து, இன்னொன்றில் காண முடியவில்லை என்றால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஏதோ ஒரு விடயம் இதில் இருக்கிறது என்கிறார் இந்தக் கண்டுபிடிப்புப் பற்றி எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையொன்றின் ஆசிரியரான பிராட் டக்கர்.

அதிர்வலைகள் புலப்படாத விண்மீன் மிகவும் பெரியது. நமது சூரியனை விட 500 மடங்கு பெரியது. ஆக, அதிர்வலைகள்கூடத் தப்பிச் செல்ல முடியாத அளவுக்கு அதன் ஈர்ப்பு விசை மிகமிகச் சக்தி வாய்ந்ததாக இருந்திருக்கும் என்கிறார் பிராட் டக்கர்.

வேறு சில காரணங்களையும் அவர் முன்வைக்கிறார். ஏதாவது படலங்கள் மறைத்துக்கொண்டால்கூட அந்த அதிர்வலைகளை கெப்ளர் தொலைநோக்கியால் பார்க்க முடியாமல் போயிருக்கும். அல்லது, மற்றொரு பெருவிண்மீனை விட இந்தப் பெருவிண்மீன் 2,000 மடங்கு தொலைவில் இருந்ததால் அதன் அதிர்வலைகளின் கண்சிமிட்டலை கெப்ளர் தவறவிட்டிருக்கலாம் என்றும் அவர் கூறுகிறார்.

**எண்ணற்ற சாத்தியங்களின் பிரபஞ்சம்!**

பெரு விண்மீன் வெடிப்பு என்பது அடிக்கடி நிகழக்கூடிய ஒன்றல்ல. பல ஆண்டுகளுக்கு ஒருமுறை, பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழக்கூடியது. அப்படிப்பட்ட அரிதான ஒரு நிகழ்வின் இரண்டு வகைகளை நம் தொழில்நுட்பத்தால் உள்வாங்க முடிந்திருக்கிறது என்பது பெரும் சாதனை. இந்த இரண்டு நிகழ்வுகளும் வெவ்வேறு கதைகளைச் சொல்லியிருப்பது நம் பிரபஞ்சத்தின் எண்ணற்ற சாத்தியங்களின் ஓர் அடையாளம்தான் என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

கடலுக்கடியில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களுக்குச் சொந்தமான பெருவிண்மீன் வெடிப்புகளும், கெப்ளர் பார்த்த பெருவிண்மீன் வெடிப்புகளும் வேறு வேறு. என்றாலும் அவை சொல்லும் சேதி ஒன்று! ஆம், ரோஹித் வெமுலா சொன்னதுபோல் நாமெல்லாம் விண்மீன்களின் துகள்கள்தான். ரோஹித் வெமுலாவின் ஆதர்ச நாயகரான கார்ல் சகானும் இதையேதான் சொல்லியிருக்கிறார்.

நமது டி.என்.ஏவில் உள்ள நைட்ரஜன், நம் பற்களில் உள்ள கல்சியம், நம் குருதியில் உள்ள இரும்பு, நாம் உண்ணும் அப்பிளில் உள்ள கார்பன் எல்லாமே, வெடித்துச் சிதறும் விண் மீன்களின் உட்பகுதியில் உருவானவை. நாமெல்லாம் விண்மீன் துகள்களால் உருவானவர்கள்.

மூலம்: தி கார்டியன் இதழில் வெளியான இரு கட்டுரைகள்

“

நமது சூரியனை விடப் பல மடங்கு பெரியதாக இருக்கும் விண்மீன் ஒன்று தனது ஆயுளின் முடிவில் வெடித்துச் சிதறுவதற்குத்தான் சுப்பர்நோவா (Supernova) என்று பெயர். தமிழில் பெருவிண்மீன் வெடிப்பு என்று சொல்லலாம்.



# கற்பனாவாதமும் யதார்த்தமும்!

## ஈராக்கில் தெறிக்கும் உண்மை

தமிழில்: வெ. சந்திரமோகன்

யாஜிதிகளின் மரபுப்படி, மயில் தேவதூதன்தான் முதன் முதலாக பூமிக்கு வந்து, தனது இறகுகளின் வீச்சில் பூமியில் உள்ள எல்லா பொருள்களுக்கும் வண்ணம் தீட்டினானாம். வடக்கு ஈராக்கின் டோபுக் நகரத்தின் புறநகர்ப் பகுதியில், கனத்து இருண்ட வானத்தின் கீழ் முடிவே இல்லாததுபோல் பெய்துகொண்டிருக்கும் மழை, பழுப்பு நிறக் களிமண்ணில் கிளைப் பாதைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இங்கு மூன்று தலைமுறைகளாக இணைந்து வாழும் 15 பேர் கொண்ட யாஜிதி குடும்பம், உள்ளூர் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு வழங்கிய, கட்டி முடிக்கப்படாத கட்டடம் ஒன்றில் தஞ்சமடைந்திருக்கிறது.

சின்ஜார் மலையடிவாரத்தில் உள்ள தங்கள் கிராமத்துக்குள், 2014 டிசெம்பரில் இஸ்லாமிய அரச (ஐ.எஸ்.) அமைப்பு நுழைவதற்கு முன்னர், இந்தக் குடும்பத்தினர் தக்காளி வியாபாரம் செய்து வந்தார்கள். பல நூற்றாண்டுகளாக எந்த மாற்றத்தையும் அடையாத வாழ்க்கையை வாழ்ந்து வந்தார்கள்.

உலகத்துக்கு அவர்களுடன் செய்வதற்கு ஒன்றுமில்லை. அவர்களுக்கும் உலகத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை. அவர்கள் தங்களுக்கு வெளியில் திருமண பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

வெளியாள்களும் அவர்களுடன் திருமணஉறவைக் கொண்டிருக்கவில்லை. யாஜிதிகள் அப்படித் தான். ஆனால், இவர்களைத் தான் சாத்தானை வழிபடுபவர்கள் என்றனர் ஐ. எஸ். அமைப்பினர்.

யாஜிதிகளை ஐ.எஸ். அமைப்பு இனப்படுகொலை செய்தது என்று அமெரிக்க நாடாளுமன்றம் ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், இந்தக் குடும்பத்தைப் பொறுத்த வரை அவை வெற்றுச் சொற்கள்தான். தங்களைக் காப்பாற்றியது மேற்கத்திய நாடுகள் அல்ல; குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் ஆயுதப் பிரிவான பி.கே.கே தான் என்கிறார்கள் இவர்கள்.

ஐ.எஸ். உறுப்பினர்களிடமிருந்து தப்பி மலைப் பகுதிக்கு ஓடிவந்தபோது,



பெண்களைத் தங்கள் முதுகில் சுமந்து சென்றதும், தங்களுக்கு ரொட்டியும் தண்ணீரும் அளித்ததும் பி.கே.கே. உறுப்பினர்கள்தான் என்கிறார்கள்.

மேற்குலகத்தைப் பொறுத்தவரை இந்த இடதுசாரி பி.கே.கே. இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு. சமீபத்தில் துருக்கி தலைநகர் அங்காராவில் நடந்த குண்டுவெடிப்புக்குத் தாங்கள்தான் காரணம் என்று இந்த அமைப்பு பொறுப்பேற்றுக்கொண்டது. ஆனால், இந்த யாஜிதிகளைப் பொறுத்த வரை இடதுசாரி பி.கே.கே. அமைப்பினர்தான் நாயகர்கள்.

ஆபத்து இருள் சூழ்ந்தபோது தங்கள் கரங்களைப் பற்றிக் காப்பாற்றியதும் பாதுகாப்பான இடத்துக்குத் தங்களை அழைத்துச் சென்றதும் அவர்கள்தான் என்கிறார்கள்.

### கொடூர அமைதி

ஐ.எஸ். கட்டுப்பாட்டில் இருந்த தங்கள் பகுதி தற்போது அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் நிலையில், யாஜிதிகள் அங்கு மீண்டும் திரும்புவார்களா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. யாஜிதிகளில் பலர், குறிப்பாக இளைஞர்கள், ஜேர்மனியில் தங்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறார்கள். இந்தக் குடும்பத்தினரோ யாஜிதிகள் மீண்டும் சேர்ந்து ஒன்றாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார்கள். எனினும், அது அத்தனை பாதுகாப்பானது அல்ல என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அருகில் வசிக்கும் அரபு சுனி முஸ்லிம்களில் பலர் ஐ.எஸ். அமைப்பினரின் வருகையை ஆதரித்தது ஒரு காரணம். யாஜிதிகளுடன் தினமும் காலை வணக்கத்தைப் பரிமாறிக் கொண்ட அதே மக்கள்தான், ஐ.எஸ். அமைப்பினரால் யாஜிதி பெண்கள் இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் அடிமைகளாக விற்கப்பட்டபோதும், யாஜிதி குழந்தைகள் கொல்லப்பட்ட போதும் ஐ.எஸ். அமைப்பின் பக்கம் நின்றார்கள்.

அந்தக் குடும்பத்தின் தாய், தான் தப்பித்தபோது அணிந்திருந்த அதேஉடையுடனேயே இன்னமும் இருக்கிறார்.

அவரது நான்கு வயதுப் பேர்த்தி தனது முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் அவரைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். இந்தச் சின்ன வயதிலேயே பல இன்னல்களை அவள் சந்தித்து விட்டாள். அவளது தந்தை குர்து பேஷ்மெர்கா படையில் சேர்ந்துவிட்டதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஐ.எஸ். படைகளை எதிர்த்து முன்னணியில் போரிடுபவர் அவர். ஐ.எஸ். படையினர் சமீபத்தில் குளோரின் வாயுவைப் பயன்படுத்தி நடத்திய தாக்குதல் பற்றிப் பேசுகிறார். எனினும், தான் அஞ்சவில்லை என்கிறார். குர்து படையில் பணிபுரிவதன் மூலம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 350 யூரோக்கள் அவருக்கு வழங்கப்படுகிறது. 15 பேர் கொண்ட இந்த யாஜிதி குடும்பத்தின் வாழ்வாதாரமாக அவர் இருக்கிறார்.

> யாஜிதிகளை ஐ.எஸ். அமைப்பு இனப்படுகொலை செய்தது என்று அமெரிக்க நாடாளுமன்றம் ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால், இந்தக் குடும்பத்தைப் பொறுத்தவரை அவை வெற்றுச் சொற்கள்தான். தங்களைக் காப்பாற்றியது மேற்கத்திய நாடுகள் அல்ல; குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் ஆயுதப் பிரிவான பி.கே.கே தான் என்கிறார்கள் இவர்கள்.

### சூழ்ச்சிப் பொறிகள்

ஆயிரக்கணக்கான யாஜிதிகள் வடக்கு ஈராக்கில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். மலை மீது உள்ள டவோதியா முகாமில் தங்கியிருக்கும் சில பெண்களுடன் இணைந்து, மதிய நேரத்தில் திறந்த வெளி அடுப்பு ஒன்றில் ரொட்டி தயாரிப்பதில் பங்கேற்றேன். கலாய்ஸில் உள்ள முகாம்களை விட இது நிச்சயம் நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் முகாம் என்றே சொல்ல வேண்டும். அதேசமயம், அவர்களின் சொந்த வீடுகளிலிருந்தும் பணிபுரியும் இடங்களிலிருந்தும் வெகுதொலைவில் இருக்கின்றன இந்த முகாம்கள்.

யாஜிதிகள் வசித்த இடங்களில் இன்றைக்கு ஐ.எஸ். அமைப்பு ஆயிரக்கணக்கான கண்ணிவெடிகளைப் புதைத்துவைத்திருக்கிறது. யாஜிதிகள் வாழ்ந்த வீடுகள் முழுவதும் பல்வேறு விதங்களில் உருவாக்கப்பட்ட சூழ்ச்சிப் பொறிகளால் நிறைந்திருக்கின்றன.

(36 ஆம் பக்கம் பார்க்க)



# எழுத்தறிவித்தவன்...!

செ.மகேஷ்

## சொல்லத்தான் நினைக்கிறார் செல்லத்தம்பி 03

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்று சொல்லும்போதே விழுந்து வணங்கவேண்டும் என்ற கட்டளை எமக்குள்ளேயே பிறந்துவிடுகிறது. ஆனால் இன்று இந்தப் பெண் பிள்ளைகளைப் பள்ளிக் கூடம் அனுப்பிறதுக்குப் பயமாகவெல்லோ கிடக்கண்ணை என்றார் சிவபாதம். உண்மைதான் குருவுக்கு நாம் கொடுத்துவந்த மதிப்பெல்லாத்தையும் சில கிறுதாக்கள் தூக்கி எறிந்துவிட்டார்களே! செல்லத்தம்பி அண்ணர் மனம் புளுங்கினார்.

அந்தக் காலத்திலை ஆசிரியராய் வாறதெண்டால் கல்வித் தகைமையோடு பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித்துத் தகுதி கொண்டுள்ளார் என்ற உறுதியோடு பயிற்சி பெற்ற பின்னர்தான் பள்ளிக் கூடத்தினுள்ளே ஆசிரியராக நுழையலாம். இன்றெல்லாம் அரசியல்வாதிகளின் நியமனங்கள் கல்விச் சான்றிதழ் ஒன்று இருந்தால் போதும் எவருடைய பழக்க வழக்கமும் பார்க்கப்படாமலேயே பதவியைப் பெற்றுக் கொள்ளலாம். அவரும் தனக்குப் பதவி வழங்கி உதவியவரின் காலைப் பிடித்துக் கொண்டே பள்ளிக்குப் போய்ப் படிப்பித்தாலென்ன படிப்பிக் காட்டிலென்ன ஆசிரியரென்ற பெயரோடு சம்பளம் பெற்றுவிடுவார். வேலையின்றி அலைந்தவருக்கு ஒரு வேலை என்ற வகையிலே அவரின் வேலை தொடர்கிறது தொழிலில் விருப்பின்றி மாத்திரமல்ல தொழிலுக்குரிய சிறப்புக்களையும் தொழில் வாண்மையையும் உதறிவிட்டு பள்ளிக் கூடத்தை தினமும் வலம் வருகிறார்.

ஒவ்வொரு பாடத்துக்கு ஒரு வாத்தியார். அவருக்கு அந்தப் பாடம் தவிர்ந்த வேறு எதுவும் தெரியாது. அடுத்த பாடத்தைப் படிப்பிக்கும் அறிவு கொஞ்சமும் கிடையாது என்பதாகக் காட்டிக்கொண்டே காலத்தை ஓட்டுவார். அந்தக் காலத்திலேயெண்டால் அந்த நாசனல் போட்ட வாத்தியார் வகுப்புக்குள்ளே நுழைந்தால் எந்தப் பாடத்தையும் எடுத்து விடுவார். பண்டிதர் வித்துவான்கள் தமிழிலக்கியம் படிப்பித்தால் வாய் திறந்த படி எங்களையே மறந்து கற்றிருந்த காலம் அது.

கல்வியின் கனதியைப் புரிந்துகொள்ளாது கூலிக்காகக் கல்வி கற்பிக்கும் கனவான்களால் நல்லொழுக்கமும் நல்லறிவும் நிரம்பிய ஆசிரியர்களின் மதிப்பும் ஒரு சில மதிகெட்டவர்களின் தரங் குறுகிய செய்கைகளால் கீழிறங்கி விடுகிறது. மக்கள் ஆசிரியர்கள்மேல் வைத்திருக்கும் மேலான எண்ணங்களும் கலைந்து விடுகின்றன. ஆசிரியர் தெய்வத்துக்குச் சமமானவர் என்று போற்றப்படுவதற்கு ஆசிரியர்கள் தெய்வங்களாக மாற்றம் பெறுவது எவ்வாறு? தமது கல்வியோடு தம்மிடம் கற்கவரும் பிள்ளைகளிடத்தில் நற் பழக்க வழக்கங்களை ஊட்டும் வகையில் பண்பு நிறைந்த மனிதனாக நடந்து கொள்ள வேண்டாமா? மனப்பாங்கிலே மாற்றம் வேண்டும். நடத்தையிலே நல்லொழுக்கம் வேண்டும்.வாழ்க்கையிலே இவனொரு புனிதனென்றும் மனிதனென்றும் இந்த ஊர் பேச வேண்டும். இத்தகையோராகிக் கற்பிக்கும் ஆசிரியராகும் நல்லெண்ணத்தோடு ஒவ்வொரு வரும் தம்மைத் தாமே புடமிட் டுக்கொள்ளுதல் வேண்டும். இவை இரு பாலாருக்கும் பொருந் துவனவாகும். பள்ளி கூடத் துக் கற்பித்தலோடு இந்தப் பாழாய் போன ரியூட்டறி களில் கற்பிக்க முந்தும் ஆசிரியர்களால் கல்வியின் தரம் வினா விடைகளாகிப் போன மர்மம் என்னவோ வேதனை தருவதாகவே உள்ளது. ஐயோ! சிவபாதத்தாரின் ஆதங்கத்துக்கான விடையாக செல்லத்தம்பி எண்ணியவற்றை வெளியே சொல்லத் தயங்கினார். தொடர்ந் தும் இன்னும் இன்னும் எத்தனை எண்ணங்கள் செல்லத்தம்பியரின் மனத்தைக் குடைந்தாலும் எதனையும் வெளியே சொல்லிப் பலரின் பகையை வளர்த்துக் கொள்ள வேண்டாம் என்ற அவ ரது பிரிய பத்தினியின் தாரக மந்திரத்துக்கு அமைய அவரது மனம் அதற்கு மேலும் இடம் தரவில்லை. மௌனமாகவே அழுகிறார்.

> அந்தக் காலத்திலை ஆசிரியராய் வாறதெண்டால் கல்வித் தகைமையோடு பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பித்துத் தகுதி கொண்டுள்ளார் என்ற உறுதியோடு பயிற்சி பெற்ற பின்னர்தான் பள்ளிக் கூடத்தினுள்ளே ஆசிரியராக நுழையலாம்.



ஒப்பரேசன் பார்பரோசா
மனித சதைக் குவியலில்
நாடு பிடிக்கும் நடவடிக்கை

உனது பாதணியின் இடுக்குகளில்
எத்தனை இனக்கூறுகளின்
மரபணுக்கள் நசிந்து
கிடந்திருக்குமோ

உன்னைத் துளைத்த
தோட்டாவை
ஒருமுறை வினவ வேண்டும்
உனது மூளையில்
நிறைந்திருந்தது யூதர்கள் மேல்
கொண்ட இனவெறியா

நண்டுகளை நத்தைகளைப் போல
நரவுயிர்களைக் கொன்றொழித்த
கொலை வெறியா
நாடு பிடிக்கும் வேட்கையில்
என்னையே வெல்ல வல்லான்
பூமியின் அந்திம காலம் வரை
நான் ஒருவனே எனும் ஆணவமா

நீ ஆசையாய் வளர்த்த
நந்தவனத்துக்கு மனிதப்
பிணங்களை எருவாக்கினாய்
குருதிகொண்டு நீர் பாய்ச்சினாய்
பூக்களில் பிணவாடையை முகர்ந்து
புளகாங்கிதத்தில் அகமகிழ்ந்தாய்
மனித இரத்தத்தில் படகு செலுத்தி
மாஸ்கோவின் மதில்களை முட்டினாய்

இறுதியில் என்னவாயிற்று
வரலாறு பழைய தீர்ப்பையே
திருப்பியெழுதி
எள்ளிநகையடியது உன்னை.

ஸ்ராலினின் இரும்புக் கரம்
உன் கனவு சுமந்தவரின்
குரல்வளை நெரிக்கையில்
கூக்குரலிட்டவன் நீயென்று
ஆ கிப் போனது நீட்டிய நேசக்கரங்கள்
அனைத்தையும் நிட்டூரப்படுத்தி
முறித்துப்போட்டாய்
உன் கரங்களே உன்னைத்
தண்டிக்கையில்
நேசக்கரங்களின் வலியை
உனது கைகள் உனக்கு
சொல்லியிருக்கும்

ஒருவித்தில் நீ காதல் மன்னன் தான்
உடன்கட்டையேறுமளவுக்கு உன்னை
உருக உருக ஒருத்தி
காதலித்திருக்கிறாள்
எரிமலைக்குள்ளும் சிறு ஈரக்சிவாக
கடைசிக்கணத்தில் காதலியை
கடிமணம் புரிந்தாய்
இன்று உன் கல்லறையில்
எருக்கலம் பூக்களையேனும்
இட்டுச் செல்வதற்கு
ஆளில்லாத அநாதை நீ
நாஜி என்ற சொல்
பாவச் சொல் அகராதியில்
படுத்துறங்கிக் கொண்டிருக்கிறது

ஓ...ஈவா பிறவுன்
எரிதணலை நேசித்த எழிலவளே
உன் கல்லறையிலும் கூட
எருக்கலம் பூக்களையேனும்
காண முடிவதில்லை

வேல்.லவன்

# மகிந்த அன்று வென்றிருந்தால் மைத்திரியின் கதி என்னவாகியிருக்கும்?

## கேள்வியிலேயே பதிலும் தருகிறார்



ரம்யன்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சில சமயங்களில் வெளியிடும் தகவல்கள் அவர் எத்தகைய பொறுமைசாலி என்பதை மட்டுமல்ல, தமக்கு எதிராக குரோத மனப்பான்மையுடன் செயற்படுபவர்களை அதேமுறையில் எதிர்கொள்ளாமல் நாசூக்காகவும் நகைச்சுவை யோடும் எப்படி எதிர்கொண்டு சமாளிக்கிறார்; சமாளித்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள வைக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு அரசினால் வழங்கப் பட்டு வந்த இராணுவப் பாதுகாப்பை அகற்றி விட்டு அதற்குப் பதிலாக பொலிஸாரையும் பொலிஸ் அதிரடிப் படையினரையும் வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவு குறித்து எதிர்த் தரப்பினர், குறிப்பாகக் கூட்டு எதிர்க்கட்சியினர் குய்யோ முறையோ என்று கூக்குரல் இடுகிறார்கள். மட்டுமன்றி ராஜபக்சவும் கூட பதற்றமடைந்து கத்துகிறார்.

புலிப் படையினர் மீளவும் எழுச்சியுற்றுவிட்டதாக மறவன்புலவில் தற்கொலை அங்கி கிடைத்திருப்பதை வைத்துக்கொண்டு அவர்கள் படும்பாடு கொஞ்சமல்ல. இந்த நிலைமையில் மகிந்தவுக்கு அளிக்கப்பட்டுவந்த இராணுவ பாதுகாப்பை அகற்றிவிட்டால் என்ன நேருமோ ஏது நேருமோ என்பது அவர்களின் அங்கலாய்ப்பாக இருக்கின்றது.

இந்த நிலமையில்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களைப் பார்த்துக் கேட்டிருக்கிறார்; தவறுதலாகவாவது கடந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்றிருந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் தோல்வியுற்றிருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என்று?

ஒரு தலைவர் தேர்தலில் தேல்வியுற்றதன் பின்னர் ஹெலிகொப்டர்களையும் பல தரப்பட்ட குண்டு துளைக்காத வாகனங்களையும் தாம் விரும்பிய 226 பாதுகாப்பு அதிகாரிகளையும் எடுத்துக்கொண்டு தம் வீட்டுக்குச் செல்ல எந்த நாட்டில் அனுமதிக்கப்படுகிறார் என்றும் ஜனாதிபதி மைத்திரிபால கேட்டுள்ளார்.



பிபிலே என்ற இடத்தில் அண்மையில் நடந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் ஜனாதிபதி இவ்வாறு கேட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமது பதவிக் காலம் நிறைவடைய இன்னும் இரண்டு ஆண்டுகள் பாக்கியிருந்த நிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார். தேர்தலை நடத்தி வெற்றி பெறுவதற்கான காலகட்டம் அதுவே என்று சோதிடர்கள் அவருக்கு அறிவுரை கூறியிருந்தனர். அதனால் மகிந்த அவ்வாறு செய்தார் என்பது பலரின் அபிப்பிராயமாக இருந் தது. அதைவிட தேர்தலை எப்போது நடத்தினாலும் வெற்றி பெறமுடியும் என்ற அசட்டு நம்பிக்கையும் அவருக்கு இருந்தது.

ஒரு பதவிக் காலத்தில் இரண்டு வருடங்கள் போனாலென்ன அவைகளையும் சேர்த்து பின்னர் பதிவியிலிருப்பது ஒன்றும் கஷ்டமில்லை அவருக்கு. இரண்டு வருடங்களுக்கு முன்னரே தேர்தலை நடத்துவதால் தோல்வியைச் சந்திக்க நேரும் என்று அவர் கொஞ்சமும் எண்ணிப் பார்க்கவில்லை. ஜனாதிபதிக்கான போட்டியில் எதிர்க்கட்சியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவைவிட வேறு எவருமே போட்டியிட முன்வர மாட்டார்கள், அப்படி வருவதற்கு எவருக்குமே துணிவு பிறக்காது என்பது அவர் நம்பிக்கை. அதனால்தான் என்னை எதிர்த்து எவர் போட்டியிட வரப்போகிறார்கள் என்றும் ஒரு சமயம் ஏளனமாக கேள்வி எழுப்பியிருந்தார்.

மேலும் தேர்தலில் எந்த வகையிலாவது சரிவு ஏற்பட்டுவிடும் என்று தெரிய வந்திருந்தால் அவரது தம்பிகளான பசில் ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்சவினர் மட்டுமில்லை, புதல்வர்கள், மனைவி பேன்றோரை உள்ளடக்கிய குடும்பத்தினரும் அவரது நிழலில் அரசியல் நடத்தும் சகபாடிகளும் முன் கூட்டியே தேர்தலை நடத்த அனுமதித்திருக்க மாட்டார்கள். தேர்தலை முன்கூட் டியே நடத்தியமையால் ராஜபக்ச மாத்திரமின்றி ஏனைய அனைவரும் கூட ஊழல்கள், பதவி முறைகேடுகள், நிதி மோசடிகள் மற்றும் கொலைக் குற் றங்கள் எனப் பல்வேறு விசாரணை களுக்குள் சிக்கிக்கொண்டு எவ்வாறு தப்பலாம் என்பதை நினைத்துப் பார்க் க வும் முடியாமல் விழிபிதுங்கி நிற்கிறார்கள்.

இவை இப்படியிருக்க, ராஜபக்ச இரண்டு வருடங்கள் முன்னதாகவே தேர்தலை நடத்தியமைக்கு வேறு ஒரு காரணத்தை ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருக்கிறார். அனேகர் கூறுவது போல் சோதிடர்களை நம்பி தேர்தலை ராஜபக்ச இரண்டு ஆண்டுகள் முன் கூட்டியே நடத்தவில்லை என்று சொல்லும் அவர், 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமக்கு பாதகமான முறையில் அறிக்கையொன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தாக்கலாகவிருந்தது குறித்த அச்சம் ஒரு பக்கம், அதேசமயம் நாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி இருந்தமை மறுபக்கமுமாக மிரட்டியமைதான் அதற்கான காரணம் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி பிபிலே கூட்டத்தில் மேலும் பேசியபோது, தாமோ பிரதமரோ தமது பாதுகாப்புக்கு இராணுவத்தினரை வைத்துக் கொள்ளவில்லை என்றார். தமது உடல் பாதுகாப்புக்காக முன்னைய தலைவர்கள் பயன்படுத்திய இரண்டாந் தர பாதுகாப்பு அங்கிகளையே பயன் படுத்துகின்றார் எனவும் ஜனாதிபதி தெரி வித்தார்.

தமது பாதுகாப்புப் பிரிவில் பொலிஸாரும் அதிரடிப் பொலிஸ் அணியினருமே இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார். இந்த வசதிகளை எல்லாம் வைத்துக்கொண்டே நாடு முழுவதும் சென்று இந்த அரசை வீழ்த்துவதற்கு பரப்புரைகளை மேற்கொண்டார் மகிந்த. நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கும்கூட இந்த வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை-என்றார் ஜனாதிபதி.

என்னைப் போன்ற ஒருவர் ராஜபக்ச




அனுபவிக்கும் வசதிகளை எல்லாவற்றிற்கும் மேலான வசதிகளைக் கொண்டிருந்திருக்கவேண்டும். ஆனால் நான், தேர்தலில் தோல்வியுற்றிருந்தால் என் நிலைமை என்னவாயிருக்கும் என்று கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி அந்தக் கூட்டத்தில் வெளியிட்டிருந்த மேலும் சில சிந்தனைக்குரிய தகவல்கள் வருமாறு: ராஜபக்சவால் கொண்டு செல்லப்பட்டிருந்த சகல வாகனங்களையும் திருப்பிக்கொண்டு வரும்படி இராணுவத் தலைவருக்கு ஜனாதிபதி என்ற முறையில் என்னால் கட்டளையிட்டிருக்க முடியும். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ராஜபக்சவே முன் வந்து என்னிடம் கையளிக்க விரும்பினார். அதனைப் பலவந்தமாக நான் பறித்துவிடவில்லை. நான் வெற்றி பெற்று பதவியேற்றுக்கொண்டதன் பின்னர் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலர் ஒரு குழுவாக கலந்து கட்சியின் தலைமையை ஏற்றுக்கொள்ளும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். முன்னாள் ஜனாதிபதி ஒத்துக்கொண்டால் மட்டுமே என் னால் அதைச் செய்யமுடியும் என்று கூறியிருந்தேன். முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்சவின் இல்லத்தில் அவரைச் சந்தித்தபோது கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நீங்கள் தயாரா என்று அவர் என்னிடம் கேட்டார். நீங்கள் அந்தப் பதவியைத் தரவிரும்பினால் மட்டுமே அதனை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன் என்று பதிலளித்தேன். பின்னர் அவர் சம்மதித்தார். நான் ஏற்றுக் கொண்டேன் என்று கூறினார் ஜனாதிபதி.

கிராம அபிவிருத்திச் சபை ஒன்றின் தலைவர் பதவியைக்கூட பலவந்தமாக அபகரித்துவிட முடியாது என்ற நிலையில் எவ்வாறு ஒரு பிரதான கட்சியின் தலைமைப் பதவியை ஒருவரால் பறித்து விட முடியும் என்று ஜனாதிபதி கேட்டார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவிடம் இருந்து அழுத்தம் பிரயோகித்து மைத்திரி பறித்துக் கொண்டார் என்ற கருத்து சமீப காலத்தில் எதிர்த் தரப்பினரால் பரப்புரை செய்ய எத்தனிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே ஜனாதிபதி இதனைக் கூறியிருக்கிறார் என்று தெரிகின்றது.

பொதுவில் பதவிகளில் ஆசை பிடித்தவர் என்று கருதப்படும் ராஜபக்ச எவ்வாறு தாமே முன்வந்து தலைமைப் பதவியை விட்டுக் கொடுத்தார் என்ற கேள்வியும் எழாமல் இல்லை. ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவானால் இயல்பாகவே அவர் கட்சியின் தலை வராகவும் ஆகிவிடுவார் என்று சுதந்திரக் கட்சியின் அமைப்புவிதிகளில் திருத்தம் செய்தவரே அவராய் இருக்கும்போது அதனை அவரால் மீற முடியவில்லை என்று கட்சி வட்டாரங்களில் பேசப்படுகின்றது. முன்னர் சந்திரிகா குமாரதுங்கவிடம் இருந்து கட்சித் தலைமையைப் பறிப்பதற் காக இந்த விதியை ராஜபக்ச கொண்டு வந்திருந்தார். அது இப்போது அவருக்கே பாதகமாகிவிட்டது. இல்லை எனில் இலகு வில் கட்சித்தலைமையை அவர் விட்டுக்கொடுத்திருப்பார் என்று எதிர்பார்க்கமுடியாது.



## பெண்களுக்கு ஆலோசனை

விவாகரத்தான பெண்கள் முதலில் குடும்ப உறவுகளை மேம்படுத்தவேண்டும். குடும்ப உறவுகள் மேம்பாடு அடையும் போது ஓரளவு மகிழ்ச்சி நிரந்தரமாகும். அதன் பின்பு அவர்கள் சமூக உறவை மேம்படுத்த வேண்டும்.

சமூக உறவை நீங்கள்தான் வளர்க்கவேண்டும். அதற்கு ஆரோக்கியமான சிந்தனையும், மகிழ்ச்சியும், புன்னகையும், தைரியமும் அவசியம். உங்களுடைய பழைய சோகக் கதைகளைக் கேட்க எவருமே விரும்ப மாட்டார்கள். உங்களைச் சுற்றியிருக்கும் சமூகத்துக்கு உங்களால் முடிந்த நன்மைகளைச் செய்து, அவர்களை அனுசரித்து நடந்தால், அது ஒரு நல்ல சூழலை உங்களுக்கு ஏற்படுத்தித்தரும். அதன் மூலம் உங்கள் மனதில் இருக்கும் வெறுமை அகலும். விவாகரத்தான பெண்கள் அடுத்தவர்களைக் குறைசொல்வதை தவிர்க்கவேண்டும். ஏன் என்றால் முதலில் கணவரைக் குறை கூறித்தான் விவாகரத்துப் பெற்றிருப்பார்கள். அப்படிப்பட்ட பெண்கள் குடும்பத்தினர் மீதும், சமூகத்தின் மீதும் குறை சொல்லும்போது அது சரியாகவே இருந்தாலும்'இந்த பெண்ணுக்கு வேறு வேலையே இல்லை. எவரையாவது குறை சொல்லிக்கொண்டே இருப்பதுதான் இவள் வேலை' என்று காதுபடவே குற்றஞ்சாட்டுவார்கள். அதனால் அடுத்தவர்களைக் குறைசொல்லாமல் அனுசரித்து வாழ, பெண்கள் முன்வரவேண்டும்.



## குடும்ப உறவில் விரிசல் ஏன்?

கணவன்- மனைவி உறவில் விரிசல் ஏன் ஏற்படுகிறது? மனைவிமார் அதிகம் அவர்களுடைய வாழ்க்கையைக் கவனிப்பதில், வேலை பார்ப்பதில், குழந்தைகளைக் கவனிப்பதில், மாமனார் மாமியாரைக் கவனிப்பதில் அல்லது பெற்றோர்களைக் கவனிப்பதில் முழுமையாக ஈடுபட்டிருக்கும் போது, கணவன்மார்கள் தனிமைப்படுத்தப்பட்டு பாசத்தை எதிர்பார்ப்பார்கள்.

மனைவி என்ன தான் மனம் விரும்பியபடி நடந்தாலும், சில ஆண்கள் ஏதாவது குறை கண்டுபிடித்துக் கொண்டே இருப்பார்கள். சில நேரம் உடன் வேலை பார்க்கும் பெண்கள் அவர்களை புகழ்ந்து தள்ளி ஊக்கப்படுத்துவதால், அது கிடைக்காத வீட்டின் மீது நாட்டம் குறைந்து ஏமாற்றத் தோன்றும். தனது மனைவிக்கு தான் தேவையில்லை என்ற உணர்வு ஓர் ஆணுக்கு எப்போது எழுகிறதோ, அப்போதே அவளைப் புரிந்து கொண்டு தலையில் வைத்து தாங்கும் வேறு ஒரு பெண்ணிடம் உறவு வைத்துக் கொள்ள ஆண்கள் விரும்புவார்கள். இந்த புது உறவு ஏற்பட்ட காரணத்தினால் தான், எதிர்பார்த்ததை புதிதாக வந்த பெண்ணிடம் இருந்து பெறுவார்கள். அவர்கள் திருமண வாழ்க்கையில் நீண்ட நாள்களாக கிடைக்காத இந்த கவனிப்பு திடீரென்று வேறு ஒரு பெண்ணின் மூலமாக கிடைப்பதால், அந்த புது உறவுடன் ஐக்கியமாகி விடுவார்கள்.

## பெண்கள் சாதிக்கப் பிறந்தவர்களே!

தற்போதுள்ள காலகட்டத்தில் ஆண்களுக்கு நிகராக எல்லாத் துறைகளிலும் பெண்களும் சாதிக்கிறார்கள். ஒரு காலத்தில் பெண்களை வெளியே அனுப்புவதே இல்லை. வீட்டுக்குள் பூட்டி வைத்துத்தான் வளர்த்தார்கள். இப்போது காலம் மாறி விட்டது. ஆண்களுக்கு நிகராக எல்லாத் துறைகளிலும் பெண்களும் சாதிக்கிறார்கள். சமையலே கதி என்று கிடந்தவர்கள் .இன்று சரித்திரம் படைக்கிறார்கள்.

சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்து பெண்களும் கல்லூரிகளுக்குச் செல்கிறார்கள். படிப்பில் ஆண்களை விட பெண்களே அதிகம் சாதிக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி இருந்தும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அதிகரிக்கின்றன என்பது மிகப்பெரிய சமூக அவலம்.

பெண்ணடிமைக்கு எதிராக சில அடிகள் முன்னுக்கு வந்த பிறகு, பல அடிகள் பின்னோக்கிச் செல்வது மிகப்பெரிய அபத்தம். மீண்டும் தற்காலத்தை நோக்கிய பயணம் தேவையா?

நமது பயணம் முன்னோக்கியே இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் ஆணோ பெண்ணோ தடம்மாறும் எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது. பெற்றோர்களும் காலத்துக்கு ஏற்ப குழந்தைகள் வளர்ப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வாழ்க்கை என்றால் என்ன? என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

அதை விட்டுவிட்டு பாதுகாப்பு என்ற பெயரில் திருமணம் செய்து வைப்பதில் அவசரம் காட்டி, பெண்களின் உயர்வுக்குப் பெற்றோரே தடைக் கற்களாக இருக்க கூடாது.

சமூகச் சீரழிவுகள், கலாசாரச் சிதைவுகள் ஒவ்வொரு கால கட்டத்திலும் இருக்கத்தான் செய்யும். இன்று கொஞ்சம் அதிகமாக இருக்கலாம். அதற்கும் காரணம் நாம்தான்.

நுளம்புக்குப் பயந்து எவரும் வீட்டை விட்டு ஓடுவதில்லை. அதே போல்தான் சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளுக்காகப் பிள்ளைகளின் வளர்ச்சியைப் பெற்றோரே சீரழித்து விடக் கூடாது. பெண் பிள்ளைகளும் சாதிக்கப் பிறந்தவர்கள் தான்.





# இந்த வாரம்

**17.04.2016 முதல் 23.04.2016 வரை**

*உங்களுக்கு எப்படி?*

## மேடம்

சுக்கிரன், சந்திரன், கேது, குரு நற்பலன் தருவர். செயல்கள் நேர்த்தியாக அமையும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்கள், உங்களுக்கு பெருமை தேடித்தருவர். இஷ்டதெய்வ அருள் துணை நிற்கும். பூர்வசொத்தில் பெறுகிற பணவரவு கூடும். உடல்நிலை சுமாராக இருக்கும். குடும்பப் பிரச்சினைகளில் தீர்வு கிடைக்க பொறுமை வேண்டும். மனைவியின் அன்பு நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள், குழந்தைகள் நலனுக்காக திட்டமிடுவர். மாணவர்கள் சிறந்த மதிப்பெண் பெறுவர். சிவன் வழிபாடு, சகல வளமும் தரும்.

## இடபம்

சூரியன், சுக்கிரனால் நன்மை உண்டு. புதிய அனுபவம் கிடைக்கும். வஞ்சகமாக பேசுபவர்களால் பிரச்சினை வரலாம். பணிகளில் முன்னேற்றம் உருவாகும். பயணங்களால் அதிக பயன் இராது. புத்திரர்கள் அறிவு, செயற்திறனில் பின்தங்குவர். வழக்கு விவகாரத்தில் சமரசத் தீர்வு கிடைக்கும். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்புப் பணம் கரைய வாய்ப்புண்டு. பணியாளர்களுக்கு ஓரளவே சலுகை கிடைக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் சிறந்த தேர்ச்சி பெறுவர். முருகன் வழிபாடு, தைரியம் வளர்க்கும்.

## கடகம்

சுக்கிரன், புதன், குரு அளப்பரிய நன்மை வழங்குவர். நற்பெயரை பாதுகாக்கும் எண்ணத்துடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் கூடும். புதிய வாய்ப்புக்களை பயன்படுத்தி, அதிக பணவரவு பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்று முன்னேறுவர். பயணங்களால் நல்ல பயன் கிடைக்கும். புதிய திட்டங்கள் எளிதாக நிறைவேறும். புத்திரர்கள் சிறு விடயத்திலும் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். உடல்நிலை நன்றாக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் படி செயற்பட வேண்டும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்த தேர்ச்சி பெறுவர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, மங்கல வாழ்வு தரும்.

## மிதுனம்

சூரியன், புதன், செவ்வாய், சனீஸ்வரர், ராகு நன்மை தருவர். உறவினர்கள் சொந்தம் பாராட்டுவர். தைரியமான மனதுடன் செயற்படுவீர்கள். குறுக்கீடு விலகி, புதிய வெற்றிப்பாதை உருவாகும். வீடு, வாகனம் வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர்களின் கவனக் குறைவான செயல்களை சரி செய்வது நல்லது. குடும்பச் செலவுகளில் தாராளம் இருக்கும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் கருத்துக்களை ஏற்று முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக செயற்பட்டு சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர். வைரவர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

## சிங்கம்

சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். உற்சாக மனதுடன் செயற்படுவீர்கள். முக்கிய பணிகள் சிறப்பாக நிறைவேறும். உங்கள் சொல்லை பிறர் நம்பாத சூழல் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். செலவு எல்லை மீறும். தம்பி, தங்கைகளுக்கு பணம் கொடுத்து உதவுவீர்கள். புத்திரர்கள் உங்களிடம் அதிருப்தி கொள்வர். உடல்நிலை சுமாராக இருக்கும். எதிரிகளிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிகளைச் செய்வீர்கள். பணியாளர்களுக்கு சலுகை, பாராட்டு கிடைக்கும். பெண்கள் நகை, புத்தாடை வாங்குவர். மாணவர்கள் சுமாராகப் படிப்பர். துர்க்கை வழிபாடு, துன்பம் போக்கும்.

## கன்னி

செவ்வாய், கேது, புதன், சனீஸ்வரர் அதிக நன்மை தருவர். பேச்சில் நிதானம் வேண்டும். உங்களை குறை சொன்னவர்கள் வியந்திடும் வகையில் பணிபுரிவீர்கள். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் அறிவு, செயற்றிறனில் முன்னேற்றம் காண்பர். தாய்வழி உறவினர்கள் அன்புடன் நடந்து கொள்வர். விவகாரங்களில் சுமுகத் தீர்வு கிடைக்கும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரம் செழித்து வளர அதிர்ஷ்ட வாய்ப்பு வரும். பணியாளர்களுக்கு திறமை மேம்படும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்களுக்கு சக மாணவர்களுடன் பிரச்சினை வரலாம்; கவனம். அம்மன் வழிபாடு, செல்வ வளம் தரும்.

## துலாம்

ராகு, குரு, சூரியன், சந்திரனால் நன்மை ஏற்படும். மனதில் பட்டதை இடம் சூழல் உணர்ந்து பேசுவது நல்லது. கஷ்டம் விலகி வளர்ச்சி உருவாகும். தம்பி, தங்கை அன்பு பாசத்துடன் உதவுவர். புத்திரர்களின் எண்ணங்களை உணர்ந்து வழி நடத்துங்கள். பூர்வ சொத்து பராமரிப்பில் நம்பகமானவர்களை பணியமர்த்தவும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். அதிக உழைப்பினால் தொழிலில் உற்பத்தி, விற்பனை கூடும். கடனில் ஒரு பகுதி குறையும். பணியாளர்கள், பணிகளைக் குறித்த காலத்தில் முடித்து நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் நன்றாகப் படிப்பர். சாஸ்தா வழிபாடு வெற்றியளிக்கும்.

## தனுசு

கேது, சந்திரன், குரு, சுக்கிரன் நன்மை தருவர். இஷ்டதெய்வ அருளால் முயற்சிகள் நிறைவேறும். மனம் நிம்மதியாக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்களின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம்; அவர்களுக்கு பொறுமையாக புத்தி சொல்லவும். சொத்து ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் தரக்கூடாது. பயணங்களின் போது பாதுகாப்பாக இருக்கவும். மனைவியின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும் என்றாலும் வருமானம் உண்டு. பெண்கள், குடும்பச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் சுமாராகப் படிப்பர். நரசிம்மர் வழிபாடு, சகல நன்மையும் தரும்.

## விருச்சிகம்

சுக்கிரன், புதன், சந்திரன் சிறப்பான பலன் தருவர். நிறைவேற்றி முடித்த பணிகளில் வியத்தகு வருமானம் கிடைக்கும். பேச்சில் கவர்ச்சி கூடும். புதிய நண்பர்கள் அமைவர். வாகன பராமரிப்பு செலவு உயரும். புத்திரர்கள் விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். உடல்நிலை சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை சீராகும். மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய கடும் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும். பணியாளர்களுக்கு சலுகைகள் கிடைக்க தாமதமாகும். பெண்கள் ஆன்மிக சுற்றுலா சென்று வருவர். மாணவர்கள் நண்பர்கள் உதவியுடன் படிப்பில் முன்னேறுவர். லட்சுமி வழிபாடு, சகல வளமும் தரும்

## மகரம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் புத்துணர்வு ஏற்படும். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் கேட்ட உதவியை வழங்குவீர்கள். அலுவலகப் பணிகளில், உங்கள் பங்களிப்பு அதிகரிக்கும். புத்திரர்கள் உங்களிடம் அதிக பாசத்துடன் நடந்து கொள்வர். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து நிறைந்த இலாபம் கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்க அனுகூலம் உண்டு. மாணவர்கள் நன்றாகப் படித்து பெற்றோர் ஆசிரியரிடம் பாராட்டுப் பெறுவர். சனீஸ்வரர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

## மீனம்

சுக்கிரன், ராகு, சந்திரன் நற்பலன் தருவர். அக்கம் பக்கத்தவரின் உதவி கிடைக்கும். பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் சுப மங்கல நிகழ்வு ஏற்படும். வாகனம் இயக்கும் போது மெதுவாக செல்லவும். புத்திரர்களின் செயல்கள் மனதுக்கு நிம்மதி தரும். நண்பர்களுடன் விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி, உங்களின் எண்ணங்களை சிறப்புப் பெற உதவுவார். தொழில், வியாபாரம் செழித்து வளர, புதிய வாய்ப்பு வரும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கடுமையாக இருக்கும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் பெற்றோரின் வழிகாட்டுதலைப் பின்பற்றி முன்னேறுவர். விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை வழங்குவர். ராசியில் உள்ள கேது மனதில் ஞான சிந்தனையை தருவார். தாமதமான பணிகளை முயற்சி செய்து நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். பணவரவு என்பதால் சிக்கனமாக இருக்கவும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் செயற்பாடு மனதுக்கு மகிழ்ச்சி தரும். பயணத்தின் போது பாதுகாப்பாக இருக்கவும். மனைவியின் கருத்தும், உதவியும் ஆறுதல் தரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்குச் சிரமமாக இருக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். பெருமாள் வழிபாடு, செல்வ வளம் தரும்.



# இறை-சந்நிதானங்களா இறைச்சிக்கடைகளா?

ஸீடோ ஸ்வாமி

மிருக பலி கொடுத்து வேள்வி நடத்தும் ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள், கோவில் நடத்துகிறார்களா அல்லது இறைச்சிக் கடை நடத்துகிறார்களா என்று கேள்வியெழுப்பியிருக்கிறார் யாழ்ப் பாண உயர்நீதிமன்ற நீதிபதி இளஞ் செழியன். இறைச்சிக்கடைச் சட்டத்தின் கீழேயே இந்த வேள்விகளுக்கான ஆடு, கோழி என்பவற்றை வெட்டுவதற்கான அனுமதி வழங்கப்படுகிது. ஆலயங்களுக்கு அத்தகைய அனுமதி வழங்குவது சரியானதா? பாடசாலையில், சந்தியில், மக்கள் கூடும் மைதானத்தில் ஆடு, மாடு, கோழி வெட்டுவதற்கு பிரதேச சபையினரும் சுகாதாரப் பணிமனை அதிகாரிகளும் அனுமதி வழங்க முடியுமா? அவ்வாறு அனுமதி வழங்குவது குற்றமல்லவா? என்றும் கேள்வி எழுப்பியிருக்கிறார் இளஞ்செழியன்.

கடந்த முதலாம் திகதி அகில இலங்கை சைவமகாசபையின் தலைவர் சிவக்கொழுந்து சோதிமூர்த்தி, தமது சட்டத்தரணியூடாக யாழ். மேல் நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த தடையீட்டு எழுத்தாணை மனுவினை விசாரணைக்கு எடுத்து இந்து ஆலயங்களில் மிருகங்களை அறுத்து வேள்வி நடத்தும் அனைத்து நிகழ்வுகளுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்த வேளையிலேயே மேற்கண்டவாறெல்லாம் வினாவெழுப்பியிருக்கிறார் நீதிபதி.

எதிர்வரும் நாள்களில் வேள்விகள் நடைபெற எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே சைவமகா சபையினரின் மனு, குறித்த வெள்ளிக்கிழமையன்று வாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த மனுவில் வலி. வடக்கு, வலி. தெற்கு, வலி. தென்மேற்கு, வலி. மேற்கு மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலர், தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் பிரதேச சபைகளின் சுகாதார வைத்திய அதிகாரிகள், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலர் ஆகியோருடன் சட்டமா அதிபரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம் மற்றும் பிரான்பற்று அம்மன் ஆலயங்களில் வருடாவருடம் நடந்தேறிவரும் சர்சைக்குரிய மிருக பலி நிகழ்வுகளை நீதித்துறையின் அனுசரணையுடன் ஒழிப்பதற்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு அவ்வப்போது எத்தனிப்புக்கள் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவந்திருந்தபோதிலும் முழுமையான தடை விதிக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்விரு ஆலயங்களிலும் வருடந்தோறும் பலநூற்றுக்கணக்கான ஆடுகளும் கோழிகளும் வேள்வியில் வெட்டிச்சரிக்கப்பட்டு வருகின்றன.

**சிலாபத்திலும் வேள்வி!**

சிலாபம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்று வரும் மிருக பலி வேள்வி நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற் கும் விலங்கு உரிமை பேணும் அமைப்புகள் சில பல முயற்சிகளை மேற் கொண்டிருந்தன. முன்னாள் அமைச்சர் கலாநிதி மேர்வின் சில்வாவும் ஒருமுறை இதில் தலையிட்டிருந்தார். சிலாபம் பத்திரகாளி அம்மன் ஆலயத்திற்குச் சென்ற இவர், அங்கு வேள்விக்கென காத்திருந்த ஆடுகள், கோழிகள் என்பவற்றை தாம் கொண்டு வந்திருந்த வாக னங்களில் ஏற்றிச்சென்றி ருந்தார்.

குறித்த கோவிலில் நடைபெறும் மிருக பலி பூசையைத் தடுத்து நிறுத்தக் கோரி தேசிய சங்க சம்மேளனம் உட்பட்ட 16 அமைப்புக்கள் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றினைத் தாக்கல் செய்திருந்தன. இந்த மனு மீதான விசாரணையைமேற்கொண்டு 2013ஆம் ஆண்டு ஆவணி 23ஆம் திகதி தீர்ப்பினை வழங் கிய நீதிமன்றம், குறித்த மிருக பலி பூசையை நடத்துவதற்குப் பிரதேச சபையின் அனுமதிபெறப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தது. இந்தத் தீரப்பிற்கெதிராக காளி கோவில் நிர்வாகத்தினரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பினை உறுதி செய்தது.

நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய பிரதேச சபையின் அனுமதி பெற்று மிருக பலி பூசையை நடத்த முடியும். எனினும் சிலாபம் பிரதேச சபையின் அனுமதி கிடைக்காமை காரணமாகத் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக அங்கு மிருக பலி இடம்பெறவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

**வேள்வி தொடர்பில் நீதிமன்றம் எழுப்பும் கேள்வி இது!**

**இந்து மாமன்றம் வரவேற்பு**

மிருக பலிக்கு எதிராக யாழ். உயர் நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையை வரவேற்றுள்ள அகில இலங்கை இந்து மாமன்றம், சைவ மதத்தின் உன்னதக் கொள்கையையும் ஆலயத்தின் புனிதத் தன்மையையும் மேம்படுத்த உதவும் செயற்பாடென்று வர்ணித்திருக்கிறது. நீதிமன்றத் தடையுத்தரவைத் தொடர்ந்து, இந்த சட்டவரைபை இந்து சமய கலாசார திணைக்களம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து சட்டமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இந்துமாமன்றம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

**ஜல்லிக்கட்டை சுட்டிக்காட்டி**

சைவ மகா சபையினரின் மனுவை விசாரித்த நீதிபதி, தடையுத்தரவினை பிறப்பிப்பதற்கு முன்னதாக தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு விளையாட்டிற்கு தடையுத்தரவு வழங்கப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். தமிழர்களின் பாரம்பரிய கலாசார வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டினை மிருகங்களைக் கொடுமை செய்யும் விளையாட்டென இந்திய உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்திருப்பதனையும் மன்றில் தெளிவுபடுத்தினார்.

சிலாபம் காளி கோவில் மிருகபலி தொடர்பான வழக்கை விசாரித்த அப்போதைய நீதியரசர் மொஹான் பீரிஸ், மத வழிபாட்டு முறைகளை மாற்றிக்கொள்ளுமாறு உச்ச நீதிமன்றத்தினால்கூட உத்தரவிட முடியாது எனத் தெரிவித்திருந்தார். மதக் கலாசார விழுமியங்கள் மற்றும் மரபுகளைப் பின்பற்ற நாட்டின் அரசமைப்பின் அடிப்படையில், சகல உரிமைகளும் காணப்படுகின்றன என்று அவர் வெளிப்படுத்தியிருந்தார். பிரதேச சபையிடம் அனுமதி பெறப்படுவதுடன், பலியாகும் மிருகங்களின் எண்ணிக்கையை வரையறுக்குமாறும் ஒரே தடவையாக அல்லாமல், ஒன்றன் பின் ஒன்றாகப் பலியிடுமாறும் அறிவுறுத்தியிருந்தார்.

நடைமுறைக்கு வந்திருக்கும் இறுக்கமான இடைக்காலத் தடையுத்தரவிற்கு பாராட்டு தெரிவிக்கப்படும் அதே வேளை, மிருகபலி வழிபாட்டு முறை நம்பிக்கைகளில் மூழ்கியிருக்கும் தரப்பினருக்கான விழிப்புணர்ச்சி செயற்றிட்டங்களை சமாந்தரமாக முன்னெடுப்பது மிருக பலிக் கொடூரத்தினை முற்றாக வேரறுப்பதற்கான காலத்தை இலகுவில் கனிய வைக்கும்.





# முகமாலையில் வெடிபொருள்களை அகற்றும் பணிகளில் இயந்திரங்கள்

■ தென்னவன்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெடி பொருள்கள் அகற்றும் பணிகளை இயந் திரங்கள் மூலம் மேற்கொள்ள அண்மையில் அனுமதிவழங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தினால் இயந்திரங்கள் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திற்கு கொண்டு வரப்பட்டு அண்மையிலேயே அவற் றைப் பயன்படுத்த மீள்குடியேற்ற அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் மூலம் வெடிபொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், இன்னமும் வெடிப் பொருட்கள் அகற்றப்படாததால் மீளக் குடியமர்வு இடம்பெறாத முகமாலை, இந்திராபுரம், அம்ப ளாவளை, சுடலைப்பிட்டி ஆகிய கிராமங் களில் விரைவில் மீள்குடியமர்வு இடம்பெறுமென அதி காரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இயந்திரங்கள் மூலம் வெடி பொருள்களை அகற்ற மீள்குடியேற்ற அமைச்சால் அனுமதி வழங்கப்பட்ட பின்னர் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு நாளைக்கு சராசரியாக 85 தொடக்கம் 100 வரை யான வெடி பொருள்கள் எடுக்கப்பட்டு செயலிழக் கச் செய்யப்படுகின்றன. இவற்றைவிட ஐந்து வாகனக் குழுவினரும் வெடி பொருள்களை அகற்றும் பிரிவைச் சேர்ந்த 35 மனிதவலு குழுவினரும் களத்தில் ஈடுபடுத் தப்பட்டுள்ள னர். முதலில் குடியிருப்பு அதிகமாகக் காணப்படும் இந்திராபுரம் பகுதியில் இயந்தி ரங்கள் மூலம் வெடிப் பொருள்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏ- 9 வீதி யிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திற்கு அப் பால் செல்லும் வாகனங்கள் அங்கிருந்து சுமார் 30 சென்ரிமீற்றர் ஆழத்துக்கு மண்ணைத் தோண்டி வெளியே எடுத்து வாகனம் ஒன்றுக்குள் கொட்டு கிறது. அந்த வாகனம் அரிதட்டுப்போல ஆடும்போது வாகன எதிர்ப்பு குண்டுகள் தவிர்ந்த ஏனைய வெடி பொருள்கள் நிலத்தில் பிரித்தெடுக்கப்படுகின்றன. இந்த மணலை அங்கு பணியாற்றும் பெண்கள் உட்பட குழுவினர் வெடிப் பொருள்கள் அகற்றம் விறாண்டிகளால் துப்புரவு செய்து அங்கு காணப்படும் மிதிவெடி மற்றும் எறிகணைகள் கிரனேட் போன்றவற்றை வெளியே எடுத்ததும் மணல் வாகனத்தில் மீண்டும் ஏற்றப்பட்டு இயந் திரம் இருக்கும் இடத்திற்கு கொண்டு வரப்படு கிறது. அங்கே இயந்திரத்தினுள் கொண்டு வரப் படும் மணலைக் கொட்டியதும் அது அரைத்து சிறிய வெடிபொருள்கள் அழிக்கப்பட்டு வெளியே கொட்டுகிறது. அந்த மணலை வாகனத்தில் ஏற்றி மீண்டும் எடுத்த இடத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பறித்துப் பரவப்படுகின்றன. ஒரே நேரத்தில் பல் வேறு வாகனங்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதால் கூடிய விரைவில் இந்திராபுரம் கிராமம் வெடி பொருள்கள் 100 வீதம் அகற்றப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வெடிப் பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள 'ஹலோ டிரஸ்ட்' நிறுவ னத்துடன் தொடர்பு கொண்டபோது அதன் திட்ட முகாமையாளர் டேமியன் கருத்துத் தெரிவிக்கை யில்; தமது நிறுவனம் 2002 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்து பணியில் ஈடுபட்டு வருவதாகவும், கடந்த 2010 ஆம் ஆண்டு கிளி நொச்சி மாவட்டத்தில் அலுவலகத்தைத் திறந்து செயற்பட்டு வருவதாகவும் பிரித்தா னியா, அமெரிக்கா மற்



றும் ஜப்பான் நாடுகள் வழங்கும் நிதி உதவியுடன் வெடி பொருள்களை அகற்றும் பணிகள் இடம்பெறுவதாகவும் தெரிவித்தார். தற்போது மீள்குடியேற்ற அமைச்சினால் பாதுகாப்பு வேலி அமைக்க; நிதி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சி லைப் பள்ளிப் பிரதேசத்தில் பணிகளை ஆரம் பிக்க முன்னர் வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் 3 கிலோ மீற்றர் நீளமான தூரத்தில் முழுமையாக வெடிப் பொருள்களை அகற்றி கையளித்துள்ளோம். அதன் பின்னர் பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் போர்ப் பிரதேசமாகக் காணப்பட்ட பகுதிகளில் வெடி பொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பித்த வேளையில் முதற்கட்டமாக ஏ-9 வீதி மற் றும் ரயில் பாதை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஏ- 9 வீதி யின் இரு புறமும் சுமார் 300 மீற்றர் தூரம் வரை இத்தாவிலில் இருந்து முகமாலை வரை வெடிப் பொருட்கள் அகற்றப்பட்டு ஒரு வருட காலத்தில் கையளிக்கப்பட்டன. வரைபடங்களின் பிரகாரம் குறித்த இடங்கள் தென்னந்தோட்டங்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததால் இலக்குகள் இன்றி சில பகுதிகளில் வெடிப்பொருள்கள் அகற்றப் பட்டு வந்தன. இயந்திரம் மூலம் வெடிபொருள் களை அகற்றவதற்கு அனுமதி கிடைக்காததால் இதுவரை காலமும் மனிதவலு மூலமே வெடிபொருள்களை அகற்றும் பணி கள் இடம்பெற்றுவந்தன. கடந்த 2014 ஆம் ஆண்டு இந்திராபுரம் கிராமத்தின் வரைபடம் கிடைத் ததால் அங்கு பணிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. தற் போது வெடிப் பொருள்களை அகற்றுவதற்கான இயந்திரங் களைப் பயன்படுத்த மீள்குடி யேற்ற அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற் றின் உதவியுடனும் மனித வலு செயற்பாட்டாளர் களின் உதவியுடனும் விரை வில் இந்திராபுரம் முக மாலை சுடலைப்பிட்டி அம்பளாவளை ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர்த்தப்படு வார்கள். தற்போது பயன்படுத்தப்படும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு மூன்று வரு டங்களுக்கு முன்னர் எமக்கு அனுமதி வழங் கியிருந்தால் பளைப் பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வெடிபொருள்கள் அகற்றப்பட்டுமக் கள் மீளக்குடியமர்த் தப்பட்டிருப்பர்; எனவும் தெரிவித்தார்.

மேலும் எம்மால் ஆரம்பக் கட்டத்தில் வீதியின் இரு பக்கங்களிலும் சுமார் 300 மீற்றர் தூரம் வரை வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டு எந்த நேரமும் மீள்குடியமர் வுக்கான நிலையில் உள்ளன. இவற்றில் வீதியின் வடக்குப் புறத்தில் சுமார் 200 மீற்றர் தூரம் வரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினரால் (யுஎன் எச்சீஆர்) நிதி வழங்கப்பட்டு முட்கம்பி வேலி அமைக்கப்பட்டு பிரதேச செயலகத்திடம் கைய ளிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த் தப்பட்டுள் ளனர்.

(44 ஆம் பக்கம் பார்க்க)





# தெறி

## புதுமையற்ற வெறும் பழிவாங்கல்

கேரளத்தின் அழகான ஊர் ஒன்றில் அமைதியாக வாழ்கிறார் ஜோசப் குருவில்லா (விஜய்). அவரது ஒரே சொந்தம் மூன்றாம் வகுப்பு படிக்கும் மகள் நைனிகா. விஜயின் எளிமையைப் பார்த்து அவரைக் காதலிக்கிறார் பள்ளி ஆசிரியை எமி. ஒரு சூழ்நிலையில் ஜோசப் குருவில்லாவின் உண்மையான அடையாளம் தெரிய வருகிறது. அவர் ஏன் மறைந்து வாழ்கிறார்? அவருடைய கடந்த காலப் பிரச்சினைகள் திரும்ப வரும்போது எப்படிச் சமாளிக் கிறார் என்பதே தெறியின் கதை. தொண்ணூறுகளில் வந்த சில வெற்றிப் படங்களின் சாயல் கொண்ட கதையில் விஜயைப் பொருத்தி, குடும்ப நாடகத்தில் இணைத்துக் கொடுக்க முயன்றிருக்கிறார் இயக்குநர் அட்லீ. தந்தை மகள், அம்மா மகன், காதலன் காதலி ஆகிய உறவுகளை நேர்த்தியாகச் சித்திரித்திருக்கும் இயக்குநர், நாயகன் வில்லன் விடயத்தில் கோட்டை விட்டிருக்கிறார். வில்லனின் பழிவாங்கலும் அதன் தொடர்ச்சியும் பார்வையாளர்களிடத்தில் ஏற்படுத்தியிருக்க வேண்டிய தாக்கம் படத்தில் துளியும் இல்லை. ஒரு பெண்ணுக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமைக்குக் காரணமான குற்றவாளியைக் கண்டறியும் பொலிஸ் அதிகாரி விஜயகுமார், குற்றவாளியின் தந்தையிடம் அவனை நான்தான் கொன்றேன் என திமிருடன் கூறும் காட்சி அவரது ரசிகர்களால் விசிலடித்து, ரசிக்கப்படுகிறது. ஆனால், இது எந்தவிதத்தில் நியாயமானது என்பது இயக்குநரால் புரியவைக்கப்படவே இல்லை. அதையடுத்து வரும் சராசரியான பழி வாங்கும் படலம், வழக்கமான ஹீரோயிஸம் ஆகியவை ஏமாற்றமளிக்கின்றன.

சமந்தாவிடம் விஜய் அன்பாகப் பேசிக் கொண்டிருக்கும்போதே ஏதோ விபரீதம் நடக்கப்போவது தெரிந்துவிடுகிறது. இது போலவே எல்லாத் திருப்பங்களும் முன் கூட்டியே தம்மை அறிவித்துக்கொண்டு விடுகின்றன. எதிர்பாராத திருப்பங்களிலோ நம்பகத் தன்மை இல்லை. கேரளாவில் இருக்கும் ஜோசப் அடுத்த சில மணிநேரங்களில் சென்னையில் விஜயகுமாராக அவதாரம் எடுக்கிறார். உச்சக் காட்சியில் 10 விநாடிகளுக்குள் வில்லனை அடித்துக் கொன்று தொங்க விடுகிறார். பாடசாலை பஸ் தன் கண்ணெதிரில் ஆற்றுக்குள் விழுந்ததும் விஜய் ஓடி வந்து ஆற்றுக்குள் மூழ்கி எழுவதற்குள் அங்கே மீட்புக் குழு, மருத்துவ முகாம், பெற்றோர்கள் என அத்தனை பேரும் குவிந்துவிடும் நம்பமுடியாத அதிசயமும் நடந்துவிடுகிறது. அரசுப் பாடசாலையை ஆக்கிரமித்திருக்கும் ர்வுடிகளை விஜய் கையாளும் காட்சியை காமெடி என்று நினைத்து இயக்குநர் உருவாக்கியிருக்கலாம். பார்ப்பவர்களுக்கு அழுகைதான் வருகிறது. இரவில் தன்னோடு மோதியவர்களைப் பகலில் விஜய் சந்திக்கும் காட்சி நன்றாக அமைந்திருக்கிறது. ராஜேந்திரனுக்கும் விஜய்க்கும் நடக்கும் உரையாடல்கள் சில இடங்களில் மட்டும் ரசிக்கும்படி உள்ளன. பாசமுள்ள சாதுவான அப்பா, ஆக்ரோசமான காவல்துறை அதிகாரி, பிரியத்தைக் கொட்டும் காதலன் என்று மூன்று விதமான வண்ணங்களைக் காட்டி விஜய் கொஞ்சம் நடித்திருக்கிறார். காட்சிக்கேற்ற விதத்தில் உடல் மொழியில் வித்தியாசம் காட்டுகிறார். பாவம், இயக்குநர் மகேந்திரன். அவருக்கு நடிப்பதற்கென்று பெரிதாக எதுவுமில்லை. சமந்தா, பேபி நைனிகா, ராஜேந்திரன் ஆகியோர் படத்துக்கு வண்ணம் சேர்க்கிறார்கள். நைனிகா நன்றாக நடித்திருந்தாலும், குழந்தைத் தனத்தை மீறிய இயக்குநரின் திணிப்பு அவருக்கூடாக வெளிப்பட்டு அயர்ச்சி கொடுக்கிறது. சமந்தா தன் அழகினாலும் தேர்ந்த நடிப்பினாலும் பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கிறார். மொட்டை ராஜேந்திரன் அடக்கிவாசித்துச் சிரிக்க வைக்கிறார். இரண்டு மூன்று காட்சிகளில் தலையைக் காட்டிவிட்டுப் போகும் எமிக்கு இந்தப் படத்தில் என்ன வேலை என்பது தெரியவில்லை. பாடல்களைப் படமாக்குவதில் தனது குரு சங்கரின் முத்திரைகள் அட்லீயிடம் தெரிகின்றன. மனித உறவுகளின் மென் சித்திரங்களைத் திரையில் வடிக்கும் நுட்பமும் அவருக்குக் கைவந்திருக்கிறது.

ஒளிப்பதிவாளர் ஜார்ஜ் சி.வில்லியம்ஸ், படத்தொகுப்பாளர் ஆண்டனி எல்.ரூபன் இருவருமே படத்துக்குப் பெரிய அளவில் கைகொடுத்திருக்கிறார்கள். அட்லீயும் ரமணகிரிவாசனும் சேர்ந்து எழுதியுள்ள வசனங்கள் கவனிக்கவைக்கின்றன. அவர்களுக்குப் புரியும் பாசையில் சொல்ல வேண்டும் என்னும் வசனம் வன்முறையை நியாயப்படுத்துவதற்குப் பயன்பட்டிருக்கிறது. தனது 50 ஆவது படமான இந்தத் திரைப்படத்தில் ஜி.வி.பிரகாஷ்குமார் சறுக்கியிருக்கிறார். கிளைமாக்ஸில் நான் ஒரு நல்ல அப்பா என்கிறார் விஜய். குழந்தை வளர்ப்பில்தான் எல்லாமே இருக்கிறது என்றும் சொல்கிறார். படத்தின் செய்தியாக இதை அட்லீ கருதியிருக்கலாம். ஆனால், அதை வலுவாக வெளிப்படுத்தும் அளவுக்குத் திரைக்கதை அமையவில்லை. வழக்கமான பழிவாங்கும் நாயகத்தனம் மிகுந்த கதை என்பதற்கப்பால் குழந்தை வளர்ப்பின் முக்கியத்தவம் பற்றியெல்லாம் படம் ஏதும் பேசவில்லை. விஜய் என்கிற நாயகனைக் கொண்டாடுபவர்கள் தவிர மற்றவர்கள் பார்ப்பதற்கு இந்தப் படத்தில் ஏதொன்றும் இல்லை.



மிருசுவில் தமிழ்தாசன்

நகைச்சுவைத் தொடர் 07

# ராசி இல்லாத ராசா

கொடிகாமம்! எனது அயலூர். அழகான வள மான ஊர். இந்த ஊர்களை எல்லாம் இனி எப்போது பார்க்கப் போகின் றேனோ! சவுதிக்குப் போய் விட்டால் எங்கள் ஊர்களை மறக்க வேண்டியதுதான். நினைக்க மனம் சஞ்சலப்பட்டது. சிறுவயது முதலே எனக்கு மண் பற்றுக் கொஞ்சம் அதி கம்தான். இந்த நேரத்தில பார்த்து கொழும்பு போற பஸ்ஸில "கொடிகாமம்" என்று கத்தி என்ர மண் பற்றைக் கிளறிவிட்ட கொன்டக்டர் மேல கோபம் கோபமா வந்தது. சரி! எப்படியோ சவுதிக்குப்போய் நன்றாக உழைத்துக்கொண்டு எங்களுடைய ஊர் களுக்குத் திரும்புவேன் என்றும் நம்பிக் கையுடன் மனத்தை அமைதிப்படுத்தி மீண்டும் ஒரு கண் உறங் கலாமென்று பார்த்தால்...! "சாவகச் சேரியிலை இறங்கிற ஆக்களிருக் கிறீங்களா?" "இதென்ன கோதாரி விழுந்த கதை கதைக்கிறான் இந்தக் கொண்டக்ரர்! வெள்ளணக் கொடிகாமம் இறங்குங்கோ எண்டுறான். இப்ப சாவகச்சேரி ஆக்களை இறங்குங்கோ எண்ணுறான். உவனுக்கென்ன மண்டை கழண்டு கிழண்டு போச்சுதாக்கும்! எதுக்கும் ஒருக்கால் எழும்பிப் பார்ப்பம்." மெல்லக் கண்களை விழித்து யன்ன லூடாக வெளியே பார்வையைச் செலுத்திய எனக்கு என் கண்களையே நம்ப முடியாமலிருந்தது.

"அடக்கடவுளே! அவன் பாவி சொன்னது சரிதான். பஸ் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் சாவகாசமாகத் தரித்து நின்றது. இதென்ன பாழ்பட்ட வேலையாய்க் கிடக்குது. எல்லாம் கோசக்கை மாசக்கையாய்... சே..!" தலை சுற்றிக் கொண்டு வந்தது.

"இதென்ன மாயமாய்க் கிடக்குதப்பா கொழும்புக்கெண்டு போன பஸ் இப்ப யாழ்ப் பாணப் பக்கமாய் வந்து நிக்குதே! கொழும்பிலை ஏதேன் கல வரம் கிலவர மெண்டு பஸ்சை இந்தப் பக்கம் திருப்பிப் போட்டாங்களோ! இருந்தாலும் மிருக்கும்." எண்ணியபடி கொண்டக்டரிடம் விடயத்தைக் கேட்டறியலாமென அவன் பக்கம் போனேன். "ஹலோ எங்கை! உம்மடை ரிக்கெற் றைத் தாரும் பார்ப்பம்."

நான் கதைக்க முன்பு அவனே முந்திக் கொண்டான். சட்டைப் பைக்குள் கையை விட்டத் துழாவியெடுத்து ரிக்கெற்றை விலாசமாகக் கொடுத்தேன். ஏன்! எனக்கென்ன பயம்! காசு கொடுத்து ரிக்கெற் எடுத்தி ருந்தேன். என்றபடியால் எதற்காகப் பயப்படவேண்டும்! ரிக்கெற்றைக் கொடுத்து விட்டு அவனுடைய முகத்தைக் கேலி யாகப் பார்த்தேன். "இஞ்சாரும் மிஸ்ரர்! இது கொழும் புக்குப் போற ரிக்கெற். இது எங்கடையில்லை. நீர் கொழும்புக்குப் போற பஸ் எண்டு யாழ்ப்பாணம் வந்த பஸ்சிலை மாறி ஏறிப் போட்டு நிக்கிறீர்! பேய்க் கதையை விட்டிட்டு ஐநூறு ரூபா எடும்!" கடுப்பாக நின்றான் கொண்டக்டர். என்னக்கு மண்டை விறைத்தது. சரி! அவன் கேட்ட பணத்தைக் கொடுக் காவிட்டால் அவன் விடவே மாட்டான். பைக்குள் கையை வைத்துப் பார்த்தேன். பை ஓட்டையாகியிருந்த நிலையில் கை வெளியே வந்தது. ஷேர்ட்டின் கை மடிப்பைப் பார்த்தேன். அதுவும் விரித்து விடப்பட்டிருந்தது. எல்லாமே என்னை விட்டுப்போய் விட்டது. அம்மா ஆடு விற்றுத்தந்த இருபதனாயிரத்துடன் இருந்த காசு அத்தனையும் திருட்டுப் போய்விட்டது. அது மட்டுமா! என்னுடைய சூட்கேஸ்! அது போன பஸ்ஸுடன் கொழும்புக்குப் போய்விட்டது. அதிலிருந்த காசு, பாஸ் போர்ட், மிளகாய்த்தூள், வடகம், மிக்சர், பொரி விளாங் காய் மிக்சர் எல்லாம் கொழும்புக்குப் போய்ச்சேர நானிங்கே யாழ்ப்பாண பஸ்சில் மீண்டும் ஊருக்குத் திரும்பி விட் டேன். பஸ்சுக்குள்ளிருந்தவர்கள் என்னைப் பரிதாப மாய்ப் பார்த்துச் சிரித்தார்கள். சிலர் ஏளனமாய் பார்த் தார்கள். வெட்கப்பட்டோ கோபப்பட்டோ இனி நடப்பது ஒன்றுமில்லை. செய்வதறியாது வெறுங்கையுடன் பஸ் நிலையத்தில் விழித்துக் கொண்டி ருந்தேன்.

"என்னடாப்பா ராசா! ஏதோ கொழும்புக்குப் போறன் வெளிநாட் டுக்குப் போறன் எண்டு நேற்றிரவு வலுகலாதியாய் வெளிக்கிட்டுப் போனாய். இப்ப என்னடா இஞ்சை வந்து நிக்கிறாய்." "அடக்கோதாரி! ஐயாத்தம்பி வாத்தியார்! இந்தச் சனி யன் இதுக்கை எங்கையடா வந்து நிக்குது. இப்ப விறுமசத்தி ஊர் முழுதும் போய்ப் பறையடிக்கப் போகுது. கட வுளே உந்தச் சனியனை எப்பிடிச் சமா ளிக்கப் போறனோ!" விழி பிதுங்க நின்றேன். "அது ஒண்டுமில்லை வாத்தி யார். சேட்டிபிக்கேற் ஒண்டைக் கொண்டு போக மறந்திட்டன். அதுதான் வந்தனான்." சமயோசித மாகப் புளுகொன்றை அவிழ்த்து விட்டேன். வேறொன்றும் மூளைக்கு வரவில்லை. "அப்பிடி என்ன சேட்டிபிக்கேற் எடாப்பா! என்ன பிறப்புச் சேட்பிடிக் கேற்றே! அது மட்டும்தானே உன்னட்டைக் கிடக்குது."

மனிதரும் விடுவதாயில்லை. எகத்தாளமாகச் சிரித்தார். எனக்கு வந்த கோபத்துக்கு அப்படியே பாய்ந்து அந்த விசர் வாத்தியைக் கண்டதுண்டமாக வெட்ட வேண்டும் போன்றி ருந்தது. வேண்டாம் இனியும் கதையை வளர்த் தால் நான்தான் நோண்டியாக வேண்டிவரும். எனவே அந்த இடத்தை விட்டு "எஸ்கேப்" ஆவதைவிட வேறு வழியிருக்கவில்லை.

"ஐயோ நான் பெத்த பிறவி! ஏன் ராசா நீ வெளிநாட்டுக் குப் போகயில்லையெடா! ஓ! எனக்குத் தெரியும். நீ என்னை விட்டிட்டுப் போகமாட்டாயெண்டு. இவ்வளவு அன்பை என்னிலை வைச்சிருக்கிறியே என்ரை ராசா!" கட்டியணைத்துக் கதறினாள் அம்மா. அம்மாவைப் பார்க்க எனக்குப் பரிதாபமாகவும் அழுகையாகவும் இருந்தது. இனியும் எதையும் அம்மாவிடம் மறைக்க முடியவில்லை. பஸ்சை மாறி ஏறியது முதல் சூட்கேஸ், பாஸ்போட் பணியாரம் எல்லாவற்றையும் தொலைத்தது, கொண்டுபோன காசு முழுவதும் பறிகொடுத்தது.... அத்தனையையும் ஒன்றும்விடாது சொல்லி முடித்து விட்டேன். இதைக்கேட்ட அம்மா அழுது குழறிச் சன்னதமாடப் போகில்றாள், என்னைத் திட்டித் தீர்த்து ஊரெடுபடக் கத்தப் போகின்றாள். இப்படித்தான் எதிர் பார்த்தேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அம்மா பேசவுமில்லை, ஏசவுமில்லை. கத்தவுமில்லைக் கதறவுமில்லை. காரணம்! நான் சொன்னதைக் கேட்டவுடன் அம்மா மூர்ச்சையடைந்து கீழே விழுந்து விட்டாள்! இனி மீண்டும் மயக்கம் தெளிந்து எழுந்து விட்டால்தான் பிரச்சினை. அதுவரைக்கும் பிரச்சினைகளிருக்காது. அந்தளவில் ஒரு சிறு ஆறுதல் எனக்கு. எழுந்து விட்டால் பார்ப்போம்.

"நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார். சிலர் அல்லும் பகலும் தெருக்கல்லாயிருந்து விட்டு அதிர்ஷ்டமில்லை என்று அலட்டிக் கொண்டார்."

சினிமாப் பாடல்களைப் பாடியபடி ஐஸ்கிறீம் வான் ஒன்று வந்து கொண்டிருந்தது.அந்தப் பாடலைக் கேட்டதும் உறங்கிக் கொண்டிருந்த எனது மனச்சாட்சி மெல்லத் தலையை உயர்த்திப் பார்த்தது. விடுவேனா நான்! ஓங்கி விட்டேன் ஒரு குட்டு மீண்டும். சொல்லிக் கொண்டேன். "நானும் சவுதிக்குப் போய் நல்லாய் உழைச்சிருக்கலாம். நான் என்ன செய்ய! ஒண்டுக்கும் அதிர்ஷ்டமில்லை." இதைக் கேட்ட எனது மனச்சாட்சி மீண்டும் தலையை உயர்த்திப் பார்க்க நான் இப்போது அடங்கிக் கொண்டேன். பேசுவதற்கு நா எழவில்லை.



# கற்பனாவாதமும் யதார்த்தமும்.....

## தொடர்ச்சி

வீடு திரும்பும் குடும்பத்தின் குழந்தை, புதிய பரிசென்று கருதி மேசை யில் வயர் களுடன் பிணைத்து வைக்கப்பட்டிருக் கும் அலை பேசியைத் தொட்டால் அது வெடித்து விடும். நுண்ணலை அடுப்பின் கதவைத் தி றந்தால் அது வெடிக்கும். குளிர் சாதனத்தின் ஆளியைப் போட்டால் அதுவும் வெடிக்கும். ஈராக்கின் பாத்திஸ்ட் இராணுவத்தில் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்களைப் தனக்கும் பணிக்கமர்த்தியிருக்கிறது ஐ.எஸ். சதாம் உசேன் காலத்தில் நிலத்துக்கு அடியில் கண்ணி வெடியைப் புதைத்துவைப்பதில் நீண்டகால அனுபவம் பெற்ற வர்கள் பாத்திஸ்ட் படையினர். அவர்களைப் பயன்படுத்தி தொழில்முறை அனு பவத்துடனும் வியூ கங்களுடனும் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருக்கிறது ஐ.எஸ். இவ்வாறாக, ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும் பல ஆண்டுகள் கழித்தும் குழந்தைகளை அது கொன்று கொண்டிருக்கும்.

**அருகும் சாத்தியங்கள்**

வடக்கு ஈராக் பகுதியில் ஐ.எஸ். தோற்றுக் கொண்டிருக்கிறது என்பது ஒரு நல்ல செய்தி. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசுல், ஐ.எஸ். படை யிடமிருந்து விரைவில் விடுவிக்கப்படவிருக்கிறது. கெட்ட செய்தி என்னவென்றால், ஐ.எஸ். அமைப்பை உருவாக்கிய சமூகச் சக்திகள் இன்னும் அப்படியேதான் இருக்கின்றன. சியா முஸ்லிம்கள் பெரும்பான் மையாக உள்ள ஈராக் அரசு மீதான அரபு சுனி முஸ்லிம் களின் சீற்றம் இன்னும் குறைய வில்லை. தங்கள் குறுங்குழுவாத போதனைகளுக்கு அப்பாற்பட்ட எவரையும் அல்லது எதையும் ஏற்காத சுதந்திர சுனி முஸ்லிம்களின் மசூதிகள் இன்றும் இயங்குகின்றன. ஐ.எஸ். பயங் கரவாத அமைப்பின் காலம் முடிந்தாலும், மிக விரைவிலேயே அது போன்ற இன்னொரு அமைப்பு துளிர்த்துவிடும் என்பதுதான் இதன் அர்த்தம். அமெரிக்க நாடாளுமன்றத்தில் கற்பனை வாதங்கள் முன்வைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் யாஜிதிகள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு எங்கோ அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வீடு திரும்புவதற்கான வாய்ப்புக்கள், சாத்தி யங்கள் அருகிக் கொண்டிருக்கின்றன.

மூலம் : த கார்டியன்

## விடை சொல்ல வாங்க...!

1. இராகத்துடன் பாடி வருவார்;இராத்தூக்கம் கெடுப்பார். அவர் யார்?
2. காவி உடை அணியாத முனிவர்;கரை ஓரம் ஒற்றைக்காலில் தவம் செய்கிறார். அவர் யார்?
3. கறுப்பு நிறத்துக்குச் சொந்தக்காரன்;கலகல பேச்சுக்காரன்;ஒருவருக்குத் துயர் என்றால் ஊரையே அழைப்பான்.அவன் யார்?
4. பறக்கும் இது பறவை இல்லை. ஆனால் இது அடையாளம் காட்டிக் கொடுத்து விடும். அது என்ன?
5. விழுந்தால் இது படுக்காது, நிமிர்ந்து எழுந்தால் நிற்காது .இது என்ன?
6. தாகம் போக்கும் தண்ணீர் இல்லை. களைப்பைப் போக்கும் மருந்தும் இல்லை. இது என்ன?
7. நீந்தத் தெரியும் மீனில்லை; நடக்கத் தெரியும் மனிதனும் இல்லை; இறக்கை இருந்தும் பறக்காத பறவை நான் யார் தெரியுமா?
8. தொட்டால் மணக்கும்; கடித்தால் புளிக்கும். அறுத்துப் பிழிந்து தண்ணீர், சர்க்கரை சேர்த்து விட்டால் அடடா , சூப்பர் என்பார். யார் இது ?
9. முதுகில் சுமை தூக்கி முனங்காமல் வருவான். மூச்சும் திணறாது.முகமும் கோணாது. அவன் யார்?
10. ஒன்பது பிள்ளையானாலும் ஒரே குடுமிதான் எங்களுக்கு. நாங்கள் யார்?



### விடைகள்:

1. கொசு
2. கொக்கு.
3. காகம்.
4. கொடி.
5. தஞ்சாவூர் பொம்மை.
6. சோடா.
7. வாத்து
8. எலுமிச்சை.
9. நத்தை.
10. வெள்ளைப்பூண்டு.

# பொம்மைகள் சொன்ன பொருள்கள்



ஒரே மாதிரியான மூன்று பொம்மைகள் ஒன்றுக்கொன்று எந்த வித்தியாசமுமில்லை. ஆனால் வித்தியாசமுடையவை. அந்த வித்தியாசங்களில் தத்துவமும் இருக்கிறது எனக் கூறிக்கொண்டு நாட்டுக்கு நாடு கொண்டு சென்று விளம்பரப்படுத்தினான் ஒரு பண்டிதன்.

"பொம்மைகளின் வித்தியாசத்தையும் தத்துவத்தையும் எவர் சொன்னாலும் பத்தாயிரம் பொன்னும் பொம்மையும் பரிசு, சொல்ல முடியாவிட்டால் பத்தாயிரம் பொன்னைப் பொம்மை வைத்திருக்கும் பண்டிதனுக்குத் தந்துவிட வேண்டும்" இது நிபந்தனை.

விஜயநகரத்துக்கும் பொம்மைகளைத் தன் சீடர்கள் புடைசூழக் கொண்டு வந்திருந்தான் பண்டிதன்.

விஜயநகர அரண்மனையில் பொம்மைகள் பார்வைக்கு வைக்கப்பட்டன. இரண்டடி உயரமும் அரை அடி அகலமும் கொண்ட அந்த பொம்மைகள் தங்கத்தினால் வார்ப்படம் செய்யப்பட்டவை. பொம்மைகள் மூன்றும் ஒரே மாதிரியானவை. பொம்மைகள் பற்றி நகரம் முழுதும் விளம்பரப் படுத்தப்பட்டது. பத்து நாள்கள் வரை பொம்மைகள் அங்கிருக்கும். பத்து நாள்வரை எவரும் கண்டு பிடிக்காவிடில் பத்தாயிரம் பொன்னைப் பெற்றுக் கொண்டு பண்டிதன் வேறுநாட்டுக்குச் சென்றுவிடுவான்.

இதுவரை பல நாடுகளைச் சுற்றிச் சுற்றி வெற்றி கண்டு வந்தவர்க்ள் அவர்கள். ஒன்பது நாள்கள் சென்றுவிட்டன. கிருஷ்ண தேவராயர் மிகவும் வேதனைப்பட்டார். நாளை ஒருநாள் எவரும் கண்டுபிடிக்காவிட்டால் பத்தாயிரம் பொன்னும் கொடுத்து தோல்வியையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

பத்தாயிரம் பொன் கொடுப்பதைப் பற்றி மன்னர் கவலைப்படவில்லை. தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டுமே! அதுதான் அவருக்குக் கவலை. தெனாலிராமனிடம் இவற்றைக் கூறி வருந்தினார் மன்னார். நாளை ஒருநாள் இருக்கிறதே பார்க்கலாம் என்றான் தெனாலிராமன். இரவு முழுதும் தெனாலிராமனுக்குச் சிந்தனை.

மறுநாள் பத்தாவது நாள் அரண்மனை வந்து தெனாலிராமன் பொம்மைகள் ஒவ்வொன்றையும் கையிலெடுத்துத் திருப்பிப் பார்த்தான். சிறுகம்பி ஒன்றை எடுத்து காதிலுள்ள துவாரத்தில் செலுத்தினான். ஒரு பொம்மையின் ஒரு காதின் வழியே செலுத்திய கம்பி வாயின் வழியாக வந்தது. ஒரு பொம்மையின் காதில் செலுத்திய கம்பி உள்ளே தட்டி நின்றுவிட்டது.

கம்பியைக் காதில் செலுத்த ஆரம்பித்ததுமே பண்டிதன் முகம் வெளுத்துவிட்டது. இப்போது சோதனை செய்த தெனாலிராமன் கூறினான். "இந்தப் பொம்மை உத்தமனைக் குறிக்கும். ஒரு காதின் வழியே வாங்கிய செய்தியை மற்றொரு காதின் வழியாகவோ தன் வாயின் வழியாகவோ வெளியே விடாதவன்"

மற்றொரு பொம்மை அதமன். ஒருகாதின் வழியோ எந்தச் செய்தி கிடைத்தாலும் வாய்வழியாக பிறரிடம் சொல்லுபவன்.

மூன்றாவது பொம்மை மூடனைக் குறிக்கும். எந்தக்காதில் எந்தச் செய்தி விழுந்தாலும் இன்னொரு காதின் வழியாக விட்டுவிடுபவன். தனக்கும் பயன்படுத்தாமல் பிறருக்கும் உதவாமல் விட்டு விடுபவன் மூடன் என்பவன் தானே!"

"இந்த மூன்று பொம்மைகளின் விளக்கம் இதுவே" என்றான் தெனாலிராமன். பண்டிதனும் சீடர்களும் தோல்வியை ஒப்புக்கொண்டு பொம்மைகளையும் பத்தாயிரம் பொன்னையும் தந்துவிட்டுச் சென்றனர். தெனாலிராமனை எல்லோரும் பாராட்டினார்கள். பத்தாயிரம் பொன்னையும் பொம்மைகளையும் அரசர் தெனாலிராமனுக்குத் தந்தார். தெனாலிராமனோ பொன்னை மட்டும் வாங்கிக்கொண்டு பொம்மைகளை அரசரிடமே தந்துவிட்டான்.



நீ.நிறுஷனா,
தரம் 7 சி,
யா/திருக்குடும்ப கன்னியார் மடம்.



ப.வைஷ்ணவி,
தரம் 1ஏ,
யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்



## எங்கள் வீட்டுப் பூனை

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை
வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை
நாயைப் பாத்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்
உண்ணுஞ் சோறும் பாலும்
ஊட்டி வளர்த்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை



## வரலாற்றில் இன்றைய தினம்

1912 - வடகிழக்கு சைபீரியாவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சுரங்கத் தொழிலாளர் மீது ரஷ்ய படைகள் சுட்டதில் 150பேர் வரை சாவு.

1941 - இரண்டாம் உலக போர் யுகோஸ்லே விய முடியரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.

1945 - இரண்டாம் உலக போர் இத்தாலி மொண்டிஸி நகரை நாஸிப் படைகளிடமிருந்து பிரேசில் படைகள் விடுவித்தன.

1951 - பீக் மாவட்டம் ஐக்கிய ராஜ்யத்தின் முதலாவது தேசிய பூங்காவானது.

1971 - முஜிப் நகரில் ஷேக்முஜிபுர் ரஹ்மான் தலைமையில் பங்காளதேஷ் மக்கள் குடியரசு உருவாக்கப்பட்டது.

1978 - ஆப்கானிஸ்தானில் கம்யூனிஸ்ட் சதிப்புரட்சியில் மிர் அக்பர் ஹைபர் படுகாலை செய்யப்பட்டார்.

1997 - உத்தேச மாகாண சபை எதனையும் மத்திய அரசால் கலைக்க முடியுமென அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு.

1997 - இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டும் என அமெரிக்கக் கமிட்டி கோரிக்கை.

2000 - காணாமற் போனோர் விவகாரம் அரசின் போக்குக் குறித்து ஐ.நா. குழு கண்டனம்.

# கோடம்பாக்கம் தரும் சினிமாக்களை பின்பற்ற வேண்டாம்



## ஈழத் தமிழர்களுக்கு கமல்ஹாசன் அறிவுரை

தற்போது தமிழ் சினிமா என்று சொல்லப்படும் கோடம்பாக்கத்தின் தயாரிப்புகளை புலம்பெயர் ஈழத் தமிழர்கள் பின்பற்ற வேண்டியதில்லை என்று அறிவுரை கூறியிருக்கிறார் நடிகர் கமல் ஹாசன். "கோடம்பாக்கம் சினிமாவைவிட அகன்ற வானம் ஒன்று உங்கள் முன்னே இருக்கிறது" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழின் பெருமித நடிகர்களுள் ஒருவர் கமல்ஹாசன். இந்திய அளவில் ஏராளமான விருதுகளைப் பெற்றிருப்பவர். இந்திய விருதுகளைக் கடந்து உலக விருது களை நோக்கி அவரது பயணம் தொடங்கியுள்ளது. பிரான்ஸ் அரசால் அந்த நாட்டு சினிமா ஆர்வலர் லாங்லாய்ஸ் பெயரில் சினிமாத் துறையில் வழங்கப் படும் உயரிய விருது இந்தமுறை கமலுக்கு வழங்கப் பட்டுள்ளது. போலன்ஸ்கி, கப்பல்லோ போன்ற உலகக் கலைஞர்கள் பெற்றுள்ள ஹென்ஸி லாங்லாய்ஸ் பிரிக்ஸ் 2016 விருதை நேரில் பெற்றார் கமல் ஹாசன்.

பிரெஞ்சு திரைப்படங்களின் புகழ்பெற்ற ஆவணக் காப்பாளர்ஹென்றிலாங்லாய்ஸ். திரைப் படங்களை ஆவணப்படுத்தி பாதுகாத்து வைப்பதன் முன் னோடியாக அவர் கருதப்படுகிறார்.

பாரிஸ் நகரத்தின் சிட்டி ஹாலில் நடைபெற்ற பத்தாவது உலக புராதன சினிமா 2016 ஹென்றி லாங்லாஸ் விருது என்ற இந்த மாபெரும் விருதைப் பெற்றுக் கொண்ட கையோடு புலம்பெயர் தமிழர் ஊடகமான 'கோலி 360' இணையத் தளத்திற்கு கமல்ஹாசன் அளித்த செவ்வியின் முக்கிய பகுதிகள் இங்கே...

*"இந்த விருது குறித்து என்ன நினைக்கிறீர்கள்...?"*

"இந்த விருதுக்கான தகுதி இருக்கிறதா என்பது குறித்து நான் யோசிக்கவில்லை. விருது கொடுத்ததற்கான நன்றியைத் தெரிவிப்பதற்கான கடமை எனக்கு இருக்கிறது.

என்னுடைய ஆசான் ஆனந்து அடிக்கடி சொன்ன பெயர் இது. லாங்லாஸுடைய தியாகங்கள், முயற்சிகள் அதனால் தழைத்த பிரெஞ்ச் சினிமா பற்றியும் பல முறை சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட சரித்திர நாய கனைப் பற்றி கேள்விப்பட்டுக் கொண்டிருந்த நான், இந்த வாய்ப்பு கிடைக்கும் என்று நினைக்கவில்லை. கிடைத்ததால் மிகவும் மகிழ்ச்சி. நான் இதுவரை செய்ததற்காக கிடைத் ததாக நினைக்கவில்லை. இனி இதற் காக நான் செய்ய வேண்டி யது நிறைய இருப்பதாக நினைக்கிறேன்."

*"பிரெஞ்சு அரச தமிழ் நடிகரை கௌரவிப்பது இது முதல்முறையல்ல. நீங்கள் இரண்டாவது நபர். நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்குப் பின்னர் பிரெஞ்சு அரசு உங்களுக்கு மதிப்பளித்திருப்பது எப்படியிருக்கிறது?"*

"செவாலியர் மதிப்பு என்பது இன்னும் பெரியது. இது வேறு ஒரு பட்டியலில் வருகிறது. செவாலியர் விருது பல தமிழர்களுக்கு கிடைத்திருக்கிறது. நான் இப்போது பெற்றுள்ள பிரிக்ஸ் ஹென்றி லாங்லாயிஸ் விருது தமிழ் சினிமாவை சார்ந்தவருக்கு இதுதான் முதல் முறை என்று சொன்னார்கள். அது ஒரு பெருமை. இந்தப் பட்டியலில் எனக்கு முன்பாக இருப்பவர்களின் பெயரைப் பார்க்கும் போது பிரமிப்பாக இருக்கிறது. ஜான் லாத் கேரியார், ரொமன் பொலான்ஸ்கி, கப்போலா என அநத வரிசையில்எனக்குவிருதுகிடைத்திருப்பது மிகவும் உன்னத பரிசாக நான் நினைக்கிறேன்."

*"பிரெஞ்சு சினிமாவின் தாக்கம் உங்களுடைய சினிமாவில் இருக்கிறதா?"*

"என்னுடைய சினிமாக்களில் பிரெஞ்சு சினிமாவின் தாக்கமும் இருக்கிறது. இந்திய சினிமாவில் அமெரிக்கன் சினிமாவின் தாக்கம்தான் அதிகம். ஐரோப்பிய சினிமா, முக்கியமாக பிரெஞ்சு சினிமாக்கள் என்னை மிகவும் பாதித்திருக்கின்றன. அதன் சார்பும், பாதிப்பும் என் படங்களில் தென்படும்."

*"உங்களுக்கு இலக்கியம் மிகவும் பிடித்த விடயம் என்பது தெரிந்த ஒன்று. பிரெஞ்சு இலக்கியத்தின் உங்கள் மீதான தாக்கம் எப்படியானது?"*

"என்னுடைய சாதாரண சிறு கதைகள், சிறுபடங்களில் கூட பிரெஞ்சு இலக்கியத்தின் பாதிப்பு இருக்கிறது. விக்டர் ஹியூகோவின் லெஸ்மிஸ்ராபிள் 'மகாநதி' யில் தெரியும். இப்படி பல தாக்கம் என்னிடம் உண்டு."

*"தொழில்நுட்பத்திலும் ஆர்வமாக உள்ள நடிகர் தாங்கள். தற்போது தொழில் நுட்பம் இலகுவாகிவிட்ட பிறகு எல்லாரும் படம் எடுக்கக் கூடியதாக இருக்கிறது. இது சினிமாவுக்கு நல்லதா, உகந்ததாயிருக்கிறது என்று நினைக்கிறீர்களா?"*

"நல்லதுதான். மக்கள் கையில் ஒரு சக்தி சென்றடையும்பொழுது அது பன்மடங்காகிறது. சில பேரே செய்யக்கூடிய உயர்குடி விளையாட்டாக வரும்பொழுது அது ஒரு குறிப்பிட்ட மனிதரைத் தான் போய்ச்சேரும். குறிப்பிட்ட குழுவைத்தான் போய்ச்சேரும். பலரின் கையில் கிடைக்கும் பொழுது, பேனாவும் காகிதமும் அச்சு இயந்திரமும் எல்லாருக்கும் வாய்த்த பொழுது எந்த விதத்திலும் இலக்கியமோ, மனித எண்ணமோ தாழ்ந்து போகவில்லை. மேம்பட்டது என்பதுதான் சரித்திரம். அதுவேதான் சினிமாவிலும் நிகழும். சினிமாவிலும் அகலநீளம் அதிகரிக்கும்."

*"அந்த சினிமா தொழில் நுட்பம் தற்போது என் போன்ற புலம்பெயர்ந்த தமிழர் கைகளிலும் கிடைத்திருக்கிறது. அதை நாங்கள் எப்படி பயன்படுத்த வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?"*

"சரித்திரத்தை யார் சொல்கிறார்கள் என்பது ஒரு முக்கியமானது. உண்மைச் சரித்திரம் என்பது வெற்றியாளர்கள் சொல்வது மட்டுமல்ல. அந்த விதத்தில் இதுவரை சொன்ன சரித்திரம் எல்லாம் வென்றவர்கள் சரித்திரமாகவே இருக்கிறது. புலம் பெயர்ந்த தமிழர்கள் சொல்லப் போகும் சரித்திரம் உண்மைச் சரித்திரமாக இருக்கும். அதை நீங்கள் ஒருபுறம் சாய்ந்துவிடாமல் தராசு பிடித்தது போல், எதிர் காலத் தமிழகத்திற்கும் உலகத்திற்குச் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது. உடனே செய்ய ஆரம்பிக்க வேண்டும். இல்லையென்றால் சரித்திரம் மறந்து போகும்."

*"புலம்பெயர்ந்த நாட்டில் இருந்துகொண்டு தமிழ் சினிமாவை வளர்க்க நாங்கள் என்ன செய்யவேண்டும்?"*

"நல்ல தமிழ் சினிமாவை எடுப்பதற்கான முயற்சிகளையும், வெறும் கோடம்பாக்க சினிமாவின் பிரதிபலிப்பாக மாறிவிடாமல் இது ஒரு தனி இயக்கமாக இருக்கவேண்டும். பிரெஞ்சு சினிமாவின் தோளோடு தோள் உரசும் பெரும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்திருக்கிறது. அதை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். கோடம்பாக்க சினிமாவைப் பார்த்து வியத்தல் ஆகாது என்பது என் கருத்து. அது உங்களுடைய குருகுல வாசமாக இருக்கத் தேவையில்லை. அதைவிட அகண்ட ஒரு வானம் உங்கள் முன்னால் இருக்கிறது."




கலாபூசணம்
மு.மாசிலாமணி

கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனச் சிலர் சிறுசிறு விடயங்களில்கூட தவறு இழைத்துப் பின்பு துன்பம் அடைவர். இவர்கள் ஒரு பொருளையோ அல்லது ஆள்களையோ கண்டவுடன் முன்பின் யோசனை இல்லாது காதல் கொண்டு பின் தன்னையே நொந்து கொள்வர். சுற்றி வளைப்பானேன். எங்கடை மாரிமுத்து பற்றிய ஒரு சிறுகதை விளக்கம் தரும்.

வழக்கம்போல் மாரிமுத்து பீதாம்பரம் பிறக்கிறாசியார் வீட்டுக்கு மரக்கறி வாங் கிக் குடுக்க மருதனார்மடம் சந்தைக்குப் போனார். பிறக்கிறாசியார் பெண்சாதி எழுதிக் குடுத்த மரக்கறி வகைகளைத் தவறாது பார்த்து வாங்கி விட்டார்.

சந்தையை விட்டு வெளியில் கே.கே.எஸ். வீதியில் வீதியோரம் குவித்து விற்பனைக்குப் போடப்பட்ட கலர் பாட்டா செருப்புகளைக் கண்டு திகைத் துப் போய் நின்று விட்டார்.

மனதுக்குள் மத்தாப்பு. இன்று என்னவிதப்பட்டும் ஒருசோடி செருப்பு வாங்கியே தீருவேன் எனச் சபதமெடுத்துத் தென்னிலங்கை வியாபாரியிடம் போனார். (காலைச் சாப்பாட்டுக்கென பிறக்கிறாசியார் பெண்சாதி கொடுத்த 150 ரூபா அவரது தீர்மானத்துக்கு வலுச் சேர்த்தது.) துணிந்த பின் மனமே துயரம். கொள்ளாதே என்ற கண்டசாலாவின் தேவதாஸ் படப் பாடலை நீவைண்ட் செய்து துணிவுடன் குருத்துப் பச்சை நிற ஒரு சோடியை கையில் எடுத்துப் பார்க்க வியாபாரி ஐயா உங்களுடைய காலுக்கு உந்தக் கலர் நல்லாய் இருக்கும் என உசார்ப் படுத்தினான். என்ன விலைஎனகேட்ககனக்க இல்லை. 100 ரூபாதான். கடைகளிலை 200 ரூபா விக்கினம் எண்டான் வியாபாரி.



(44 ஆம் பக்கம் பார்க்க)



“பருவ வயசில் ஒரு ஆணைப் பெண்ணிடமோ பெண்ணை ஆணிடமோ ஈர்ப்பது எது? காதலா? பருவ வயதில் காதலுக்குக் கண்ணில்லை என்பது சரியா? இதற்கு சரியான வரைவிலக்கணம் உண்டா? இந்த ஈர்ப்பு நாளாக நாளாக ஒரே மாதிரி இருக்கிறதா?

# சோடிகள் எப்படி இணைகின்றன?



■ ஜிஸ்பி

இந்தப் பூவுலகில் ஒன்று என்னை ஆச்சரியத்துடன் எப்போதும் சிந்திக்க வைக்கும். இங்கு கோடானு கோடி மக்கள் ஆண், பெண் என்று இருக்கிறார்கள். உயரமானவர்கள், குட்டையானவர்கள், கட்டையானவர்கள், ஒல்லியானவர்கள், சிவந்தவர்கள், கறுத்தவர்கள், மாநிறத்தவர் என்று பல இடங்களில் பலவிதமாக வாழ்பவர்கள். இவர்கள் எல்லோருக்கும் ஆணுக்குப் பெண் என்று சோடிகள் இருக்கின்றன. 90 வீதத்துக்கு மேலானவர்கள் திருமணம் செய்துகொண்டு அவரவர் வம்ச விருத்தியில் ஈடுபடுகின்றனர். இதில் ஆச்சரியப்படுவதற்கும் சிந்திப்பதற்கும் என்ன இருக்கிறது என்றுதான் தோன்றும். இந்த சோடி சேர்வது தான் என்னை ஆச்சரியப்படுத்துகிறது. ஒவ்வொருவருக்கும் அவருடைய சோடி பற்றிய எண்ணங்கள் அல்லது கனவுகள் நிறைவேறுகிறதா? சமூகத்தில் எத்தனையோ பொருத்தங்கள் பார்க்கப்பட்டுதிருமணங்கள் நடைபெறுகின்றன. ஒரு மூன்றாம் மனிதனாய் இருந்து இந்தச் சோடிகளைப் பார்க்கும்போது, அவரவர் எதிர்பார்ப்புக்கள்தான் என்ன? அவை எல்லாம் ஈடேறி விடுகிறதா, என்றெல்லாம் சில சமயங்களில் நான் நினைப்பதுண்டு.

எனக்கு நெருங்கிய ஒரு உறவினர். நன்றாகப் படித்தவர். இப்போது சினிமாக்களில் வரும் நாயகர்களைவிட லட்சணமாகவும் அழகாகவும் இருப்பார். அவருக்குத் திருமணம் செய்து வைக்கப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன.

அவர் ஒன்றில் தீர்மானமாக இருந்தார். அவருடைய கனவுக்கன்னியை முடிவாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை அவருக்கே. என்றார். அவர் குடும்பத்தில் இதற்கு எதிர்ப்பு இருக்கவில்லை. பெரியவர்கள் எல்லாப் பொருத்தங்களும் பார்த்துப் பெண்ணைக் காண்பிப்பார்கள். இவரும் பெண்ணைப் பார்ப்பார். பல தடவை, பல பெண்களைப் பார்த்தும் எதுவும் சரிவரவில்லை. இவர் ஒவ்வொரு பெண்ணையும் பார்க்கப் போகும்போது, பெண்ணுக்கு மதிப்பெண் போடுவார் (ஆணாதிக்கம்). குறைந்தது 60 விழுக்காடாவது பெண் எடுக்க வேண்டும் என் பதே இவரது எதிர்பார்ப்பு. உயரம், நிறம், படிப்பு, அழகு என்று பல பிரிவுகளுக்கும் மதிப்பெண் போடுவார். சாதாரணத் தேர்வுக்கான மதிப்பெண்கூட அவரிடமிருந்து பெண்களால் வாங்க முடியவில்லை. அநேகமாக எல்லோரும் சோர்ந்து போனார்கள். இவருக்கும் தன் வெட்டுப்புள்ளி கூடுதலோ என்று ஐயம் வந்து விட்டது. எட்டுப் பத்துப் பெண்களை பார்த்தபிறகு சாதாரணமாகப் பாஸ் மார்க் வாங்கும் பெண்ணாவது கிடைக்குமா என்று எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கும்போது, ஒருபெண்ணைப் பார்த்து இவர் சம்மதம் சொல்லி விட்டார்.

இவ்வளவு தேர்வுகளுக்குப் பிறகு வந்த பெண்ணைப்பார்த்தபோது பலரும் ஆச்சரியப்பட்டனர். தேர்வான பெண் ஒன்றும் பேரழகி என்று சொல்லிக் கொள்ளும்படி இருக்கவில்லை. பக்கத்துவீட்டுப் பெண் போலத்தான் இருந்தார். சராசரிக்கும் மேலாக அந்தப் பெண்ணிடம் இருந்த ஒரே தகுதி அவர் நன்றாகப் பாடுவார் என்பதுதான். இவருக்கு இவர் என்பது யாருக்குத் தெரியும்?

இன்னொரு நண்பர் வீட்டில் பெண் பார்த்து அவர் வீட்டுக்கு மருமகளாய் வந்தவர் ஒல்லியாக, கறுப்பாக, முன்பல் துருத்திக் கொண்ட அழகோடு இருந்தார். கல்யாணப் பையனிடம் ஏன் இப்படி என்று அவரது நண்பர்கள் கேட்டபோது அவர் சொன்ன பதில் எல்லோர் வாயையும் அடைத்து விட்டது. “எனக்குப் பிடித்தது, கட்டிக்கொண்டேன். அவ்வளவுதான்.”

ஆங்கிலத்தில் ஒரு வசனம் உண்டு. இன்னொருவனுடைய மனைவியைத் திருமணம் செய்ய உனக்கு வாய்க்காது என்று (YOU CAN NOT MARRY ANOTHER MANS WIFE). உலகில் இருக்கும் அத்தனை மனிதனுக்கும் அவனுக்கென்று ஒரு சோடி இருக்கிறது. அவனுக்கென்று ஒரு இல்லற வாழ்வு இருக்கிறது. படிப்பும் பொருளும் அழகும் மட்டுமே சோடிகளைத் தீர்மானிப்பதில்லை. இவையெல்லாம் அதிகமாகப் பேசப்பட்டாலும் எல்லோர்க்கும் எல்லாம் அமைவது இல்லை என்று சொல்வதுகூடத் தவறாகும்.

சில நேரங்களில் எனக்குத் தோன்றுவது, பலருக்கும் தவறாகத் தோன்றலாம். அந்தந்த வயதின் தேவைகள் மற்ற எல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிடலாம். மேலும் அழகு என்பதற்கு எந்த வரைவிலக்கணமும் கிடையாது. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் விடை கிடைக்காது என்று தெரிந்துதான் “இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று” என்று அறிய முடியாக் கடவுளிடம் பாரத்தை (பழியை) போடுகிறோமோ?

நம் கலாசாரத்தில் ஒரு திருமணம் நடக்கும் முன் இருவருக்கும் உள்ள பொருத்தங்களை ஜாதகம் மூலமாகக் கணிக்கின்றனர். ஆனால் பண்டைக் காலத்தில் திருமணங்கள் கடி-மணம், கரணம், மன்றல், வதுவை, வரைவு என்று பல பெயர்களில் அறியப்பட்டிருந்தது. அந்தக் காலத்திலேயே பொருத்தம் பார்த்துத் திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன.

பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு உருவு, நிறுத்த காம்வாயில், நிறையே, அருளே உணர்வோடு திருவென முறையுளக் கிளந்த ஒப்பினது வகையே என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இப்பொழுதும், இளமை, வனப்பு, வளமை, கல்வி, அறிவு என்று பல பொருத்தங்கள் பார்த்துத்தான் திருமணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன, ஆனால் பல குடும்பங்களில் உறவின் வழியே நிச்சயமாகும் திருமணங்களில் பெரும்பாலும் இதையெல்லாம் கவனிப்பதில்லை. அறிந்த மனிதர், இனம் குலம் எல்லாம் ஒத்தது இதையெல்லாம்விட சொத்துப் பத்துகள் குடும்பத்தைவிட்டு வெளியேறாது என்னும் எண்ணமும் கலந்தே மணங்கள் நிச்சயிக்கப்படுகின்றன. இந்த வகைத் திருமணத்தில் பொறுப்புக்கூறல் உறுதிப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறார்கள். இந்த வகைத் திருமணத்தில் பெரும்பாலும் பெண்கள் தங்கள் சுதந்திரத்தை இழக்கிறார்கள். இந்த மாதிரி உறவில் விளையும் திருமணங்கள் வாயிலாகப் பிறக்கும் சந்ததிகள் உடல் நலம் குன்றி இருக்க வாய்ப்பு அதிகம் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

என்ன இருந்து என்ன? சில கேள்விகள் மனதில் எழுகின்றன.

பருவ வயசில் ஒரு ஆணைப் பெண்ணிடமோ பெண்ணை ஆணிடமோ ஈர்ப்பது எது? காதலா? பருவ வயதில் காதலுக்குக் கண்ணில்லை என்பது சரியா? இதற்குச் சரியான வரைவிலக்கணம் உண்டா? இந்த ஈர்ப்பு நாளாக நாளாக ஒரே மாதிரி இருக்கிறதா? வயதான பின் கிழவனையும் கிழவியையும் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருக்கச் செய்வது எது? ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்க வேண்டியது கட்டாயமா? இந்தக் கட்டாயத்தை ஏற்படுத்திச் செல்வது எது? கலாசாரமா? இல்லை எல்லாம் தலைவிதி என்ற எண்ணமா? அப்படியானால் இது அப்படியே தொடருமா? ■



# மீண்டும் இணையும் சூர்யா – ஜோதிகா

விரைவில் ஜோதிகாவுடன் இணைந்து நடிக்க உள்ளதாக அண்மையில் ஒரு சந்திப்பின்போது சூர்யா கூறியுள்ளார். 10 ஆண்டுகளுக்கு முன் இந்த ஜோடி “சில்லுனு ஒரு காதல்” படத்தில் இணைந்து நடித்திருந்தது. அதன்பிறகு ஜோடி சேர்ந்து நடிக்கவில்லை. “குற்றம் கடிதல்” படத்தை இயக்கிய பிரம்மா இயக்கும் புதிய படத்தில் ஜோதிகா நடிக்க பேச்சு நடப்பதாக ஏற்கனவே தகவல் வெளியானது. அந்தப் படத்தில் தான் சூர்யாவும், ஜோதிகாவுடன் இணைந்து நடிக்க உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுபற்றி பிரம்மாவிடம் கேட்டபோது, “இப்படம் பற்றிய பேச்சு ஜோதிகாவிடம் நடந்து வருகிறது. இதுவரை எதுவும் உறுதியாகவில்லை” என்றார்.

சூர்யா தரப்பில் கூறும்போது, “ஜோதிகாவுடன் சூர்யா” இணைந்து நடிப்பது பற்றி பேச்சு எதுவும் முடிவாகவில்லை. எதிர்வரும் மே மாதத்துக்குள் இதுபற்றிய முடிவு தெரியவரும். ஒருவேளை இருவரும் இணைந்து நடித்தால் படம் முழுவதுமே நீடிக்கும் கதாபாத்திரங்களில் இருவரும் நடிப்போம் என்றார்.



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 5 | | | 6 | | |
| | | | | 6 | | 3 | | |
| 3 | | 9 | 1 | | | | | 5 |
| | | | 4 | 9 | | 7 | | |
| 8 | | | | | | | | 2 |
| | | 1 | | 3 | 6 | | | |
| 6 | | | | | 7 | 1 | | 9 |
| | | 4 | | 1 | | | | |
| | | 7 | | | 9 | 2 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 7 | 9 | 6 | 3 | 4 | 5 | 2 |
| 9 | 4 | 5 | 7 | 2 | 8 | 3 | 6 | 1 |
| 6 | 2 | 3 | 1 | 5 | 4 | 8 | 9 | 7 |
| 3 | 7 | 9 | 2 | 1 | 5 | 6 | 4 | 8 |
| 4 | 5 | 8 | 6 | 3 | 7 | 1 | 2 | 9 |
| 1 | 6 | 2 | 4 | 8 | 9 | 7 | 3 | 5 |
| 7 | 9 | 6 | 5 | 4 | 1 | 2 | 8 | 3 |
| 2 | 3 | 1 | 8 | 9 | 6 | 5 | 7 | 4 |
| 5 | 8 | 4 | 3 | 7 | 2 | 9 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஒரு தாயின் ஏக்கம்

மகனே! குழந்தைப் பருவத்தில்
உன்னை மீட்டெடுக்க வழியின்றி
அறுவை சிகிச்சைக்கு முதன் முதலாக
நகையை விற்றேன்..!
முதல் வகுப்பிலேயே உன்னை
முதலிடத்தில் உள்ள பாடசாலையில்
சேர்க்க நன்கொடை கட்ட முடியாமல்
நிலத்தை விற்றேன்..!
அடுத்தடுத்த வகுப்புகளுக்கு ஆடுகளை விற்றேன்..!
மேல்நிலை வகுப்புகளுக்கு மாடுகளை விற்றேன்..!
சுற்றுலா செலவுக்கு சில சமயம் நான்
சுற்றியிருந்த பொருளை விற்றேன்..!
பயணச் செலவுக்கு பல சமயம் என்
பசியை விற்றேன்..!
பரீட்சை நாள்களில் உனக்கு
தேநீர் கொடுக்கவே என்
தூக்கத்தை விற்றேன்..!
கடைசியில் பல்கலைப் படிப்புக்காக
கட்டிய வீட்டையும் விற்றேன்..!
படித்தாய்.. உயர்ந்தாய்.. வளர்ந்தாய்
வாங்கினாய் மீண்டும் எல்லாவற்றையும்..!
இன்று நீ இருப்பதோ மூன்றடுக்கு இல்லத்தில்
நானிருப்பதோ முதியோர் இல்லத்தில்..!
எல்லாம் விற்றும் என்னிடம் இருந்தது இதயம்
எல்லாம் வாங்கியும் உன்னிடம் இல்லாமல்
இருந்தது இதயம்..!



படித்ததில் பிடித்தது

WhatsApp

சப்பாணி @manipmp
RT @deebanece
‘பொய்’யை சிரிச்சிட்டே சொன்னா உண்மையாகிடும்,
‘உண்மை’யை சிரிச்சிட்டே சொன்னா பொய் ஆகிடும்...

எஸ்.பி.பி, ஸ்ரேயா கோசல் ஆகியோர் சுப்பர் சிங்கரில் கலந்து கொண்டாலும் ஏற்றுக் கொள்வோம்.
ஏயாற்ரேல் சுப்பர் சிங்கர் தேர்வுக்குழு




கெட்ட வார்த்தை சொல்லி திட்டணும் என்று நினைக்கல
அசிங்க அசிங்கமா கமெண்ட் போடணும் என்று தோணல
ஆனா.. இதெல்லாம் நடத்துடுமோனு பயமா இருக்கு..!

மீனாக பிறந்து சாவது என்று
முடிவெடுத்து விட்டால்.
பொழுது போக்கிற்கு மீன்
பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே
பிழைப்பிற்காக மீன் பிடிப்பவனின்
வலையில் சிக்கிடு
உன் மரணமும் ஒருவனை
வாழ வைக்கட்டும்...!!!

தாய் தந்தையரின் அருமை நீ வளரும் போது தெரியாது...
உன் பிள்ளையை வளர்க்கும் போது தான் தெரியும்



தூக்கம் தொலைக்கும் நிஜங்கள்...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்களின் சிரமத்தை பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான அளவில் வருமானம் கிடைக்கும். பெண்களுக்கு ஆடம்பர எண்ணம் கூடாது.

**இடபம்:** இனிய அனுபவத்தால், மகிழ்ச்சி கொள்வீர்கள். தொழில், வியாப்பாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும்.

**மிதுனம்:** வீண் பேச்சு பேசுவோரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சீர்திருத்தப் பணியில் ஈடுபடுவீர்கள். இலாபம் சுமார். பெண்கள் சிக்கனத்தின் மூலம் சேமிக்க முயல்வர். உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** திறமையுடன் செயற்பட்டு, வளர்ச்சி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். நண்பர்களால் உதவி கிடைக்கும்.

**கன்னி:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், முதலீட்டை அதிகப்படுத்துவீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினரிடம் ஒற்றுமை நிறைந்திருக்கும்.

**துலாம்:** மனதில் நற்சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தியளிக்கும். வாகனப் பயணத்தால் சந்தோசம் கூடும். பிள்ளைகள் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் சீர்பெற, பங்குதாரர்களின் ஆலோசனை கைகொடுக்கும். இலாபம் திருப்தியளிக்கும். உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது.


**தனுசு:** புகழ்ந்து பேசுவோரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழிலில் உருவாகும் சிரமத்தை சரிப்படுத்த முயல்வீர்கள். பெண்கள், வீட்டுச் செலவுக்கு கடன் வாங்க நேரிடலாம். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மகரம்:** செயல்களில் சமயோசிதம் நிறைந்திருக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். உறவினருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:** தவறான வழிகாட்டுதலை, உண்மை என நம்ப வேண்டாம். தொழில், வியாபாரத்தில், போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**மீனம்:** எதிரி தொந்தரவு பலமிழந்து போகும். தொழிலில், புதிய திட்டத்தைச் செயற்படுத்தி வருமானத்தைப் பெருக்குவீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். அரசியல்வாதிகள் பதவிபெற அனுகூலம் உண்டு.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 50 | 60 | 60 | 60 | 20 | 40 |
| கத்தரி | 100 | 60 | 120 | 80 | 80 | 40 | 50 | 50 |
| கரட் | 100 | 100 | 80–200 | 120 | 80 | 120 | 80 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 100 | 120 | 80 | 40 | 60 | 50 |
| பாகல் | 120 | 120 | 120 | 120 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 100 | 80 | 80 | – | 80 | – | 70 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 90 | 80 | 100 | 70 | 60 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 80 | 80 | 60 | 120 | 80 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 25 | 50 | 15 | 30 |
| தக்காளி | 120 | 100 | 100 | 120 | 100 | 80 | 100 | 140 |
| வாழைக்காய் | 50 | 40 | 60 | 40 | 40 | 40 | 40 | 30 |
| கீரை | 20 | 40 | 40 | 10 | 30 | 20 | 25 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 100–160 | 120 | 100 | 120 | 100 | 140 |
| புடோல் | 40 | 40 | 60 | 60 | 50 | 40 | 20 | 50 |
| கோவா | 50 | 60 | 60 | 80 | 50 | 100 | 60 | 60 |
| வெண்டி | 100 | 50 | 80 | 80 | 80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 140 | – | 120 | 140 | 120 | 120 | 120 | 180 |
| லீக்ஸ் | 140 | 160 | 120 | 140 | 120 | 120 | 100 | 100 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 50 | 40 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 90 | 80 | 100 | 70 | 120 |
| தேசிக்காய் | 300 | 260 | 350 | 300 | 340 | 200 | 300 | 400 |
| வல்லாரை | 15 | 20 | – | 15 | 10 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 100 | 80 | 100 | 100 | 120 | 120 | 50 | 100 |
| இராசவள்ளி | 160 | 140 | 140 | 160 | 140 | – | 110 | 90 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300–500 | 300 | 300 | 300 | 270 | 350 |
| பனங்கிழங்கு | – | – | – | – | – | – | – | – |

# தேங்காய் போளி



### தேவையான பொருள்கள் :

தேங்காய் – 1
மைதா மா அரைக் கிலோ
ஏலக்காய்ப் பொடி அரைக்கரண்டி
சீனி – 300 கிராம்
சோடா உப்பு – 2 சிட்டிகை
நெய் – 100 கிராம்

### செய்முறை:

மைதா மாவுடன் சோடா உப்பு, 2 சிட்டிகை உப்புத்தூள் சேர்த்து சலித்து 1 கரண்டி நெய், திட்டமாகப் பால் விட்டு மிருதுவாகப் பிசைந்து ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.

தேங்காயைத் துருவவும். சட்டியில் நெய்விட்டு தேங்காய்த் துருவலைப் போட்டு நீர்ப்பசை வற்றும் வரை வதக்கி எடுக்கவும்.

தேங்காய்த் துருவலுடன் சீனி, ஏலக்காய்ப் பொடி சேர்த்து மிக்ஸியில் கரகரப்பாகப் பொடித்து எடுக்கவும்.

பிசைந்து வைத்திருக்கும் மாவை எடுத்து சம அளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும். ஓர் உருண்டையை எடுத்து கனமாக இட்டு நடுவில் தேங்காய்ப் பூரணத்தை தேவையான அளவு வைத்து மடித்து அதை பூரிக்கட்டையால் மறுபடியும் உருட்டிக் கொள்ளவும்.

தோசைக் கல்லை காய வைத்து ஒரு போளியைப் போட்டு சுற்றிலும் நெய் விடவும். ஒரு புறம் வெந்ததும் திருப்பிப் போட்டு சுற்றிலும் நெய்விட்டு வேக வைத்து எடுக்கவும்.

**நாளை**
**சித்திரை-05**
திங்கட்கிழமை 18.04.2016
திதி: துவாதசி பி.இ.05.23 வரை
நட்சத்திரம்: பூரம்
பி.இ.12.12 வரை
ராகுகாலம்: 07.33-09.03 வரை
சுபநேரம்: 12.03-01.33 வரை

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 100 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 650 | 600 | 600 | 450 |
| சுறா | 500 | 400 | 600 | 800 | 700 | – | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 500 | 450 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | – | – | 450 | 500 | – |
| திரளி | 300 | 200 | 200 | 220 | 350 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | – | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 250 | 160 | 100 | – |
| ஒட்டி | 300 | 200 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 400 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 350 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 120 | 50 | – |
| பாலை | 400 | 300 | 250 | – | 500 | 350 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 400 | – | – |

# தொட்டியை சுத்தம் செய்ய...

பெரும்பாலானோரின் வீடுகளில் பாத்திரம் கழுவும் தொட்டி மிகவும் துர்நாற்றத்துடன் இருக்கும். அப்படி பாத்திரம் கழுவும்தொட்டியானது துர்நாற்றத்துடனேயே இருந்தால், பூச்சிகள் அதிகம் வர ஆரம்பிக்கும். எனவே அப்பகுதியை எப்போதும் சுத்தமாகவைத்துக் கொள்ள வேண்டும்.

அவற்றை ஒருசில இயற்கைப் பொருள்களைக் கொண்டு சுத்தம் செய்தால், உங்கள் பாத்திரம் கழுவும் தொட்டி புதிதுபோல் மின்னுவதோடு,துர்நாற்றமின்றியும் இருக்கும்.

பேக்கிங் சோடா:
பேக்கிங் சோடாவை நீர் சேர்த்து பேஸ்ட் செய்து, பாத்திரம் கழுவும் தொட்டி முழுவதும் தடவி, பிரஷ் கொண்டு தேய்த்து, பின் கழுவி விட வேண்டும். இப்படி செய்வதால், அப்பகுதியில் உள்ள பக்றீரியாக்கள் மற்றும் அழுக்குகள் முற்றிலும் வெளியேறிவிடும்

அல்கஹோல் :
இரவில் படுக்கும் முன் சிறிது அல்கஹோலை பாத்திரம் கழுவும் தொட்டியில் ஊற்றி தேய்த்து, பின் குளிர்ந்த நீரினால் கழுவ வேண்டும். இப்படி செய்வதாலும் பாத்திரம் கழுவும் தொட்டி பளிச்சென்று புதிது போல் மின்னும்.

சோடா:
சோடாக்களை பாத்திரம் கழுவும் தொட்டியில் ஊற்றி தேய்த்தால், தொட்டியில் துரு பிடித்திருந்தாலும், அது நீங்கிவிடும்.அதுமட்டுமின்றி, நீரினால் தொட்டியில் ஏற்பட்ட கறைகளையும் நீக்கிவிடும்.

எலுமிச்சை சாறு:
எலுமிச்சை சாற்றில் பேக்கிங் சோடா சேர்த்து கலந்து, அந்த பேஸ்ட்டை பாத்திரம் கழுவும் தொட்டியில் தடவி சிறிது நேரம் கழுத்து பிரஷ் கொண்டு தேய்த்தால், அத்தொட்டியானது புதிது போல் மின்னுவதோடு, துர்நாற்றம்இல்லாமலும் இருக்கும்

வினிகர்:
வினிகர் கொண்டு பாத்திரம் கழுவும் தொட்டியை சுத்தம் செய்யலாம். அதற்கு வினிகரை பாத்திரம் கழுவும் தொட்டியைச் சுற்றி ஊற்றி, சிறிது நேரம் ஊற வைத்து, பின் பிரஷ் கொண்டு தேய்த்தால், தொட்டியில் உள்ள அழுக்குகள் முற்றிலும் வெளியேறி, பாத்திரம் கழுவும் தொட்டி புதிதாகக் காணப்படும்.

## பயன்தரும் வீட்டுக் குறிப்புகள்!

- மாதுளம் பழத் தோல்களின் உள்பாகத்தை எடுத்து பல் தேய்த்தால் பல்லுக்கும் உறுதி, பல்லும் பளிச்சென்று இருக்கும்.
- தேங்காய் உடைத்த இளநீரை சுண்ணாம்பு போத்தலில் சிறிது ஊற்றி வைத்தால் சுண்ணாம்பு சீக்கிரத்தில் காய்ந்து போகாமல் இருக்கும்.
- மின்விசிறியில் தூசி படிந்து, கறை படிந்து விட்டதா? ஒரு துணியை மண்ணெண்ணையில் நனைத்து மின் விசிறியை அழுத்தித் துடையுங்கள். சிறிது நேரத்துக்கப் பிறகு நல்ல துணியால் துடைத்துப் பாருங்கள். பளிச்சென்றாகி விடும்.
- அரை வாளி தண்ணீரில், நான்கு மேசைக்கரண்டி வினிகரை கலந்து ஜீன்ஸ் துணிகளை அலசினால் சாயம் போவதை தடுக்கலாம்.
- புது வீட்டில் பெயிண்ட் அடித்த வாடை போக மறுக்கிறதா? ஒரு பக்கெட் நிறைய தண்ணீரை நிரப்பி அறைகளில் வையுங்கள். வாடை போய் விடும்.





■ பிரகாஸ்

கிரிக்கெட் உலகில் வருடாவரும் பேசப்படும் ஒரு விறுவிறுப்பான தொடராக அமைந்துள்ளது நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடர். இந்த ஐ.பி.எல். தொடரில் அதிர்ஷ்டம் இல்லாத அணிகளுள் ஒன்றாக கணக்கிடப்படுவது தான் பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ். தொடர் ஆரம்பித்த காலத்தில் இருந்து இந்த வருடம் வரை சிறப்பான ஓர் அணித்தெரிவை அந்த அணியின் நிர்வாகம் முன்வைத்த போதிலும் பிளே ஓவ் சுற்றுடன் பெங்களூரின் கிண்ணக்கனவு கடந்த எட்டு வருடங்களாக கலைக்கப்பட்டு வருகிறது. ஒரு முறையேனும் கிண்ணம் வெல்லவில்லை. ஆனால் நடப்பு வருடத்தின் தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்ற் எதிர்பார்ப்பு வழக்கத்துக்கு மாறாக பரவலாக உள்ளது.

இதற்கு இரு பெரும் காரணங்களைக் குறிப்பிடலாம்.



அவற்றில் பிரதானமானது சென்னை, ராஜஸ்தான் அணிகள் இல்லாதமை. ஐ.பி. எல். என்றாலே சென்னை அணி என்ற நிலைப்பாடு கடந்த வருடத்துடன் முடிவுக்கு வந்துவிட்டது. சென்னை, ராஜ ஸ்தான் அணிகளின் உரிமையாளர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்ட காரணத்தினால் அந்த அணி களுக்கு இரண்டுவருடத்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பலமான அணியாக வலம்வந்த சென்னை, ராஜஸ்தான் அணிகள் உடைந்து புதிதாகத் தெரிவுசெய்யப் பட்ட குஜராத் லயன்ஸ், புனே சுப்பர் ஜெயின்ட்ஸ் அணிகளுக்கு வீரர்கள் பகிரப்பட்டுள்ளனர். கடந்த சில வருடங்களாக அமைந்திருந்த டோனி, ரெய்னா, அஸ் வின், ஜடேயா, பிராவோ, நெக்ரா, மக்கலம், பிளாசிஸ் என்ற சென்னைப் படை தற்பொழுது பாதியாகப் பிளந்துள்ளது.

# எதிர்பார்ப்பை எகிறச் செய்துள்ள
# பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸ்

இதனால் இந்த வருடத்தில் றோயல் சலஞ்சேர்ஸின் பிரதான சவாலான சென்னை இல்லை. இது றோயலுக்கு பெரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தி யுள்ளது.

இரண்டாவது காரணமாக பெங்களூர் றோய லின் அணித் தெரிவைக் குறிப்பிடலாம். துடுப்பாட்ட வரிசையின்படி பார்க்கப்போனால் கெயில், கோக்லி (தலைவர்), வில்லியர்ஸ், சர்பராஸ்கான், வற்சன், கே.யாதேவ், பின்னி, ரகுல், எச்.பட்டேல், மில்னி, சாகல் என்றவாறாக அணி அமைந் துள்ளது. இந்த விவரத்தைப் பார்த்த உடனேயே துடுப்பாட்ட வரிசையை அதிகம் நம்பித்தான் அணி உள்ளது என்பது இலகுவில் புரிந்துவிடும். கெயில், கோக்லி, வில்லியர்ஸ் இந்த மூவரில் ஒருவர் நிலைத்துவிட்டால்கூட ஆட்டம் றோயலின் கைகளுக்குள் வந்துவிடும். இதைவிட வற்சனின் தெரிவு கட்டாயமாகக் கவனிக்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது. முன்வரிசை வீரர்கள் தடுமாற்றம் காட்டினாலும் மத்திய வரிசை வீரர்களுக்கு ஆலோசனை தெரிவித்து அணியை வழிநடத்தும் பக்குவமும் அனுபவமும் வற்சனுக்கு தாராளமாக உள்ளது. அவர் ஓர் சகல துறை வீரராக உள்ளமை பிறிதொரு சிறப்பம்சம். இவ்வாறு பலமாக உள்ள பெங்களூரின் பலவீனம் ஒன்றும் உள்ளது. நிச்சயமான பந்துவீச்சு வரிசை என்ற ஒன்று அங்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால் வற்சனைத் தவிர பெங்களூரின் ஏனைய பந்து வீச்சாளர்கள் சர்வதேச களங்களைக் காணாதவர்கள். அதீத அழுத்தங்களை அறி யாதவர்கள். இந்தப் பலவீனத்தை ஏனைய அணிகள் தமது பலமாக எடுத்துக்கொண்டால் நிச்சயம் பெங்களூர் றோயல் சலஞ் சேர்ஸை வீழ்த்திவிடலாம். எது எப்படியோ பெங்களூரின் அணித் தெரிவும் அதற்கான வாய்ப்புக்களும் இந்த முறை சற்று விசேடமாகக் கவனிக்க வைக்கிறது.

# மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து இடம்மாறுகிறது ஐ. பி.எல். ஆட்டங்கள்

நடைபெற்றுவரும் ஐ.பி. எல். தொடர் தொடர்ந்தும் நடைபெறுவதில் சில சிக்கல்கள் எழுந்துள்ளன. மகாராஷ்டிரா மாநிலத்தில் கடும் வறட்சி நிலவுகின்ற காரணத்தினால் ஐ.பி.எல். தொடரில் அடுத்த மாதத்தின் ஆட்டங்களை குறித்த மாநிலத்தில் நடத்தக்கூடாது என்று மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மகாராஷ்டிராவில் கடும் வறட்சி நிலவி வருகிறது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கடுமையான குடிநீர் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இதனால் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும்படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது. இந்த நிலையில், ஐ.பி.எல். தொடருக்காக ஏராள



மான நீர் வீணாக்கப்படுவது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. வறட்சி காரணமாக இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடர்களை மகாராஷ்டிராவில் நடத்தக் கூடாது என்று கூறி 'லோக்சத்தா இயக்கம்' என்ற பொதுநல அமைப்பு மும்பை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடர்ந்தது. மாநிலம் வறட்சியின் பிடியில் இருக்கும்போது ஐ.பி.எல். தொடரை நடத்தும் மைதானங்களுக்காக 60 லட்சம் லீற்றர் நீர் செலவிடப்படுவதாக இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையிடமும், மும்பை கிரிக்கெட் சங்கத்திடமும் பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதற்கு பதிலளித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை, மும்பை மற்றும் புனே மைதானங்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரைத்தான் பயன்படுத்துகிறோம்.

ஐ.பி.எல். தொடர்களை நடத்த அனுமதித்தால் முதல்வர் வறட்சி நிவாரண நிதிக்கு ரூ.5 கோடி நிதி வழங்குகிறோம் என்று அறிவித்தது. ஆனால் இதனை ஏற்க மறுத்த மன்று இந்த மாதம் 30ஆம் திகதிக்கு பிறகு நடைபெறவிருந்த ஆட்டங்களை வேறு இடங்களுக்கு மாற்ற உத்தரவிட்டுள்ளது.

ஆட்டங்கள் வேறு இடத்துக்கு மாற்றப்பட்டால் இரு அணிகளில் அது தாக்கத்தை ஏற்படுத்தும். ஒன்று புனே மற்றது மும்மை. இரண்டும் மகாராஷ்டிரா மாநில அணிகள். இவை இரண்டும் சொந்த மைதானங்களை நிறையவே தவறவிடப் போகின்றன.

# இலங்கைப் பிரதமரின் சீனப் பயணம்...

*(24 பக்கத் தொடர்ச்சி)*

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடக்கம் அரசியல் நகர்வுகள், ராஜதந்திர நடவடிக்கைகள் வரை மகிந்தவைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சி செய்தது. அநாகரிகமான முறையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்தது. எதற்குமே மகிந்த மசிந்துகொடுக்காத நிலையில் அவரை ஆட்சியிலிருந்து இறக்கும் பாதையில் இறங்கியது.

மேற்குலக விசுவாசியான ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட புதிய ஆட்சி அமைந்தபோது இலங்கையில் இந்தியாவுக்குச் சாதகமான ஒரு சூழலே உருவாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பிரதமரின் சீனப் பயணத்தை அடுத்து சீனா இலங்கையில் மேலும் வலுப்படக்கூடிய வாய்ப்புக்களே உருவாகியுள்ளன.

கொழும்புத் துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அது சர்வதேச வர்த்தக மையமாக உயர்த்தப்படவுள்ளது. மேலும் அம்பாந்தோட்டையில் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் சீன முதலீட்டுடன் கைத்தொழிற் பேட்டை அமைக்கப்படவுள்ளது. இதனால் அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள சர்வதேச விமான நிலையம் என்பனவும் லாபமீட்டும் நிறுவனங்களாக மாறும் வாய்ப்புண்டு.

அது மட்டுமன்றி கொழும்பு துறைமுக நகரத்தின் ஒரு பகுதி சீனாவுக்கு 99 வருடக் குத்தகைக்கு விடப்படவுள்ளதாகவும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. ஏற்கனவே கொழும்புத் துறைமுகத்தின் தென்பகுதியிலுள்ள கொள்கலன் இறங்குதுறை சீன நிறுவனத்தின் பொறுப்பிலேயே கையாளப்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்தத்தில் சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு சாதகமான ஒரு சூழல் இந்தப் பயணத்தின் மூலம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. எதிர்காலத்தில் முத்து மாலைத் திட்டத்தின் பிரதான மையமாக கொழும்பு மாறலாம். இதன் காரணமாக இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளும் சர்வதேச அளவில் வலுப் பட வாய்ப்புகள் உருவாகும்.



**மேலாதிக்கப் போட்டி**

இப்படியொரு நிலைமை உருவாவதை இந்தியா சிறிதளவுகூட விரும்பப் போவதில்லை. அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தை இந்தியாவூடாகவே கையாள விரும்புகின்றன. எனவே சீனா இந்தப் பிரதேசத்தில் வலிமை பெறுவதை அந்த நாடுகள்கூட விரும்பப் போவதில்லை.

அதற்கு இந்தியாவிடம் கைவசமுள்ள ஒரே ஒரு துருப்புச் சீட்டு 'எட்கா' ஒப்பந்தம். எனவே இந்தியா இந்த 'எட்கா' ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் எதிர்வரும் நாள்களில் தீவிரமாகச் செயற்படும் என எதிர்பார்க்கலாம்.

'எட்கா' ஒப்பந்தம் கைச்சாத்தாகும் முன்பே ஒரு விடயம் தீவிர சிக்கலுக்குள் மாட்டுப்பட்டுள்ளது. சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பாக தமிழ் மக்கள் மட்டுமன்றி சிங்கள, முஸ்லிம் மக்களும் எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கியுள்ளனர். எனவே அரசுகூட அது தொடர்பாக மறுபரிசீலனை செய்யுமளவுக்கு நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மேலாதிக்கம் தொடர்பான போட்டி தொடரத்தான் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. இந்தப் போட்டிக்குள் இலங்கை அதன் அமைவிட முக்கியத்துவம் காரணமாக உருட்டப்படுவது தவிர்க்கப்படமுடியாது.

அதேவேளையில் இலங்கை அரசோ எந்த ஒரு தரப்பையும் பகைக்கவோ அல்லது ஏதோ தரப்பின் பக்கம் சாயவோ முடியாது. எனவே எதிர்காலப் பயணம் சற்றுக் கடினமாகவே அமைய முடியும்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 416

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | 4 | | 5 | ■ |
| | ■ | 6 | | | ■ | 7 | 8 |
| 9 | 10 | | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| ■ | 19 | ■ | 20 | | ■ | 21 | |
| 22 | | 23 | ■ | 24 | | | |
| 25 | | | | | ■ | 26 | |

அனுப்புபவர் பெயர்:..............................................

பூரணமான தபால் விலாசம்: ..................................

..............................................................................

கையொப்பம்:.......................................................

**இடமிருந்து வலம்**

1. ஒரு மதியத்தில் ஒன்றில் பெறுமதியைத் தீர்மானிப்பது
6. அழிப்பு
7. சூரியனின் ஒரு பெயர்
9. கன்னிப் பெண்
11. ஊட்டு
13. இல்லை என்று உரைத்தல்
15. மறி
16. நாட்டில் பெரிய பெரிய சிலைகளில் வீற்றிருப்பவர்.
20. செல்வம்
21. சம்மதச் சொல்
22. மகாகவி
24. பெறுமதி
25. மகாபாரத பாத்திரங்கள்
26. பாய்வதற்கு பாயும் மிருகம்

**மேலிருந்து கீழ்**

1. சுமங்கலி நெற்றியை அலங்கரிப்பது
2. அறுசுவையில் ஒன்று
3. சமய
4. ஒரு நாட்டின் தலைநகரம்
5. பொய்
8. பிடியைத் தளர்
10. மாசு
12. மகாத்மா காந்தி விரும்பி அணியும் ஆடை
14. மதி
17. வீமனுக்கு மூத்தவர்
18. சந்திரன்
19. விரோதமானது
21. பிறப்பதற்குப் பயன்படும்
22. ரஜனி நடித்த ஒரு படம்
23. கெட்டியான

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்ட சாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 414 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1)உசாவல் (4)உதவி (7)பத்தி (8)உரைகல் (9)வாதி (10)நடு (11)வலை (12)சரிதல் (14)இல் (15)கலவன் (18)கன (19)தறுதலை (21)குடும்பம் (23)கவி (24)கைமை (25)விடுதி

**மேலிருந்து கீழ்**

(1)உபவாசம் (2)சாத்திரி (3)வதி (4)உரை (5)தகவல் (6)வில்லை (8)உடு (10)நல்ல (13)தகனம் (14) இன்று (16) வதம் (17)தலைவிதி (18)கடுமை (20)தகடு (21)குகை (22)பரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி
இல.416
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(27.04.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 414இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**

**சு. விஜேகுமார்,**
நீதிவான் தோட்டம்,
சோரன் பற்று, பளை

**2 ஆம் பரிசு**

**தி. ஜயபாரதி,**
வேரற்கேணி, கந்தசாமி கோவிலடி,
மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**

**அ. அலோசியஸ்,**
இல.13 அண்ணாநகர் பிரதானவீதி,
வவுனியா.

**4 ஆம் பரிசு**

**வ. இரத்தினசிங்கம்**
கம்பர் மலை,
வல்வெட்டித்துறை.

**5 ஆம் பரிசு**

**புஷ்பராணி கைலாயநாதன்,**
இல.11 5/3 நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை,கொழும்பு - 6

**பாராட்டுப் பெறுவோர்**

**மு. சுலோச்சனா,**
உள்ளூராட்சி உதவி,
ஆணையாளர் செயலகம்,
முல்லைத்தீவு.

**தையல் நாயகி கந்தையா,**
"இந்திரகிரி"
வதிரி, கரவெட்டி

சொற்சிலம்பம் போட்டி இல.416இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 04.05.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

**செ. யோகபாலன்,**
இல.40 புதுவீதி,1ஆம்
ஒழுங்கை, கொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 414 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# முகமாலையில்.....

(34 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய 100 மீற்றர் தூரமும் மக்களின் பாதுகாப்புக் கருதி குடியமர்த்தப்படவில்லை அப் பகுதியில் தொடர்ந்து வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. கட்டம் கட்டமாகக் காணிகள் கையளிக் கப்பட்டு மக்கள் மீள்குடியமர்த் தப்படுவர்ர்கள் எனவும் தெரிவித் தார். இதேபோன்று ஏ-9 வீதி யின் தெற்குப் புறமாக உள்ள இந்திராபுரம் கிராமம் தொடக்கம் முகமாலை வரையான பகுதி யில் வெடிபொருள்கள் அகற் றப்பட்ட 300 மீற்றர் தூரத்தில் 200 மீற்றர் தூரம் வரையான பகுதி (நாதன் கடை சந்தி வரை) விரைவில் மக்களை மீளக்குடிய மர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த பகுதிக்கு முட்கம்பி வேலி அமைக்க மீள்குடியேற்ற அமைச்சு நிதி உதவி வழங்கவுள் ளது. ஏ-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம் வரையான பகுதிக்கு வேலி அமைத்ததும் மீள்குடியமர்த்தலுக்காக காணிகள் கையளிக்கப்படும் எனவும் அன்றைய தினம் படை யினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் தில் இருந்த முகமாலை கிளாலி வீதியின் மேற்குப் பகுதியிலும் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுவர் என எதிர்பார்ப்பதாகவும் தற் போது இயந்திரம் மூலமும் மனிதவலு மூலமும் வெடிப் பொருள்கள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதால் வெடிப் பொருள்கள் உள்ள பகுதி கள் இனங்காணப்பட்டு அங்கு வெடிப் பொருள்களை அகற்றும் பணிகளில் நிறுவன அலுவலர் கள் அக்கறை செலுத்தி வருகின் றனர் எனவும் தெரிவித்தார்.

மனித வலு மூலம் வெடிபொருள் கள் அகற்றும் ஒவ்வொரு பணி யாளரும் மிக அவதானத்துடனும் விவேகத்துடனும் செயற்பட்டு பணிகளை மேற்கொள்வதால் பாரிய சேதங்கள் ஏற்படாதவாறு பணியாற்றுகின்றனர். இருப்பி னும் முகமாலைப் பகுதியில் இரு வர் இறந்ததுடன் பலர் கை கால் விரல்கள் போன்ற அவயங் களை இழந்துள்ளனர். இடங் களைப் பார்வையிட அழைத்துச் செல்ல முன்னர் உரிய வரை படங்கள் மூலம் வெடி பொருள் களை அகற்றல் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்ட பின்னர் எமக்கு பாதுகாப்புக் கவசங்கள் அணிவித்து வெடி பொருள்கள் அகற்றும் இடங் களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தனர்.

கடமையில் பெருமளவு பெண் கள் வெடிபொருள்கள் அகற் றும் பணியில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது. கடமை முடிந்து சிறிது நேர ஓய்வுக்காக வந்தி ருந்த இரு பெண்களிடம் தொழி லின் கஷ்டங்கள் தொடர்பாக விசாரித்தபோது ஒரு பெண் தனது கணவர் இறந்ததால் பிள்ளைகளை வளர்ப்பதற்காக இந்தக் கடினமான தொழிலில் மனமுவந்து பணியாற்றுவதாக வும் மற்றைய பெண் தனது பிள்ளைகளின் எதிர்காலத் தைக் கருதி உயிரை வெறுத்து பணியாற்றுவதாகவும் தெரி வித்தனர். மனிதவலு மூலம் செய்யப்படும் பணிகள் அவ சரப்படாமல் மிகமிக ஆறுத லாக இடம்பெற்றமையைக் காணமுடிந்தது.

மேலும் வெடி பொருள்கள் அகற்றப்பட்டு மக்களை மீளக்குடியமர்த்தத் தயாரான நிலையில் உள்ள 200 மீற்ற்ர் தூரம் வரையிலான பகுதி களையும் பார்வையிட்டோம். பல இடங்களில் பாதைகள் அமைக்கப்பட்டு வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டுள் ளன. அமைக்கப்பட்ட பாதை களும் ஒழுங்காக இல்லாத தால் அப் பகுதியில் வேலிகள் காணப்படாததாலும் காணிகள் ஊடாகவே 200 மீற்றர் தூரம் வரை சென்று பார்வையிட முடிந் தது. அப் பகுதியில் காணப்பட்ட கல்வீடுகள் சேதமடைந்து; அத்தி வாரங்கள் மட்டும் காணப்படுகின் றன. ஒரு சில கிணறுகள் பாதிப் பின்றி காணப்படுகின்றன. அந் தப் பகுதியிலும் மாமரங்களும் மரமுந்திரிகை மரங்களும் காணப் படுகின்றன. இன்னும் ஓரிரு ம ாதத்தில் மக்கள் மீளக்குடியமர்த் தப்படின் பல காணிகளில் காணப் படும் மரமுந்திரிகை மற்றும் மாமரங்களில் பழங்களைப் பறிக்கலாம்.

தற்போது இந்திராபுரம் பிரதான வீதியாகக் கணித்து றெயில்வே கடவை பொருத்தப்பட்டுள்ள இடம் எமது பிரதான வீதியிலி ருந்து சுமார் 30 மீற்றர் தூரம் கிழக்குப் புறமாக உள்ளது. ஏற் கனவே பிரதான வீதி கிரவல் வீதி யாகவும் பின்னர் கனரக வாக னப் பாவனை காரணமாக ஊரி வீதியாகவும் மாற்றப்பட்டுள்ளது. வெடி பொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளோர் இதனை அவதானித்து சரியான இடத்தைக் கண்டுபிடித்து அந்த வீதியினை துப்பரவு செய்தால் மக்கள் தமது காணிகளைப் பார் வையிடச் செல்லும்போது தமது காணியை இனங்காண முடியும் என்பது எமது வேண்டுகோளாக உள்ளது -

அத்துடன் முகமாலைப் பிரிவி லிருந்து இடம்பெயர்ந்து பல் வேறு இன்னல்களுக்கு மத்தி யில் 20 வருடங்களுக்கு மேலாக வேறு பிரதேசங்களில் வாழும் சுமார் 500க்கு மேற்பட்ட குடும் பங்களைச் சேர்ந்த மக்களை மீள்குடியமர்த்த வெடிபொருள் கள் அகற்றும் பணியை துரிதப் படுத்த போதுமான நிதி உதவி வழங்க உலக நாடுகள் முன்வர வேண்டும்.

இதேவேளை புலோப்பளை அல்லிப்பளைப் பகுதியில் டாஸ் வெடிப் பொருள்க்ள் அகற்றும் நிறுவனமும் படையினரின் வெடி பொருள்களை அகற்றும் பிரிவினரும் பணியில் ஈடுபடுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது

“

கடமையில் பெருமளவு பெண்கள் வெடிபொருள்கள் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்ததைக் காண முடிந்தது. கடமை முடிந்து சிறிது நேர ஓய்வுக்காக வந்திருந்த இரு பெண்களிடம் தொழிலின் கஷ்டங்கள் தொடர்பாக விசாரித்தபோது ஒரு பெண் தனது கணவர் இறந்ததால் பிள்ளைகளை வளர்ப்பதற்காக இந்தக் கடினமான தொழிலில் மனமுவந்து பணியாற்று வதாகவும் மற்றைய பெண் தனது பிள்ளைகளின் எதிர் காலத்தைக் கருதி உயிரை வெறுத்து பணியாற்றுவ தாகவும் தெரிவித்தனர்.



(38 ஆம் பக்கத் தொடர்ச்சி)



வியாபாரி தனது மனதை மாற்றி விட முன்பு அந்தச் செருப்பை மரக்கறி பாக்குக்குள் செருகிவிட்டு 100 ரூபா தாளை இந்தாருங்கோ எனக் கொடுத்துவிட்டு பொடிநடையாய் நேராய் செல்லப்பா வீட்டுக்குப் போனார். தனக்குச் சொந்தமாகிவிட்ட அந்தச் செருப்பை செல்லப்பா அண்ணைக்கும் பூமணி அக் காவுக்கும் காட்டிப் புளுகாவிடில் அவர் பொச் சம் தீராது.

குருத்துப் பச்சை நிற செருப்பை மரக்கறி பாக்கில் இருந்து கிளறி எடுத்துக்காட்ட பூமணி சோக்கான கலர் செருப்பு, என்ன விலை என்றார். "சொன்னால் நம்பமாட்டியள் 100 ரூபாதான்" எனச் சொல்ல, செல்லப்பா "கொள்ளை மலிவு" என ஏற்றிவிட்டார். புளுகம் தாங்காத மாரிமுத்து இரண்டு செருப்பையும் ஒன்றுடன் ஒன்றை டொக் டொக் எனத் தட்டிக் கொண்டிருந்தார்.

திடீரென்று மாரிமுத்துவின் முகம் மாரி மழை மேகம்போல் இருண்டது. "செல்லப்பா அண்ணை ஏமாந்து போனன் எண்டார்." என்ன சங்கதி என செல் லப்பா கேட்க ஒரு செருப்பு 8 ஆம் நம் பர் மற்றது 7 ஆம் நம்பர். அவசரப் பட்டுப் போனன் எண்டார். "கையோடை போய் மாத்த வேணும். வாருங்கோ அண்ணை போட்டு வருவம்" என்றார். "வெயில் உச்சிக்கு வந்திட்டுது. பின்னே ரம் போய் மாத்துவம். உன்ரை சயிக்கிளைக் கொண்டு வா" என்றார் செல்லப்பா. "சரி அண்ணை! ஓர் இடமும் போய் விடாதேங்கோ பின்னேரம் வாறேன்" என சோகமயமாகப் போய்விட்டார். வீட்டில் இருக்க இருப்புக் கொள்ளவில்லை.




பல கோணங்களில் யோசித்தார். ஒருவேளை செருப்பு வியாபாரி மதியத்துடன் வியா-பாரத்தை முடித்துக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என ஒரு மனம் சொல்லிற்று. இன்னொரு மனம் சீச்சீ அப்படியெல்லாம் நடக்காது. என்னைக் கடவுள் கைவிடமாட்டார் எனவும் தோன்றிற்று. வந்தது வரட்டும் அந்தந்த வேலையை அப்போதே செய்வது நல்லது என இறுதியாக முடிவு எடுத்துத் தனக்குத் தெரிந்த ஓட்டோ ஒன்றை வாட கைக்குப் பிடித்து நேரடியாக மருதனார் மடத்துக்குப் போய்க் கண்டேன் வியாபாரியை (கண்டேன் சீதையை என ராமருக்கு அனுமான் சொன் னதுபோல்) என மனதுக்குள் புளுகத் தில் ஐயா இந்த செருப்பை மாத்தி 8 ஆம் நம்பர் சைசில ஒரு சோடி தாருங்கோ என்றார். கலர் நீலம்தான் இருக்கு பரவாயில்லையா என வியாபாரி கேட்கப் பரவாயில்லை என்றார்.

மாற்றி எடுத்த செருப்புடன் நேரடியாக செல் லப்பா வீட்டுக்குப் போய் வாயெல்லாம் பல் லாக நின்றார். பூமணி கேட்டா "செருப்பு மாத் தியாவிவிசோ?" "இஞ்சை பாருங்கோ" என நீலவிவிசெருப்பைக் காட்டினார்.

செல்லப்பா "ஓட்டோவுக்கு எவ்வ ளவு?" எனக் கேள்விக்கணை தொடுக்க சளைக்காமல் மாரிமுத்துசொன்னபதில், "மொத்தவிவிசெலவு 250 ரூபா." மாரிமுத்துவைத் தூக்கிவிட பூமணி சொன்னா, "நீலவிவி செருப்பும் மாரி முத்துவுக்கு வடி வாய்த்தான் இருக்கு...!"

# வெயில் காலத்தில்



# எம்மைப் பாதுகாத்து கொள்வது எப்படி?

நிரூஷிகா சோதிநாதன்

கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்தில் நிலவும் உச்ச வெயில் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. இதன் காரணமாக மக்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் சில கட்டாய மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வெயிலினால் எமது உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. தோலில் ஏற்படும் சாதாரண மாற்றங்களிலிருந்து (பருக்கள்) வெப்ப அதிர்ச்சி எனப்படும் பாரதூரமான நோய் வரை வெயிலினால் ஏற்படும் தாக்கம் விரிவடைந்துள்ளது.

வெயிலினால் எமது உடலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. தோலில் ஏற்படும் சாதாரண மாற்றங்களிலிருந்து (பருக்கள்) வெப்ப அதிர்ச்சி எனப்படும் பாரதூரமான நோய் வரை வெயிலினால் ஏற்படும் தாக்கம் விரிவடைந்துள்ளது.

வெப்ப அதிர்ச்சி மரணத்தை ஏற்படுத்தக் கூடியது. அல்லது எமது மனித உடலின் முக்கிய அங்கங்களான இதயம், சிறு நீரகம், நுரையீரல் போன்றவற்றை செயலிழக்கச் செய்யக் கூடியது.

வெப்ப அதிர்ச்சியானது எமது உடல் நீண்ட நேரம் உயர் வெப்ப நிலைக்கு ஆளாவதன் காரணமாக, எமது உட லிலுள்ள வெப்பநிலையைச் சீராக்கும் மையம் பாதிப்படைகிறது. இது எமது உடலில் கட்டுப்பாடற்ற உயர் வெப்ப நிலை ஏற்படுவதால் ஏற்படுகின்றது. இந்த நிலையானது அனேகமான நேரங்களில் நீரிழப்பு உடன் சார்ந்தே ஏற்படுகின்றது. இதன் அறிகுறிகளாகத் தலைச்சுற்று, தாங்கமுடியாத தலைவலி, தலைப்பாரம், அதிகரித்த வெயிலிலும் வியர்வையின் அளவு குறைவடைதல் தோல் ஈரலிப்பற்றதாக மாறுதல், தசைப்பிடிப்பு, வாந்தி, வலிப்பு, மனக்குழப்பம், மனதின் ஒரு நிலையற்ற தன்மை மற்றும் தன்னிலை மறத்தல் ஆகியன காணப்படுகின்றன.

வெப்ப அதிர்ச்சியானது 4 வயதிலும் குறைந்த குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், 65 வயதிலும் கூடியவர்கள், இருதய மற்றும் சிறுநீரக நோய் உள்ள வர்கள், அதிகரித்த அல்லது குறைந்த உடல்நிலை உடையவர்கள், உயர் குருதியமுக்கம் மற்றும் நீரிழிவு நோய் உடையவர்கள், அதிகளவிலான மது பாவிப்பவர்களை அதிகளவில் தாக்கு கின்றது.

எனவே நாம் அனைவரும் இந்த அதிகரித்த வெயிலின் தாக்கத்திலிருந்து எம்மையும் மற்றவர்களையும் பாதுகாக்கச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும். அந்த நடவடிக்கைகளாவன: இலேசான ஆடைகளை அணிதல் மற்றும் வெளியிடங்களுக்குச் செல்லும்போது தொப்பி மற்றும் குடை என்பவற்றைப் பயன்படுத்துதல், வெளியே செல்லும்போது கண்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்க கறுப்புக் கண்ணாடி அணிதல், அதிகளவிலான நீர் மற்றும் பானங்களை அருந்துதல், பிரதானமாக உடலில் ஏற்படும் நீரிழப்பைத் தடுப்பதற்கு தினமும் குறைந்தது 8 குவளை தண்ணீர் அல்லது பழச்சாறு அருந்த வேண்டும்.

உடற்பயிற்சி செய்யும்போது அல்லது வெளியிடங்களில் வேலை செய்வதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பதாகவே நீர்/ பானம் அருந்த வேண்டும். அத்துடன் அவ்வாறு வேலை செய்யும்போது ஒவ்வொரு 20 நிமிடங்களுக்கு ஒரு தடவை தண்ணீர்த் தாகம் இருந்ததோ இல்லையோ சிறிதளவு நீர் அருந்த வேண்டும். அத்துடன் இயலுமான வரையில் காலை மற்றும் மாலை நேரப் பொழுது களில் வேலைகளைச் செய்தல். அதாவது வெயில் நேரங்களில் வேலை செய்வதைத் தவிர்த்தல்.

ஆகவே தற்போது நிலவும் உச்ச வெயிலினால் ஏற்படும் தாக்கங்களை எம் மனதில் கொண்டு இயன்றவரை எம்மைப் பாதுகாப்போம்.

யாழ்.போதனா வைத்தியசாலை,
நீரிழிவு சிகிச்சை நிலையம்.

உலக சுகாதார தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டிகள்.

**கட்டுரை**

தலைப்பு: ஆரோக்கியமான வாழ்வு,
உள்ளடக்கம் ஆரோக்கியமான வாழ்வின் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் கட்டுரையானது அமைவதோடு, ஏ4 தாளில் 34 பக்கங்களுக்குள் இருத்தல் அவசியமாகும்.
**வயதுப் பிரிவு**: கீழ்ப்பிரிவு தரம் 1 முதல் 5 வரை.
**மத்திய பிரிவு**: தரம் 6 முதல் 10 வரை.
**மேற்பிரிவு**: தரம் 11 க்கு மேற்பட்டோர்.

**சித்திரம்**

தலைப்பு: ஆரோக்கியமான வாழ்வு.
உள்ளடக்கம் ஆரோக்கியமான வாழ்வின் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் சித்திரமானது அமைதல் வேண்டும்.
ஊடகம் எந்தவொரு ஊடகத்தையும் சித்திரத்துக்குப் பயன்படுத்த முடியும்.
**வயதுப் பிரிவு**: கீழ்ப்பிரிவு தரம் 1 முதல் 5 வரை.
**மத்திய பிரிவு**: தரம் 6 முதல் 10 வரை.
**மேற்பிரிவு**: தரம் 11 க்கு மேற்பட்டோர்.


1. ஆக்கங்களை 06.05.2016 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
2. ஆக்கங்கள் சுயமானவையாக இருப்பதோடு, முன்பு பிரசுரிக்கப்படாதவையாகவும் வேறுபோட்டிகளில் சமர்ப்பிக்கப்படாதவையாகவும் இருத்தல் அவசியமானதாகும்.
3. பாடசாலை அதிபரின் கையொப்பத்துடனும் மாணவரின் சுயவிவரத்துடனும் (பெயர், வயது, தரம், முகவரி: மற்றும் தொலைபேசி இலக்கம்) ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். (ஆக்கங்களை மேற்குறிப்பிட்ட முகவரியில் நேரிலும் சமர்ப்பிக்க முடியும்)
4. மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 0212220179.



# புதிதாய் வாழ்வோம்

## யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாட்டுக்கு புதிய ஆயரின் அழைப்பு

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*



யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்றவுடன் புதிதாய் வாழ்வோம் என்னும் கருப் பொருளில் யாழ் மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி மகா நாடு ஒன்றை நடத்துவதற்கான அழைப்பை வெளியிட்டுள்ளார். இவ்வாண்டு ஆவணி மாதத்தில் நடை பெறவுள்ள மேற்படி மகாநாடு பற்றி இந்தக் கட்டுரை விளக்குகிறது.

**இரண்டாம் வத்திக்கான் சங்கமும் புதுப்பித்தலும்**


கத்தோலிக்க திருச்சபையின் எந்த மூலையில் புதுப்பித்தல்,புது வாழ்வு, மறுமலர்ச்சி என்ற பதங்கள் பேசப்பட்டாலும் அத்துடன் இணைத்துப் பேசப்படுவது இரண்டாம் வத்திக்கான் சங்கமே ஆகும். கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில்இடம் பெற்ற பெரிய புரட்சி அது. தூய ஆவியால் தூண்டப்பட்டவராக திருத்தந்தை 23ஆம் அருளப்பர் யாரும் எதிர்பார்க்காத வேளை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டுங்கள் மூடிக்கிடக்கும் திருச்சபையின் யன்னல்கள் திறக்கப்பட்டு புதிய காற்று உள்ளே வரட்டும் என்றார். உலகக் கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியையும் புது மாற்றத்தையும் கொண்டுவர ஏதுவான 16 ஏடுகள் இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் உருவாக்கப்பட்டன. இரண்டாம் வத்திக்கான்சங்கம் இன்னும்முழுமையாகநடைமுறைப்படுத்தப்படவில்லை என்று கூறுவோர் ஒரு புறமிருக்க திறக்கப்பட்ட யன்னல் வழியே வந்த காற்று திருச்சபையின் ஆவணங்களை வெளியே அள்ளிச் சென்று விட்டது என்று கூறுவோரும் உள்ளனர். இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கம் நிறைவுற்ற ஐம்பதாம் ஆண்டு நிறைவை நினைவு கூரும் விதமாகத்தான் 25 ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிவிக்கப்படும் இரக்கத்தின் புனித ஆண்டை வழக்கத்திற்கு மாறான புனித ஆண்டாக திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் இவ்ஆண்டு அறிவித்துள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் அப்போதைய யாழ். ஆயரான எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. ஆண்டகை பங்கு பற்றி வந்தபின் செயற்படுத்திய பல மாற்றங்களின் தொடர்சியாகவே யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தில் இப்போது புதிதாய் வாழ்வோம் என்னும் கருப்பொருளில் யாழ். மறைமாவட்டத்தில் அழைப்பு விடுத்துள்ள மேய்ப்புப்பணி மகாநாட்டை நோக்க வேண்டியுள்ளது. 1994ஆம் ஆண்டு யாழ். ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை காலத்தில் யாழ் மறைமாவட்டத்தில் நடைபெற்ற மேய்ப்புப்பணி மகாநாட்டின் பின்னர் இம்மகாநாட்டுக்காக அழைப்பு விடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகாநாடு பற்றி குருக்கள், துறவிகள், இறைமக்களுக்கான யாழ் ஆயரின் சுற்றுமடல்**

ஒரு மறைமாவட்டத்தின் ஆயர் மறைமாவட்டத்தின் முக்கிய தருணங்களிலும் சிறப்பு விழாக் காலங்களிலும் தன் ஆளுகைக்கு உட்பட்ட குருக்கள், துறவியர், பொது நிலையினராகிய இறைமக்களுக்கு சுற்று மடல்களை விடுப்பது வழக்கம். யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ். மறைமாவட்டத்தின் புதிய ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் வெளியிட்ட தவக்கால சுற்று மடலானது ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட் டுள்ளது. அதுவே யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மகா நாடு பற்றிய அறிவிப்பாகும். அவர் அச்சுற்றுமடலில் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

நாம் யாழ். மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றிருக்கும் நிலையில் எதிர்காலத்தில் யாழ். திருச்சபை எத்திசைகளுக்கு பயணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கவும் அதனைச் செயற்படுத்தவும் ஒரு ஐந்தாண்டு கால புதுப்பித்தற் திட்டம் ஒன்றை உருவாக்க விரும்புகிறோம். உங்கள் அனைவரது கருத்துக்களையும் உள்வாங்கி ஒரு மேய்ப்புப்பணி மகா நாட்டை நடத்துவதன் மூலம் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களைத் தீர்மானித்து நடை முறைப்படுத்த விரும்புகிறோம். வருகின்ற ஆவணி மாத இறுதியில் நடைபெற இருக்கின்ற இம்மகாநாட்டுக்கான ஆயத்த வேலைகள் இப்பொழுதே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்முன்னெடுப்பு இறை விருப்புக்கு அமைவான பயனுறு செயற்பாடாக அமைய வேண்டுமென தொடர்ச்சியாக இறைவனை வேண்டுமாறு கோருகிறோம். மேலும் ஊர் கூடித் தேரிழுப்பது போல அனைவரும் இணைந்து ஆர்வத்தோடு இந்தப் புதுப்பித்தல் முயற்சியில் பங்கேற்க முன்வருமாறு அழைப்பு விடுக்கிறோம்.



> புதிதாய் வாழ்வோம் என்னும் கருப்பொருளில் யாழ் ஆயரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள மேய்ப்புப் பணி மகாநாடானது இரக்கத்தின் ஆண்டின் உள்ளேயே நிறைவு பெற வுள்ளது என்கின்ற வகையில் சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

**எல்லோரையும் தேடிச் சென்று காப்பாற்றுங் கள் - யாழ். ஆயர் குருக் களுக்கு அழைப்பு**

யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்களுக்கு எழுதியுள்ள சுற்று மடலில் தாம் இப்போது புதிதாய் வாழ்வோம் என்னும் கருப்பொருளில் அழைப்பு விடுத்துள்ள மேய்ப்புப்பணி மகாநாடு பற்றியும் அதன் காரணங்கள் குறிக்கோள் பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளார். எல்லோரையும் தேடிச்சென்று காப் பாற்றுங்கள் – இதுவே இந்த நேரத்தின் சவாலாகும். இந்தக் கடமையைச் செய்ய முன்வாருங்கள் என குருக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். ஆயரின் அந்த அழைப்பின் முக்கிய கருத்துக்களை இங்கு நோக்குவோம்.

1.கத்தோலிக்க திருச்சபையில் வாழும் இறைமக்கள் கிறிஸ்துவுடனான ஒரு தனிப்பட்ட சந்திப்பு அனுபவத்தை பெற்றவர்களாகத் தெரியவில்லை. இதனைச் சில வேளைகளில் இவர்கள் வேறு திருச்சபைகளில் அல்லது கத்தோலிக்கத்தைச் சாராத குழுக்களில் பெற்றிருக்கிறார்கள்.

2.எமது திருச்சபைக் குழுமங்களில் இறைமக்கள் அவர்களாகவே எற்றுக்கொள்ளப்பட்டு,பெறுமதி மிக்கவர்களாக உணரப்பட்டு, மதிக்கப்பட்டு, திருச்சபையில் உள்வாங்கப்பட்ட அர்த்தமுள்ள குழும வாழ்வின் பிரசன்னம் குறைவாகவே உள்ளது.

3.திருச்சபையின் அங் கத்தவர்கள் தமது இருக்கைகளில் இருந்து வெளியே வந்து திருச் சபையின் விளிம்புகளில் இருப்போரைச் சந்தித்து திரும்பவும் அவர்களைக் கடவுளின் குடும்பத்திற்கு அழைத்துவரச் செயலாற்றக் கூடிய அர்ப்பணமிக்க மறைப்பணி நமக்குத் தேவை.

4.நேர்மையானவர்கள் எமது திருச்சபையை விட்டு விலகி வேறு கத்தோலிக்கமல்லாத குழுக்களில் இணைவதற்குக் காரணம் கொள்கைசார் பிரச்சினைகள் அல்ல, மாறாக சாட்சிய வாழ் வுசார் பிரச்சினைகளே என்பதோடு இறையியல்சார் பிரச்சினைகள் அல்ல, மாறாக அணுகுமுறைசார் பிரச்சினைகளே என்பதும் அடிக்கடி எமது அனுபவமாய் உள்ளது.

5.கடினமான உண்மை என்னவென்றால் இந்த அணுகுமுறையில் உள்ள குறைபாடுகள் எல்லாம் எமது நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் சீடத்துவ வாழ்விலும் உறவாடல் நிலையிலும் பணியிலுமே உள்ளன என்பதாகும். நாம் திருச்சபையின் வாழ்வு பற்றிய இந்த முக்கியமான விடயங்கள் பற்றிய ஒரு அற்புதமான இறையியலைக் கொண்டிருக்கலாம் ஆனால் நாம் உண்மையான திருச்சபையின் வாழ்வோடு ஒன்றிணைக்கப்படவில்லை என்றால் அவை எல்லாம் அர்த்தமற்றவை.

**மேய்ப்புப்பணிமகாநாடு இரக்கத்தின் ஆண்டின் சிறப்பு**

புதிதாய் வாழ்வோம் என்னும் கருப்பொருளில் யாழ் ஆயரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள மேய்ப்புப்பணி மகாநாடானது இரக்கத்தின் ஆண்டின் உள்ளேயே நிறைவு பெறவுள்ளது என்கின்ற வகையில் சிறப்பு முக்கியத்துவம் பெறுகிறது. யாழ். ஆயர் தமது பணிப் பொறுப்பை ஏற்ற கையோடு அழைப்பு விடுத்துள்ள இந்த மேய்ப்புப்பணி மகா நாடானது அடுத்த 5 ஆண்டுகளுக்கான திட்டங்ளையும் தீர்மானங்களையும் வகுத்து யாழ். மறைமாவட்டத்தில் புதுமையையும் புனிதத்தையும் புகட்டி ஒரு புதிய பாதையில் இட்டுச்செல்ல ஆசிப்போம்.

மற்றைய மேய்ப்புப்பணி மகாநாடுகள் மற்றும் புதிய திட் டங்கள் தீர்மானங்களை வகுக்கும். அவைகளைவிட இந்த மேய்ப்புப்பணி மகாநாடு விசேட கவனத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும். இன்றைய நவீன தொழில் நுட்ப யுகம், வளர்ந்துள்ள ஊடக கலாசாரம், இடை விடாத தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக வலைத்தளங்கள் என்பவற்றில் சிக்கியுள்ள இன்றைய மக்களை இவற்றின் மத்தியில் நெறிப்படுத்துவது கடினமானது. மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போரும் அதனால் யாழ்ப்பாண மறைமாவட்டம் அடைந்த பின்னடைவும் முன்னெடுக்கப்பட முடியால் கைவிடப்பட்ட பல புதிய முயற்சிகளும் இங்கு கவனத்துடன் நோக்கப்பட வேண்டும். அழிக்கப்பட்டவை ஆலயங்கள் பங்குப் பணி மனைகள் மட்டுமல்ல திருச் சபையின் இறைமக்கள் வாழ்வும்தான். அவர்களின் தனிப்பட்ட வாழ்வும் இங்கு உன்னிப்பாகப் பாக் கப்பட வேண்டும். போரின் கொடுரத்தை இறுதி வரை தாங்கிய வன்னி மண்ணை உள்ள டக்கிய கிளி, முல்லை மறைக் கோட்ட மக்களின் வாழ்வாதாரம் கல்வி, கலை, கலாசாரம் ஆன்மிகம் என்பனவற்றிற்கு உயிரூட்டம் தரும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். போரின் காரணமாக யாழ் மறைமாவட்டத்தில் மிக நீண்ட காலமாக ஒழுங்கமைக்கப்பட முடியாத அதே வேளை இன்று பெரும் சர்ச்சையையும் சவாலையும் எதிர் நோக்கியுள்ள இளைஞர்களின் இன்றைய வாழ்வு அவர்களின் எதிர் காலம் என்பவற்றில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

என்றுமில்லாத கலாசார சீர்கேடு – வளர்ந்து கொண்டே வரும் பாலியல் வன்முறை – அன்றாடம் அதிகரிக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் – முடிவற்றுத் தொடரும் தற்கொலைகள் – அளவுக்கதிகமான குடி போதை மற்றும் போதைப் பொருள்பாவனை என்பன கூட இங்கு கவனமாகக் கணிக்கப்பட வேண்டும். அன்றாடம் மரணத்தை விளைவிக்கும் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் – கைத்தொலைபேசி மற்றும் கணினியின் மோகம் அதன் தாக்கம் – முகநூல் மற்றும் சமூக வலைத்தளங்களின் அதீத பாவனை என்பன கூட இங்கு மேலோட்டமாக நோக்கப்பட வேண்டியனவல்ல.

சுருக்கமாகச் சொல்வதானால் யாழ் மறைமாவட்டமும் அதன் சமயக் கட்டமைப்பும் சார்ந்த விடயங்கள் மட்டுமல்ல இறைமக்கள் அவர்கள் வாழ்வு – அவர்கள் இன்று எதிர் நோக்கும் சவால்கள் என்பன பற்றிக்கூட ஆலோசிக்கப்பட்டு அவை எவ்வாறு மறைமாவட்டத்தில் எதிர்நோக்கப்படலாம். இந்த விடயங்களுக்குகூட ஒரளவு என்றாலும் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். மேலே கூறப்பட்ட விடயங்களுக்கு யாழ். மறைமாவட்டத்தினுள் என்ன செய்யப்படலாம், எவ்வாறு நெறிப்படுத்தல்களும் வழிகாட்டல்களும் வழங்கப்படலாம் என்பதில் கவனம் தேவை. மிக இலகுவாக இங்கு இவை எழுதப்படுவது போல் எந்த தீர்வையும் எட்ட முடியாது என்பது யதார்த்தம் என்றாலும் அவற்றை எவ்வாறு கையாளலாம் என்பது நோக்கப்பட வேண்டும். இதற்கு மறையுரை மற்றும் விசேட கற்கைள் ஒழுங்கமைக்கப்பட்ட கருத்தரங்குகள் என்பவற்றை எவ்வாறு இங்கு பயன்படுத்தலாம்? பயிற்றப்பட்ட நெறியாளர்கள் இங்கு உருவாக்கப்பட அல்லது பயன்படுத்தப்படலாம்? என்பது நோக்கப்பட வேண்டும். ஊடகத்தை எவ்வாறு சிறப்பான விதமாகப் பயன்படுத்தலாம்? என்பதுகூட இங்கு விசேடமாகக் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

நிறைவாக என்ன முடிவு வரும்? வந்தாலும் என்ன மாற்றம் வரும்?அது எப்படி நடைமுறைப் படுத்தப்படும்? என்று நம்பிக்கை அற்று இருப்பதை விடுத்து தூய ஆவியின் துணையுடன் நம்பிக்கையுடன் இருப்போம். **இரக்கம் நிறைந்த இறைவன் புதுமைகளையும் மாற்றங்களையும் கொணர்ந்து யாழ். மறைமாவட்டத்துக்கு ஒரு புதிய முகம் கொடுப்பாராக.**





பணிக்கர் புளியங்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மனுக்கு ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர்கள், கலாசார உத்தியோகத்தர், வவுனியா சிவன்கோயில் நிர்வாக உறுப்பினர், பரன்நட்டகல் மாதா கோயில் பங்குத்தந்தை மற்றும் கிராமசேவகர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஜ)



இருபாலை தென்கோவை திருவருள் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. (ஜ)





சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந் திருவிழாவில் இடம் பெற்ற கொடியேற்றத் திருவிழாக் காட்சிகள். (ஐ-9)





அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான எழுத்தறிவு வகுப்புகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. “குணநிதி கல்வி அறக்கட்டளை” நிறுவனத்தால் இரு ஆசிரியைகள் மூலம் மாணவர்களுக்கு எழுத்தறிவு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. (ஐ-9)





வவுனியா தம்பனைச்சோலை பாரதி முன்பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், சிறப்பு விருந்தினராக திருமதி வ.சசிகலா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ)





கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மாணவ தலைவர்களுக்கு சின்னஞ் சூட்டும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றது. (ஐ-9)



வடமாகாணசபை உறுப்பினரான மயில்வாகனம் தியாகராசா குறித்து ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வவுனியா தெற்கு வலய பூவரசங்குளம் ஆரம்பப் பாடசாலைக்கு அலுவலகத் தளபாடத்தை வழங்கினார். (ஐ)





வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் வன்னி விழிப் புலனற்றோர் சங்கத்தின் ஊடாக கிளிநொச்சி மாவட்டம் முழங் காவில் எனும் இடத்தைச் சேர்ந்த போரினால் பாதிக்கப்பட்டவருக்கு வாழ்வாதார நிதி வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தில் வைத்து கையளிக்கப்பட்டது. (ஐ)





யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விழிப்புலனற்றோரின் விசேட இன்னிசை நிகழ்வு மன்னார் நகர மண்டபத்தில் ஆசிரியை செல்வி.செபமாலை பெனடிக்ரா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்டான்லி டிமெல், கௌரவ விருந்தினர்களாக மன்னார் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்டியன், நகையக உரிமையாளர் மு.செல்வகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். (ஐ)





வவுனியாவில் "உயிரெழுத்து" பத்திரிகை வெளியீடு செய்யப்பட்டது. வவுனியா குட்செட் வீதியில் அமைந்துள்ள தனியார் மண்டபத்தில் மூத்த ஊடகவியலாளரும் உயிரெழுத்து பத்திரிகையின் ஆசிரியருமான அருணா செல்லத்துரையால் பத்திரிகை வெளியிடப்பட்டது. (ஜ)







வவுனியா சமணங்குளம் யுரேனஸ் இளைஞர் கழகத்தின், தமிழ் –சிங்கள புது வருடப்பிறப்பை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு விழா, கழகத்தின் மைதானத்தில் கழகத்தின் தலைவர் க.சிம்சுபன் தலைமையில் நடைபெற்றது. (ஜ)





அனலைதீவு பெரியபுலம் ஸ்ரீசங்கரநாதர் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் புது வருடத்தன்று இடம்பெற்றது.(ஜ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் கிணறு அமைப்பதற்காக புதுக்குடியிருப்பு உடையார்கட்டு - தெற்கு மூங்கிலாறைச் சேர்ந்த பயனாளிக்கு இரண்டாம் கட்டமாக 28 சிமெந்துப் பைகள் வழங்கப்பட்டுள்ளன. சங்கத் தலைவர் கு.பகீரதனால் இவை வழங்கப்பட்டன. (ஜ)





வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவிகள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். (ஜ-108)



இன நல்லுறவு அமைச்சால் சிறந்த சமூக சேவைக்கான விருது கிளிநொச்சி முழங்காவில் ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றிய மருத்துவர் கே. குமணனுக்கு வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம், மருத்துவர் கே.குமணனுக்கு சிறந்த சமூக சேவைக்கான விருதை வழங்கிக் கௌரவித்தார். (ஜ-9)





கச்சாய் அ.த.க. பாடசாலையில் மாணவர்களுக்கிடையிலான சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நடத்தப்பட்டன. அதிபர் கா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற போட்டிகளில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களான கயிறடித்தல் முட்டி உடைத்தல் தேங்காய் துருவுதல் கிடுகு பின்னுதல் உட்பட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. (ஜ-9)


ES
ES Printers
ES GiftZ
உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்
www.esgiftz.com
info@esgiftz.com
Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print
tearing trax.
COFFEE HOUSE
FASHION
INSURANCE
YAMAHA
HAPPY BIRTHDAY
VOTE
#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

## மரண அறிவித்தல்கள்

### செல்வி பராசக்தி சண்முகம்

( ஓய்வு பெற்ற நெசவுக் கைத்தொழில் போதனாசிரியர் )



**மண்ணில்**
**18.02.1936**
**விண்ணில்**
**15.04.2016**

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம், வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பராசக்தி சண்முகம் (இரத்தினம்-ரீச்சர்) 15.04. 2016 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் (ஆசைப் பிள்ளை ஆசாரியார்) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சௌந்தரநாயகி, தையல்நாயகி மற்றும் நாகரட்னம், நாகலிங்கம் (செல்வம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரவணபவன் (கிளி),வரதலக்சுமி (வரதா), நடராசா, வரதராணி ஆகியோரின் பாசமிகு சிறிய தாயும் புவிதாஸ், சுரேந்திரதாஸ், சுஜித்தா, சுதாகர் மற்றும் யசீதர், தனுசியா கிரீதர், சுகன்யா, நிரோசியா ஆகியோரின் பாசமிகு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**நிரந்தர முகவரி**
**வரதபவனம்**
**வங்களாவடி,**
**வேலணை மேற்கு,**
**வேலணை.**

**தற்காலிக முகவரி**
**23/1, நாவலடி வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**நாகலிங்கம் (செல்வம்)021 222 0574**
**தனுசியா (கனடா) 00190 555 42751**
**நாகரட்னம் (பிரான்ஸ்) 0033954501928**



திருமதி

### எஸ்.பி.கிருஷ்ணன் இராசமணி

கே.கே.எஸ். றோட், கலட்டி அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வேரற்கேணியை வசிப்பிடமாகவும், அரியாலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கிருஷ்ணன் 14.04.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-மங்களம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பண்டாரி- சின்னம்மா தம்பதியரின் மருமகளும், எழுத்தாளரான எஸ்.பி.கிருஷ்ணனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அன்பழகன் (கண்ணன்) மற்றும் மதியழகன் (பாபு), வேலழகன் (பாப்பா) பேரழகன் (பாப்பி) ஆகியோரின் பாசமிகு தாயும், பிறிதிராணி, வசந்தி, ஜெகதீஸ்வரி, காமலீற்றா ஆகியோரின் மாமியும், சாகித்தியா, மோகனியா, தீபிகன், பிரவின், பிரகவி பிரதாபன், சாகித்தியன், பொற்சுடர், இசைமதி, பிறீத்திகா பிரியந்தி, பிருந்தா ஆகியோரின் பேர்த்தியும், பூமணி, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (18.04.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.244/4, கண்டி வீதி, அரியாலை என்னும் முகவரியில் அமைந்து அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
**குடும்பத்தினர்**

**இல.244/4,**
**கண்டி வீதி, அரியாலை.**

(J/409) (10,17)

## மரண அறிவித்தல்கள்

### மல்லிகானந்தபரமகுலசிங்கம் மதுசுதன்



அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மல்லிகானந்த பரமகுலசிங்கம் மதுசுதன் நேற்று (16.04. 2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மல்லிகானந்தபரமகுலசிங்கம் சித்திரமொழி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஐயலிங்கம்-பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரபாகனியின் அன்புக் கணவரும், லிவிதா, டிலிக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தராசா, மணிவண்ணன், சந்திரகுமார், சுபாஜினி, சந்திரமோன், மதியரசன், மயூரன், விஜயமாலினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி கிழக்கு, மினங்குக்குட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி கிழக்கு,**
**ஐயனார் கோயிலடி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி பரமேஸ்வரி இராசையா



பிறப்பு 02.11.1928
இறப்பு 16.04.2016

யாழ்.அனலைதீவைப் பிறப்பிடமாகவும்,யாழ்.நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இராசையா நேற்று (16.04.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை இராசையாவின் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதிப் பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மருமகளும், லம்போதரநாதன் (லண்டன்), இராசலிங்கம் (சிட்னி), காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் விமலாதேவி (நல்லூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பமணி தம்பித்துரை (லண்டன்), கனகசபை (கனடா), காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, செல்லத்துரை, தம்பித்துரை (கலைவாணி), பொன்னம்மா மற்றும் இராசம்மா, கமலாம்பிகை, சிவரூபி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பராசக்தி, ஜெய்தர்சினி ஆகியோரின் அன்பு மாமியாரும், முரளி, சங்கர், சிவகாமி (லண்டன்), சேந்தன், குகன் (சிட்னி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ரவின், அரந்தன் (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

290/14, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**இ.லம்போதரநாதன்**
**இ.இராசலிங்கம்**
**இ.விமலாதேவி**
} **021 205 4018**

### இளையதம்பி ரமேஷ்



கொயிலாமனை, கொடிகாமம் முகவரியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி ரமேஷ் 12.04.2016 லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி மு.ப 10.00 மணிக்கு லண்டனில் நடைபெறும்.அவரது பிறந்த இடமாகிய கொயிலாமனை, கொடிகாமத்தில் நினைவு நிகழ்வுகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: **மைத்துனர்**
**எஸ். ராசன், கண்டாவளை**

077 1315 449

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் சண்முகராஜா

**(அப்பன்)**



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சண்முகராஜா 15.04.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், ஈசுவர பாதம் - அரியமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், சியாமினியின் அன்புக் கணவரும், சாரங்கன், சந்தோஸ், சந்தியா ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வறாணி, செல்வநாயகி, புஸ்பறாணி, சுபேந்திரன், விஜிதா, கவிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பற்குணநாதன், சிறிஸ்கந்தராஜா, ஆனந்தராஜா, சசீலா, துஷிந்தன், பிரதீப் ஆகியோரின் மைத்துனரும், வினோத் - பிரியங்கா, சஞ்ஜீவன், சகானா, சரன்குத்தி, அனுசாந், அனுசாலா, பூஜா, தீபிகா, அர்ச்சனா, அபிநயா, சாய்சஞ்ஜெய் ஆகியோரின் அன்பு மாமனும், கர்னியா, சாருகா ஆகியோரின் பெரியப்பாவும் ஆதேஷின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் 25.04. 2016 திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 610 4779** (ஜே.415) (13.17.18)

### திருமதி நீற்றா திரேசம்மா (மலர்) கீதபொன்கலன்



**பிறப்பு**
**17.03.1937**

**இறப்பு**
**14.04.2016**

யாழ் பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நீற்றா திரேசம்மா (மலர்) கீதபொன்கலன் 14.04.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தேவசகாயம் மேரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராயப்பு மதலேனம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கீதபொன்கலன் அவர்களின் பாசமிகு மனைவியும் கலிஸ்ரா, டிலிப்குமார், சுனித்தா, ரவிக்குமார், ஆனந்தகுமார், விஜயகுமார் காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரான்சிஸ்(ஜெயம்), ரஞ்சினி, ஜோன்சன், றசிந்தா, சுபா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெனிற்றா, றியாட்டீன், றிமோல்டின், ஆரோன், சீமோனே, அனுசாந், அனுமிதா, சாருகா, சோபி ஸ்ரெபான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (18.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பரிசுத்த மரியன்னை தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# Study in Cyprus

ஐரோப்பிய நாடான சைப்ரசில்
குறைந்த செலவில் படிக்க ,உழைக்க



* Business Management
* Hotel & Tourism Management
* Computer Science
* Engineering
* MBA

Next Intake Sept 2016. Apply Now

- No IELTS
- No Interview
- Very low Course fee
- 100% Visa Success

Study & Work in
Latvia, Lithuania, Poland
Swiss, Germany , France , Italy

ICS Study Overseas
Admission Help line
076 7013060
107, B 1/1 Galle Road,Colombo - 06



# பதவி வெற்றிடம்

* சமையலாளர்
* சமையல் உதவியாளர்
* காசாளர்/மேசைப்பணியாளர்

வடக்கின் முன்னணி நட்சத்திர Hotel ஆன Tilko Jaffna City Hotel இல் மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு பணியாளர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

- Hotel துறையில் குறைந்தது ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
- சிறந்த நம்பகத்தன்மையான வாய்ப்புடன் கூடிய கவர்ச்சிகரமான சம்பளமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 077 330 6985


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
30.01.1943



சிவப்பேறு
18.03.2016

## திருமதி சரஸ்வதி நடேசு

கடந்த 18.03.2016 இறையடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் அமரர் நடேசு சரஸ்வதி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள் ளது, அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கம்மாலையடி,
சண்டிலிப்பாய்
077 625 8293

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(ஸ்ரீ வைரவர் ஹாட்வெயார்)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## திருமதி மீனாம்பிகை கனேசலிங்கம்



தோற்றம்
02.12.1940

மறைவு
18.03.2016

கடந்த 18.03.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி மீனாம்பிகை கனேசலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் 20.04.2016 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கனேசலிங்கம் (கணவர்)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

141/5, மங்கையற்கரசி ஒழுங்கை,
நல்லூர்.
021 721 0301

(J.369/413.18)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பகவதியம்மா சச்சிதானந்தமுதலி

தோற்றம்
26 . 10 . 1928



மறைவு
16 . 04 . 2016

சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதியம்மா சச்சிதானந்தமுதலி 16.04.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அருணாசல ம் சச்சிதானந்தமுதலியாரின் பாசமிகு மனைவியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சட்டநாதர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஜீவராணி (தேவி) நந்தகுமார்



கண்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி, கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான ஜீவராணி நந்தகுமார் கடந்த (15.04.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிங்காரவேல்-லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், நந்தகுமாரின் பாசமிகு மனைவியும், ஜெயாலன், கவிப்பிரியா, சச்சின் ஆகியோரின் தாயாரும், நடராசா, மகேந்திரன் (கனடா), திருமதி ரஞ்சனதாஸ், மகேஸ்வரி, செல்வராஜா (லெபனான்), தியாகராஜா (லண்டன்), முரளீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுப்பிரமணியம்-தனலட்சுமி, கனகரத் தினம், சுப்பிரமணியம்-பார்வதி, தம்பிராசா, சந்திரசேகர், கனக சுந்தரம்-கோகுலதேவி, கதிரவேல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

81/14A, பிறவுண் வீதி,
கொக்குவில். 021 222 9243

தகவல்:
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி தவமணி நாகலிங்கம்

கடந்த 18.03.2016 வெள்ளிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அமரர் தவமணி நாகலிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 17.04.2016 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும், அந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தி லும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புரிமை யுடன் அழைக் கின்றோம்

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள் மூலமும் அனுதாபங்களை தெரி வித்தவர்களுக்கும், அவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்
குடும்பத்தினர்.

# கச்சைதீவை மீட்டே தீருவாராம் ஜெயா



சென்னை, ஏப்.17
கச்சதீவை எவ்வாறாவது மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித் துள்ளார்.

1974 ஆம் ஆண்டு இழைக்கப்பட்ட தவறிலிருந்து மீண்டு, இந்திய மீனவர்களின் சம்பிரதாய உரிமையை மீண்டும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக பரிப்புரைக் கூட்டமொன்றில் கருத்துத் தெரிவிக்கும் போதே, தமிழக முதலமைச்சர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

தீ.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியின் செயற்பாடு குறித்து அவர் விமர்சித்தார். கச்சதீவை மீட்பது தொடர்பில் கருணாநிதி அமைதி காப்பதாக குறிப்பிட்டுள்ள தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, கச்சதீவை இலங்கைக்கு வழங்குவதில் கருணாநிதியும் பங்காளராக இருந்தார் எனவும் கூறியுள்ளார். (வ)

# இலங்கையில் முதலிடலாம்

கொழும்பு, ஏப். 17
ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் நேரடி வெளிநாட்டு முதலீடு மேற்கொள்ள பொருத்தமான நாடுகள் பட்டியலில் 10 இடத்துக்குள் இலங்கை வந்துள்ளது.

அமெரிக்க நிறுவனமொன்று மேற் கொண்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

சீனா, இந்தோனேசியா, மலேசியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், மியன்மார், தாய்லாந்து, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளை வெளிநாட்டு முதலீட்டுக்கு சாதகமான நாடுகளாக அந்த நிறுவனம் பட்டியலிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# வாலிபர் விழா

யாழ்ப்பாணம்,ஏப். 17
யாழ்.போதகர்கள் ஐக்கியங்களின் அனுசரணையுடன் ஏற்பாடுசெய்யப்பட்ட "வாலிபர் விழா - 2016 மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன.

யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 21 ஆம், 22ஆம், 23 ஆம் திகதிகளில் மு.ப 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-ரி5)

## தமிழரசுக்

15 பேர் கொண்ட ஓர் ஏற்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுகள் தொடர்பில் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் தகவல் தருகையில்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ். கிளையின் மே தினக் கூட்டம் யாழ்.மருதனார்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வுகள் காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். மருதனார் மடத்தின் நான்கு திசைகளான மானிப்பாய் சந்தி , தாவடிச் சந்தி , உரும்பிராய் சந்தி , மற்றும் சுன்னாகம் சந்திகளில் இருந்து ஊர்வலங்கள் புறப்படும்.

இவ்வாறு புறப்படும் ஊர்வலங்கள் இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தை அடைந்ததும் அங்கு பொதுக் கூட்டம் இடம்பெறும் –என்றார். (த-வ-101)

## இறைமையின்

வாறு குறிப்பிட்டார்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தனது உரையில்:-

தமிழ் மக்கள் இந்த வருடத்தைப் பல்வேறு எதிர்பார்ப்புக்களுடன் வரவேற்றுள்ளார்கள். இவ்வாறான நிகழ்வுகள் நடத்தப்படுவது சந்தோசமாக இருக்கின்றது. இவ்விதமான நிகழ்சிகளில் - விசேட தினங்களில் எமது மக்கள் ஒன்று கூடி, ஒன்றாகச் சிரித்து தமது நல்வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். அதற்குக் களம் அமைத்துக் கொடுக்கும் வகையில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்த எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கு எமது நன்றிகள்.

எமது சரித்திரத்தை நாங்கள் வெளிக்கொண்டு வரக் கூடிய வகையில் எமது, கலை - கலாசாரம் - பாரம்பரியம் - பண்பாடு என்பவற்றைப் பேணும் வகையில் நிகழ்வுகள் அமைய வேண்டும். மக்கள் தங்களுடைய ஆணி வேரிலிருந்து - அடி வேரிலிருந்து விலகக் கூடாது.

எங்களுடைய நாட்டின் - பிரதேசத்தின் - மக்களின் எதிர்காலம் இளைஞர்கள் - யுவதிகளில்தான் தங்கியுள்ளது. எமது மக்கள் நீண்ட காலமாக உதாசீனம் செய்யப்பட்டு - புறக்கணிக்கப்பட்டு பல்வேறு துன்ப துயரங்களை அனுபவித்தவர்கள். அவர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காகப் பல வழிகளில் போராடினார்கள். சாத்வீக - ஜனநாயக - ஆயுத - சர்வதேச ரீதியில் போராடினார்கள். இந்தப் போராட்டங்களினால் இன்று எமது மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகமாகியுள்ளது.

எமது நாடு சுதந்திரமடைந்தது தொடக்கம் வரலாறு இருக்கின்றது. இந்த வரலாறு எல்லோருக்கும் பல பாடங்களைக் கற்பித்திருக்கின்றன. அந்தப் பாடங்களைக் கற்றவர்கள், அந்தப் பாடங்களின் பிரதிபலிப்புக்களை உணர்ந்தவர்கள், எதிர்காலத்தில் இந்த நாட்டின் நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்கிறார்கள். நாங்கள் எல்லோரும் எதிர்பார்த்தபடி புதிய அரசமைப்பின் ஊடாக இந்த நாட்டில், சமத் துவம் - நீதி - நியாயத்தின் அடிப்படையில், தேவைப்படுகின்ற அரசியல் திருத்தங்களை உள்ளடக்கிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் சகல மக்களும், இன - மத வேற்றுமைகளுக்கு அப்பால், தங்களின் இறைமையின் அடிப்படையில், தங்களின் சுயநிர்ணயத்தின் அடிப்படையில், நாட்டில் சமத்துவமாக வாழும் நிலை ஏற்படும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றார்கள். அவ்விதமான நிலைமை ஏற்படுமாக இருந்தால் நாடு வளர்ச்சியடையும் - வளமடையும்.

ஒரு காலத்தில், சிங்கப்பூரின் பிரதமர் லீ குவான் யூ, பொருளாதார வளர்ச்சியில் இலங்கையைப் பின்பற்ற விரும்புகின்றேன் என்று சொன்னார். அந்தளவுக்கு இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இருந்தது. இன்று நிலைமை என்ன ? சிங்கப்பூர் மக்களின் தலா வருமானம் எமது தலா வருமானத்தைப் போன்று 50 மடங்கு.

இந்தப் பாடங்களைப் படித்தவர்கள்தான் - உணர்ந்தவர்கள்தான், நாட்டில் முக்கியமான மாற்றங்கள் அரசமைப்பு ஊடாக ஏற்பட வேண்டும் என்கின்றனர். ஏற்படும் மாற்றம், இறைமையின் அடிப்படையில் உரித்துக்களை வழங்குவதாக அமைய வேண்டும். இதன் மூலம்தான் நாட்டிற்குச் சிறந்த எதிர்காலம் கிடைக்கும். நாங்கள் எமது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தத்தக்க வகையில் செயற்படுவோம். இளைஞர் - யுவதிகள் கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். ஒழுக்கமாக வாழ வேண்டும். சகலரையும் மதிக்க வேண்டும். தொழில் வாய்ப்புப் பிரச்சினையாக இருக்கின்றது என்பது தெரியும். தொழில் வசதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உங்கள் கல்வி அமைய வேண்டும்.

சாதாரணமாக பட்டம் பெற்றால் போதாது. சாதாரணமாக பரீட்சையில் சித்தி பெற்றால் போதாது. வாழ்க்கையை வாழக் கூடிய வகையில், தொழிலை செய்யக் கூடியதான கல்விப் பெறுபேறைப் பெற வேண்டும். தொழில்நுட்பத் துறையில் முன்னேற வேண்டும்.

எல்லோரும் அரச வேலையை எதிர் பார்க்க முடியாது. சுயதொழில் செய்யக் கூடியவர்கள் அதனைச் செய்ய வேண்டும். முதலீடு செய்யக் கூடியவர்கள் முதலீடு செய்ய வேண்டும். தற்போதுள்ள புதிய அரசியல் சூழலில் தொழிற்சாலைகள் அமைத்து எமது இளைஞர் - யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். விசேடமாக புலம்பெயர்ந்தவர்கள், வடக்கு - கிழக்கில் முதலீடு செய்வதற்கு முன்வர வேண்டும். இங்கு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும். இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்க வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், உறுப்பினர்களான இ.ஆனோல்ட், ச.சுகிர்தன், அஸ்மின் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-வ-5)

## அரசியல்

சிறையில் வாடும் கைதிகளின் உடனடி விடயம் தொடர்பில் கைதிகளாக இருந்து அண்மையில் விடுதலை பெற்ற ஜெனிபன் மற்றும் கோமகன் ஆகியோர் நேற்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின்போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த 26ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் ஒரு மனுவை மேற்படி இருவரும் கையளித்திருந்தனர். குறித்த மனுவில் உள்ள விடயங்கள் தொடர்பாகக் கட்சித் தலைவருடன் கலந்துரையாட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன்பிரகாரம் குறித்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த்து.

இந்தச் சந்திப்பின்போது கைதிகளின் விடுதலையில் ஏற்படும் தாமதம், தற்போது கைதிகள் அடைக்கப்பட்டுள்ள இடங்களில் மருத்துவ வசதிகள் இன்மை, இதனால் நோய்த்தாக்கம் அதிகரிப்பு போன்ற விடயங்களும் எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறப்பட்டன.

இதற்குத் தாம்பட்ட அனுபவத்தையே இருவரும் எடுத்துக் கூறினர். உடனடி வைத்தியம் இன்மையால் சாவு கூடச் சம்பவிக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டினர். இவற்றுக்குப் பதிலளித்த கூட்டமைப்பின் தலைவர், முன்பிருந்த கைதிகளில் குறிப்பிட்டளவானோர் சிறையில் இருந்து வெளிவந்தபோதும், பலர் சிறைகளில் உள்ளனர். ஜெனிபனை விடமுடியுமெனில் ஏனையோரும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்காகத் தொடர்ந்தும் முயற்சிப்போம். எதிர்வரும் இரு வாரங்களில் இது தொடர்பில் ஓர் அறிவிப்பும் வெளியிடப்படும்.

கைதிகள் சிறைகளில் படும் அவலத்தைக் கருத்திற் கொண்டு, மேலும் சிலரைப் புனர்வாழ்வு மூலமாக விடுவிக்க முயன்ற வேளை சிலர் குழப்பிவிட்டனர் எனச் சுட்டிக்காட்டினார்.

இதன்போது குழப்பியவர்கள் அரசியல் கைதிகள் அல்ல, சில சட்டத்தரணிகளே. தற்போதும் கைதிகள் சார்பிலேயே உங்களைச் சந்திக்கின்றோம் என விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளான ஜெனிபன் மற்றும் கோமகன் ஆகியோர் தெரிவித்தனர். (த-வ-101)

## பரவிப்பாஞ்சானுக்கு

உரிமையாளர்களும், எதிர்க்கட்சித் தலைவருடன் சென்று தமது காணிகளைப் பார்வையிட்டனர்.

வடபகுதிக்கு மூன்று நாள் பயணமாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் வருகை தந்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்துக்கு அவர் நேற்றுப் பயணம் மேற்கொண்டார். இதன்போது பரவிப்பாஞ்சான் மக்களை அவர் சந்தித்தார். தமது காணிகள் ஏழு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவரிடம் அந்த மக்கள் எடுத்துக் கூறினர்.

இராணுவத்தினர் வசம் உள்ள தமது காணிகளை மீட்டுத் தருமாறு அவர்கள் கோரினர். மக்களின் கோரிக்கையைச் செவிமடுத்த எதிர்க்கட்சித் தலைவர், மக்களுடன் பரவிப்பாஞ்சானுக்குச் சென்றார். இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சிறிதரன் ஆகியோரும் சென்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பரவிப்பாஞ்சான் பிரதேசத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் நுழைந்தபோது, இராணுவத்தினர் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவருடன் சென்ற பொதுமக்கள் தமது காணிகளை ஆவலுடன் பார்வையிட்டனர்.

பரவிப்பாஞ்சான் பகுதியில் வைத்து அந்தப் பகுதி மக்கள் எதிர்க்கட்சித் தலைவரிடம் தமக்கான சொந்தக் காணிகள், வீடுகள் இருக்கும்போது, தாம் அகதிகளாக அவலப்படுவதாகவும், தமது சொந்தக் காணிகளில் தாம் குடியேறி வாழ்வதற்கான நடவடிக்கையைச் செய்யுமாறும் கோரியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், உங்களது அவல நிலைமையை எனக்குப் புரிந்து கொள்ள முடிகின்றது. நீண்ட காலமாகப் பொறுத்திருந்திருக்கிறீர்கள். மீள்குடியேற்றங்கள் தொடர்பில் தற்பொழுது முன்னேற்றங்கள் நிகழ ஆரம்பித்திருக்கின்றன. ஆனாலும் அது போதுமானதாகவில்லை. மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தி உங்களைச் சொந்தக் காணிகளில் விரைவில் குடியேற்ற நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

நீண்ட காலங்களின் பின்னர் தாம் வாழ்ந்த வீடுகளைப் பார்வையிடுகின்றோம் என்ற மகிழ்ச்சியை மக்களது முகங்களில் காண முடிந்ததுடன், திரும்பிப் போகும்போது மீண்டும் எப்போது எமது சொந்த வீடுகளுக்கு நாம் வந்து வாழப் போகின்றோம் என்ற ஏக்கமும் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.(த-வ-5-426)

## ஒரே

றன.

கொட்டாவவிலிருந்து ஒரு குழுவினருடன் வாகனம் ஒன்று அதிவேக நெடுஞ்சாலையினுள் நுழைந்து பயணித்துக் கொண்டிருந்தது. அதன்போதே தமக்கு முன்பாக, ஒரு வாகனம் தமது வாகன இலக்கத்துடன் பயணித்துக் கொண்டிருப்பதை அந்தக் குழுவினர் கண்டுள்ளனர்.

இதனால் சிக்கல் வரலாம் என்று அஞ்சிய அந்தக் குழுவினர், உடனடியாகவே நெடுஞ்சாலைப் பொலிஸாருக்குத் தகவலை வழங்கி உரிய நடவடிக்கையைக் கோரினர்.

இந்த நிலையில் அந்தப் பகுதிக்கு விரைந்த பொலிஸ் குழுவினர், வத்தேகமவில் வைத்து சந்தேகத்துக்குரிய இலக்கத்துடன் பயணித்த வாகனத்தை மடக்கிப் பிடித்தனர். அதன் சாரதியையும் கைது செய்தனர். இது பற்றித் தகவல் வழங்கிய குழுவினர் பயணித்த வாகனத்தையும் பொலிஸார் விசாரணைக்கு ஆதாரமாகப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

விசாரணைகளின்போது, அந்தக் குழுவினர் பயணித்த வாகனம் கொட்டாவையில் பதிவு செய்யப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஆனால் அந்தக் குழுவினருக்கு முன்பாகச் சென்றுகொண்டிருந்த வாகனமே போலியான இலக்கங்களை வைத்துத் தயாரிக்கப்பட்ட போலியான இலக்கத்தகட்டுடன் இருந்தது என்பது பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இது பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டபோது, சந்தேகத்துக்குரிய அந்த வாகனம் களனியில் இயங்கும் வாடகைக்கு வாகனங்களை விடும் தனியார் நிறுவனத்தினுடையது என்பது தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து குறித்த நிறுவனத்தினர் பொலிஸ் விசாரணைக்குள் அகப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் சட்டவிரோதச் செயற்பாடுகள் ஆங்காங்கே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில், எதற்காக இலக்கத்தகடு மாற்றப்பட்டுக் குறித்த வாகனம் பயன்பாட்டுக்கு விடப்பட்டது? அவ்வாறு மாற்றப்பட்டுச் சென்றது எங்கு? என்ன நோக்கம் கருதிப் பயணம் அமைந்திருந்தது? என்பது பற்றி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதோடு, சட்டவிரோத செயல்களுக்குப் பயன்படுத்துவதற்காகக் குறித்த வாகனம் எடுத்துச் செல்லப்பட்டதா என்றும் சந்தேகம் வெளியிடுகின்றனர். (த-வ-4)

## புதுவருடத்தில்

இடம்பெற்ற தலைக்கு எண்ணெய் தடவும் நிகழ்வில் கலந்துகொண்ட போதே, ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் தனது உரையில்:-

பௌத்த சிந்தனைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொண்டு மலர்ந்த இந்தப் புதுவருடத்தில் சிறந்ததொரு மாற்றத்திற்குத் தயாராக வேண்டும்.

அவ்வாறே நாட்டின் அனைத்து இனங்களும் சகவாழ்வுடன் வாழவேண்டியதன் முக்கியத்துவத்தை பௌத்த மதம் நமக்குப் போதித்துள்ளது. அதற்கமைய கலாசார சம்பிரதாயங்களைப் பாதுகாத்து, அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் - என்றார்.

மதக்கிரியைகளில் ஈடுபட்ட ஜனாதிபதி, மாதன் வல ரஜமஹா விகாராதிபதி கலாநிதி ராஜகீய பண்டிதர் சங்கைக்குரிய வெல்லகிரய சுமங்கல தேரர் மற்றும் தம்மோத மஹா பிரிவெனாவின் பிரிவெனாதிபதி ராஜகீய பண்டிதர் சங்கைக்குரிய அம்ப லியத்த ஸ்ரீ குணரத்ன தேரர் ஆகியோரைச் சந்தித்து நலன் விசாரித்த பின்னர், மகாசங்கத்தினருக்கு பரிசுப்பொருள்களை வழங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

இதன்போது மலர்ந்த புதுவருடத்திற்கு ஜனாதிபதிக்கு வாழ்த்துத்தெரிவிப்பதற்காகப் பெரும் எண்ணிக்கையான பிரதேசவாசிகள் விகாரைக்கு சமூகம் தந்திருந்ததுடன், ஜனாதிபதி மக்களுடன் நட்புறவுடன் உரையாடி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். (த-வ)

## முன்னாள்

மத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது வீட்டில் துப்புரவுப்பணியை மேற்கொண்டிருந்த முன்னாள் போராளியான அந்தத் தாயிடம் சென்ற இனந்தெரியாத நபர் அவருடைய கணவரான-முன்னாள் போராளி எங்கே என விசாரித்துப் பின்னர் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட பெண்ணின் கணவர் வெளிநாடொன்றில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கணவனை விசாரித்துக் கொண்டு வீட்டின் உள்ளே வந்த இனந்தெரியாத நபரால் முகத்தில் தாக்கப்பட்டதை அடுத்து நிலை தடுமாறி மயக்கமுற்ற பெண்ணை அயலவர்கள் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த-4-ரி7)

## பொலிஸாரின்

5 கைத் துப்பாக்கிகள் மற்றும் ஒரு ரி-56 துப்பாக்கி என்பவற்றைக் களவாடிச் சென்றிருந்தார். இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. துப்பாக்கி களவாடப்பட்ட நேரத்தில் அங்கு கடமையிலிருந்த 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையிலேயே நேற்றைய தினம் துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. விகாரையில் பிக்குகள் குளிக்கும் இடத்திலிருந்தே இவை கண்டறியப்பட்டுள்ளன. துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளபோதும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை. (த-வ-5)

## முருகனின்

சோமணி எதிர்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை இரா.சம்பந்தன் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்ட நிலையில், இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. தனது மகன் முருகனின் விடுதலைக்கு வலியுறுத்துமாறு இரா. சம்பந்தனிடம் முருகனின் தாயார் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தநிலையில் இந்திய உயர்மட்டக் குழுவினருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாக இதன்போது சம்பந்தன் உறுதியளித்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் முருகனின் விடுதலையை வலியுறுத்திக் கையெழுத்துச் சேகரிக்கும் பணியில் முருகனின் தாயார் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-5)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 17

**விக்ரோறி வி.கழகத் தொடர்**

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மூளாய் விக்ரோறி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சோமஸ்கந்தன் அணி மோதவுள்ளது. மேற்படி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி இரவு 8 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமகள் அணியுடன் மோதும்.

**யுனைற்றெட் வி.கழகத் தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக்கழகமும்இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் கில்லறி அணியை எதிர்த்து சென்.லூசியா அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8.30 மணிக்கு இடம்பெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதவுள்ளது.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் 3ஆம் சுற்று ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் ஏ அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் பி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

**அல்ஹிஜிரா வி.கழகத் தொடர்**

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து சன்சைய்ன் அணி மோதவுள்ளது.

**அறிவொளி வி.கழகத் தொடர்**

பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட் டத்தில் புதுமடம் வைகறை பி அணியை எதிர்த்து சண்டிலிப் பாய் வசந்தசிறி அணி மோதவுள்ளது.

**யாழ். வலைப்பந்தாட்டம்**

யாழ். மாவட்ட பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(ம-422-23)



# கிண்ணம் வென்றது வைகறை யாழ். மாவட்ட தாச்சித் தொடரில்

யாழ்ப்பாணம், ஏப். 17

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் அனுசரனையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு நடத்திய தாச்சித் தொடரில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி சம்பியனானது. புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புதுமடம் வைகறைஅணியைஎதிர்த்துதாவடி காளியம்பாள் அணி மோதிக் கொண்டது.இதில்புதுமடம்வைகறை அணி 5:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

(ம-23)

# கிண்ணம் ஊர்காவற்றுறையிடம்

யாழ்ப்பாணம், ஏப். 17

ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரில் ஊர்காவற்றுறை வளாகம் இளைஞர் கழக அணி சம்பியனானது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் அனலைதீவு இளைஞர்கழக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை வளாகம் இளைஞர்கழக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை வளாகம் இளைஞர் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

(ம-23)

## கிண்ணங்களை அள்ளியது யாழ்.மத்திய கல்லூரி அணி

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப் பந்தாட்டத்தில் 15 வயது, 19 வயது என இரு பிரிவிலும் யாழ். மத்திய கல்லூரியின் அணிகள் சம்பியன் கிண்ணங்களைச் சுவீகரித்துள்ளன.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை தொடர்கள் நடைபெற்றன. இதில் 15வயதுப் பிரிவினருக்கான தொடரில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை யாழ். இந்துக்கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் பெற்றன. 19வயது பிரிவினருக்கான தொடரில் முதலாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை யாழ். இந்துக் கல்லூரி அணியும் பெற்றன.

(ம-422)

# கிண்ணம் வென்றது யாழ். இந்து மகளிர்

மாங்குளம், ஏப். 17

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டத்தில் 19வயது பெண்களுக்கான கரம் தொடரில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை தொடர் நடைபெற்றது. முதலாமிடத்தை யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும், இரண்டாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அணியும் பெற்றன.

(ம-422)

## விக்ரோறியின் கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப். 17

மூளாய் விக்ரோறி விளையாட்டுக்கழகம் அமரர் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியாக நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியை எதிர்த்து அச்சுவேலி கலைமகள் அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி கலைமகள் அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் அணி மோதிக் கொண்டது. இதில் அச்சுவேலி கலைமகள் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில், வழக்கம்பரை அம்பாள் அணியை எதிர்த்து காந்திஜி அணி மோதிக் கொண்டது. இதில் வழக்கம்பரை அம்பாள் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் வழக்கம்பரை அம்பாள் அணியை எதிர்த்து மல்லாகம் நியூ வொரியஸ் அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் மல்லாகம் நியூ வொரியஸ் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டம் மற்றும் கபடித் தொடர்கள்

கரணவாய், ஏப். 17

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினர் நடத்தும் பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான மாவட்டமட்ட துடுப்பாட்டம் மற்றும் கபடித் தொடர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

துடுப்பாட்டத் தொடரில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணியும், யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியும், கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. தொடர்ந்து காரைநகர் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணியும், உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணியும், நெடுந்தீவு பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

நெல்லியடி மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறும் ஆண்களுக்கான கபடித் தொடரில் நெடுந்தீவு பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து காரைநகர் பிரதேச செயலக அணியும், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணியும், நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணியும், தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

(ம-108)

## பிற்போடப்பட்டது கபடித் தொடர்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ். மாவட்ட பிரதேச செயலக தெரிவுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கபடித் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றும் இறுதியாட்டமும் பிற்போடப்பட்டுள்ளன.

நெல்லியடி மத்திய கல்லூரியில் நேற்றைய தினம் இந்தத் தொடர் நடைபெற்றது. மழை குறுக்கிட்டமையாலேயே நேற்று நடத்தி முடிக்கத் திட்டமிட்டிருந்த இந்தத் தொடர் பிற்போடப்பட்டுள்ளது. தெல்லிப்பழை பிரதேச செயலகம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது. கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதவுள்ள இரண்டாவது அரையிறுதியில் வெற்றிபெறும் அணி தெல்லிப்பழையுடன் இறுதியில் மோதும்.

(ம-422)

# குஜராத்துக்கு ஹற்றிக் வெற்றி மும்பையின் போராட்டம் வீண்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற குஜராத்-மும்பை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில், 3 இலக்குகளால் வெற்றிபெற்றது குஜராத் லயன்ஸ்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குஜராத் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. களத்தில் ரோகித் மற்றும் பார்திவ் பட்டேல். குஜராத் அணியின் தற்போதைய நட்சத்திர பந்துவீச்சாளரான குல்கர்னி கடந்த ஐ.பி.எல். தொடர்களில் மும்பையைப் பிரதிநிதித்துவம் செய்தவர். எனவே மும்பை அணியின் பலம் பலவீனங்களை அவர் அறிவார். இதனால் ரெய்னாவின் பந்துவீச்சு ஆயுதமாக நேற்று குல்கர்னி பயன்பட்டார். திட்டம் நன்றாக நிறைவேறியது ரோகித் சர்மாவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் குல்கர்னி. பாண்டியாவையும் அவர் வெளியேற்ற 19 ஓட்டங்களுக்கு இரு இலக்குகளை இழந்தது மும்பை. பட்டேலுடன் பட்லர் இணைந்து தாக்குப் பிடிக்க மூன்றாவது இலக்கை இழக்காமல் 5C ஓட்டங்களைத் தொட்டது மும்பை. பட்லர் ஆட்டமிழந்ததுதான் தாமதம் ஒரே ஓட்டத்துடன் பிராவோவிடம் பிடிகொடுத்து பவிலியன் திரும்பினார் பொலார்ட். அரங்கேறியது சம்பியன் நடனம். 32 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் பட்டேல். பந்துப்பரிமாற்றத்துக்கு ஆறு ஓட்டங்கள் என்றவாறாக சென்ற சராசரியை சவுத்தியும் குருனல் பாண்டியாவும் இணைந்து மாற்றினர். சவுத்தி 11 பந்துகளில் 25 ஓட்டங்களையும், குருனல் பாண்டியா 11 பந்துகளில் 20 ஓட்டங்களையும் குவிக்க முடிவில் மும்பை 143-8.


பந்துவீச்சில் குஜராத் சார்பாக குல்கர்னி, ரம்பி இருவரும் தலா இரு இலக்குகளையும், ஜகரி, பல்க்நெர், பிராவோ மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது குஜராத் லயன்ஸ். ஏமாற்றிச் சென்றார் மக்கலம். பின்ஞ், ரெய்னா இலக்கை எட்டும் படியான நம்பிக்கையைத் தந்தனர். 27 ஓட்டங்களுடன் ரெய்னாவை வீழ்த்தினார் மக்கலிநகன். டினேஸ் கார்திக், பிராவோ இருவரும் முழுமையாக பத்து ஓட்டங்களை எட்டவில்லை. மும்பையின் ஆதிக்கத்தை மேலோங்க விடாது தொடர்ந்தும் நிலைத்து நின்றார் பின்ஞ். ஓட்டமற்ற பந்துகளை அதிகம் வீசி நெருக்கடியை ஏற்படுத்தினார் பும்ரா. 46 பந்துகளை எதிர்கொண்டு நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் தனது மூன்றாவது அரைச் சதத்தை நிறைவு செய்தார் பின்ஞ். பின்ஞ் ஓர் முனையை பலப்படுத்திய போதிலும் மக்கெலிநகன் பந்துவீச்சால் மறுமுனை பலவீனமாகவே உணரப்பட்டது. இதனால் மும்பைக்கான வாய்ப்புக்களும் இருக்கவே செய்தன. இறுதி இரு பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்கள் பெறப்பட வேண்டும் என்ற நிலைமை. 19 ஆவது பந்துப்பரிமாற்றத்தை 2 ஓட்டங்களில் முடித்தார் மக்கெலிநகன். பும்ராவின் வீசிய இறுதிப்பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தில் இலக்கை எட்டியது குஜராத். பின்ஞ் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மும்பை சார்பாக மக்கெலிநகன் 4 இலக்குகளையும், பும்ரா, பாண்டியா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



# கம்பீர் தெறி ஆட்டம் வென்றது கொல்கத்தா



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற கொல்கத்தா, ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 8 இலக்குகளால் வெற்றிபெற்றது கொல்கத்தா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைதராபாத் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரராக தவான் மற்றும் வோர்ணர். தவானின் தடுமாற்றம் நேற்றும் தொடர்ந்தது. ஆறு ஓட்டங்களைத் தாண்டி அவரால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. வோர்ணரையும் ஹென்றிக்ஸையும் வெளியேற்றினார் யாதேவ். 36 ஓட்டங்களில் முன்னணி வீரர்கள் மூவரையும் இழந்து தவித்தது ஹைதராபாத். மோர்கன் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும் அவருடன் இணைப்பாட்டத்தை வழங்கத் தவறினார் கூடா. மோர்கன் அடித்தாடக்கூடியவராக இருந்தாலும் அதிகமான இலக்குச் சரிவுகளால் நிதானிக்க வேண்டியதாயிற்று. அவ்வப்பொழுது சில பவுண்டரிகளைப் பதிவுசெய்து நிலைத்து நின்றார் நமன் ஒஜா. இணைப்பாட்டம் நிலைபெற்றது. அரைச்சதம் கடந்தார் மோர்கன். இதற்காக அவர் 41 பந்துகளை எடுத்துக் கொண்டார். 37 பந்துகளுடன் ஒஜாவை வெளியேற்றினார் மோர்கன். 51 ஓட்டங்களுடன் மோர்கனும் ஆட்டமிழக்க முடிவில் ஹைதராபாத் 142-7.

பந்துவீச்சில் கொல்கத்தா அணியின் சார்பாக யாதேவ் 3 இலக்குகளையும், மோர்கன் 2 இலக்குகளையும், ரசல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கியது கொல்கத்தா. ஆரம்ப வீரர்களாக கம்பீர் மற்றும் உத்தப்பா. இணைப்பாட்டம் கச்சிதமாக நிலைபெற்றது. 7.5 பந்துப்பரிமாற்றங்களில் இலக்குகளை இழக்காமல் 50 ஓட்டங்களை எட்டியது கொல்கத்தா. அணியின் ஓட்டம் 92ஆக இருந்த பொழுது 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் உத்தப்பா. களமிறங்கினரா் ரசல். மூன்றாம் நிலை வீரராக பாண்டேயே களமிறங்க வேண்டியவர். ஆனால் ஆட்டத்தை விரைவாக நிறைவுசெய்து ரண்ரேட்டை உயர்த்த திட்டம் தீட்டியிருந்தது அந்த அணி. ரசலால் நிலைக்க முடியவில்லை. ரகுமான் வீசிய தாழ்வான பந்தைக் கணிக்க இயலாமல் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். களத்தில் கம்பீர், பாண்டே இணை. 41 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் கம்பீர். பாண்டே பவுண்டரிகளை விளாசாமல் கம்பீருக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கிக் கொண்டிருந்தார். அடிக்கொரு தடவை பவுண்டரிகளைப் பதிவுசெய்து ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் கம்பீர். அவர் 90 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தார்.

பந்துவீச்சில் ஹைதராபாத்தின் சார்பாக ரகுமான், ரெட்டி இருவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.(ம)

## கரவெட்டி மேற்கு இளைஞர் கழகம் பிரதேச கபடியில் கிண்ணம் வென்றது

கரணவாய், ஏப். 17

கரவெட்டிப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில், ஆண்கள் பிரிவில் கரவெட்டி மேற்கு இளைஞர் கழகம் நடப்பு வருடச் சம்பியனாகியது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இறுதியாட்டம் இடம் பெற்றது. இறுதியாட்டத்தில் கரவெட்டி மேற்கு இளைஞர் கழகமும் அல்வாய் மனோகரா இளைஞர் கழகமும் பலப் பரீட்சை நடத்தின. விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 35:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கரவெட்டி மேற்கு இளைஞர் கழகம் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. (ம-108)








## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 05 . 1955



மறைவு 13 . 04 . 2016

### Dr. கிரகறி மரியதாஸ் இராசையா

யாழ். தாளையடியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா Sydney ஐ வதிவிடமாகவும் கொண்ட கிரகறி மரியதாஸ் இராசையா கடந்த (13.04.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஸ்டனிஸ்லோஸ் இராசையா (சமாதான நீதிவான்) - அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், அந்தோனிப்பிள்ளை மைக்கல்- ரோஸ் தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜோர்ஜினா றொசெற்றியின் (வசந்தி) பாசமிகு கணவரும், ஜோய் வசீகரன், ரோய் சுஜீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பெலிசியன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜீவரட்ணம் (டென் மார்க்), ஜெறோம் (ஆஸ்திரேலியா), கிரேஷியன்(பிரான்ஸ்), காலஞ்சென்ற அருட்சகோதரி மேர்சி அஞ்செலா (A.C-யாழ்ப்பாணம்), றோசலீன் வெண்ட கோன் (கனடா), காலஞ்சென்ற யசிந்தா, அசம்ரா அருள்நேசன்(பிரான்ஸ்), மேரி அருளப்பு (டென்மார்க்), அண்டனெட் நவரட்ணம்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுகந்தி (ஜேர்மனி), பிளசில்டா(டென்மார்க்), ஜெயா (ஆஸ்தி ரேலியா), ராஜினி(பிரான்ஸ்), அருட்சகோதரி ஜெரல்டின் மைக்கல்(ஹோலி க்ரொஸ்-யாழ்ப்பாணம்), ஸ்டீபன் வெண்டகோன் (ஓய்வுபெற்ற கிராமசேவை யாளர் செம்பியன்பற்று, கனடா), வில்லியம் அருள்நேசன்(பிரான்ஸ்), பிரான்சிஸ் அருளப்பு(டென்மார்க்), ஜோசப் நவரட்ணம் (ஆஸ்திரேலியா), மைக்கல் கலிஸ்டர் (ஆஸ்திரேலியா), மைக்கல் ரோய்ஸ்டர் (கனடா), காலஞ்சென்ற மைக்கல் செஸ்டர் (இலங்கை), கோஷினி கலிஸ்டர் (ஆஸ்திரேலியா), அவந்தி ரோய்ஸ்டர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் 18.04.2016 திங்கட்கிழமை பி.ப 1.30 முதல் 3.30 மணிவரை South Chapel Rookwood Memorial Gardens and Crematorium, Memorial Ave, Rookwood NSW 2141. Australia வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செம்பியன்பற்று.

பாசமிகு மருமகள்
ஜெயந்திரன் சசி (நெதர்லாந்து)

## மரண அறிவித்தல்

### அ. நல்லப்பன்

முன்னாள் பிரதம எழுதுவினைஞர்
(Chief Clerk)

கலபட எஸ்டேட், சோகம எஸ்டேட், சங்குவாரி எஸ்டேட் புஸ்ஸல்லாவையைச் சேர்ந்தவரும், தற்போது சென்னையை வசிப்பிடமாகக் கொண்டவருமான அ. நல்லப்பன் நேற்று (16.04.2016) சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் இராஜேந்திரன் (Hills Studio Chennai), நிர்மலா (கொழும்பு), மனோரஞ்சனி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனும், வசந்தினி (சென்னை), திருநாவுக்கரசு (கொழும்பு), இராதாகிருஷ்ணன் (கொழும்பு) ஆகியோரின் மாமனும், பிரவீன்ராஜ், அனோஜ்கிருஷ்ணா, சனோஜன், யதுர்ஷிகா, கௌஷிகா ஆகியோரின் அன்பு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வளசரவாக்கம், சென்னை மின் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 0091 9840027323
0091 9840123237
0091 9551564863

தகவல்:
மனைவி, மகன்

## கோப்பாய் பிரதேச கரப்பந்தாட்டத் தொடர்

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தின் அரையிறுதியாட்டங்களும், இறுதியாட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை கல்வியங்காடு ஆனந்தபுரம் கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கலைமதி அணியும், இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து கே.எம்.வி.கரிஸ் அணியும்மோதவுள்ளன. (ம-422)

**Rent a Car**
நாள், மாதாந்த அடிப்படையில்
கார்கள் வாடகைக்கு உண்டு.
TP; 0774696695, 075 2040061

**நாய்க்குட்டிகள்**
ஜேர்மன் சேப்பேட், அல்சேசியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. கோண்டாவில்
T.P:- 075 657 5875

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப் பட்டுள்ள ஹோட்டல் ஒன்றுக்கு ரொட்டி, கொத்துரொட்டி தயாரிக்கத் தெரிந்த ஒருவரும், உதவியாளர் ஒருவரும் தேவை.
077 125 8072

## சகலதுறை வீரர்கள் இல்லை இதுவே தோல்விக்கு காரணம் -டோனி

குஜராத் அணியிடம் தோல்வியடைந்தமைக்கு அதிரடி காட்டக் கூடிய சகலதுறை வீரர்கள் தம்மிடத்தில் இல்லாதமையே காரணம் என்று தெரிவித்துள்ளார் புனேயின் அணித்தலைவரான டோனி.

தோல்விக்குப் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார். மேலும் தெரிவிக்கையில் – எங்கள் அணியின் வேகப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டதாக நினைக்கவில்லை. நான் அவர்களிடம் சில விடயங்களைக் கூறி இருக்கிறேன், கண்டிப்பாக அந்த விடயங்கள் அணிக்குத்தேவையான ஒன்று.சிறந்த வீரர்களை அடையாளம் காண் பது அவசியம் என்று நினைக்கிறேன். முதல் ஆட்டத்தில் நாங்கள் நன்றாக விளையாடினோம். குஜராத்துக்கு எதிரான ஆட்டத்தில் எமது ஆட்டம் சிறப்பாக அமைந்தது என்று கூறுவதற்கில்லை. அது மட்டுமல்லாமல் அணியில் அதிரடி காட்டக் கூடிய சகலதுறை வீரர்களும் இல்லை. இது ஒரு பின்னடைவாக உள்ளது. இவற்றைச் சமாளிப்பது அவசியம்- என்றார்.(ம)

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தளபாட காட்சி அறைக்கு

01. Electrician
02. Marketing Sales & Executives.
03. Date Entry Operators ( Ms Office, Ms Excel, Quick Book)

விரும்பத்தக்கது. ஆர்முள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும் மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

SMART KINGS PVT (LTD)
NO 12, POINT PETRO ROAD,
JAFFNA.
021 454 6699

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கருணஜோதி(ரஞ்சனா) ராசரத்தினம்



ஞானவைரவர் கோயிலடி, தலையாழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கருணஜோதி ராசரத்தினம் 16.04.2016 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகேந்திரம் தம்பதிகளின் அன்பு மகளும் ராசரத்தினத்தின் மனைவியும் சுஜனின் அன்புத் தாயும் சிவகுமார் (ஜேர்மனி), சத்தியகுமார், சிவா ஜினி, சிவசொரூபி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுஜன் (மகன்)

### சலமோன் ஆரோக்கியநாதர்

பிறப்பு 1940 . 05 . 14



இறப்பு 2016 . 04 . 16

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சலமோன் ஆரோக்கியநாதர் நேற்று (16.04.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சலமோன் - பவுலினாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை -திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், றெஜினாவின் அன்புக் கணவரும், றொபின் குயின்சிலியின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அல்பிறேற்ரம்மா, காலஞ் சென்ற பிரான்சிஸ்கம்மா, பிலிப்பையா, அடைக்கலம், டேவிற், சந்தியாப்பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் அன் புச் சகோதரரும், தேவதாஸ் , அருட்சகோதரி வேஜினி , செல்வதி ஆகியோ ரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.04.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள் ளவும்.

4ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
றொபின் குயின்சிலி(மகன்)

## நசரேத்திடம் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஏப். 17

தீவக கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழகம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் புங்குடுதீவு நசரேத் அணி கிண்ணம் வென்றது.

விலகல் முறையில் நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் கடந்த புதன்கிழமை புங்குடுதீவு அம்பாள் விளையாட் டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நயினாதீவு அண்ணா விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.04.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.